

நீதி, உண்மை + மற்றும் நல்லிணக்கத்திற்கான உலகளாவிய முன்னெடுப்பு

# கற்றுக் கொள்ளும் ஒரு சமூகத்தை கட்டியெழுப்புதல்:

## நிலைமாறு கால நீதி தொடர்பான முழுமையான மற்றும் நிலைத்திருக்கக் கூடிய அணுகுமுறையொன்றுக்கான பாடங்கள்

# உள்ளடக்கம்

முன்னுரை...................................................... 8
(கலாநிதி ரிவா கன்டோவிஸ்)

அறிமுகம்............................................................ 9

முறைமையியல் ................................................... 23

அத்தியாயம் 1
சூடான் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு.........25
டிபானி சொமாடொஸி மற்றும் பிரிஜட் ருதபோர்ட், பொது
சர்வதேச சட்டம் மற்றும் கொள்கைக் குழு

அத்தியாயம் 2
மனித உரிமை மீறல்களை எதிர்கொண்டு உயிர் வாழ்ந்து வரும்
சிரியா மக்கள் நிதிப்படுத்தல் மதிப்பீடு .......................... 43
*சுபியா பிரே, வன்முறை மற்றும் நல்லிணக்கம் என்பன குறித்த*
*ஆய்வுக்கான நிலையம்*

அத்தியாயம் 3
இலங்கையில் உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கம் என்பதற்கான
உள்ளூர் ஆற்றல்களை கட்டியெழுப்புதல் .......................... 61
*இரேஷ்னீ நாயுடு - சில்வர்மேன், சர்வதேச மனச்சாட்சி அமைவிடங்களில்*
*'கூட்டமைப்பு மார்டி மேஹேர் துன்ஹேம் (கௌத்தமாலா விஞ்ஞான மானிடவியல்*

அத்தியாயம் 4
மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா என்கிற நிலைமாறுக்
கால நீதி நிலையம்.................................................. 83
*சாரா பிரேட்ஷோ மற்றும் பாத்தி ஸாபார், மனச்சாட்சி அமைவிடங்கள்*
*தொடர்பான சர்வதேச கூட்டமைப்பு*

அத்தியாயம் 5
சிவில் சமூக அமைப்பின் ஆவணப்படுத்தல் செயற்பாடு மற்றும்
குற்றவியல் பொறுப்புக் கூறல் .................................. 101
*கிரஷ்டோபர் டியரிங் மற்றும் யோக் சாங், கம்போடியா*
*ஆவணப்படுத்தல் நிலையம்*

சம்பவக் கற்கை: கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையத்தின்
ஆவணப்படுத்தல்
*கிரஷ்டோபர் டியரிங் மற்றும் யோக் சாங், கம்போடியா*
*ஆவணப்படுத்தல் நிலையம்*

சம்பவக் கற்கை: முன்னைய யூகோஸ்லாவியாவின் மனித நேய சட்டத்தின் ஆவணப்படுத்தல்
*மிலிகா கொஸ்டிக் மனித நேய சட்ட நிலையம்*

சம்பவக் கற்கை: கௌதமாலா விஞ்ஞான ரீதியான சான்றுகளை கண்டறியும் மானிடவியல் மன்றத்தின் ஆவணப்படுத்தல்
*மார்ட் மேஹ்றி துன்ஹேம், பிரடி பிஸரெலி மற்றும் ஜோ மேரி போர்ட், கௌதமாலா விஞ்ஞான ரீதியான சான்று மானிடவியல் மன்றம்*

அத்தியாயம் 6
**கம்போடியாவில் காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள்:**
**மதிப்பீட்டு அறிக்கையின் சாராம்சம் ................................. 101**
*டாரியோ கொள்மெரெஸ் மிலான், சர்வதேச மனச்சாட்சி மையங்களின் கூட்டமைப்பின் ஆலோசகர்*

அத்தியாயம் 7
**ஒன்றியத்தின் நிகழ்ச்சித்திட்டங்களின் மதிப்பீட்டிலிருந்து பெறப்பட்ட முக்கிய பாடங்கள் ........................................ 101**
*டாரியோ கொள்மெரெஸ் மிலான், சர்வதேச மனச்சாட்சி மையங்களின் கூட்டமைப்பின் ஆலோசகர்*

# நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பு ஒன்றியம் குறித்து

உலகளாவிய ரீதியில் மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல்களை கடந்த காலத்தில் எதிர்கொண்டிருக்கும் நாடுகளில் நிலைமாற்றங்கள் தொடர்பாக அவநம்பிக்கை நலவி வரும் சூழ்நிலையில், நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான கோரிக்கைகள் அதிகரித்து வருகின்றன. இத்தேவையை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு மனச்சாட்சி மையங்களுக்கான சர்வதேச கூட்டமைப்பு (ICSC) 2014 ஆகஸ்ட் மாதத்தில் நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பை (GIJTR) துவக்கி வைத்தது.ஐக்கிய அமெரிக்க ராஜாங்க அமைச்சின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழில் என்பவற்றுக்கான பணியகத்தின் ஆதரவுடன் இது துவக்கி வைக்கப்பட்டது. நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பின் (GIJTR) குறிக்கோள் மோதல்கள் இடம்பெற்று வரும் நாடுகளில் அல்லது நிலைமாற்றம் இடம்பெற்று வரும் நாடுகளில் தோன்றும் புதிய சவால்களை எதிர்கொள்வதாகும் ; அதாவது,கடந்த கால வரலாறுகளுடன்போராடிக் கொண்டிருக்கும் நாடுகள் அல்லது பாரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வரும் நாடுகள் என்பன தொடர்பாகவே இங்கு கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பு ஒன்றியம் என அழைக்கப்படும் கூட்டமைப்புக்கு (GIJTR) வசதி செய்து கொடுக்கின்றது; இந்த கூட்டமைப்பு பின்வரும் 9 பங்காளர் அமைப்புக்களை கொண்டுள்ளது:

- ஐக்கிய அமெரிக்காவில் செயற்பட்டு வரும் சர்வதேச மனச்சாட்சி மையங்களின் கூட்டணி (முன்னணி பங்காளர் அமைப்பு);
- ஐக்கிய அமெரிக்காவில் செயற்படும் அமெரிக்க வழக்கறிஞர் சங்கத்தின் சட்டத்தின் ஆட்சி தொடர்பான முன்னெடுப்பு;
  - இந்தோனேசியாவின் ஆசிய நீதி மற்றும் உரிமைகள் அமைப்பு (AJAR);
  - தென் ஆபிரிக்காவின் வன்முறை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆய்வு மையம் (CSVR);
  - கம்போடியாவில் செயற்பட்டு வரும் கம்போடியா ஆவணப்படுத்தல் நிலையம் (DC-Cam);
  - ஐக்கிய அமெரிக்காவில் செயற்படும் உரிய விதத்தில் சட்டத்தை அமுல் செய்யும் மன்றம் (DPLF);
  - கௌத்தமாலா நாட்டின் விஞ்ஞான ரீதியான சான்று மானிடவியல் மன்றம் (FAFG);
  - சேர்பியாவின் மனிதநேய சட்ட நிலையம் (HLC);
  - ஐக்கிய அமெரிக்காவின் பொது சர்வதேச சட்ட மற்றும் கொள்கை குழு (PILPG)

மனச்சாட்சி மையங்களின் சர்வதேச கூட்டணி கூட்டமைப்பின் பங்காளர்களின் பல்வேறுபட்ட நிபுணத்துவ துறைகளிலிருந்து பயனடைந்து வருவதற்கு மேலதிகமாக கூட்டமைப்பின் பணிகளை பலப்படுத்தி, விரிவாக்கிக் கொள்ளும் பொருட்டு 55 நாடுகளில் செயற்பட்டு வரும் 230 உறுப்பினர்களின் அறிவு மற்றும் நீண்ட கால சமூக பிணைப்புக்கள் என்பவற்றையும் பயன்படுத்திக் கொள்கின்றது.

கூட்டமைப்பின் பங்காளர்கள் மனச்சாட்சி மையங்களின் சர்வதேச கூட்டணியின் உறுப்பினர்களுடன் இணைந்து உடனடியாக எதிர்வினையாற்றும் மற்றும் உயரளவிலான தாக்கத்தை எடுத்து வரும் பல்வேறு வகைப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்து, அமுல் செய்து வருகின்றனர். குற்றவியல் நீதி தொடர்பாக பழைய நிலைமைகளை எடுத்து வரும்

அணுகுமுறை மற்றும் தண்டனை வழங்கும் அணுகுமுறை என்பவற்றையும், அதே போல பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக் கூறல் அணுகுமுறையையும் பயன்படுத்துவதன் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டு வருகின்றன. இந்த கூட்டமைப்பு நீதி, உண்மை மற்றும் பொறுப்புக் கூறுதல் என்பன தொடர்பான பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய அணுகுமுறையை பின்பற்றி வருகின்றது. ஒட்டுமொத்தமாக கூட்டமைப்பின் பங்காளர்கள் பல்வேறு துறைகளில் நிபுணத்துவ அறிவைக் கொண்டுள்ளார்கள்:

- உண்மையை கூறுதல், நினைவேந்தல் மற்றும் ஏனைய வடிவங்களிலான வரலாற்று ரீதியான நினைவு கூரல் மற்றும் நல்லிணக்கம்;
- நிலைமாறு கால நீதி நோக்கங்களுக்கென மனித உரிமை மீறல்களைஆவணப்படுத்துதல்;



கௌத்தமாலா நாட்டின் விஞ்ஞான ரீதியான சான்றுகள் மானிடவியல் மன்றம் (FAFG) காணாமற் போயிருக்கும் நபர்கள் மற்றும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டிருக்கும் நபர்கள் ஆகியோர் காணாமல் போன சந்தர்ப்ப சூழ்நிலைகள், அவர்கள் இருக்கும் இடங்கள் மற்றும் அவர்களுக்கு நேர்ந்த கதி என்பன தொடர்பான புலனாய்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு பன்முக அடிப்படையிலான விஞ்ஞான ரீதியான சாட்சியங்களை கண்டறியும் முறைமைகளை பயன்படுத்தி வருகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆகியோருக்கு உண்மையை தெரிவிப்பதற்கும், நீதி மற்றும் நிவாரணம் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு உதவுவதற்கும், சட்டத்தின் ஆட்சியை பலப்படுத்துவதற்கும் இது மேற்கொள்ளப்படுகின்றது.

Photo credit: FAFG

- காணாமற் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள் தொடர்பான விஞ்ஞான ரீதியான சாட்சியங்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஏனைய முயற்சிகள்;

- நீதி, உளவியல் ஆதரவு மற்றும் கடும் மன அதிர்ச்சியைத் தடுப்பதற்கான செயற்பாடுகள் என்பவற்றை அணுகுவதற்கான அவர்களுடைய உரிமையையும் உள்ளடக்கிய விதத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக குரல் எழுப்புதல்;

- நிலைமாறு கால நீதிச் செயன்முறைகளை மேம்படுத்துவதற்கும், அவற்றில் ஈடுபடுவதற்கும் என சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அமைப்புக்கள் ஆகிய தரப்புக்களுக்கு தொழில்நுட்ப உதவியை வழங்குதல் மற்றும் அவர்களின் ஆற்றலை கட்டியெழுப்புதல்;

- இழப்பீட்டு நீதி முன்முயற்சிகள்; மற்றும்

- இவற்றிலும் ஏனைய அனைத்து நிலைமாறு கால நீதி செயன்முறைகளுக்குள்ளும் பால்நிலை நீதி அம்சத்தை உறுதிப்படுத்தி ஒருங்கிணைத்தல்.

ஒன்றியம் மற்றும் சர்வதேச மனச்சாட்சி மையங்களின் வலையமைப்பு உறுப்பு அமைப்புக்கள் என்பவற்றுக்குள் காணப்படும் அனுபவங்கள், அறிவு மற்றும் திறன்கள் என்பவற்றின் பன்முகத் தன்மை எனும் பின்னணியில் ஒன்றியத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் போர்களுக்குப் பிற்பட்ட நாடுகளுக்கும் அடக்குமுறை ஆட்சிகளிலிருந்து எழுச்சியடைந்து வரும் நாடுகளுக்கும் உரிய காலத்தின் அடிப்படையில் நிலைமாறுக் கால நீதி தேவைகளை முன்னெடுப்பதற்கான தனித்துவமான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது. அதே வேளையில் அது உள்ளூர் பங்கேற்பை மேம்படுத்துவதுடன், சமூக பங்காளர்களின் ஆற்றல்களையும் கட்டியெழுப்புகின்றது.



*கம்போடியாவில் வீல் ரின் கிராமத்தில் ஒரு புத்தகத்தை வாசித்து வருவதற்கு உதவ சிறுவர்கள்.*

*மிக கடுமையான வறுமைக்கு எதிரான போராட்டத்தில் வளங்களின் பகிர்ந்தளிப்பு ஒரு கருவியாக இருந்து வருகின்றது. கம்போடியாவின் கிராமப் பகுதிகளில் அச்சிடப்பட்ட புத்தகங்கள் மிகக் குறைந்த அளவிலேயே விநியோகிக்கப்படுகின்றன. முக்கியமான அறிவு மற்றும் ஆழமான சிந்தனை என்பவற்றை பரப்புவது இதன் காரணமாக சிரமமானதாக இருந்து வருகின்றது. மக்களுக்கு அதிகளவிலான தகவல்களையும், சிறந்த கல்வியையும் வழங்குவதன் மூலம் அவர்கள் தாமே தம்மை கடும் வறுமையிலிருந்து வெளியில் எடுத்து வர முடியும்.*

Photo credit: Documentation Center of Cambodia (DC-Cam) / MakaraOuch

# உள்ளடக்கம்

முன்னுரை……………………………………………………………………………….......…. 8
(கலாநிதி ரிவா கன்டோவிஸ்)

அறிமுகம்……………………………………………………………………………...………. 9

முறைமையியல் ……………………………………………………………………………… 23

அத்தியாயம் : 1
தென் சூடான் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு…………………………….… 25
*டிபானி சொமாடொஸி மற்றும் பிரிஜட் ருதர்போர்ட்,*
*பொது சர்வதேச சட்டம் மற்றும் கொள்கைக் குழு*
அத்தியாயம் : 2
மனித உரிமை மீறல்களை எதிர்கொண்டு உயிர் வாழ்ந்து வரும் சிரியா மக்கள் தொடர்பான நிதிப்படுத்தல் மதிப்பீடு ………………………………………………………………………... 43
*சுபியா பிரே, வன்முறை மற்றும் நல்லிணக்கம் குறித்த*
*ஆய்வு நிலையம்*

அத்தியாயம் : 3

இலங்கையில் உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்காக உள்ளூர் ஆற்றல்களை கட்டியெழுப்புதல் ……………………………………………………………………….…... 61
*இரேஷ்னி நாயுடு - சில்வர்மேன், சர்வதேச மனச்சாட்சி மையங்களின் சர்வதேச கூட்டண*
*'கூட்டமைப்பு மார்டி மேஹேர் துன்ஹேம் (கௌதமாலா விஞ்ஞான ரீதியான சான்று மானிடவியல் மன்றம்*

அத்தியாயம் : 4
மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க என்கிற நிலைமாறு
கால நீதி கல்விக் கழகம் …………………………………………………...………………... 83
*சாரா பிரேட்ஷோ மற்றும் பாத்தி ஸபார், மனச்சாட்சி மையங்களின் சர்வதேச கூட்டணி*

அத்தியாயம் : 5
சிவில் சமூகத்தின் ஆவணப்படுத்தல் செயற்பாடு மற்றும் குற்றங்களுக்கு
பொறுப்புக் கூறல் ……………………………………………………………….……………. 101
*கிரஸ்டோபர் டியரிங் மற்றும் யூக் சாங், கம்போடியா*
*ஆவணப்படுத்தல் நிலையம்*

சம்பவக் கற்கை: கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையத்தின் ஆவணப்படுத்தல்
*கிரஷ்டோபர் டியரிங் மற்றும் யூக் சாங், கம்போடியா*
*ஆவணப்படுத்தல் நிலையம்*

சம்பவக் கற்கை: முன்னைய யூகோஸ்லாவியாவில் மனித நேய நிலையத்தின் ஆவணப்படுத்தல் செயல்பாடுகள்
*மிலிகா கொஸ்டிக், மனித நேய சட்ட நிலையம்*

சம்பவக் கற்கை: கௌதமாலா விஞ்ஞான ரீதியான சான்று மானிடவியல் மன்றத்தின் ஆவணப்படுத்தல்
*மார்ட் மேஹ்ரி துன்ஹேம், பிரடி பிக்கரெலி மற்றும் ஜோ மேரி பேர்ட், கௌதமாலா விஞ்ஞான ரீதியான சான்று மானிடவியல் மன்றம்*

அத்தியாயம் : 6
கம்போடியாவில் காணாமற் போன அல்லது காணாமல்
ஆக்கப்பட்ட ஆட்கள்: மதிப்பீட்டு அறிக்கையின் சாராம்சம் ………………………………. 101
*டாரியோ கொள்மெனாரெஸ் மிலான், மனச்சாட்சி*
*மையங்களின் சர்வதேச கூட்டணியின் ஆலோசகர்*

அத்தியாயம் : 7
கூட்டமைப்பின் நிகழ்ச்சித்திட்டங்களின் மதிப்பீட்டிலிருந்து பெறப்பட்ட
முக்கிய பாடங்கள் ……………………………………………..………………. 101

# முன்னுரை

நிலைமாறு கால நீதி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான ஒரு புத்தாக்க இயல்பிலான அணுகுமுறையை பின்பற்றியதன் மூலம் பெற்றுக் கொண்டிருக்கும் பாடங்கள் குறித்து அடுத்து வரும் அத்தியாயங்கள் பேசுகின்றன. நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணக்கருக்களை உருவாக்கி, அவற்றை அமுல் செய்யும் அமைப்புக்களின் ஒரு கூட்டமைப்பு இந்த அணுகுமுறையின் பிரகாரம் தண்டனைக்கு அச்சமின்றி குற்றம் புரியும் நிலைக்கு சவால் விடுத்து, உண்மைகளை கண்டறிந்து, பாரதூரமான மனித உரிமை மீறல் நிலைமைகளுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் விதம் குறித்து இந்த அத்தியாயங்கள் விளக்குகின்றன. மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டங்களை தேசிய மற்றும் உள்ளூர் பின்புலங்களில் வேரூன்றச் செய்யும் அதே வேளையில், பரவலான நீதித் துறை கருவிகளை கண்டறிவதன் மூலம் அந்தக் கூட்டமைப்பு இத்தகைய சம்பவங்கள் மீண்டும் இடம்பெறுவதனையும் தடுக்கின்றது.

நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பு கூட்டமைப்பு தொடர்பான எண்ணக் கரு ஐக்கிய அமெரிக்க ராஜாங்க அமைச்சின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழில் பணியகத்திற்குள் ஒரு அணிக்கு நான் தலைமை தாங்கிய காலப் பிரிவின் போது உருவாக்கப்பட்டது. அந்தப் பணியகம் மோதலினால் பாதிக்கப்பட்டிருக்கும் பின்புலங்களில் மனித உரிமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும், நீதியை மேம்படுத்துவதற்குமான நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்து, அவற்றுக்கு நிதியளிக்கும் விடயத்தில் கவனம் செலுத்தியது. இந்தக் கூட்டமைப்பு பின்வரும் இரண்டு சிந்தனைகளின் ஒரு எதிர்வினையாக இருந்து வந்தது.

முதலாவதாக, எமது அனுபவமும், அதன் மூலம் நிலைமாறு கால நீதிச் செயல்பாடுகளுக்கான நிதியளிப்பு தொடர்பான ஆராய்ச்சியும் (உதாரணமாக பார்க்கவும்: http://fundingtj.org), நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளுக்கான சர்வதேச நிதிவழங்குனர்களின் நிதியளிப்பு சர்வதேச விசாரணை மன்றங்கள் மற்றும் குற்றவியல் வழக்குத்தாக்கல் செய்யும் செயற்பாடுகள் என்பவற்றுக்கு பெருமளவுக்கு ஆதரவளித்து வருகின்றன என்ற விடயத்தை எடுத்துக் காட்டின. நீதி மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றை பல்வேறு வழிகளுக்கூடாக நிறைவேற்றி வைக்க முடியும் - வழக்கு விசாரணைகள், நினைவேந்தல் நிகழ்வுகள்,கலாசார பாரம்பரியத்தை பாதுகாத்தல், கடும் மன அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் உள சமூக ஆதரவு, இழப்பீடுகள் மற்றும் உண்மையை கூறுதல் என்பன இவற்றில் அடங்குகின்றன. ஒவ்வொரு பின்புலத்திற்கும் பொருத்தமான செயன்முறைகள் நீதி, உண்மை, வினைத்திறன்மிக்க நிவாரணம் மற்றும் இழப்பீடு மீள் நிகழாமைக்கான உத்தரவாதங்கள் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் நிலைமாறு கால நீதியின் அடிப்படை எண்ணக் கருக்களை சம விகிதத்தில் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய உத்திகள் வன்முறையினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களினால் நெறிப்படுத்தப்பட்டு, அவர்களுடைய பங்கேற்பினை பெற்றுக் கொண்டிருக்கும் ஒரு செயன்முறைக்கூடாக நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். பெரும்பாலான பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் குற்றமிழைத்தவர்களை பொறுப்புக் கூற வைத்தல் என்பது மிகவும் முக்கியமான ஒரு அம்சமாக இருந்து வரும் அதே வேளையில் அது ஒரு கருவியாக மட்டுமே உள்ளது. அது ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் சவால்களையும் எதிர்கொண்டு வருகின்றது. அது சில சந்தர்ப்பங்களில் பல தசாப்தங்கள் எடுக்கக் கூடிய, செறிவான விதத்தில் வளங்கள் தேவைப்படும் ஒரு செயன்முறையாக இருந்து வருகின்றது. ஒரு சில சந்தர்ப்பங்களில் இச்செயன்முறை இத் துஷ்பிரயோகங்களை திட்டமிட்டு நிகழ்த்திய நபர்களின் ஆயுள் காலத்தையும் கூட தாண்டிச் செல்வதுடன், குற்றமிழைத்த சிறு எண்ணிக்கையிலான நபர்களின் மீது மட்டும் கவனம் செலுத்துகின்றது. மோதல்களினால் பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த சமூகங்கள் தொடர்பாகவும் அது கவனம் செலுத்துவதில்லை. வன்முறை சுழல்களை தடுத்தல் மற்றும் நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பவற்றுக்கான முன் நிபந்தனைகளாக இருந்து வரும் பரவலான தேவைகள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றின் ஒரு தொகுதியின் ஒரு பாகமாக பாதிக்கப்பட்டவர்கள், குற்றமிழைத்த நபர்கள்

அக்குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வைக்கப்பட வேண்டுமென விரும்புகின்றனர். சமூகத்தின் தேவைகளை விரிவான விதத்தில் கவனத்தில் எடுப்பது தவிர, பாதிக்கப்பட்டவர்கள் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி வரும் பல்வேறுபட்ட செயன்முறைகளுக்கு நிதி வழங்குனர்கள் ஆதரவளிப்பது முக்கியமாகும்.

இரண்டாவதாக, நிலைமாறுகால நீதிக்கு ஆதரவளிப்பதற்கான ஒரு “முறைமை சார்ந்த அணுகுமுறை” பயனுள்ளதாக இருந்து வரும். சமூக விஞ்ஞானங்களில் பிரபல்யமாக இருந்து வருவதுடன், சர்வதேச அபிவிருத்தியின் ஒரு சில துறைகளில் அதிகரித்த அளவில் பிரபல்யமடைந்து வரும் முறைமை சார்ந்த சிந்தனை, ஒரு முறைமை, ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட, ஒன்றுடன் ஒன்று தங்கியிருக்கும் மிகவும் ஒரு சிக்கலான வலைப்பின்னலை கொண்டிருப்பதாக அனுமானிப்பதுடன், அவற்றுக்கிடையிலிருக்கும் பிணைப்புக்களை பரிசீலனை செய்கின்றது. இந்த முறைமையின் ஒரு சில அம்சங்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கும், அதனை விருத்தி செய்வதற்குமான முயற்சிகள் ஏனைய பாகங்களிலும், ஏனைய மட்டங்களிலும் தவிர்க்க முடியாத விதத்தில் வெடிப்புடன் கூடிய எதிர்வினைகளை எடுத்து வருகின்றன. இந்த விடயத்தில் முறைமை என்பது திட்டவட்டமான போருக்குப் பிற்பட்ட ஒரு சமூகமாகும். அச்சமூகத்தில் மட்டங்கள் - தனிநபர்கள், சமூகங்கள்; சிவில் சமூகம்; உள்ளூர், பிராந்திய மற்றும் தேசிய அரசாங்கம் மற்றும் நிறுவனங்கள் - தெளிவாகவே ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டுள்ளன. விதித்துரைக்கும் பொறிமுறைகள் குறிப்பிட்ட பின்புலம் சார்ந்த கூருணர்வை கொண்டவையாக இருந்து வருவதில்லை. அதன் காரணமாக நிலைமாறு கால நீதித் துறையில் அது தொடர்பாக நீண்ட காலமாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. எனவே, அத்தகைய நிவாரணப் பொறிமுறைகளில் கவனம் செலுத்துவதற்கு பதிலாக, நிகழ்ச்சித்திட்டக் கண்ணோட்டத்தில் இருக்கும் ஓர் அணுகுமுறை திட்ட வட்டமான கருவிகளுக்குப் பதிலாக செயற்பாட்டாளர்களுக்கு ஆதரவளிப்ப துடன் சம்பந்தப்பட்டதாகும். அதாவது, இயக்கங்களையும், நிலைத்திருக்கக் கூடிய வலையமைப்புக்களையும் உரு வாக்குவதற்கும், இறுதியில் போருக்குப் பிற்பட்ட பின்புலத்தில் ஸ்திர தன்மையை எடுத்து வரக் கூடிய கூட்டுத் தாக்கத்தை உருவாக்குவதற்கும் இலட்சிய ரீதியாக உதவக் கூடிய (சமூகங்களுக் கிடையிலான) பரஸ்பர இடைத் தொடர்புகளுக்கு நிதியளிப்பதாகும். இந்த அணுகுமுறை வழிகளையும், பிணைப்புக்களையும் உருவாக்குவதுடன், அவற்றுக்கூடாக பாதிக்கப்பட்ட மக்களும், முரண்பாடுகளினால் பாதிப்புக்களை எதிர்கொண்டிருக்கும் சமூகங்களும் தமது தேவைகளை எடுத்துக் கூறி, கூட்டு மேடைகளையும், நிகழ்ச்சிநிரல்களையும் உருவாக்க முடியும். அதனையடுத்து இந்தக் கண்ணோட்டங்கள் உள்ளூர் மற்றும் தேசிய பொறிமுறைகளில் பிரதிபலிப்பதுடன், இந்த பின்னூட்டல்



2014 ஏப்ரல் மாதத்தில் நினைவிடமொன்றில் ஒன்றுகூடியிருக்கும் பார்வையாளர்கள் காட்சி சர்வதேச மனச்சாட்சி மையங்களின் சர்வதேச கூட்டணியின் ஒரு ஸ்தாபக உறுப்பினரான இந்த அருங்காட்சியகம் ஒரு தனிப்பட்ட வீடு மற்றும் அடிமை வர்த்தகத்தில் அதன் வகிபங்கு என்பன தொடர்பான தனிப்பட்ட கதைகளை கூறுகின்றது. 1962 ஆம் ஆண்டில் இந்த நினைவிடம் ஸ்தாபிக்கப்பட்டதுடன், அன்று தொடக்கம் ஆயிரக்கணக்கான பார்வையாளர்களை அது ஈர்த்துள்ளது. பாடசாலை பிள்ளைகளிலிருந்து நெல்சன் மண்டேலா, பாப்பரசர் ஜோன் போல் II மற்றும் பரக் ஒபாமா ஆகியோரும் இப்பார்வையாளர்களில் அடங்குகின்றனர்.

வழிமுறை நிலைமாறு கால நீதி செயன்முறைகள் மற்றும் கருவிகள் என்பவற்றின் நோக்கத்தை பாதிக்கப்பட்டவர்கள் சிறந்த விதத்தில் புரிந்து கொள்வதற்குஇயலுமையைப் பெற்றுக் கொடுக்கின்றது எனவும் கூறப்படுகின்றது. மேலும், இது பாதிக்கப்பட்டவர்களுக்கும், மோதல்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் சமூகங்களுக்கும் ஒரே சீரான விதத்தில் நேரடியாக ஆதரவினை வழங்கும் பொருட்டு பொறிமுறைகள் உறுதியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது என்பதனையும் இது குறிக்கின்றது. பாதிக்கப்பட்டவர்களும், மோதல்களினால் பாதிக்கப்பட்ட சமூகங்களும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தலைநகரங்களுக்கு வெளியில் வாழ்ந்து வருவதுடன், பெருமளவுக்கு புறமொதுக்கப்பட்டவர்களாகவும், எளிதில் ஊறுப்படத்தக்கவர்களாகவும் இருந்து வருகின்றார்கள். இப்பொறிமுறைகள் செயற்பாடுகளில் அவர்களுடைய பங்கேற்பையும், அவர்களுடைய உரித்துணர்வையும் இயலச் செய்தல் வேண்டும்.

மனச்சாட்சி மையங்களின் சர்வதேச கூட்டணியின் தலைமையில் உலகின் அனைத்துப் பாகங்களையும் சேர்ந்த ஒன்பது அமைப்புக்கள் இணைந்த விதத்தில் இந்தக் கூட்டமைப்பு 2014 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது இரண்டு நாடுகளில் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதில் கவனம் செலுத்தும் விதத்திலான ஒரு முன்னோடி முயற்சியாக துவக்கி வைக்கப்பட்டது. அதன் ஸ்தாபிதம் தொடக்கம் இந்தக் கூட்டமைப்பு 17 நாடுகளைச் சேர்ந்த 255 க்கும் மேற்பட்ட சிவில் சமூக அமைப்புக்களுடன் செயற்பட்டு வந்திருப்பதுடன், உள்ளூர் கருத்திட்ட பங்கேற்பாளர்களுக்கான உப நிதியளிப்புக்களை வழங்குவதற்கூடாக உள்ளூர் சமூகங்களினால் முன்னெடுக்கப்பட்ட 58 நிலைமாறு கால நீதி கருத்திட்டங்களுக்கு ஆதரவளித்துள்ளது. மேலும், சிவில் சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் ஆவணப்படுத்தல் கருத்திட்டங்களின் ஒரு பாகமாக மனித உரிமை மீறல்கள் சம்பவங்கள் தொடர்பான 1100 க்கும் மேற்பட்ட சான்றுகளை சேகரிக்கப்படுவதற்கும் அது உதவியுள்ளது. கூட்டமைப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒரு அடிப்படை அணுகுமுறையை பகிர்ந்து கொள்வதுடன், இது தொடர்பாக கற்றுக் கொண்டிருக்கும் பெருந்தொகையான படிப்பினைகளையும் வழங்குகின்றது.அத்தகைய படிப்பினைகள் கூட்டமைப்பு அமுலாக்கல் பங்காளர்களின் கண்ணோட்டத்திலிருந்து இந்தப் பிரசுரம் நெடுகிலும் கலந்துரையாடப்படவுள்ளன. எவ்வாறிருப்பினும், எழுச்சிக் கண்டு வரும் ஒரு சில சிறந்த நடைமுறைகளை இங்கு எடுத்துக் காட்டுவது பயனுள்ளதாக இருந்து வரும்.

### பல்துறைசார் முறைமையியல் அணுகுமுறை

இந்த பல்துறைசார் முறைமையியலை அமுல் செய்வதற்கென கூட்டமைப்பு திட்டவட்டமான வழிகாட்டுதல்களை அபிவிருத்தி செய்தது; உதாரணமாக, ஒவ்வொரு கருத்திட்டத்திலும் ஆகக் குறைந்தது இரண்டு அல்லது மூன்று பங்காளர் நிறுவனங்களின் கூட்டுச் செயற்பாடு அவசியமாகும். ஒவ்வொரு பின்புலத்திலும் நிகழ்ச்சித்திட்டங்கள் முடியுமான அளவுக்கு முறைமையியல் அணுகுமுறையொன்றை செயற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன. அதற்கூடாக அது அரசாங்கங்கள், சிவில் சமூகம், உள்ளூர் சமூகங்கள் என்பவற்றையும், பாதிக்கப்பட்டவர்களையும் பரந்த வீச்சிலான நிலைமாறு கால நீதிச் செயன்முறைகளில் ஒன்றாக இணைக்கின்றது. அது தவிர, நிதியுதவி வழங்கும் அரசாங்கங்களைச் சேர்ந்த பல்வேறு செயற்பாட்டாளர்கள் அத்தியாவசியமானவை எனக் கருதக் கூடிய அல்லது அவ்வாறு கருதாத முதன்மையான கூறுகளையும் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டமும் உள்ளடக்குகின்றது. அதாவது, கடும் மன அதிர்ச்சி தொடர்பான பயிற்சி, உள சமூக ஆதரவு மற்றும் சமூக அடிப்படையிலான செயன்முறைகள், நினைவேந்தல் செயற்பாடுகள், கலாசாரத்தைப் பாதுகாத்தல், சமூக ஆவணக் காபகங்களை பராமரித்தல் என்பவற்றை இவை உள்ளடக்குகின்றன. திட்டவட்டமான நாடுகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் அதிகாரிகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சில முன்னுரிமைகளை கொண்டுள்ளார்கள். உதாரணமாக, சாட்சியங்களை சேகரிக்கும் நோக்கத்திற்கென மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் தொடர்பான ஆவணப்படுத்தலை மேற்கொள்ளல் அல்லது சிவில் சமூகத்திற்கூடாக அரசாங்கத்திற்கும் நிறுவன ரீதியான செயற்பாட்டாளர்களுக்கும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல் என்பன இதில் அடங்குகின்றன. அக்கூட்டமைப்பின் மாதிரி, பிரிவு அதிகாரிகள் அல்லது தூதரகங்களை பொறுத்தவரையில் பரிச்சயமில்லாத நிகழ்ச்சித்திட்ட

கூறுகளையும் உள்ளடக்கும் ஓர் அணுகுமுறையை பயன்படுத்தும் அதே வேளையில், இந்த முக்கியமான கூறுகள் கவனத்தில் எடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது. எவ்வாறிருப்பினும், இவை பாதிக்கப்பட்டவர்களின் வினைத்திறன்மிக்க பங்கேற்புக்கும், இவை பரவலான நிலைமாறு கால நீதி முயற்சிகளுக்கும் அத்தியாவசியமானவையாகும்.

### புத்தாக்கம்

எமது DRL அணி கூட்டமைப்பைப் போன்ற தயார் நிலையில் இருந்து வரும் ஒரு பொறிமுறையை கொண்டுள்ளது. இது ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை துவக்கி வைக்க வேண்டிய தேவை இருந்து வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிதியளிப்புக்களை பெற்றுக் கொள்வதற்கென பகிரங்கமாக ஒரு

வேண்டுகோளை முன்வைக்கும் 9 மாதச் செயன்முறைக்கூடாக செல்லாது, உடனடி நிவாரணச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும், நிகழ்ச்சித்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் இயலுமையை வழங்குகின்றது. இந்த நெகிழ்ச்சித் தன்மையும், உடனடியாக அணி திரளக் கூடிய ஆற்றலும் அரசியல் மாற்றங்களுக்கு எதிர்வினையாற்றுவதற்கும், தூதுவராலயங்களிலிருந்து வரும் வேண்டுகோள்களை நிறைவேற்றி வைப்பதற்கும், பங்காளர்களிடமிருந்து தகவல்கள் மற்றும் பின்னூட்டல்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும் எமக்கு உதவுகின்றது. இந்தக் கூட்டமைப்பின் குறிக்கோள் அடிமட்டத்தில் நிலைமாறு கால நீதி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தேவைகளுக்கு எதிர்வினையாற்றுவதற்கும், நிலைமாறு கால நீதி மற்றும் மோதல் எதிர்வினை ஆகிய துறைகளை மேலும் முன்னெடுத்துச் செல்வதுமாகும். இதனை நிறைவேற்றிக் கொள்வதற்கென ஒரு சில நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்குமாறு கூட்டமைப்பிடம் DRL கேட்டுக் கொள்ள முடியும். மேலும், பங்காளர் அமைப்புக்களும் DRL இடம் புத்தாக்க இயல்பிலான நிகழ்ச்சித்திட்ட எண்ணக் கருக்களை சமர்ப்பிக்க முடியும். இந்த இரு வழிப் பாதையானது, உள்ளூர் நிலைமைகள் குறித்து ஆழமான அறிவைக் கொண்டிருப்பதுடன், திரண்ட அனுபவங்களின் பாரிய ஒரு செல்வத்தைக் கொண்டிருக்கும் நிறுவனங்கள் மோதல் மற்றும் மோதலுக்குப் பிற்பட்ட பின்புலங்களில் நிலவி வரும் சிக்கலான பிரச்சினைகள் தொடர்பாக புதிய நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறைகளை முன்வைப்பதற்கு மிகவும் பொருத்தமான நிலையில் இருந்து வருகின்றன என்ற எமது நம்பிக்கையை பிரதிபலிக்கின்றது. நிதிவழங்குனர் சமூகம் அவர்களிடமிருந்து கருத்துக்களை பெற்று அவற்றுக்கு ஆதரவளிப்பதற்கென ஒருங்கிணைந்த செயன்முறைகளை உருவாக்குவதன் மூலம் அவ்வாறு செய்யும் அவற்றின் ஆற்றலுக்கு அனுசரனை வழங்க முடியும்.

### கற்றல்

கூட்டமைப்பின் கட்டமைப்பு மோதல் மற்றும் மோதலுக்குப் பிற்பட்ட பின்புலங்களில் வினைத்திறன்மிக்க நிலைமாறு கால நீதி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக கற்றுக் கொள்வதற்கான புதிய வாய்ப்புக்களை வழங்குகின்றது. கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள் மற்றும் 55 நாடுகளில் செயற்பட்டு வரும் மனசாட்சி மையங்களின் சர்வதேச கூட்டணியின் 230 பங்காளர் அமைப்புக்கள் என்பவற்றின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நிறுவனங்களுக்கும், பங்கேற்பாளர்களுக்குமிடையிலான கருத்துப் பரிமாற்றங்கள் பெருந்தொகையான கூட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. உதாரணமாக, கம்போடிய பங்காளர் அமைப்புக்களும், மனசாட்சி மைய சர்வதேச கூட்டணியும் உறுப்பு அமைப்புக்களும் தென் சூடானில் ஆவணப்படுத்துபவர்களுக்கான அனுசரனையை வழங்கின. இந்தக் கற்றல் செயற்பாடு அடுத்து வரும் அத்தியாயத்தில் எடுத்து விளக்கப்பட்டுள்ளது. அது தவிர, உலகெங்கிலும் பாரிய மோதல்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் பல பின்புலங்களில் கூட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்திருப்பதுடன், அது இந்தப் பிரசுரத்தில் எடுத்துக் காட்டப்படும் ஆழ்ந்த சிந்தனைக்கான ஒரு வளமான வாய்ப்பினை வழங்கியிருந்தது. இறுதியாக, கூட்டமைப்பு ஒழுங்கான அடிப்படையில் அனைத்து உறுப்பினர்களுக்குமான கூட்டங்களை நடத்துவதுடன், ஒரு பங்காளர் அமைப்பினால் தமது தாய்நாட்டில் நடத்தப்படும் ஒரு வருடாந்த கூட்டத்திற்கு உறுப்பினர்கள் தமது தனிப்பட்ட அணிகளிலிருந்து வெளியில் வந்து பங்கேற்க முடியும். இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தாக்கத்தை அறிந்து கொள்வதற்கும், நிலைமாறு கால நீதி நிகழ்ச்சித்திட்ட செயற்பாட்டினை அணுகுவதற்கான

இந்தப் புதிய மாதிரியின் வினைத்திறனை புரிந்து கொள்வதற்குமான முயற்சிக்கு துணை புரிகின்றன. மேலும், நிதி வழங்குனர்களும் ஏனைய பங்கீடுபாட்டாளர்களும் இச்செயற்பாடுகளை வெளிப்படையான விதத்தில் மதித்துப் போற்றுவதற்கும், அவற்றுக்கென வளங்களை ஒதுக்குவதற்கும் ஊக்குவிக்கின்றன.



கூட்டமைப்பின் தென் ஆபிரிக்க பங்காளர் அமைப்பொன்றான வன்முறை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான நிலையம் ஏற்பாடு செய்திருந்த வன்முறைத் தடுப்பு செயலமர்வு 2017 மே மாதத்தில் (GIJTR) கூட்டமைப்பின் அனுசரணையுடன் கயானாவில் கொனாக்ரியில் இடம்பெற்றது.

## செயன்முறை மற்றும் கூட்டுச் செயற்பாடு

இந்த மாதிரியின் உள்ளார்ந்த செயன்முறை - செயற்பாட்டாளர்களை ஒன்று கூட்டுதல், நம்பிக்கையை கட்டியெழுப்புதல் மற்றும் சிக்கலான சந்தர்ப்ப சூழ்நிலைகளில் பன்முக கண்ணோட்டங்கள் மற்றும் முன்னுரிமைகள் என்பவற்றின் அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையொன்றை உருவாக்கிக் கொள்ளல் என்பன - அதிக காலத்தை எடுப்பதுடன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வேதனையூட்டுபவையாக இருந்து வருகின்றது. இங்கு கலந்துரையாடப்படும் தென் சூடான் மற்றும் இலங்கை என்பவற்றையும் உள்ளடக்கிய பெருந்தொகையான நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கியமான வெற்றிகள், மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள், பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவன ரீதியான செயற்பாட்டாளர்கள் ஆகியோரை மையமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களுடன் சம்பந்தப்பட்டவையாக இருந்து வருகின்றன. அதே போல இந்த பன்முக பங்கீடுபாட்டாளர்களுக்கு மத்தியில் நம்பிக்கையையும், கருத்தொற்றுமையையும், கட்டியெழுப்புவதுடன் இது சம்பந்தப்பட்டுள்ளது.மிகவும் ஆழமான கட்டமைப்பு ரீதியான ஒரு சில காரணங்கள் மற்றும் வெறுமனே வேலைச் சுமையுடன் சம்பந்தப்பட்ட காரணங்கள் போன்ற பல்வேறு காரணங்களினால் நிதிவழங்குனர்கள் பெறுபேறுகள், வெளியீடுகள் மற்றும் திட்டவட்டமான குறிக்கோள்கள் என்பன தொடர்பாக முழுமையாக கவனம் செலுத்த முடியும். நிதியளிப்புக்களை பெற்றுக் கொண்டவர்கள் அந்தக் குறிக்கோள்களை எவ்வாறு சாதித்துக் கொள்கின்றார்கள் என்ற விடயம் குறித்து அவர்கள் அதிகளவுக்கு கரிசனை காட்டாதிருக்கவும் முடியும். இந்த இயல்பிலான ஒரு கூட்டமைப்புடன் பணிகள், அத்தகைய குறிக்கோள்கள் மற்றும் பெறுபேறுகள் என்பவற்றை நிறைவேற்றிக் கொள்வதன் அடிப்படையில் "அளவிடப்பட முடியும்" ; மற்றும் அளவிடப்படுதல் வேண்டும். எவ்வாறிருப்பினும், ஒட்டுமொத்தமான நெகிழ்ச்சித்தன்மையுடன் கூடிய, பெருமளவுக்கு அனைவரையும் உள்ளடக்கக் கூடிய - அதனால் பெருமளவுக்கு நிலைத்திருக்கும், வினைத்திறன்மிக்க - நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறையை எடுத்து வரும் செயன்முறைகளுக்கு வசதி செய்து கொடுப்பதும், அதே அளவுக்கு முக்கியமானதாகும். மோதலினால் பாதிக்கப்பட்டிருப்பதுடன், எளிதில் ஊறுபடத்தக்கவையாக இருந்து வரக் கூடிய பின்புலங்களில் செயற்படுவதற்கான ஒரு முன்நிபந்தனையாக இது இருந்து வருகின்றது.

# அறிமுகம்

நிலைமாறு கால நீதி என்பது தண்டனை விலக்குரிமையை முடிவுக்குக் கொண்டு வந்து. பாரிய மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு நிவாரணம் வழங்கி. சட்டத்தின் ஆட்சியை மீண்டும் எடுத்து வருவதனை நோக்கமாகக் கொண்ட ஒரு தொகுதி வழிமுறைகள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றைக் கொண்டுள்ளது. குறிப்பாக, 1990 கள் தொடக்கம் இது தொடர்பாக கணிசமான அளவிலான எழுத்தாக்கங்கள் மற்றும் நடைமுறை என்பன இருந்து வந்த போதிலும். நிலைமாறு கால நீதியில் வெற்றியளிப்பது எது? வெற்றியளிக்காதது எது? என்பன தொடர்பான அனுபவ ரீதியான ஆராய்ச்சி குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. எவ்வாறிருப்பினும், அத்தகைய சாட்சியங்களை சேகரிப்பது 'நீதி' , 'உண்மை','நல்லிணக்கம்' என்பன தொடர்பான அடிப்படை கோட்பாடுகளின் பல்வேறு விதமான புரிதல்கள் காரணமாக இடையூறினை எதிர்கொண்டு வருகின்றது. உலகெங்கிலும் அண்மையில் மோதல் நிலைமைகள் அதிகரித்து வரும் பின்னணியில். வகை பொறுப்புக் கூறும் நிலைமையை எடுத்து வரும் வழிமுறைகள் முடியுமான அளவுக்கு வெற்றி அளிக்கக் கூடியவையாக இருந்து வருவது மிக முக்கியமாகும். குறிப்பாக, நிலைமாறு கால நீதி. தமது உரிமைகள் மற்றும் கண்ணியம் என்பன மீறப்படுவதற்கு வழிகோலிய நிலைமைகளை மாற்றியமைக்கும் விடயத்தில் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு உரித்துரிமையை எடுப்பதற்கு அவர்களுக்கு வலுவூட்டுதல் வேண்டும். அதன் பிரகாரம், நிலைமாறுக் கால நீதி கீழிருந்து மேல் நோக்கிய திட்டவட்டமான பின்புலத்தை கருத்தில் கொண்ட ஒரு முயற்சியாக இருந்து வருதல் அவசியமாகும். அது பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் பிரிவினரின் வாழ்க்கைத் தேவைகள், வலிமை மற்றும் எதிர்காலம் என்பவற்றை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும். எல்லா தீர்வுகளுக்கும் ஒரே அளவு இல்லாதிருந்து வரும் காரணத்தினால் நிலைமாறு கால நீதி பல்வேறு கோலங்களிலிருந்து தண்டனை விலக்குரிமையின் மீது தாக்குதல் தொடுக்கும் ஒரு ஒட்டுமொத்த அணுகுமுறையை பின்பற்றுதல் அவசியமாகும். குற்றவியல் நீதி அல்லது உண்மையை கூறுதல் ஆகிய கண்ணோட்டங்களில் மட்டும் அது இந்தத் தாக்குதலை நடத்தக் கூடாது. இந்த ஒட்டுமொத்தமான அணுகுமுறை பல்வேறு விதமான வழிமுறைகள். செயன்முறைகள். உத்திகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டிருத்தல் வேண்டும். குற்றச் செயல்களுக்குப் பொறுப்புக் கூறுதல், உண்மை, நினைவேந்தல், கட்டமைப்பு ரீதியான சீர்த்திருத்தம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கு இது அவசியமாகும்.

### வெற்றிகரமான நிலைமாறு கால நீதியை சாதித்துக் கொள்ளல்

துரதிர்ஷ்டவசமாக நிலைமாறு கால நீதியின் சட்டப்பூர்வத் தன்மை மற்றும் வினைத்திறன் என்பன எதிர்கொண்டு வரும் பல்வேறு சவால்களை முறியடிக்காமல் வெற்றிகரமான விதத்தில் அதனை சாதித்துக் கொள்ள முடியாது. கட்டமைப்பு ரீதியான அத்துமீறல்களை கவனத்தில் எடுக்கத் தவறுதல், தலையீடுகளின் சர்வதேசமயமாக்கப்படல், அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் நிலை காணப்படாமை மற்றும் மிகச் சிறந்த நிவாரண வழிமுறைகள் மேற்கொள்ளப்படாமை என்பன பிரதான இடையூறுகளில் அடங்குகின்றன. இந்த இடையூறுகளை முடியடிப்பது மிகவும் சிரமமான ஒரு காரியமாக இருந்து வருகின்றது. ஏனெனில், நிலைமாறு கால நீதி வழிமுறைகள் தொடர்பான மதிப்பீட்டு ரீதியான சான்றுகள் குறைவாக இருந்து வருவதுடன், முறைமைசார்ந்த விதத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்திச் செய்வதனை இது அநேகமாக சாத்தியமற்றதாக்குகின்றது. மனச்சாட்சி மையங்களின் சர்வதேச கூட்டணியின் தலைமையில் செயற்படும் நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பு இத்தகைய சவால்களுக்கான தீர்வுகளை வடிவமைத்து. மதிப்பீடு செய்யும் நோக்கத்திற்கென 2014 இல் ஸ்தாபிக்கப்பட்டது.

### நிலைமாறு கால நீதி கட்டமைப்பு ரீதியான வன்முறையை கவனத்தில் எடுத்தல் வேண்டும்

மோதலை இயலச் செய்து. அதனை உருவாக்கும் கட்டமைப்புக்கள் தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை கவனத்தில் எடுக்காமல் தண்டனை விலக்குரிமையை முடிவுக்குக் கொண்டு வருவது சாத்தியமில்லை. உண்மையிலேயே மோதலுக்குப் பிற்பட்ட சூழ்நிலையில் குற்றமிழைத்திருக்கும் நபர்களை அக்குற்றங்களுக்கு பொறுப்புக் கூற

வைப்பது ரீதியான முறைமை சார்ந்த வன்முறை மற்றும் பாரபட்சம் என்பவற்றை கவனத்தில் எடுக்கும் விடயத்தில் சம்பிரதாய நிலைமாறுக் கால நீதி வழிமுறையின் இயலாமையினால் முனைப்பான விதத்தில் தடைகளை எதிர்கொண்டு வருகின்றது. அதற்கு பதிலாக வழமையான நிலைமாறுக் கால நீதி பொறிமுறைகள் "அசாதாரணமான உடல் வன்முறையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இவை வேரூன்றியிருக்கும் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமூகமோதல் என்பவற்றைக் கூட அலட்சியம் செய்து வருகின்றன. 'சாதாரண' கட்டமைப்பு ரீதியான வன்முறையை அலட்சியம் செய்தல் மோதுவதற்கான மூலக் காரணங்களுக்கு பங்களிப்புச் செய்வதுடன், மோதலுக்கான மூல காரணங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் முன்னுரிமைகள் என்பவற்றை புறமொதுக்குகின்றன. உதாரணமாக, பால்நிலை பிரச்சினைகள் தொடர்பாக நிலைமாறுக் கால நீதி வழிமுறைகள் பாலியல் வன்முறை என்ற விடயம் குறித்து அதிகளவில் கவனம் செலுத்தி வருகின்றன. இது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அத்துமீறல்களுக்கான மூலக் காரணங்களாக இருந்து வரும் பால்நிலை இயங்கியலை புறக்கணிக்கின்றது. பால்நிலை ரீதியான வன்முறை அதே போல பெண்கள் மோதல்களை எதிர்கொள்ளும் ஏனைய பாலியல் ரீதியான பாலியல் சாராத வழிமுறைகள் என்பனவும் என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது.

நிலைமாறுக் கால நீதி முயற்சிகள் என்பவற்றின் உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் பொருத்தப்பாடு என்பவற்றை அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு மூலக் காரணங்களை துருவி ஆராய வேண்டியிருப்பதுடன், ஒரு சில சமூகப் பிரிவினர் மனித உரிமை மீறல்களை எதிர்கொள்ளக் கூடிய பலவீனமான நிலைமையை புரிந்து அதனை கவனத்தில் எடுப்பதன் மூலம் அனைத்து வடிவங்களிலான தண்டனை விலக்குரிமையையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும். இந்த விதத்தில் நிலைமாறுக் கால நீதி பாரிய மனித உரிமை மீறல்களுக்கான வெறுமனே நோய் குறிகளை மட்டுமன்றி அதற்கான காரணங்களை கவனத்தில் எடுக்க வேண்டும். நிலைமாறுக் கால நீதி தலையீடுகளில் உள்ளூர் கருத்துக்களை பயனுள்ள விதத்தில் உள்வாங்கிக் கொள்ளல் மற்றும் பங்கேற்பை பெற்றுக் கொள்ளல் என்பன மோதல்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் சமூகமொன்றில் பல்வேறு வடிவங்களிலான ஓரங்கட்டப்படும் இனங்களை அடையாளம் கண்டு கொள்வதற்கான மிக முக்கியமான ஒரு வழிமுறையாக இருந்து வருகின்றது. எவ்வாறிருப்பினும், பல முயற்சிகள் சர்வதேசமயமாக்கப்பட்டிருக்கும் நிலை உள்ளூர் சமூகத்தினர் பங்கேற்பை பெருமளவுக்கு தடுத்து வருகின்றது.



கௌத்தமாலாவையும் முன்னைய இராணுவ முகாமொன்றில் நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான கூட்டமைப்பு முன்னெடுப்பு உறுப்பினர்கள் 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இடம்பெற்ற மாயன் சமூகத்தின் சடங்கொன்றில் பங்கேற்கின்றனர். இந்த இராணுவ முகாமில் FAFG 220 பாதிக்கப்பட்ட நபர்களின் உடல் எச்சங்களை கண்டெடுத்தது.

## நிலைமாறுக் கால நீதி குறித்த பின்புலத்துடன் பொருந்தக் கூடியதாக இருந்து வருதல் வேண்டும்

உசிதமான பின்புலம் இருந்து வருவது நிலைமாறுக் கால நீதியை பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானதாகும். உள்ளூர் மக்கள் அந்த செயன்முறையின் உரித்தை கொண்டிருக்கும் பொழுது அவர்கள் மேசைக்கு அந்தப் பின்புலம் சார்ந்த நிபுணத்துவத்தை எடுத்து

வருகின்றார்கள். இது நிலைமாறுக் கால நீதி நிகழ்ச்சித்திட்டமிடலுக்கு உள்ளூர் பின்புலம் தேவைகள் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பான புரிந்துணர்வுகள் என்பன உள்ளடக்கப்படுவதற்கு வசதி செய்துக் கொடுக்கின்றது. குறிப்பாக, நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பன தொடர்பான கருத்துக்கள் திட்டவட்டமான பின்புலம் சார்ந்தவையாக இருந்து வருவதுடன், அவற்றை சாதித்துக் கொள்வதற்கு நிலைமாறுக் கால நீதி முயற்சிகள், சமூகத்தின் விழுமியங்கள் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பான எண்ணக் கருக்கள் என்பவற்றை உள்ளடக்கிக் கொள்வது அவசியமாகும். அதே வேளையில் உள்ளூர் மற்றும் சர்வதேச புரிந்துணர்வுகளுக்கான வாய்ப்புக்களும் வழங்கப்படுதல் வேண்டும். எனவே, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் நிலைமாறு கால நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் (அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் இருந்து வரும் சந்தர்ப்பங்களில்) கட்டமைப்பு ரீதியான தண்டனை விலக்குரிமையை முடிவுக்குக் கொண்டு வருதல் போன்ற பாதிக்கப்பட்ட சமூகங்களின் தேவைகளுக்குமிடையில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு பொருத்தமின்மை இருந்து வருகின்றது அதன் காரணமாக தேசிய பின்புலத்திற்கு மேலதிகமாக சமூக பின்புலங்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவது அவசியமாகும். இது உள்ளூர்மயமாக்கலின் பல்வேறு மட்டங்களில் வகைப் பொறுப்புக் கூறுதல் மற்றும் பின்புலம் என்பவற்றுக்கிடையிலான பரஸ்பர தொடர்பு அங்கீகரிக்கப்படுவதனை அவசியப்படுத்துகின்றது; எவ்வாறிருப்பினும், நிலைமாறு கால நீதி பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த இரு கூறுகளுக்குமிடையிலான பிணைப்பினை துண்டிக்கின்றது. உதாரணமாக, பூகோள மற்றும் நீதி புலம் சார்ந்த வரையறைகள் காரணமாக பாரம்பரிய குற்றவியல் வழக்குத் தொடுப்புக்கள் மற்றும் சத்திய விசாரணை ஆணைக்குழுக்கள் என்பன மிக முக்கியமான பின்புலம் சார்ந்த தகவல்களை நிராகரிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றன. நிலைமாறு கால நீதியின் பின்புலம் புறமொதுக்கப்படும் நிலையையடுத்து ஏற்படக் கூடிய பாதகமான தாக்கங்கள் கட்டமைப்பு ரீதியான தண்டனை விலக்குரிமை மற்றும் மோதலுக்கான மூல காரணம் என்பவற்றை கவனத்தில் எடுக்க தவறுவதனையும் உள்ளடக்குகின்றன.

நிலைமாறு கால நீதித் துறை சர்வதேசமயமாக்கப்படுதல் மற்றும் சம்பவங்கள் இடம்பெற்ற பின்புலம் கவனத்தில் எடுக்கப்படாமை ஆகிய இரண்டும் 'மிகச் சிறந்த நடைமுறைகள்' தொழில்நுட்ப விடயங்களின் அபிவிருத்திக்கூடாக தரநியமப்படுத்தல் முயற்சிகளை தூண்டிவிட்டுள்ளன. மிகச் சிறந்த நடைமுறைகள் உள்ளூர் புத்தாக்கங்கள் மற்றும் உள்ளீடுகள் என்பவற்றை புறந்தள்ளி, சர்வதேச நிபுணர்களினால் உருவாக்கப்படுகின்றன. அது தவிர, அதன் தாக்கம் குறித்த போதிய சாட்சியங்கள் இல்லாத நிலையில் குற்றவியல் வழக்குத் தொடுப்புக்கள் மற்றும் சத்திய விசாரணை ஆணைக்குழுக்கள் என்பன தொடர்பாக சர்வதேச ரீதியில் அழுத்தம் செலுத்தப்பட்டு வருகின்றது. அதன் காரணமாக தண்டனை விலக்குரிமைக்கு எதிரான ஏனைய நீண்ட கால அனைத்துமடங்கிய முயற்சிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக நிபுணர்களின் பரிந்துரைகளில் தங்கியிருக்கும் ஒரு நிலைமை மேலோங்க முடியும். அதாவது, பல்வேறு நாடுகள் மற்றும் பின்புலங்கள் என்பவற்றில் இடம்பெற்று வரும் நிலைமாறு கால நீதி முயற்சிகளுக்கிடையிலான ஒப்பீடுகள் அவை திட்டவட்டமான பின்புலத்திற்குள் அமைந்து அவற்றுக்குள் பிரயோகிக்கப்பட்டால் பயனுள்ள வழிகாட்டுதல்களாக இருந்து வர முடியும். மேலும் சர்வதேச வெளிநபர்கள் பரிந்துரைகளை திணிக்கக் கூடாது. அதற்குப் பதிலாக அவர்கள் ஒட்டுமொத்த நிலைமாறுக் கால நீதி தலையீடுகளை வடிவமைத்தல் மற்றும் அவற்றை அமுல் செய்தல் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டிருக்கும் கருவிகள் மற்றும் நுட்பங்கள் என்பன தொடர்பாக குறிப்பாக, உள்ளூர் சமூகங்களுக்கு கல்வியூட்டுதல் வேண்டும். அறிவை பகிர்ந்து கொள்வது தொடர்பான இந்த அணுகுமுறை பயனுள்ள விதத்திலான உள்ளூர் மட்டத்திலான பங்கேற்பு மற்றும் முயற்சிகள் மற்றும் புத்தாக்கம் என்பவற்றை இயலச் செய்கின்றன.

### நிலைமாறு கால நீதி தலையீடுகள் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்

நிலைமாறு கால நீதியை மதிப்பீடு செய்வது ஒரு நீண்ட கால செயன்முறையாக இருந்து வருவதுடன், அது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வன்முறை மற்றும் ஊசலாட்ட நிலை என்பவற்றினால் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றது. இந்த நிலையில், அவற்றை மதிப்பீடு

செய்வது மிகவும் கடினமானதாக இருந்து வருகின்றது. எவ்வாறிருப்பினும், சவால்கள் மற்றும் முன்னோக்கிய பயணத்திற்கான வாய்ப்புக்கள் என்பன குறித்த ஆழமான ஒரு சிந்தனையை மேற்கொள்ளாது இந்தத் துறை வளர்ச்சியடைய முடியாது. திட்டவட்டமான வழிமுறைகளின் தாக்கங்களை நிரூபிக்கும் அல்லது அவற்றுக்கு சவால் விடுக்கும் சான்றுகள் இல்லாத நிலை, நிலைமாறு கால நீதித் துறையில் குறிப்பாக, வழக்குத் தொடுப்புக்கள் மற்றும் சத்திய விசாரணை ஆணைக்குழுக்கள் போன்ற பல்வேறு பொறிமுறைகளின் உள்ளார்ந்த ஆற்றல் குறித்த உறுதிப்படுத்தப்படாத கூற்றுக்கள் பெருமளவுக்கு காணப்படுகின்றன. இதன் ஆதரவாளர்கள் சான்றுகள் எவற்றையும் முன்வைக்காமல் தாம் விரும்பி மேற்கொண்ட செயன்முறைகளின் பயன்களை எடுத்து விளக்குகின்றார்கள். அதே வேளையில், அதன் குறைபாடுகளை நிரூபிப்பதற்கென போதிளவில் சான்றுகள் இருந்து வரவில்லை எனவும் வாதிடுகின்றார்கள். இது நேர்மறையான பண்புகளை எடுத்துக் காட்டுவதுடன், எதிர்மறையான பண்புகளை பார்க்கத் தவறும் நிலையாகும். நிரப்ப வேண்டிய வகைப் பொறுப்பு தொடர்பான இடைவெளிகள் இனங்காணப்படுவதனை இது தடுக்கின்றது. மேலும், இது பெருந்தொகையான தனித்துவமான செயன்முறைகளின் பயன்களை பெற்றுக் கொள்வதற்கான ஒரு ஒட்டுமொத்தமான அணுகுமுறையை பரப்புரை செய்வதற்குப் பதிலாக, ஏனைய வழிமுறைகளை பார்க்க குறிப்பிட்ட ஒரு சில வழிமுறைகளில் மிதமிஞ்சிய அளவில் வலியுறுத்துகின்றது.

நிலைமாறு கால நீதி வழிமுறைகளின் வெற்றி குறித்த மிகவும் ஆழமான சிந்தனை நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் சொற்பிரயோகங்கள் குறித்த ஓரளவிலான கருத்தொற்றுமையை அவசியப்படுத்துகின்றது. அவ்வாறு இல்லாவிடில் அவை அளவிட முடியாத குறிகாட்டிகளாக இருந்து வரும். உண்மையிலேயே, நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பன சவாலுக்குட்படுத்தப்பட்டு வரும் எண்ணக் கருக்களாக இருந்து வருகின்றன - இன்றைய கால கட்டத்தில் அவை பெருமளவுக்கு வெறும் வார்த்தை பிரயோகங்களாக மட்டுமே இருந்து வருகின்றன - அவை குறித்த புரிந்துணர்வுகள் சமூகங்கள், மக்கள் ஆகிய தரப்புக்களுக்கிடையிலும், கால கட்டங்களுக்கிடையிலும் வேறுபட்டவையாக இருந்து வருகின்றன. பாதிக்கப்பட்ட சமூகங்களின் வரைவிலக்கணங்களை பயன்படுத்தும், பின்புலத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் அணுகுமுறை நிலைமாறுக் கால நீதி நிகழ்ச்சித்திட்டமிடல் உள்ளூர் மக்கள் விரும்பும் நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை சாதித்துக் கொள்ளும் நோக்கத்தை கொண்டுள்ளது என்ற விடயத்தை உறுதிப்படுத்துகின்றது. இலக்கு பங்கீடுபாட்டாளர்களின் தேவைகளை எதிரொலிக்காதிருக்கும் சர்வதேசமயப்படுத்தப்பட்ட மற்றும் நிபுணத்துவ அடிப்படையிலான எண்ணக் கருக்களுக்குப் பதிலாக உள்ளூர் சமூகங்கள் விரும்பி ஏற்கும் எண்ணக் கருக்களே தேவைப்படுகின்றன.

### முழுமையான நிலைமாறு கால நீதி கற்றல் சமூகமொன்றை கட்டியெழுப்புதல்

நிலைமாறு கால நீதி தொடர்பான தற்போதைய சர்வதேச எண்ணக்கரு குறிக்கோளை அடிப்படையாகக் கொண்ட எண்ணக் கருவாக இருந்து வருவதுடன், வழிமுறைகளிலும் பார்க்க இறுதி இலக்குகள் குறித்தும், உள்ளூர் புத்தாக்க செயற்பாடுகளிலும் பார்க்க தரநியமப்படுத்தல் குறித்தும் அது அதிகளவில் கவனம் செலுத்தி வருகின்றது. எவ்வாறிருப்பினும், நிலைமாறு கால நீதியின் பரந்த நோக்கங்களாக இருந்து வரும் நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை குறிப்பிட்ட ஒரு வழிமுறையை அல்லது உத்தியை பிரயோகிப்பதற்கூடாக சாதித்துக் கொள்ள முடியாது. கருத்திட்ட திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் என்பன தொடர்பாக முழுமையான ஓர் அணுகுமுறையை பயன்படுத்த வேண்டும், அத்துடன், நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பன தொடர்பான எண்ணக்கருக்களுக்கு, சமூகங்கள் அவற்றின் பின்புலம் சார்ந்த புரிந்துணர்வுகளின் பிரகாரம் உடன்பட்டு, விவாதித்து, அவற்றுக்கு வரைவிலக்கணம் செய்து கொள்வது அவசியமாகும். நிலைமாறு கால நீதி தொடர்பான கூட்டமைப்பின் அணுகுமுறை - ஒட்டுமொத்த, பரஸ்பரம் ஒவ்வொரு துறையும் தொடர்புபட்ட, உள்ளூர் உரித்தினைக் கொண்ட மற்றும் பின்புலம் சார்ந்த அணுகுமுறை - உள்ளூர் தேவைகளை மையமாகக் கொண்டிருப்பதுடன், நீதி மற்றும் உண்மை என்பவற்றை கவனத்தில் எடுப்பதற்கும், அதே போல நல்லிணக்கத்தை போஷித்து

வளர்ப்பதற்குமென உள்ளூர் முன்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதை மையமாகக் கொண்டுள்ளது. நீதி கூட்டமைப்பு உள்ளூர் மட்டத்தில் பணியாற்றுவதன் மூலம் நிலைமாறு கால நீதி மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்கம் சம்பந்தப்பட்ட கருத்துக்கள் குறித்த தமது சொந்த எண்ணக்கருக்களை திணிப்பதிலுமிருந்தும் தவிர்ந்து கொள்கின்றது.

நேர்மறையான மாற்றங்களை எடுத்து வரும் திட்டவட்டமான கூறுகளை இனங்கண்டு கொள்வதற்கென கூட்டமைப்பு பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறையொன்றை பின்பற்றுகின்றது. அதன் பிரகாரம், புத்தாக்க இயல்பிலான நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதற்கும், கற்றுக் கொண்ட பாடங்களை பகிர்ந்து கொள்வதற்குமென இக்கைநூல் 5 பின்புலங்களில் கூட்டமைப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள் எதிர்கொண்ட வெற்றிகளையும், சவால்களையும் தர ரீதியில் மதிப்பீடு செய்கின்றது. அந்த ஐந்து பின்புலங்களும் வருமாறு: தெற்கு சூடான், சிரியா, இலங்கை, மத்திய கிழக்கு மற்றும் வட அமெரிக்க பிராந்தியம் மற்றும் கொலம்பியா. அதன் மதிப்பீடு நிலைமாறு கால நீதிதலையீடுகளின் தாக்கத்தை புரிந்து கொள்வதற்கு தேவையான சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கு பங்களிப்புச் செய்யுமென கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது. பல்வேறு பின்புலங்களில் ஒரு சில வழிமுறைகள், செயன்முறைகள் மற்றும் முறைமையியல்கள் என்பன ஏனையவற்றிலும் பார்க்க ஏன் பெருமளவுக்கு வெற்றியீட்டியுள்ளன என்பது தொடர்பான மதிப்பீடும் இதில் அடங்கும். இது சிவில் சமூகம், செயற்பாளர்கள், அரசாங்கங்கள் ஆகிய தரப்புக்களுக்கும், நிலைமாறு கால நீதி நிகழ்ச்சித்திட்டங்களை துவக்கி வைப்பதில் அல்லது ஏற்கனவே இருந்து வரும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில் ஆர்வம் செலுத்தி வரும் நிதிவழங்குனர்கள் ஆகியோருக்கும் அடிப்படை அறிவினை வழங்க முடியும்.



நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான உலகளாவிய கூட்டமைப்பின் பங்காளர்கள் 2017 மே மாதத்தில் கயானாவில் இடம்பெற்ற வன்முறை தடுப்பு செயலமர்வொன்றில் பங்கேற்கின்றனர்.

தென் சூடானில் உள்ளூர் சமூகத்திற்கு உரித்தான மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்முயற்சி ஒன்றுக்கு (**அத்தியாயம்** 1) கூட்டமைப்பு பல்துறைசார் ஆதரவினை வழங்கியது. கூட்டமைப்பு அங்கு உள்ளூர் சமூகத்தின் தலைமையிலான கூட்டணியொன்றை உருவாக்கியதுடன், குற்றவியல் பொறுப்புக் கூறுதல், உண்மை, நினைவேந்தல் மற்றும் நல்லிணக்க முன்முயற்சிகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பரந்த வீச்சிலான நிலைமாறு கால நீதி செயன்முறைகளுக்கென மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதற்கு அக்கூட்டணியை தயார்படுத்தியது. அக்கருத்திட்டத்திலிருந்து கிடைத்த பாடங்கள் உள்ளூர் சமூகத்தின் தலைமையிலான ஆவணப்படுத்தலை அவசியப்படுத்தும் பெருமளவுக்கு அடிக்கடி மாற்றமடையக் கூடிய, பல்லின மற்றும் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் முரண்பாடுகளுக்கு பிரயோகிக்க தக்கவையாகும். சேவை விநியோகத்தை விருத்து செய்யும் பொருட்டு கூட்டமைப்பு சிரியாவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் ஆகியோருடன் இணைந்து ஒரு தேவை மதிப்பீட்டை மேற்கொள்வதற்கென ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட துறைசார் மற்றும் பல்துறைசார் அணுகுமுறையொன்றை மேற்கொண்டது (**அத்தியாயம்** 2). சேவை வழங்குனர்களுக்கு மத்தியில் பாதிக்கப்பட்டவர்கள் அனுப்பி வைக்கும் இடங்கள் தொடர்பான ஒரு வலையமைப்பை உருவாக்குவதற்கான அத்திவாரத்தை இடுவதற்கும், சிரிய மக்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்குமென உள சமூக, மருத்துவ, சட்ட மற்றும் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் தேவைகளை மதிப்பிடும் செயற்பாட்டில் கூட்டமைப்பு உள்ளூர் பங்காளர்களுடன் சேர்ந்துஈடுபட்டது. இந்த மதிப்பீடு முனைப்பான, தீவிரமான மோதல் நிலைமைகள் தொடர்பான ஒரு தேவை மதிப்பீட்டை மேற்கொள்வதில் உள்ளூர் சமூகத்துடன் கூட்டாக செயற்படுவதன் மூலம் கிடைக்கும் பாடங்களை வழங்குகின்றது. இக்கூட்டமைப்பு இலங்கையில் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அரசாங்கத் துறை செயற்பாட்டாளர்கள் ஆகிய இரு தரப்புக்களுடனும் தேவை மதிப்பீடுகளை மேற்கொள்வதிலும், ஆற்றலை கட்டியெழுப்பும் செயலமர்வுகளை நடத்துவதிலும் அதன் பங்கேற்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கும் முறைமையியலை பின்பற்றியது (**அத்தியாயம்** 3). இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட கருத்திட்ட செயற்பாடுகளின் விளைவாக, உள்ளூர் நிலைமாறு கால நீதி மற்றும் நல்லிணக்க முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கென பல்வேறு இனக் குழுக்கள, சமயங்கள் மற்றும் பிராந்தியங்கள் என்பவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகளை சம்பந்தப்படுத்தும் விதத்தில் உள்ளூர் உரித்துடன் கூடிய பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டது. அதன் படிப்பினைகள் மனித உரிமை மீறல்கள், தண்டனை விலக்குரிமை மற்றும் அரசாங்கம் குறித்த அவநம்பிக்கை என்பன நிலவி வரும் போருக்குப் பிற்பட்ட நாடுகளை இலக்காகக் கொள்கின்றன. இறுதியாக, மத்திய கிழக்கு மற்றும்வட அமெரிக்க பிராந்தியத்தில் இக்கூட்டமைப்பு பிராந்திய அறிவுப் பகர்வு வலையமைப்பொன்றை மேம்படுத்தியதுடன், சிறு அளவு நிதியளிப்புக்களுக்கூடாக உள்ளூர் புத்தாக்கங்களுக்கு ஆதரவளித்தது (**அத்தியாயம்** 4). மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க மட்டத்திலான இந்த வலையமைப்பு, நிலைமாறு கால நீதி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்து, அவற்றை அபிவிருத்தி செய்யும் விடயத்தில் சமூகத்திற்கு வலுவூட்டும் பொருட்டு நிலைமாறு கால நீதி கோட்பாடு மற்றும் நடைமுறை என்பன குறித்து உள்ளூர் செயற்பாட்டாளர்களுக்குப் பயிற்சியை வழங்கிய முழுமையான, பல்துறைசார் கல்விக் கழகமொன்றின் ஒரு பெறுபேறாகவே இருந்து வந்தது. இக்கருத்திட்டமும், அதன் படிப்பினைகளும் புதுமையானவையாக இருந்து வருவதுடன், அவை மோதலினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு பிராந்தியத்தில் உள்ளூர் பங்கீடுபாட்டாளர்களின் ஆற்றலை கட்டியெழுப்புவதற்கென முழுமையான மற்றும் பல்துறைசார் முறைமைகளில் தங்கியிருந்து வருகின்றது.

கற்றுக் கொண்ட படிப்பினைகளை உள்ளடக்கிய நான்கு மதிப்பீட்டு அத்தியாயங்கள் தவிர, இரு விவரண அத்தியாயங்களில் கூட்டமைப்பு மேலும் பரிந்துரைகளை முன்வைக்கின்றது.மேலே குறிப்பிட்ட நிலைமைகளையும் உள்ளடக்கிய விதத்தில் குற்றவியல் வழக்கு நடைமுறைகளில் மனித உரிமை மீறல் தொடர்பான ஆவணப்படுத்தலின் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், இக் கைநூல் கம்போடியா, முன்னைய யூகொஸ்லோவியா மற்றும் கௌதமாலா ஆகிய நாடுகளில் சிவில் சமூக அமைப்புக்களின் ஆவணப்படுத்தல் பணிகளையும், குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வைப்பதில் அவற்றின் பங்களிப்புக்களையும் எடுத்து விளக்குகின்றது (**அத்தியாயம்** 5). மூன்று சம்பந்தப்பட்ட உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்களும் ஆவணப்படுத்தல் செயற்பாடு பக்கச்சார்ப்பற்றதாகவும், விருப்பு


வெறுப்பற்றதாகவும் இருந்து வருவதுடன், ஆட்கள் தகவலறிந்த நிலையில் உடன்பாட்டினை வழங்குதல் மற்றும் தீவிரமான சரிபார்ப்பு நடைமுறைகள் என்பவற்றில் தங்கியிருக்க வேண்டுமெனவும் பரிந்துரை செய்கின்றன. மேலும், அவற்றின் படிப்பினைகள் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்கள் ஆகிய தரப்புக்களுக்கு அவர்களுடைய தேவைகள் மற்றும் விருப்பங்கள் என்பவற்றின் அடிப்படையில் வலுவூட்டுவதன் முக்கியத்துவத்தையும், ஆவணங்கள் மற்றும் சான்று என்பவற்றுடன் இணைந்த விதத்தில் மாற்றங்களை எடுத்து வருவதனையும் சுட்டிக் காட்டுகின்றது. இறுதியாக, கொலம்பியாவில் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஒரு தேவை மதிப்பீட்டின் சாராம்சத்தை இக் கைநூல் முன்வைக்கின்றது. இந்த சாராம்சம், மிக சிக்கலான நிலைமைகளின் கீழ், வரையறுக்கப்பட்ட வளங்களுடன் பெருந்தொகையான உள்ளூர் தேவைகளை கண்டறிந்து கொள்வதற்கான கூட்டமைப்பின் ஆற்றலை எடுத்துக் காட்டுகின்றது (**அத்தியாயம் 6**). கூட்டமைப்பு இந்த மதிப்பீட்டினை 2016 ஆம் ஆண்டு ஜுன் மற்றும் ஆகஸ்ட் காலப் பிரிவில் சமாதான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வந்த பின்புலத்தில் மேற்கொண்டது. அந்த மதிப்பீட்டின் மூலம் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட நிலைமாறு கால நீதி செயன்முறையின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை புரிந்து கொள்வதற்கு முயற்சித்தது.

கூட்டமைப்பின் பல்வேறு கருத்திட்டங்கள் அனைத்தும் முழுமையான, ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட மற்றும் பல்துறைசார் அணுகுமுறைகளில் தங்கியிருந்து வந்ததுடன், அவை உள்ளூர் உரித்துக்கான இயலுமையை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு உள்ளூர் தேவைகள் மற்றும் புத்தாக்கங்கள் என்பவற்றை முன்னுரிமைப்படுத்துகின்றன. தண்டனை விலக்குரிமையை முடிவுக்குக் கொண்டு வருவதில் பாரம்பரிய வழிமுறைகள் எதிர்கொண்டு வரும் சவால்களை வெல்வதற்கென அது அனைவரையும் உள்ளடக்கிய, திட்டவட்டமான பின்புலத்திற்கு பொருந்தக் கூடிய நிலைமாறு கால நீதிச் செயன்முறைகளை பின்பற்றியது. அதன் முடிவில் இக் கைநூல் நிலைமாறு கால நீதி தொடர்பானதலையீடுகளை அபிவிருத்திச் செய்வதிலும் அமுல் செய்வதிலும், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய காரணிகளை பல்வேறு படிப்பினைகளாக ஒன்றாக முன்வைக்கின்றது. மாயா ஜால தீர்வுகளிலிருந்து வரவில்லை என்ற முன்னெச்சரிக்கைகளுடன் இந்த வகையைச் சேர்ந்த அறிவுப் பகர்வு மற்றும் கற்றல் செயன்முறைகள் தண்டனை விலக்குரிமைக்கெதிரான போராட்டத்தை விருத்திச் செய்வதற்கான உயரளவிலான உள்ளார்ந்த ஆற்றலை கொண்டுள்ளது என்ற விடயத்தைக் குறிப்பிட வேண்டும். குறிப்பாக, அது மோதலினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் நபர்கள் தமது எதிர்காலம் தொடர்பான தீர்மானங்களை எடுக்கக் கூடியவர்களாகவும், தமது நாளாந்த வாழ்க்கையில் நிலைமாறு கால நீதியின் வெளிப்படையான பயன்களை அனுபவிக்கக் கூடியவர்களாகவும் இருந்து வருவதனை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்தும் உலகளாவிய கற்றல் சமூகமென்றை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்கின்றது.


மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தில் 2016 ஜூலை மாதத்தில் நடத்தப்பட்ட புகைப்பட கண்காட்சியொன்றை ஒரு பெண்மணி பார்வையிடுகின்றார் - இது நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான கூட்டமைப்பின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக பரப்புரை கருத்திட்டங்களில் ஒன்றாகும்.

## தெரிவு செய்யப்பட்ட நூற் பட்டியல்


- Hugo Van Der Merwe et al. Eds., ASSESSING THE IMPACT OF TRANSITIONAL JUSTICE: CHALLENGES FOR EMPIRICAL RESEARCH (2009).
- Vasuki Nesiah, *Transitional Justice Practice: Looking Back, Moving Forward,* IMPUNITY WATCH (May 2016).
- Simon Robins, *Mapping a Future for Transitional Justice by Learning from Its Past*, 9 INTERNATIONAL JOURNAL OF TRANSITIONAL JUSTICE 181 (2015).
- Juan E. Méndez, *Victims As Protagonists In Transitional Justice*, 10 INTERNATIONAL JOURNAL OF TRANSITIONAL JUSTICE 1 (2016).
- Paul Gready & Simon Robins, *From Transitional to Transformative Justice: A New Agenda for Practice*, 8 INTERNATIONAL JOURNAL OF TRANSITIONAL JUSTICE 339 (2014).
- David Mendeloff, *Truth-Seeking, Truth-Telling, and Postconflict Peacebuilding: Curb the Enthusiasm?*, 6 INTERNATIONAL STUDIES REVIEW 355 (2004).

வன்முறையினால் பாதிக்கப்பட்டு உயிர் வாழ்ந்து வரும் இலங்கையைச் சேர்ந்த 20 பெண்மணிகளுக்கு 2017 ஆகஸ்ட் மாதத்தில் நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக உலகளாவிய கூட்டமைப்பு உடல் வரைபடம் தயாரித்தல் தொடர்பான செயலமர்வொன்றை நடத்தியது.

# முறைமையியல்

தெற்கு சூடான், சிரியா, இலங்கை, மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியம் தொடர்பான நான்கு மதிப்பீட்டு அத்தியாயங்கள் நீதி, உண்மை மற்றும் நல்லிணக்க கூட்டமைப்பின் பங்காளர் அமைப்பான உலகளாவிய முன்னெடுப்பினால் கருத்திட்டங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட சுய மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். அவை ஒட்டுமொத்தமாக கருத்திட்டம் தொடர்பான தர ரீதியான மதிப்பீடுகளாக இருந்து வருவதுடன், தனிப்பட்ட செயற்பாடுகள் குறித்த மதிப்பீடுகளாகவும் இருந்து வருகின்றன. உள்ளூர் பங்கேற்பாளர்கள் மற்றும் பங்காளர் ஆகியோரின் பின்னூட்டங்களையும் அதே போல கூட்டமைப்பு பங்காளர்களின் உள்ளக மதிப்பீட்டினையும் அவை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இந்த மதிப்பீடு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான அமைப்பின் (OECD) அபிவிருத்தி உதவி கமிட்டியின் (DAC) மோதல் மற்றும் ஊசலாட்ட நிலைமைகள் காணப்படும் பின்னணிகளில்சமாதானத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்கான வழிகாட்டுதல்களின் அளவுக்கோளை பயன்படுத்துகின்றன. இந்த நிர்ணய அளவுகோல்கள் வருமாறு:

- பொருத்தப்பாடு - இந்த அளவுகோல் குறிப்பிட்ட கருத்திட்டம் உள்ளூர் பங்கீடுபாட்டாளர்களின் தேவைகளை எந்த அளவுக்கு நிறைவேற்றி வந்துள்ளது என்ற விடயத்தை மதிப்பிடுகின்றது.
- வினைத்திறன் - இந்த அளவுகோல் குறிப்பிட்ட கருத்திட்டம் அதன் குறிக்கோள்கள், இலக்குகள் என்பவற்றை எந்த அளவுக்கு சாதித்துக் கொண்டுள்ளது அல்லது எந்த அளவுக்கு சாதித்துக் கொள்ளும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்ற விடயத்தை மதிப்பிடுகின்றது.
- தாக்கம் - இந்த அளவுகோல் கருத்திட்டத்தின் பரவலான நேரடி மற்றும் மறைமுக தாக்கங்களை மதிப்பீடு செய்கின்றது.
- நிலைத்து நிற்கும் ஆற்றல் - இந்த அளவுகோல் கருத்திட்டத்தின் பயன்கள் எவ்வளவு காலத்திற்கு நீடிக்க முடியும் என்ற விடயத்தை மதிப்பீடு செய்கின்றது.
- செயல்திறன் - இந்த அளவுகோல் கருத்திட்ட பெறுபேறுகளை சாதித்துக் கொள்ளும் பொருட்டு வளங்கள் சிக்கனமான முறையில் பயன்படுத்தப்படுவதனை மதிப்பீடு செய்கின்றது.
- ஒத்திசைவு - இந்த அளவுகோல் கருத்திட்ட செயற்பாடுகள், இதே விடயம் தொடர்பாக கவனம் செலுத்தி வரும் ஏனைய கருத்திட்டங்களுடன் எந்த அளவுக்கு பொருந்திச் செல்கின்றன என்பதனை மதிப்பீடு செய்கின்றது.
- ஒருங்கிணைப்பு - இந்த அளவுகோல் இக்கருத்திட்டம் இதே மாதிரியான நோக்குடன் கூடிய ஏனைய கருத்திட்டங்கள் மேற்கொள்ளும் அதே காரியங்களை மீண்டும் செய்யாமல் எந்த அளவுக்கு அவற்றுடன் சக வாழ்வினை நடத்தி வருகின்றது என்ற விடயத்தை மதிப்பீடு செய்கின்றது.

இங்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் மதிப்பீடு மற்றும் படிப்பினைகள் என்பன புத்தாக்க இயல்பிலான நிலைமாறு கால நீதி தீர்வுகளை உருவாக்கும் விடயத்திற்கு பங்களிப்புச் செய்யுமென கூட்டமைப்பு நம்புகின்றது. இந்த விதத்தில் இரு தசாப்தங்களுக்கு முன்னர் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் தற்போதைய மாதிரிகளை விருத்தி செய்வதற்கும் பாதிக்கப்பட்ட நபர்களின் இன்றைய பரவலான தேவைகளுக்கு நிவாரணமளித்து அவற்றை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு கவனத்தில் எடுப்பதற்கும் அவற்றுக்கு சிறந்த விதத்தில் நிவாரணம் அளிப்பதற்குமென அவற்றின் பொறுப்புக் கூறல் தொடர்பான இடவெளிகளை நிரப்புவதற்கும் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது.



தென் சூடான் நாட்டுக்கான ஐ நா தூதுக் குழுவின் சிவிலியன்களை பாதுகாக்கும் நிலையத்தில் ஜூபா என்ற இடத்தில் நடத்தப்படும் ஒரு பாடசாலை. இப்பாடசாலையில் அனைத்து வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த பிள்ளைகள் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், சமூக கற்கைகள் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களில் ஆரம்ப மட்ட வகுப்புக்களில் கற்று வருகின்றார்கள். சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகத்தின் தகவல்களின் பிரகாரம், தென் சூடான் பாடசாலை செல்லாத பிள்ளைகளின் உலகின் ஆகக் கூடிய விகிதத்தைக் கொண்ட நாடாக இருந்து வருகின்றது.

*Photo credit: UN Photo / JC McIlwaine / August 2014*

https://www.flickr.com/photos/un_photo/15251145855/in/photolist-peqeXv-peqf6B-peG7oz-oxjHL2-peG7jB-oXbU92-ptAiCL-q7GmWV-r4pwcG-r2c8E7- r4urfR-r4uqoR-qLUtxy-qLUt6w-qM4BBR
https://creativecommons.org/licenses/by-nc-nd/2.0/legalcode

# அத்தியாயம் 1

## தென் சூடான் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு

### தென் சூடான் நிலைமை

பிரிவினைக்கு ஆதரவான ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் பின்னர் தென் சூடான் 2011 ஜூலை மாதம் 9 ஆம் திகதி சூடான் நாட்டிலிருந்து சுதந்திரத்தை பெற்றுக் கொண்டதுடன், உலகின் மிகப் புதிய அரசாக உருவாகியது. 2013 டிசம்பர் மாதத்தில் ஜனாதிபதி சல்வார் கீர் மற்றும் உப ஜனாதிபதி ரீக் மச்சார் ஆகியோருக்கிடையிலான பதற்ற நிலைமைகள் தீவிரமடைந்து, நாட்டில் வன்முறை வெடித்தது. இந்த வன்முறை வெகு விரைவில் ஜூபா பிரதேசம் எங்கும் பரவியதுடன், தென் சூடானில் தொடர்ந்து இடம்பெற்று வரும் உள்நாட்டு ஆயுத மோதலை தூண்டிவிட்டது. அரசியல் சார்பு நிலைகள் மற்றும் இனத்துவம் ஆகிய இரு அம்சங்களும் மோதலுக்கான தூண்டல் காரணிகளாக இருந்து வந்துள்ளன. சூடான் மக்கள் விடுதலை இயக்கம் / சூடான் மக்கள் விடுதலை இராணுவம் என்பவற்றுடன் இணைந்த விதத்தில் (டிங்கா இனத்தவரான, கீரின் ஆதரவாளர்கள் மற்றும் சூடான் மக்கள் விடுதலை முன்னணி-எதிரணியுடன் இணைந்திருந்த (நுவர் இனத்தவரான) மச்சாரின் ஆதரவாளர்கள் ஆகியோருக்கிடையில் இந்த வன்முறைகள் நிகழ்ந்தன. வரலாற்று ரீதியாக இந்த மோதல் அரசியல் அடிப்படையில் தூண்டப்பட்டிருந்தது. ஆனால், அண்மை காலத்தில் இனக் குழுக்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்டு வரும் தாக்குதல்கள் அதிகரித்து வந்துள்ளன. இத்தாக்குதல்கள் வன்மத்தைத் தூண்டும் பேச்சுக்கள், வன்முறைக்குத் தூண்டுதல் மற்றும் உடல் ரீதியான தாக்குதல்கள் என்பவற்றின் வடிவில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன - இக்காரணிகள் அனைத்தும் தென் சூடானை இனப் படுகொலை இடம்பெறக் கூடிய அபாய நிலைக்கு தள்ளிவிட்டுள்ளன. மோதலின் அனைத்துத் தரப்புக்களும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனித நேயச் சட்டம் என்பவற்றை மீறியுள்ளன. 2017 பெப்ரவரி மாதம் அளவில் சுமார் 15 இலட்சம் மக்கள் அகதிகளாக ஆக்கப்பட்டிருப்பதுடன், மேலும் 18 இலட்சம் பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக இருந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் பிள்ளைகள் ஆவார்கள்.




தென் சூடான் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட ஒருவரினால் வரையப்பட்ட உடல் வரைபடம். இது 2016 டிசம்பர் மாதத்தில் உகாண்டாவில் நடத்தப்பட்ட நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பு கூட்டமைப்பின் செயலமர்வின் போது வரையப்பட்ட படமாகும்.

மோதலின் தரப்புக்கள் ஒரு சமாதான ஒப்பந்தத்தில் கைசாத்திட்டதுடன், அது தென் சூடான் குடியரசின் மோதலை தீர்ப்பதற்கான 2015 ஆகஸ்ட் ஒப்பந்தம் என அழைக்கப்படுகின்றது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் தேசிய ஒற்றுமை நிலைமாறு கால அரசாங்கம் உண்மை, நல்லிணக்கம் மற்றும் சுகப்படுத்தல் ஆணைக் குழுவையும், நட்டஈடு மற்றும் இழப்பீடு அதிகார சபையையும் ஸ்தாபிப்பது அவசியமாகும். மேலும், அது தென் சூடானுக்கான கலப்பு நீதிமன்றத்தை ஸ்தாபிப்பதற்கான முதன்மை பொறுப்பினை ஆபிரிக்க யூனியன் ஆணைக்குழுவிடம் ஒப்படைத்துள்ளது. எவ்வாறிருப்பினும், 2017 ஜூன் மாதம் வரையில் இந்த வழிமுறைகள் எவையும் அமுல் செய்யப்பட்டிருக்கவில்லை. அரசாங்கத்தின் பிரச்சினைக்குரிய விதத்திலான பின்வாங்கல் நிலைமையின் கீழ் தென் சூடானில் நிலைமாறு கால நீதியின் எதிர்காலம் பெருமளவுக்கு நிச்சயமற்றதாகவே இருந்து வருகின்றது.

## மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்முயற்சிக்கு கூட்டமைப்பு வழங்கி வரும் ஆதரவு தொடர்பான பொது நோக்கு

நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பு கூட்டமைப்பின் நான்கு பங்காளர் அமைப்புக்கள் மனச்சாட்சி மையங்களின் சர்வதேச கூட்டணி (ICSC), வன்முறை மற்றும் நல்லிணக்கம் என்பன தொடர்பான ஆய்வு நிலையம் (CSVR), மனித நேய சட்ட நிலையம் (HLC) மற்றும் பொது சர்வதேச சட்ட மற்றும் கொள்கைக் குழு (PILPG) என்பன - பல்வேறு வழிகளில் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதற்கான தென் சூடான் சிவில் சமூக அமைப்புக்களின் ஆற்றலை அதிகரிக்கும் விடயத்தில் கவனம் செலுத்தியிருந்தன. மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு என்ற அமைப்பை ஸ்தாபித்து, அதற்கு ஆதரவளிப்பதும் இதில் அடங்கியிருந்தது. மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு பெருந்தொயையான தென் சூடான் சிவில் சமூக அமைப்புக்களின் உள்ளூர் மட்டத்தில் நெறிப்படுத்தப்பட்ட ஒரு கூட்டணியாக இருந்து வந்ததுடன், அது மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்களை ஆவணப்படுத்தியது. இந்த முன்னெடுப்பு நல்லிணக்கம் மற்றும் உண்மையைக் கூறும் செயற்பாடுகள், அதே போல உள சமூக பயிற்சிகள் போன்ற குறைநிரப்பு தலையீடுகளையும் மேற்கொண்டு வந்தது.

நிலைமையின் இயங்கியல் சார்ந்த இயல்பு காரணமாக நிகழ்ச்சித்திட்டமிடலில் எதிர்பார்க்கப்படும் தேவையான மாற்றங்கள் தொடர்பாக அனுசரித்துச் செல்லும் ஒரு அணுகுமுறையை கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள் எடுத்திருந்தன. கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் கூட்டமைப்பு தென் சூடான் சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து ஒரு தேவைகள் மதிப்பீட்டினை நடத்தியது. அந்த அமைப்புக்களின் நிலைமாறு கால நீதி முயற்சிகளுக்கு மிகச் சிறந்த விதத்தில் ஆதரவினை வழங்குவது எவ்வாறு என்பதனை நிர்ணயித்துக் கொள்வதற்கென இந்த மதிப்பீடு நடத்தப்பட்டது. அதனையடுத்து உருவாக்கப்பட்ட கருத்திட்டம் மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. நிலைமாறு கால நீதி குறித்த பொது மக்களின் விழிப்புணர்வைத் தூண்டி, அதற்கு அவர்களுடைய ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் இவ்வாறு இது பிரிக்கப்பட்டிருந்தது. கட்டம் I இன் கீழ் தென் சூடான் சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றாக இணைந்து மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் கட்டமைப்பை அபிவிருத்திச் செய்வதற்கும், சேகரிக்கப்பட்ட தகவல்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கென பாதுகாப்பான ஓர் அமைவிடத்தை உருவாக்கிக் கொள்வதற்கும், நேர்காணல் நடத்துவதற்கான நடைமுறைகளை வரையறை செய்து கொள்வதற்கும் முன் வந்தன. கட்டம் I இன் துவக்கத்தின் போது கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள் தற்போதைய ஆவணப்படுத்தல் முயற்சிகள், ஆவணப்படுத்தல் எதிர்கொண்டு வரும் சவால்கள் மற்றும் நிலைமாறு கால நீதி தொடர்பான அவர்களுடைய விருப்பங்கள் மற்றும் தேவைகள் என்பன குறித்து தென் சூடான் சிவில் சமூக அமைப்புக்களைச் சேர்ந்த பெருந்தொகையான பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனைகளை நடத்தியது. தென் சூடான் அமைப்புக்களின் தேவைகள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றை சிறந்த விதத்தில் நிறைவேற்றி வைக்கும் விதத்தில் பொருத்தமான செயலமர்வுகள் மற்றும் பயிற்சிகள் என்பவற்றை உருவாக்கிக் கொள்வதற்கு கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்களுக்கு இந்தத் தகவல்கள் உதவின. கட்டம் II இன் போது கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள், மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதற்கான மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் ஆற்றலை கட்டியெழுப்பின; கட்டம் I இன் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அமுல் செய்யும் பொருட்டு மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்புடன் சேர்ந்து செயற்பட்டன; சுயபராமரிப்பு மற்றும் நேர்காணலுக்கு உட்படுத்தப்படுபவர்களின் உள சமூக தேவைகள் என்பவற்றை கவனத்தில் எடுக்கும் விடயத்தில் ஆவணப்படுத்துனர்களுக்கு பயிற்சியை வழங்கின; மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் தெரிவு செய்யப்பட்ட ஒரு சில உறுப்பினர்களுக்கு கம்போடியாவில் நடத்தப்பட்ட பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் போன்ற சமூக ரீதியில் உண்மையை கூறுதல் மற்றும் நல்லிணக்கம் என்பன தொடர்பான முன்முயற்சிகளை அபிவிருத்தி செய்து கொள்வதில் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்புக்கு உதவியது. கட்டம் III இன் செயற்பாடுகள், ஆவணப்படுத்துபவர்களை பயிற்றுனர்களாக ஆக்குவதற்கென மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்புக்கு ஆதரவு வழங்கப்பட்டது. இக்கட்டத்தின் கீழ் ஆவணப்படுத்தல் முயற்சிகளுக்கு உதவி வழங்கப்பட்டதுடன், உள சமூக தேவைகளும் கவனத்தில் எடுக்கப்பட்டன. தென் சூடானில் நிலைமாறு கால நீதி மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்கென ஆவணப்படுத்தலை பயன்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலுக்கும் அனுசரனை வழங்கப்பட்டது.

## மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்புக்கு கூட்டமைப்பு வழங்கி வரும் ஆதரவு குறித்த மதிப்பீடு

மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்புக்கு ஆதரவளிப்பதற்கான கூட்டமைப்பின்கருத்திட்டம் குறித்த ஒரு மதிப்பீடு மற்றும் கலந்துரையாடல் என்பன பெருமளவுக்கு தகவல்களை தரக் கூடியவையாக இருந்து வருகின்றன. ஏனெனில், அது ஊசலாட அடிக்கடி மாறும் இயல்பிலான தொடர்ச்சியான பல்லின மோதல்கள் தொடர்பாக பிரயோகிக்கத்தக்கதாக இருந்து வருகின்றது. அத்தகைய மோதல் நிலைமைகள் தொடர்பாக உள்ளூர் சமூகத்தின் தலைமையில் மேற்கொள்ளப்படும் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முயற்சிகள் உடனடித் தேவையாக இருந்து வருகின்றன. இந்த மதிப்பீடு மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் உறுப்பினர்களினால் பூர்த்தி செய்யப்பட்ட ஒரு டசனுக்கும் மேற்பட்ட பயிற்சிக்குப் பின்னரான, நேர்காணலுக்குப் பின்னரான மதிப்பீடுகளின் பின்னூட்டங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த மதிப்பீடு கருத்திட்டத்தின் சாதனைகள், படிப்பினைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பரிந்துரைகளையும் உள்ளடக்குகின்றது. இந்த கருத்திட்டத்தின் குறிக்கோள்கள் நீண்ட கால குறிக்கோள்களாக இருந்து வருவதனாலும், இதுவரையில் எத்தகைய நிலைமாறுக் கால நீதி அமுல் செய்யப்படாதிருந்து வருவதனாலும், தென் சூடானில் நிலைமாறு கால நீதி செயல்பாடுகள் தொடர்பாக இக்கருத்திட்டம் எடுத்து வரும் பரவலான தாக்கம் தெளிவற்றதாகவே இருந்து வருகின்றது.

### மனித உரிமைகள் மீறல்களை ஆவணப்படுத்துவதற்கென உள்ளூர் சமூகத்தினால் நெறிப்படுத்தப்படும் ஒரு கூட்டணியை ஸ்தாபித்தல்

தென் சூடான் ஆவணப்படுத்துனர்களினால் மேற்கொள்ளப்படும் ஆவணப்படுத்தல் முயற்சிகள் மீது கவனம் செலுத்தும் உள்ளூர் சமூகத்தினால் நெறிப்படுத்தப்படும் கருத்திட்டமொன்றை கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள் வெற்றிகரமாக ஸ்தாபித்துக் கொண்டுள்ளன. மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப தீர்மானங்களில் ஒன்று, ஒரு நெறிப்படுத்தல் கமிட்டி மற்றும் செயலகம் என்பன இந்த முன்னெடுப்புக்கு தலைமை தாங்கும் என்பதும், வழிகாட்டும் *மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் பாதை வழிகாட்டியொன்றை* அமுல் செய்வதற்கு அனுசரனையை வழங்கும் என்பதுமாகும். கூட்டமைப்பின் பங்காளர்கள், சூடான் குடியரசில் செயற்பட்டு வரும் ஐ நா தூதுவர் அலுவலகம் மற்றும் தென் சூடான் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றுடன் கலந்தாலோசனை செய்து, 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு ஒரு பாதை வழிகாட்டியை அபிவிருத்தி செய்தது. அவர்களுடைய ஆவணப்படுத்தல் முயற்சிகளை ஒரே சீரான விதத்தில் மேற்கொள்வதற்கும், ஆற்றல்கள் மற்றும் வளங்கள் என்பவற்றை ஒருங்கிணைப்பதற்குமென இது மேற்கொள்ளப்பட்டது. மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் அனைத்து உறுப்பினர்களும் தென் சூடானியர்களாக இருந்து வருவதனால், ஒட்டுமொத்த ஆவணப்படுத்தல் செயன்முறையும் - தொடக்கத்தில் வாக்குமூலங்கள் சேகரிக்கப்பதிலிருந்து அவற்றை ஒரு மத்திய தரவு தளத்தில் களஞ்சியப்படுத்தல் வரையிலான ஒட்டுமொத்த செயன்முறையும் - உள்ளூர் சமூகத்தின் உரித்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்புக்கூடாக தென் சூடான் சிவில் சமூக அமைப்புக்கள் வளங்களை பகிர்ந்து கொள்வதற்கும், ஆவணப்படுத்தல் முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கும், பரப்புரை செயற்பாடுகளை விரிவான விதத்தில் மேற்கொள்வதற்கும் என தமது ஆற்றலை அதிகரித்துக் கொண்டன. இந்த அணுகுமுறை, தமது முயற்சிகளை மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் முயற்சிகளுடன் பிணைத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டி வந்த ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஏனைய சர்வதேச செயற்பாட்டாளர்கள் ஆகிய தரப்புக்களின் மரியாதையை பெற்றுக் கொண்டிருந்தன. மேலும், மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு முதன்மையான பரப்புரை இலக்குகளுடனும் பிணைப்புக்களை கொண்டிருந்தது.

> "[மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் கூட்டங்களுக்கு அனுசரனை வழங்கியமை] எமக்கு மத்தியில் நம்பிக்கையையும், விசுவாசத்தையும் கட்டியெழுப்பியது. ஆனால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தோன்றும் பிரச்சினைகள், தென் சூடான் சிவில் சமூக அமைப்புக்களுக்கு மத்தியில் நிலவி வரும் அவநம்பிக்கையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாகவே இருந்து வந்தன."
>
> - மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் பங்காளர் அமைப்பொன்றின் பிரதிநிதி

தம்மால் சேகரிக்கப்பட்டிருக்கும் ஆவணங்களை தென் சூடானில் நிலைமாறுக் கால நீதியை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு பயன்படுத்துவதற்கான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு இந்தப் பிணைப்புக்கள் உருவாக்கப்பட்டிருந்தன.

மனித உரிமைகளுக்கான ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு (HRDI) தோன்றுவதற்கு முன்னர் உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்கள் தமது ஆவணப்படுத்தல் செயற்பாடுகளை ஒருங்கிணைத்திருக்கவில்லை. அதற்கு பதிலாக, சிவில் சமூக அமைப்புக்கள் தனித்தனியாக செயற்பட்டு வந்தன; தென் சூடானில் சிவில் சமூக அமைப்புக்களுக்கு மத்தியில் நிலவி வரும் கணிசமான அளவிலான அவநம்பிக்கை இதற்கு ஒரு காரணமாக இருந்து வந்தது. இந்த பதற்ற நிலை வரையறுக்கப்பட்ட நிதியளிப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான போட்டி மற்றும் அரசாங்கம் ஊடுருவி சிவில் சமூக அமைப்புக்களையும், அவற்றின் செயற்பாடுகளையும் கண்காணித்து வருகின்றது என்ற கவலைகள் என்பவற்றிலிருந்து தோன்றுகின்றது. எனவே, நம்பிக்கையை கட்டியெழுப்புவதனை மேம்படுத்துவதன் பொருட்டு தென் சூடானில் இயங்கி வரும் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளை கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள் ஒன்று சேர்த்தன. எடுத்து வந்தது. இது கூட்டமைப்பின் அனுசரனையுடன் 2015 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடத்தப்பட்ட முதலாவதுமனித உரிமைகள் ஆவணப்படுத்தல் செயலமர்வுடன் ஆரம்பித்தது.

2015 மே மாதத்தில் நடத்தப்பட்ட செயலமர்வும், கூட்டமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட ஏனைய செயலமர்வுகளும் கூட்டுச் செயற்பாட்டின் முக்கியத்துவம் குறித்து சிவில் சமூக அமைப்புக்களுக்கிடையில் ஒரு நம்பிக்கையை எடுத்து வந்திருந்த போதிலும் அவநம்பிக்கை மற்றும் பதற்ற நிலை என்பன தொடர்ந்து நிலைத்து வந்தன. உதாரணமாக, மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் பெருந்தொகையான உறுப்பினர்கள் ஆவணங்கள் வெளியில் கசியவிடப்படலாம் என்ற அச்சத்தில் தமது ஆவணங்களை பகிர்ந்து கொள்ளும் விடயத்தில் தயக்கம் காட்டி வந்தமையால் செயலகத்தின் உருவாக்கம் தாமதமடைந்தது. அதிகரித்த அளவிலான வன்முறை சம்பவங்கள் மற்றும் தென் சூடான் சிவில் சமூக அமைப்புக்கள் தொடர்பான அரசாங்கத்தின் இறுக்கமான கண்காணிப்பு என்பன காரணமாக அத்தகைய அச்ச உணர்வுகள் தீவிரமடைந்திருந்தன. மேலும், சீர்குலைந்து வரும் பாதுகாப்பு நிலைமையும் நிதி திரட்டலை மேற்கொள்வதற்கான தென் சூடான் சிவில் சமூக அமைப்புக்களின் ஆற்றலுக்கு குந்தகம் விளைவித்தது. இந்தப் பின்புலத்தில் 2017 மே மாதத்தில் அனுபவம் வாய்ந்த ஆவணப்படுத்துனர்களின் ஒரு குழு பயிற்றுனர்களை பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றில் பங்கேற்றது. ஆவணப்படுத்தல் செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுப்பது மற்றும் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் (HRDI) நிலைத்து நிற்கக் கூடிய ஆற்றலுக்கான இயலுமையை பெற்றுக் கொடுப்பது எப்படி என்பன குறித்து புதிய ஆவணப்படுத்துனர்களை தயார்படுத்துவதற்கென இந்த நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

### கருத்திட்ட செயற்பாடுகள் தொடர்பாக ஒருங்கிணைப்பு பங்காளர் அமைப்புக்கள் கொண்டிருக்கும் நிபுணத்துவ அறிவு

பங்காளர் அமைப்புக்களுக்கு நிலைமாறு கால நீதி தொடர்பான முழுமையான, உலகளாவிய கண்ணோட்டமொன்றை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு, கருத்திட்டம், ஒவ்வொரு கூட்டமைப்பு பங்காளார் அமைப்பினதும் திட்டவட்டமான திறன்கள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றில் நம்பிக்கை வைத்திருந்தது. வளங்களின் செயல்திறன்மிக்க பாவனையை உறுதிப்படுத்தும் பொருட்டு பயிற்சிகளின் உள்ளடக்கங்கள் தொடர்பாகவும், மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்புக்கு வழங்கப்பட்டு வரும் தொழில்நுட்ப ஆதரவு தொடர்பாகவும் பங்காளர் அமைப்புக்கள் ஒரே சீரான விதத்திலான ஒருங்கிணைப்பை மேற்கொண்டு வந்தன.

மத்தியமயப்படுத்தப்பட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ஆவணப்படுத்தல் தரவுத்தளங்களை பராமரிப்பதிலும், சேகரிக்கப்பட்ட ஆவணங்களை நினைவேந்தல் முன்முயற்சிகள், சத்திய விசாரணை ஆணைக்குழுக்கள், சர்வதேச மற்றும் கலப்பு நீதிமன்றங்கள், விசாரணை மன்றங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய நிலைமாறு கால நீதி வழிமுறைகளுக்கு பெற்றுக் கொடுப்பதிலும் ஆவணப்படுத்தல் முயற்சிகளை துவக்கி வைப்பதிலும், கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள் கணிசமான அளவிலான நிபுணத்துவ அறிவை கொண்டுள்ளன. கூட்டமைப்பின் பங்காளர்

அமைப்புக்கள் தமது பன்முகபட்ட திறன்கள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்குள்ளும் ஒருங்கிணைத்திருந்தன. மனித உரிமை ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் தேவைகளை பல்துறைசார் விதத்தில் நிறைவேற்றி வைக்கக் கூடிய வாய்ப்பையும் இது அவற்றுக்கு வழங்குகின்றது. உதாரணமாக, (PILPG) மற்றும் மனித நேயச சட்ட நிலையம் (HLC) என்பவற்றினால் முன்னெடுக்கப்பட்ட ஆவணப்படுத்தல் பயிற்சிகளின் போது, ஆவணப்படுத்தல் செயற்பாடுகளில், பயன்படுத்துவதற்கான உள சமூக பராமரிப்பு முறைகள் குறித்து வன்முறை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆய்வு மையம் (CSVR) அமர்வுகளை நடத்தியது.

மேலும், கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள் அவற்றின் உத்தேச செயற்பாடுகள் மற்றும் அமுலாக்கல் திட்டங்கள் என்பன தொடர்பாக முனைப்பான விதத்தில் ஒருங்கிணைப்பை மேற்கொண்டதுடன், ஒவ்வொரு அமைப்பிடமிருந்தும் பின்னூட்டலையும் கேட்டு பெற்றுக் கொண்டன. இது கருத்திட்டத்தின் ஒத்திசைவு மற்றும் பொருத்தப்பாடு என்பவற்றை மேம்படுத்தியது. உதாரணமாக, PILPG குழு ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் தரவுத் தளங்களை ஸ்தாபித்துக் கொள்வதற்குவழங்கிய தொழில்நுட்ப ஆதரவு குறித்த தனது அனுபவங்களை பயன்படுத்திக் கொண்டதுடன், மனித நேயச சட்ட நிலையம் (HLC) அமைப்பு முன்னைய யூகோஸ்லோவியாவில் ஒரு தரவுத் தளத்தை உருவாக்கி, பராமரித்து வருவது தொடர்பான அதன் அனுபவத்தை பயன்படுத்திக் கொண்டது. மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் மத்திமயப்படுத்தப்பட்ட ஆவண தரவுத் தளம் தொடர்பாக இந்த உதவி வழங்கப்பட்டது.




தென் சூடான் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் உறுப்பினர்கள் Youth For Peaceஎன்ற அமைப்புக்கு விஜயம் செய்தனர். இது கம்போடியாவில் அமைந்திருக்கும் ஒரு மனச்சாட்சி மையமாக இருந்து வருவதுடன், இந்த பரிமாற்ற விஜயத்தை 2014 ஆம் ஆண்டில் நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

### பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருடன் நேர்காணல்களை நடத்துவதற்கான உள்ளூர் ஆவணப்படுத்துனர்களின் ஆற்றலை கட்டியெழுப்புதல்

கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள் தீவிரமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரை நேர்காணல் நடத்துவது தொடர்பான பாத்திர நடிப்புக்கள் என்பவற்றை முன்னெடுப்பதன் மூலம் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் ஆற்றலை கட்டியெழுப்பியிருந்தன. மேலும், அவை தரப்படுத்தப்பட்ட நேர்காணல் கருவியை பூர்த்தி செய்திருந்ததுடன், உள சமூக தேவைகளையும் மதிப்பீடு செய்திருந்தன. PILPG அமைப்பின் உள்ளூர் ஆளணியின் உதவியுடன் கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள்

ஆவணப்படுத்துனர்களுக்கு பொருத்தமான பயிற்சிப் பாடத்திட்டமொன்றை அபிவிருத்திச் செய்வதற்கென உலகளாவிய மற்றும் பிராந்திய அனுபவங்களை பயன்படுத்திக் கொண்டன. மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு ஏற்கனவே இலக்குச் சமூகங்களுக்குள் தேவையான தொடர்புகளை உருவாக்கிக் கொண்டிருந்ததுடன், கூட்டமைப்பின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மனித உரிமை மீறல்களை வினைத்திறன் மிக்க விதத்தில் ஆவணப்படுத்துவதற்கான கருவிகளை அதற்கு வழங்கின.

கூட்டமைப்பினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆவணப்படுத்துனர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாத்திர நடிப்புக்கள் என்பவற்றில் பங்கேற்று, பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் கதைகள் பதிவு செய்யப்பட்ட ஏனையவர்கள் ஆகியோரை நேர்காணல் நடத்துவதற்கான தமது திறன்களை விருத்தி செய்து கொண்டார்கள். இலக்கு வைத்து நிகழ்த்தப்பட்ட படுகொலைகள், பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் சொத்து அழிப்புக்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பரந்த வீச்சிலான மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டிருந்தவர்களுடன் கதையாடல் அடிப்படையிலான நேர்காணல்களை நடத்துவது தொடர்பான அவர்களுடைய ஆற்றல்களை கணிசமான அளவில் அவர்கள் வளர்த்துக் கொண்டிருந்தார்கள்.



கெமரூச் பேரனர்த்தத்தில் உயிர் தப்பிய ஒருவர் தென் சூடான் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுடன் 2016 ஆம் ஆண்டில் கம்போடியாவில் தமது அனுபவங்கள் குறித்து கலந்துரையாடுகின்றார்.

பாத்திர நடிப்புக்களின் பின்னர் கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள் ஆவணப்படுத்துனர்களின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ததுடன், அது தொடர்பான தமது பின்னூட்டல்களையும் வழங்கின. அனுபவம் சார்ந்த இந்தக் கற்றல் அணுகுமுறை களப் பணிக்கு தம்மை தயார்படுத்திக் கொள்ளும் விடயத்தில் தமக்கு பெருமளவுக்கு உதவிகரமாக இருந்து வந்தது என்ற விடயத்தை ஆவணப்படுத்துனர்கள் கண்டறிந்து கொண்டார்கள். கூட்டமைப்பினால் நெறிப்படுத்தப்பட்ட ஒரு பயிற்சியின் பின்னர், ஆவணப்படுத்துனர்கள் 2016 ஜுன் மாதத்தில் தென் சூடானில் பல இடங்களில் தமது முன்னோடிச் செயற்பாடுகளை மேற்கொண்டார்கள். ஓர் அமைவிடத்தில் பல நாட்கள் தங்கி, கூட்டமைப்பினால் பயிற்றப்பட்ட ஆவணப்படுத்துனர்கள் நூற்றுக்கணக்கான வாக்குமூலங்களை கதை வடிவில் சேகரித்துக் கொண்டார்கள். அதற்கு முன்னர் உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்களினால் அத்தகைய பணிகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை; அதற்குப் பதிலாக, மதிப்பீட்டாய்வுகளே பயன்படுத்தப்பட்டிருந்தன. மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு ஓரளவுக்கு கட்டமைக்கப்பட்ட நேர்காணல்களை நடத்துவதற்கு வாய்ப்பளித்த நேர்காணல் கருவியொன்றை பயன்படுத்தியது; அது (நேர்காணல்களில்) சுதந்திரமான கதையாடல்களுக்கான இயலுமையை பெற்றுக் கொடுத்தது. அதே வேளையில், இடம்பெற்றிருக்கும் அத்துமீறல் வகைகள், அத்துமீறல்கள் இடம்பெற்ற அமைவிடங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குற்றமிழைத்த நபர்கள் தொடர்பான விவரணங்கள் போன்ற சேகரிக்கப்பட்ட தகவல்கள் வகைகளில் ஒரே சீரான தன்மை உறுதிப்படுத்தப்பட்டது. இது ஆவணப்படுத்துனர்கள், மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் தரவுத் தளத்தில் தரவுகளை இலகுவாக தரப்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்கியதுடன், பெருந்தொகையான தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கான வாய்ப்பினையும் வழங்கியது. மேலும், இந்த முறைமையியல் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பைச் சேர்ந்த ஆவணப்படுத்துனர்கள் (நேர்காணலுக்கு உட்படுத்தப்படுபவர்கள்) தகவல் அறிந்த நிலையில் ஒப்புதலை வழங்க கொள்ள வேண்டிய தேவையையும், விருப்பு வெறுப்பற்ற விதத்தில் நேர்காணல்களை நடத்த வேண்டிய தேவையையும் எடுத்து வந்திருந்தது. ஒரே சீரான தன்மை மற்றும் தரநியமப்படுத்தல் என்பன நீதித்துறைசார்ந்த மற்றும் நீதித்துறை சாராத நிலைமாறு கால நீதி பொறிமுறைகளுக்கான ஆவணப்படுத்தல்களை வழங்குவதற்கு உதவும்.

> "ஒருவர் ஆவணப்படுத்தல் துறையில் பயிற்றுவிக்கப்பட்டு, உளவத் துணை வழங்கும் விடயத்தில் தேவையான திறன்கள் இல்லாதவராக இருந்து வரும் சந்தர்ப்பத்தில் ஒரு அபாயம் ஏற்படக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஒன்றில் நேர்காணலுக்கு உட்படுத்தப்படுபவரின் கடும் மன அதிர்ச்சிக்குப் பின்னரான மன அழுத்த ஒழுங்கீனம் காரணமாக, அவர் கதறியழ முடியும்; அல்லது சம்பவங்கள் தொடர்பான நினைவுகள் தனது உள்ளங்களில் இன்னும் பசுமையாக இருந்து வரும் காரணத்தினால் நேர்காணலுக்கு உட்படுத்தப்படுவர் உரையாட விரும்பாமல் இருக்கலாம்."
>
> - மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் பிரதிநிதி ஒருவர்

ஆவணப்படுத்தல் செயற்பாடுகளின் போது - குறிப்பாக, சர்வதேச ஆவணப்படுத்துனர்கள் எதிர்கொண்டிருந்த சிரமங்களுக்கு மாறான விதத்தில் - கதையாடல்களை சேகரிக்கும் விடயத்தில் தென் சூடான் ஆவணப்படுத்துனர்கள் பெற்ற வெற்றி, சமூகங்களின் நம்பிக்கையை பெற்றுக் கொண்டிருக்கும், வெளிநபர்களாக கருதப்படாத உள்ளூர் ஆவணப்படுத்துனர்களுக்கு பயிற்சி மற்றும் ஆதரவு என்பன அவசியமாக இருந்து வருகின்றன என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்வது எப்படி என்ற விடயத்தை நிர்ணயிப்பதற்கென முன்னோடி செயற்பாட்டின் போது சேகரிக்கப்பட்ட தகவல்களை PILPG குழு மதிப்பீடு செய்ததுடன், ஆவணப்படுத்துனர்களுக்கு தனிப்பட்ட முறையில் பின்னூட்டல்களை பெற்றுக் கொடுத்தது. மீளாய்வு செயன்முறைக்கூடாக கூட்டமைப்பின் பங்காளர்கள் விதிவிலக்கான திறமைகளை கொண்டிருந்த ஆவணப்படுத்துனர்களை அடையாளம் கண்டிருந்தார்கள். வரையறுக்கப்பட்ட நிதி வளங்களின் பின்புலத்தில் ஆதரவு வழங்கப்பட வேண்டியவர்களை முன்னுரிமைப் படுத்துவதற்கென அவர்கள் அவ்விதம் இனங்கண்டிருந்தார்கள். முன்னோடி செயற்பாடுகளின் பின்னர் தென் சூடானிலும், அப் பிராந்தியத்திலும் மேலதிக ஆவணப்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மிக முக்கியமாக கூட்டமைப்பின் பங்காளர்கள் ஆவணப்படுத்தல் செயற்பாடுகளில் பால்நிலை ஒப்புரவை ஊக்குவித்தார்கள். பெருந்தொகையான பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோர் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளாக இருந்து வரும் காரணத்தினால், பால்நிலை ஒப்புரவு, பாலியல் வல்லுறவு மற்றும் பால்நிலை வன்முறைச் சம்பவங்கள் என்பவற்றையும்

உள்ளடக்கிய விதத்தில் அவர்கள் அனுபவித்திருக்கும் தீங்குகளை மிகவும் வினைத்திறன்மிக்க விதத்தில் ஆவணப்படுத்தக் கூடிய இயலுமையை ஆவணப்படுத்தல் குழுக்கள் வழங்கியது முன்னோடி செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த பங்கேற்பாளர்கள், பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் பாதிக்கப்பட்டிருந்தவர்களில் பெருந்தொகையானவர்கள் பெண் ஆவணப்படுத்துனர்களுடன் தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் போது மட்டும் ஓர் சௌகரிய உணர்வை அனுபவித்தார்கள் என அறிக்கையிட்டிருந்தார்கள்.

## கடும் மன அதிர்ச்சி மற்றும் உள சமூக தேவைகள் என்பவற்றை சமாளிப்பதற்கென உள்ளூர் ஆவணப்படுத்துனர்களுக்கு பயிற்சியளித்தல்

தென் சூடான் ஆவணப்படுத்துனர்களில் பெரும்பாலானவர்கள் அவர்களே கடும் மன அதிர்ச்சியின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களாக இருந்து வந்தார்கள். மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் தொடர்பான சான்றுகள் பரவலாக காணப்படும் சூழ்நிலைகளில் அவர்கள் செயற்பட்டு வந்ததுடன், அந்த நிலையில், அவர்களும் மீண்டும் கடும் மன அதிர்ச்சிக்குள்ளாகும் உயர் ஆபத்தினை எதிர்கொண்டிருந்தார்கள். எனவே, ஆவணப்படுத்துனர்கள் மற்றும் நேர்காணலுக்கு உட்படுத்தப்படுபவர்கள் ஆகியோர் மீண்டும் ஒரு முறை கடும் மன அதிர்ச்சி நிலையினை எதிர்கொள்வதனை குறைத்துக் கொள்ளும் பொருட்டு சுய பராமரிப்பு மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான கூருணர்வு என்பன குறித்து இந்த ஆவணப்படுத்துனர்களின் புரிந்துணர்வை விருத்தி செய்வதற்கான ஒரு வலுவான தேவை இருந்து வந்தது. இந்த விடயத்தை கவனத்தில் எடுக்கும் பொருட்டு வன்முறை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆய்வு நிலையம் (CSVR) ஆவணப்படுத்துனர்கள் சுய பராமரிப்பினை மேற்கொள்ளும் விதம் குறித்து அவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியது. மேலும், அவர்களை உரிய இடங்களுக்கு அனுப்பி வைத்ததுடன், செவிமடுக்கும் திறன்கள் மற்றும் ஏனையவர்களின் கடும் மன அதிர்ச்சிக்கான உணர்வுபூர்வமான எதிர்வினைகளைகட்டுப்பாட்டில் வைத்திருத்தல் என்பன தொடர்பான அறிவுறுத்தல்களையும் வழங்கியது. ஆவணப்படுத்துனர்கள் தாமே கடும் மன அதிர்ச்சி நிலையை எதிர்கொண்டிருந்த பின்புலத்தில், அவர்கள் நேர்காணலுக்கு பிற்பட்ட தமது சொந்த மன அதிர்ச்சியை சமாளிப்பதற்கு தேவையான கற்றல் நுட்பங்களை விசேடமாக பெற்றுக் கொள்ளும் விடயத்தில் ஆர்வம் காட்டி வந்தார்கள்.

> *"தென் சூடானில் வாழ்ந்து வரும் பெருமளவுக்கு ஊசலாட்டத் தன்மையுடன் கூடிய மற்றும் பன்முக இயல்பைக் கொண்டிருக்கும் சமூகங்களுடன் இணைந்து ஆவணப்படுத்தல் செயன்முறையை மேற்கொள்ளும் பொழுது பாதுகாப்பு வழிமுறைகள் தொடர்பாக புரிந்து கொள்வதற்கான எனது ஆற்றலை இந்தப் பயிற்சி உண்மையிலேயே விருத்தி செய்திருந்தது. அது மனித உரிமைகள் ஆவணப்படுத்தல்கள் செயன்முறையை பெருமளவுக்கு இலகுவானதாக ஆக்கியது மட்டுமன்றி, இப்பயிற்சி இல்லாதிருந்தால் தோன்றியிருக்கக் கூடிய பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்களை குறைவடையச் செய்திருந்தது."*
>
> - *மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் பங்காளர் அமைப்பொன்றின் ஒரு பிரதிநிதி*

கருத்திட்ட காலப் பிரிவின் போது, கடும் மன அதிர்ச்சியை கவனத்தில் எடுத்து, தனிப்பட்ட, சமூக மற்றும் தேசிய மட்டங்களிலான சுகப்படுத்தலை எடுத்து வரக் கூடிய அனைத்துமடங்கிய அணுகுமுறையொன்றை வலியுறுத்துவதற்கு கூட்டமைப்பு முயற்சித்தது. இதன் ஒரு பாகமாக கூட்டமைப்பு பங்காளர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தனிப்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்வது தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு வடிகாலாக இருந்து வர முடியும் என்ற விடயத்தை, பாதிக்கப்பட்டவர்களுக்கு எடுத்து விளக்குவதன் முக்கியத்துவத்தை ஆவணப்படுத்துனர்களுக்கு கற்றுக் கொடுத்தது. அது மறுபுறத்தில், அவர்கள் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை வென்று கொள்வதற்கு அவர்களுக்கு உதவியது. உதாரணமாக, ஆவணப்படுத்துனர்கள் குறிப்பிட்ட ஒரு இடத்தைச் சேர்ந்த ஆட்களை அணுகுவதற்கு முன்னர், சமயத் தலைவர்கள் தனிப்பட்ட மற்றும் தேசிய ரீதியான குணப்படுத்தல் செயற்பாட்டின் முக்கியத்துவத்தை ஏற்கனவே அம்மக்களுக்கு எடுத்து விளக்கியிருந்ததுடன், ஆவணப்படுத்தல் இந்த நோக்கங்களை எவ்வாறு நிறைவேற்றி வைக்கின்றது என்பதனையும் விளக்கியிருந்தார்கள். அத்தகைய பிரசங்கங்களை செவிமடுத்துக் கேட்ட பின்னர் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோர் தமது கதைகளை மிகுந்த விருப்பத்துடன் எடுத்துக் கூறுவதற்கு ஆவணப்படுத்துனர்களை அணுகினார்கள்; இத்தகைய பிரசங்கங்களுக்கு முன்னர் அவர்கள் அவ்வாறு செய்வதற்கான விருப்பினை கொண்டிருக்கவில்லை.



நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பு தென் சூடான் உள்நாட்டு போரில் தப்பிப் பிழைத்திருக்கும் 12 நபர்களுக்கு ஒரு வார கால பயிற்சியொன்றை நடத்தியது. இப்பயிற்சி "உடலை வரைபடமாக தயாரித்தல்" என்ற நுட்பத்தை விளக்கும் விதத்ததில் மேற்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம், ஒருவர் தனது உடல் அளவு வரைபடமொன்றை தயாரித்து, அதற்கூடாக தான் அனுபவித்து வந்திருக்கும் கடும் மன அதிர்ச்சியுடன் கூடிய அனுபவங்களை கதையாக கூறுகின்றார். இந்த செயலமர்வு 2016 நவம்பர் மாதத்தில் உகாண்டாவில் இடம்பெற்றது.



## உள்ளூர் ஆவணப்படுத்துனர்களின் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளை கவனத்தில் எடுத்தல் மற்றும் சேகரித்தெடுத்திருக்கும் கதைகளை களஞ்சியப்படுத்துதல்

பரவலான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் அரசாங்கத்தின் கண்காணிப்பு என்பன காரணமாக தென் சூடான் உள்ளூர் ஆவணப்படுத்துனர்களை பொறுத்தவரையில், வாக்குமூலங்களை அல்லது ஏனைய சான்றுகளை தம்முடன் எடுத்துச் செல்வது பெருமளவுக்கு பாதுகாப்பற்ற ஒரு செயலாக இருந்து வந்தது. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு, திடீர் சோதனைகள் மற்றும் எல்லைப்புறத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் சோதனை நடவடிக்கைகள், அதே போல மோதலுடன் சம்பந்தப்பட்டிருக்கும் அனைத்து தரப்பினரும் குறிப்பிட்ட பிரதேசத்தில் தொடர்ந்து வசித்து வந்தமை ஆகிய காரணங்களினால் ஆவணப்படுத்துனர்கள் பௌதீக ரீதியான சேகரிப்பு முனைவுக்குப் பதிலாக டிஜிட்டல் முறையை விரும்பினார்கள். எனவே, கூட்டமைப்பின் பங்காளர்கள் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் ஆவணப்படுத்தல் தரவுத்தளம் முடிவாக்கப்படும் வரையில் ஆவணப்படுத்துனர்களுக்கு இடைக்காலத்தில் பாதுகாப்பான டிஜிட்டல் சேகரிப்பு வசதியை வழங்கினார்கள். மேலும், கூட்டமைப்பின் பங்காளர்கள் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்புக்கு பௌதீக மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பான பயிற்சியையும் வழங்கினார்கள்.

இது தவிர, கூட்டமைப்பின் பங்காளர்கள் மத்தியமயப்படுத்தப்பட்ட ஆவணப்படுத்தல் தரவுத்தளத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்கும், அதனை பயன்படுத்தும் விதம் குறித்து ஆவணப்படுத்துனர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கும் உதவுவதற்கென தமது பல்துறைசார் நிபுணத்துவத்துவ அறிவை ஒருங்கிணைத்தார்கள். சுதந்திரமான மற்றும் பகிரங்க மூலத்தைக் கொண்டிருக்கும் தரவுத்தளமொன்றை தெரிவு செய்து, அதனை ஒரே சீரான விதத்தில் முன்னெடுக்கும் பொருட்டு PILPG குழு மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்புடன் செயற்பட்டு வந்தது. அந்நிலையில், மனித உரிமைகள் தொடர்பான ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு அதன் மனித உரிமைகள் ஆவணங்களை பாதுகாப்பான விதத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. மேலும், மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் தேவைகள் மற்றும் முறைமையியல் என்பவற்றுக்கு இடமளிக்கும் பொருட்டு, தரவுத்தளத்தை வடிவமைப்பதில் உதவியை பெற்றுக் கொள்வதற்கென கூட்டமைப்பு மற்றொரு சர்வதேச அரசு சாரா அமைப்பை இனங்கண்டு, அதன் சேவையை பெற்றுக் கொண்டது.

தரவுத்தளம் 2017 ஏப்ரல் மாதம் முடிவக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு சிவில் சமூக அமைப்பும் சேகரிக்கப்பட்டிருக்கும் தனது தகவல்களை மத்தியமயப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தில் தரவேற்றம் செய்தது. பாதுகாப்பற்ற மற்றும் அவநம்பிக்கை நிலவி வரும் சூழலொன்றில் தகவல்களை பகிர்ந்து கொள்வது தொடர்பான கரிசனைகள் காரணமாக ஒவ்வொரு சிவில் சமூக அமைப்பும் தனது சொந்த ஆவணங்களை மட்டுமே அணுகக் கூடியதாக இருந்து வந்ததுடன், ஏனைய சிவில் சமூக அமைப்புக்களின் ஆவணங்களை பார்வையிட முடியாதிருந்தது. தரவுத்தளம் முடிவாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் சிவில் சமூக அமைப்புக்கள் சேகரிக்கப்பட்டிருக்கும் தமது ஆவணங்களை பாதுகாப்பான வேறுபட்ட இணைய அமைவிடமொன்றில் சேகரித்து வைத்தன.

குறிப்பாக, மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் தரவுத்தளம், அந்த முன்னெடுப்பு சேகரிக்கப்பட்டிருக்கும் கதையாடல்கள் தொடர்பான ஒரு பகுப்பாய்வை மேற்கொள்வதற்கான வாய்ப்பினையும் வழங்கியது. மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்று வந்திருக்கும் அமைவிடங்கள் தொடர்பான விரிவான வரைபடங்களை உருவாக்கிக் கொள்வதற்கும், திட்டவட்டமான சம்பவங்கள், அத்துமீறல் வகைகள் தொடர்பாகவும், மற்றும் திட்டவட்டமான குற்றமிழைத்திருக்கும் நபர்கள் தொடர்பாகவும் விரைவாக தகவல்களை தொகுத்துக் கொள்வதற்கு இந்தப் பகுப்பாய்வு கருமத்தை பயன்படுத்திக் கொள்ளக் கூடிய நிலைமை காணப்பட்டது.

## நல்லிணக்கத்தின் ஒரு வழிமுறையாக வாய்மொழி மூல வரலாறுகளை சேகரித்தல் மற்றும் நினைவேந்தல் செயற்பாடுகள்

ஆவணப்படுத்தல் செயற்பாடு குற்றங்களை இழைத்தவர்களை அவற்றுக்கு பொறுப்பாக்குவதற்கு ஆதரவளிக்க வேண்டிய தேவை தவிர, மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு தனிநபர் மற்றும் சமூக சுகப்படுத்தல் செயற்பாட்டுக்கு அனுசரனை வழங்கும் பொருட்டு, நீதித்துறை சாராத நீதி வடிவங்களுக்கும் மதிப்பளித்தது. அதன் பிரகாரம், கூட்டமைப்பின் பங்காளர்கள் வாய்மொழி மூலம் வரலாறுகளை சேகரிப்பதற்கு ஆவணப்படுத்துனர்களுக்கு பயிற்சிகளை வழங்கினார்கள். அவை வாழ்க்கை வரலாறுகளாக இருந்து வருவதுடன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சான்றுகளிலும் பார்க்க விரிவானவையாக இருந்து வருகின்றன. கதைகளின் நினைவேந்தல் அம்சம் வரலாற்றை பாதுகாத்து வைப்பதுடன், பல்வேறு காரணங்களின் நிமித்தம் குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்யப்படாதிருக்கும் சம்பவங்களை எதிர்கொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு குறிப்பிட்ட ஒரு வழியிலான நீதியை வழங்க முடியும். கொடூரமான குற்றச் செயல்கள் இழைக்கப்பட்ட பின்னர், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணங்களை வழங்கும் விடயத்தில் நீதிமன்றங்கள் கொண்டிருக்கும் இயலாமையையீடுசெய்வதற்கு அத்தகைய ஒட்டுமொத்த அணுகுமுறையொன்று தேவைப்படுகின்றது. மேலும், நினைவேந்தல் முன்முயற்சிகள் சமூகத்தின் அனைத்து கூறுகளும் தமது கதைகளை பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரு மேடையை ஸ்தாபிப்பதன் மூலம் சமூக நல்லிணக்கத்தை போஷித்து வளர்க்க முடியும்.



கௌதமாலா நகரில் தேசிய பொலிஸ் ஆவணக் காப்பகத்தில் டிஜிட்டல் முறைக்கு மாற்றப்படவிருக்கும் காகித வடிவிலான கோப்புக்கள், அக்டோபர் 2016

மேலும், வாய்மொழி மூல வரலாறுகளை சேகரிப்பதற்கான கூட்டமைப்பின் முறைமையியல், குழுக்களுக்கிடையிலான பதற்ற நிலைமைகளை குறைத்துக் கொள்ளும் நோக்கத்துடன் சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் அதே வேளையில், வரலாறு மற்றும் கலாசாரம் என்பன தொடர்பான புலனாய்வுகளை நடத்துவதுடனும் சம்பந்தப்பட்டிருந்தது. இந்த அணுகுமுறை சமூகங்களை எவ்வாறு ஒன்றாக எடுத்து வரும் என்ற விடயத்தை கூட்டமைப்பின் பங்காளர்கள் கம்போடியாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் கருத்து பரிமாற்றத்தின் போது எடுத்துக் காட்டினார்கள். அந்த நிகழ்வில் சிவில் சமூக அமைப்புக்கள் மோதலுக்கு முற்பட்ட மற்றும் இனப் படுகொலை வரலாறுகளை நினைவேந்தல் மற்றும் கல்வி முன்முயற்சிகளுடன் ஒருங்கிணைத்தமை தொடர்பான தமது உதாரணங்களை முன்வைத்தன. கம்போடியாவைச் சேர்ந்த சிவில் சமூக அமைப்புக்களும் வாய்மொழி மூல வரலாறுகளை சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல், ஆவணம் காபகங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சேகரிக்கப்பட்டிருக்கும் ஆவணங்களை பயன்படுத்தும் பொது நிகழ்ச்சித்திட்டங்களில் தொலை தூர பிரதேசங்களில் சமூகத்துவத்துடன் முன்னெடுத்தல் என்பன தொடர்பான தமது மிகச் சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்து கொண்டன. தென் சூடான் மக்களை பொறுத்தவரையில் வாய்மொழி மூல வரலாறுகள் தமது கூட்டு நினைவுகளை நெறிப்படுத்துவதற்கான மிக முக்கியமான வழிமுறையாக இருந்து வரும் காரணத்தினால், மோதலுடன் சம்பந்தப்பட்ட மனக்குறைகள் மற்றும் பிரச்சினைகள் என்பன தொடர்பாக மக்களின் விழிப்புணர்வைத் தூண்டுவதற்கு அவற்றை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

வரலாறுகளை நினைவுக் கூரும் மற்றொரு வழிமுறையாக மனச்சாட்சிசார் மையங்களின் சர்வதேச கூட்டணி இப்பிராந்தியத்தில் உடல் வரைபடத் தயாரிப்பு செயலமர்வொன்றுக்கு அனுசரனை வழங்கியது. இச்செயலமர்வுகள் வன்முறை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆய்வு நிலையத்தின் 'வாழ்க்கை நதி' அப்பியாசத்துடன் இணைந்த விதத்தில், (இப்பொழுது தெற்கு சூடானையும் உள்ளடக்கிய விதத்தில் சூடான் 1956 ஆம் ஆண்டில் சுதந்திரமடைந்தது தொடக்கம் அநேகமாக ஒவ்வொரு தசாப்தத்திலும் வெடித்த வன்முறைச் சம்பவங்களை எடுத்துக் காட்டியது. உடல் வரைப்படத் தயாரிப்பு அப்பியாசம் சுகப்படுத்தல் மற்றும் பரப்புரை என்பவற்றுக்கான பாரம்பரியமற்ற ஒரு கருவியாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை பங்கேற்பாளர்கள் புரிந்து கொண்டார்கள். உதாரணமாக, உடல் வரைபடங்களை காட்சிப்படுத்துவது சமூகத்திற்கிடையில் உரையாடலைத் தூண்டி, உடல் வரைபடத்தின் விவரணங்களை மோதல் குறித்த உத்தியோகபூர்வ வரலாறுகளில் காணப்படாத கூட்டுக் கதைகளுடன் இணைக்க முடியும். அது ஒரு விதமான திருப்தியையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கீகாரத்தையும் வழங்குகின்றது. தென் சூடானில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வன்முறை மற்றும் பாதுகாப்பற்ற நிலை என்பவற்றின் காரணமாக சமாதானம், நீதி மற்றும் நல்லிணக்கம் போன்ற பிரச்சினைகள் குறித்து சம்பாஷணைகளை உருவாக்கும் நோக்கத்திற்கென உடல் வரைபடங்களை காட்சிப்படுத்தும் செயற்பாடு தாமதப்பட்டிருந்தது.

*"தென் சூடானில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மோதலுக்கு மத்தியிலும் கூட, மனமறிய மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சி இந்த நிலைமையை இன்னமும் தவிர்த்துக் கொள்ள உதவ முடியும் - மேலும், எதிர்கால கொடூரச் செயல்களை தடுத்து நிறுத்துவதற்கென இச்செயன்முறை படிப்படியாக இடமபெற்று வருதல் வேண்டும் என்ற விடயத்தையும், மனித உரிமை துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் அரசு சாராத செயற்பாட்டாளர்கள் மிக முக்கியமான வகி பங்கினை வகிக்க வேண்டுமென்ற விடயத்தையும் இந்தப் பயிற்சி எனக்கு எடுத்துக் காட்டியுள்ளது."*

- *மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் பங்காளர் அமைப்பின் பிரதிநிதி ஒருவர்*

## மோதல் குறித்த அனைவரையும் உள்ளடக்கிய பன்முகக் கண்ணோட்டங்களுடன் கூடிய கதைகளை மேம்படுத்துதல்

கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள் தென் சூடான் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சாட்சிகள், சிவில் சமூக உறுப்பினர்கள் ஆகியோருடன் இணைந்து நினைவேந்தல் செயற்பாடுகள் குறித்த தேவை மதிப்பீடொன்றை 2016 மார்ச் மாதத்தில் மேற்கொண்டன. தென் சூடானில் குற்றச் செயல்களை இழைத்த நபர்களே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களாக அல்லது பாதிக்கப்படக் கூடியவர்களாக இருந்து வருவதன் காரணத்தினால் பாதிக்கப்பட்டவர் மற்றும் குற்றமிழைத்தவர் ஆகியோருக்கிடையிலான கோடு மிகவும் மங்கலாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை இதனூடாக அந்த அமைப்புக்கள் கண்டறிந்து கொண்டன. கல்வி மற்றும் நல்லிணக்க முயற்சிகள் என்பவற்றையும் உள்ளடக்கிய நீதித்துறை சாராத செயன்முறைகள், குற்றமிழைத்த நபர்களின் கதைகளிலிருந்து - குறிப்பாக, பாதிக்கப்பட்ட நபர்களாகவும் இருந்து வரும் அந்நபர்களின் கதைகளிலிருந்து - பயனடைந்து வருவதனால் அவர்களுடைய கதைகளை சேகரிப்பதானது மிகவும் முழுமையான நிலைமாறு கால நீதியொன்றுக்கு பங்களிப்புச் செய்கின்றது.

கம்போடியாவில் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் போது மனித உரிமைகள் ஆவணப்படுத்தல்கள் முன்னெடுப்பின் உறுப்பு அமைப்புக்களைச் சேர்ந்த பல தனிநபர்கள், மோதலின் விரிவான வரலாறொன்றை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு குறைந்த மட்டத்தில் குற்றச் செயல்களை நிகழ்த்தியிருந்தவர்களிடமிருந்து கதைகளை பதிவு செய்திருந்த கம்போடிய சிவில் சமூக அமைப்புக்களை சந்தித்தார்கள். மோதலின் அடிச்சரடாக இருந்து வரும் தூண்டுதல் காரணிகளை சிறந்த விதத்தில் புரிந்து கொள்வதற்கான ஒரு வழிமுறையையும் உள்ளடக்கிய விதத்தில் குற்றமிழைத்த நபர்களின் கதைகளை சேகரிப்பதன் முக்கியத்துவத்தை பங்கேற்பாளர்கள் கற்றுக் கொண்டார்கள்; உதாரணமாக, அத்துமீறல்களை நிகழ்த்துவது தொடர்பாக தனிநபர்கள் கொண்டிருந்த செயற்றூண்டல்களை அவர்கள் அறிந்து கொண்டார்கள். இது பாதிக்கப்பட்ட நபர்கள், சாட்சிகள் மற்றும் குற்றமிழைத்தவர்கள்

(அவர்களில் பலர் தாம் பாதிக்கப்பட்டவர்களாக இருந்து வந்ததாக குறிப்பிட்டார்கள்). ஆகியவர்களிடமிருந்து கதைகளை சேகரிக்கும் விடயத்தில் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு மேற்கொண்ட முயற்சிக்கு இது பங்களிப்புச் செய்தது.- வேறுபட்ட ஒன்றுக்கொன்று முரண்பட்ட - நினைவுகள் மற்றும் கதைகள் என்பவற்றை அங்கீகரிக்கும் அனைத்துமடங்கிய விவரணம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு இது உதவியது.எவ்வாறிருப்பினும், குற்றமிழைத்த நபர்களை ஆவணப்படுத்துனர்களுடன் பேசச் செய்வது மிகவும் சவால் மிக்க ஒரு காரியமாக இருந்து வந்தது. ஏனெனில், நிலைமாறு கால நீதியின் வருங்கால வடிவம் மற்றும் அது குற்றமிழைத்த நபர்களை எவ்வாறு கையாளப் போகின்றது ஆகிய விடயங்கள் தெளிவற்றதாக இருந்து வருவது இதற்கான காரணமாகும். உதாரணமாக, நிலைமாறு கால நீதி பொறிமுறைகளினால் தமக்கு எதிராக பயன்படுத்திக் கொள்ளக் கூடிய வாக்குமூலங்களை வழங்கும் விடயத்தில் குற்றமிழைத்த நபர்கள் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள முடியும். அதன் பின்விளைவாக, சேகரிக்கப்பட்ட கதைகள் குறைந்த மட்டத்திலான குற்றச் செயல்களை புரிந்திருப்பவர்களின் வாக்குமூலங்களை உள்ளடக்கியிருக்கவில்லை. எனினும், மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு, மனித உரிமை மீறல்களின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் என தம்மை அடையாளம் காட்டியிருந்த குற்றமிழைத்த நபர்களிடமிருந்து அத்தகைய வாக்குமூலக் கதைகளை திரட்டிக் கொண்டிருந்தது.

### ஓர் ஆவணக் காப்பகம் மற்றும் சன சமூக நிலையம் என்பவற்றை அபிவிருத்திச் செய்தல்

கம்போடியாவில் நிகழ்த்தப்பட்ட பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்கூடாக தென் சூடானில் உள்ளூர் சமூகத்தினால் செயற்படுத்தப்படும் ஓர் ஆவணக் காப்பகம் மற்றும் சன சமூக நிலையம் என்பவற்றை ஸ்தாபிப்பதற்கென ஒரே சீரான ஒருங்கிணைக்கப்பட்ட நோக்கொன்றை விருத்தி செய்து கொள்வதற்கு மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்புக்கு கூட்டமைப்பின் பங்காளர்கள் உதவினார்கள். உடல் வரைபட தயாரிப்பு செயலமர்வையும் உள்ளடக்கிய விதத்தில் முன்னைய கருத்திட்டச் செயற்பாடுகள் ஆவணக் காப்பகம் மற்றும் சன சமூக நிலையம் என்பவற்றுக்கான அடிப்படையை வழங்கும். 2016 மார்ச் மாதத்தில் நடத்தப்பட்ட நினைவேந்தல் பணிகளுக்கான தேவை மதிப்பீட்டின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கான அங்கீகாரம், உண்மையை கூறுதல், சமூக ரீதியிலான சுகப்படுத்தல் மற்றும் நல்லிணக்கம் போன்ற தேவைகளை கவனத்தில் எடுக்கும் பொருட்டு தமக்கு ஒரு நிலையம் தேவைப்படுகின்றது என்ற விடயத்தை உள்ளூர் மக்கள் சுட்டிக் காட்டியிருந்தார்கள்.

கம்போடியாவில் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம், உலகளாவிய ரீதியில் செயற்பட்டு வரும் சிவில் சமூக அமைப்புக்கள் தமது நிலைமாறு கால நீதி பணிகளின் போது கூட்டுச் செயற்பாடுகளை எவ்வளவு வினைத்திறனுடன் மேம்படுத்தி வந்துள்ளன என்ற விடயத்தை எடுத்துக் காட்டியது. பங்களாதேசின் சிவில் சமூக அமைப்பொன்றான விடுதலை போர் அருங்காட்சியகத்தின் ஸ்தாபக உறுப்பினர் அங்கு நிகழ்த்திய உரையை பங்கேற்பாளர்கள் செவிமடுத்துக் கேட்டார்கள். சமூகப் பங்கேற்பு மற்றும் கூட்டணிகள் என்பவற்றை கட்டியெழுப்பும் பொருட்டு நினைவேந்தல் நிகழ்வுகளை பயன்படுத்துவது தொடர்பான அந்த அனுபவத்தை அந்த சிவில் சமூக அமைப்பு அங்கு பகிர்ந்து கொண்டது. துன்பங்கள் தொடர்பாக அனைவரும் பகிர்ந்து கொள்ளும் அனுபவங்களை ஏற்றுக் கொள்ளும் நாடு எல்லை கடந்த ஓர் உரையாடலை நடத்துவது குறித்து கம்போடியாவின் சிவில் சமூக அமைப்பான டேய் கருணா என்ற அமைப்பு விடயங்களை முன்வைத்தது. இந்த பல்வேறு அனுபவங்கள் குறித்த அறிவு தென் சூடானில் அத்தகைய நிலையமொன்றை திசைவழிப்படுத்தல் குறித்த எண்ணக் கருவொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்புக்கு உதவியது. மேலும், தென் சூடான் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் ஒரு உலகளாவிய வலையமைப்பு என்பவற்றுக்கிடையிலான வலுவான உறவுகள், தென் சூடான் தலையீடுகளின் உள்ளூர் உரித்தினை தக்க வைத்துக் கொள்வதற்கு வளங்களை பெற்றுக் கொடுக்க முடியும்.

### ஆவணப்படுத்தலின் பல்வேறு பாவனைகள் தொடர்பாக விழிப்புணர்வை தூண்டுதல்

கூட்டமைப்பு பங்காளர்களின் பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகள் என்பன, ஆவணப்படுத்தல் குறித்து பொது மக்களுக்கு கல்வியூட்டுவதற்கும், குற்றங்களுக்கு ஆட்களை பொறுப்புக் கூற வைப்பதனையும் உள்ளடக்கிய விதத்தில் நிலைமாறு கால நீதியுடனான அதன் உறவு குறித்து கல்வியூட்டுவதற்குமான உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்களின் உள்ளார்ந்த ஆற்றலை அதிகரிப்பதற்கான வினைத்திறன்மிக்க கருவிகளாக இருந்து வந்தன. உதாரணமாக, ஆவணப்படுத்தல், பரப்புரை செயற்பாடுகளுடன் கொண்டிருக்கும் பிணைப்பு தொடர்பான தமது புரிந்துணர்வை இந்தப் பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகள் என்பன பெருமளவுக்கு விருத்தி செய்திருந்ததாக பங்கேற்பாளர்கள் குறிப்பிட்டார்கள்.

குறிப்பாக, கம்போடியாவில் நடத்தப்பட்ட பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் மனித உரிமை ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை, தென் சூடான் சிவில் சமூக அமைப்புக்களுக்கு தமது நினைவேந்தல் செயற்பாடுகள் தொடர்பான முன்னுரிமைகளை தெரிவு செய்து கொள்வதற்கு வளங்களை பகிர்ந்தளித்தYouth for Peace போன்ற கம்போடிய சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைத்தமை மிக முக்கியமாக குறிப்பிட முடியும்.[1]

# கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் பரிந்துரைகள்

**பயிற்றுனர்கள் அர்ப்பணிப்புடன் கூடிய ஆவணப்படுத்துனர்களை கொண்ட ஒரு சிறிய அடிப்படை குழுவுடன் பணியாற்றுதல் வேண்டும்.** தெரிவு செய்யப்பட்டிருக்கும் அர்ப்பணிப்புடன் கூடிய ஆவணப்படுத்துனர்கள் மிகவும் வினைத்திறன் மிக்கவர்கள் என்ற விடயத்தை கூட்டமைப்பின் பங்காளர்கள் தெரிந்து கொண்டார்கள். உண்மையிலேயே கூட்டமைப்பினால் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு சில ஆவணப்படுத்துனர்கள், அனுபவம் குறைந்த சிவில் சமூக அமைப்புக்களிலும் பார்க்க உயர் தரத்துடன் கூடிய மிகச் சிறந்த கதைகளை தனிப்பட்ட முறையில் சேகரிக்கக் கூடியவர்களாக இருந்து வந்தார்கள். சிறு எண்ணிக்கையிலான ஆவணப்படுத்துனர்கள் மீது தங்கியிருப்பதானது, குழுக்களை கூட்டங்களுக்கு அழைப்பது அபாயகரமாக இருந்து வரும் சூழ்நிலையில் பாதுகாப்பு கண்ணோட்டத்திலும் பயனுள்ளதாக இருந்து வந்தது. எனவே, கூட பெருமளவுக்கு தணிக்கை முறைகளும், கட்டுப்பாடுகளும் நிலவி வரும் தென் சூடான் போன்ற ஒரு நாட்டில் பாரிய அளவிலான ஒரு ஆவணப்படுத்தல் முன்னெடுப்பினை ஒருங்கிணைப்பதிலும் பார்க்க ஒரு சிறிய குழுவை பயன்படுத்துவது பாதுகாப்பானதாகவும், மிகவும் வினைத்திறன்மிக்கதாகவும் இருந்து வர முடியும்.

**ஆவணப்படுத்தல் முயற்சிகளை செயல்திறன்மிக்க விதத்தில் விரிவாக்குவதற்கும், அவற்றின் நிலைபேறான தன்மையையும் எடுத்து வருவதற்குமென பயிற்றுனர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை பயிற்றுனர்கள் நடத்துதல் வேண்டும்.** கதைகளை ஆவணப்படுத்தும் ஆற்றலை கொண்டிருக்கும் தென் சூடான் மக்களை எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு, புதிய நேர்காணல் நடத்துபவர்களை பயிற்றுவிப்பதற்கென அனுபவம் வாய்ந்த அர்ப்பணிப்புடன் கூடிய ஆவணப்படுத்துனர்களுக்கென பயிற்றுனர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வொன்றை கூட்டமைப்பின் பங்காளர்கள் நடத்தினார்கள். தமது நம்பிக்கையுடன் கூடிய இரண்டு வருட கால உறவு மற்றும் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் முறைமைகளை பயன்படுத்தி நேர்காணல்களை நடத்துவதில் கொண்டிருக்கும் அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் புதிய உள்ளூர் பயிற்றுனர்களை கூட்டமைப்பின் பங்காளர்கள் தெரிவு செய்தனர். பயிற்சிகளை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து பெருமளவுக்கு தகுதிகளைக் கொண்டிருக்கும் உள்ளூர் ஆவணப்படுத்துனர்களின் ஒரு சிறு குழுவுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவது, அடிக்கடி பயிற்சிகளை நடத்துவதற்கான இயலுமையை பெற்றுக் கொடுக்கின்றது. நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கான வரையறுக்கப்பட்ட அணுகு வசதியைக் கொண்டிருக்கும் வெளி பயிற்றுனர்களில் தங்கியிருப்பதற்கு பதிலாக இது ஒரு சிறந்த முறையாகும். இது மறுபுறத்தில் தகுதிவாய்ந்த ஆவணப்படுத்துனர்களின் எண்ணிக்கையை தீவிரமாக அதிகரிப்பதுடன் ஆவணப்படுத்தல் முயற்சிகளையும் பரவலாக்க முடியும்.

**ஆவணப்படுத்தல் தொடர்பான பயிற்சிகள் சுய பராமரிப்பு, கடும் மன அதிர்ச்சியை சமாளித்தல் ஆகிய விடயங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.**கூட்டமைப்பினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆவணப்படுத்துனர்களையும் உள்ளடக்கிய விதத்தில் தென் சூடான் பெருந்தொகையான மக்கள் கடும் மன அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்து வருகின்றார்கள். அவர்கள் பாரிய அளவிலான மனித உரிமை மீறல் சம்பவங்களை தாமே அனுபவித்துள்ளனர்; அல்லது அவற்றுக்கு சாட்சிகளாக இருந்து வந்துள்ளனர். இப்பயிற்சிகள் கடும் மன அதிர்ச்சி மற்றும் சுகப்படுத்தல் என்பன தொடர்பான ஆவணப்படுத்துனர்களின் அறிவை விருத்தி செய்ததுடன், சுய பராமரிப்பு நுட்பங்களையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தது. கடும் மன அதிர்ச்சி மற்றும் சுய பராமரிப்பு என்பன தொடர்பான புரிந்துணர்வு பாதிக்கப்பட்டவரை மையமாகக் கொண்ட நிலைமாறு கால நீதியின் மிக முக்கியமான ஒரு அம்சமாக இருந்து வரும் காரணத்தினால் தமதும், அதே போல தாம் நேர்காணலுக்குட்படுத்தப்பட்ட நபர்களினதும் உள, சமூக தேவைகளை சமாளிக்கும் விடயத்தில் பயிற்றுனர்கள் பயிற்றுவிக்கப்படுவது அவசியமாகும்.

**பல்துறைசார் பயிற்சிகளை வழங்கும் பொருட்டு பயிற்றுனர்கள் செயல்திறன்மிக்க விதத்தில் கூட்டு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.** கூட்டமைப்பின் ஒவ்வொரு பங்காளர் அமைப்பும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தனது சொந்த திட்டவட்டமான திறன்கள் மற்றும் அனுபவங்கள் என்பனவற்றை எடுத்து வந்ததுடன், பங்கேற்பாளர்களுக்கு நிலைமாறு கால நீதி குறித்த முழுமையான, உலகளாவிய கண்ணோட்டமொன்றை பெற்றுக் கொடுத்தன.

ஆவணப்படுத்தல் முயற்சிகளை துவக்கி வைத்தல், தரவுத் தளங்களை பராமரித்தல் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களினால் சேகரிக்கப்பட்டிருக்கும் ஆவணங்களை நிலைமாறு கால நீதி முயற்சிகளுக்குபெற்றுக் கொடுத்தல் என்பன தொடர்பான பல்துறைசார் பயிற்சிகளிலிருந்து தென் சூடான் பங்கேற்பாளர்கள் பயனடைந்தார்கள். பல்வேறு துறைகளில் நிபுணத்துவத்தைக் கொண்டிருக்கும் பயிற்றுனர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் செயல்திறன் மற்றும் ஒத்திசைவு என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு கூட்டாக செயற்பட்டு, ஒருங்கிணைப்பினை மேற்கொள்வது அவசியமாகும்.

**தொடர்ச்சியாக மோதல்கள் இடம்பெற்று வரும் சூழலில் மேற்கொள்ளப்படும் ஆவணப்படுத்தல் முயற்சிகள் நிலைமைக்கேற்ப அனுசரித்துச் செல்லக் கூடியதாக இருந்து வருதல் வேண்டும்.** தொடர்ச்சியாக ஒரு மோதல் இடம்பெற்று வரும் கால கட்டத்தில் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் களத்தில் தோன்றும் இயங்கியல் நிலைமைக்கு எதிர்வினையாற்றும் இயலுமையை கொண்டிருத்தல் வேண்டும். உதாரணமாக, 2016 ஜுலை மாதத்தில் தென் சூடானில் வன்முறைச் சம்பவங்கள் தீவிரமடையத் தொடங்கிய பொழுது, அங்கு திட்டமிடப்பட்டிருந்த ஆவணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் தாமதமடைந்தன. தென் சூடானுக்கு வெளியில் தென் சூடான் மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களுக்கு ஆவணப்படுத்தல் குழுக்களை அனுப்பி வைப்பதற்கான யோசனைகள் முன்வைத்ததன் மூலம் கூட்டமைப்பின் பங்காளர்கள் இதற்கு எதிர்வினையாற்றினார்கள். இது இக்கருத்திட்டத்திற்கு செயல் வேகத்தை தக்க வைத்துக் கொள்ளும் இயலுமையை வழங்கியது. ஆவணப்படுத்தல் முயற்சிகள் சவால்களை எதிர்பார்க்க வேண்டியிருப்பதுடன், உள்ளூர் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் அதே வேளையில், நிலைமைக்கு ஏற்ற விதத்தில் தமது நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கான இயலுமையையும், விருப்பத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கென நிதியுதவி அளிப்பவர்கள் ஆவணப்படுத்துனர்களின் தேவைகள் மற்றும் அவர்கள் எதிர்கொண்டு வரும் சவால்கள் தொடர்பாக நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய விதத்திலும், நிலைமைக்கு எதிர்வினையாற்றும் விதத்திலும் நடந்து கொள்வது அவசியமாகும்.

**விருப்பு வெறுப்பற்ற தன்மை மற்றும் தொழில்சார் அணுகுமுறை என்பவற்றை ஸ்தாபித்துக் கொள்ளும் பொருட்டு ஆவணப்படுத்தல் முயற்சிகள் தரநியமப்படுத்தப்பட்ட ஒரு முறைமையியலை பயன்படுத்துதல் வேண்டும்.** பல்வேறு நிலைமாறு கால நீதி வழிமுறைகள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன், அந்த முன்னெடுப்பு மேற்கொண்டு வரும் பணியின் தொழில்வான்மை மற்றும் விருப்பு வெறுப்பற்ற இயல்பு என்பவற்றை எடுத்துக் காட்டும் பொருட்டு கூட்டமைப்பின் பங்காளர்களும், மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பைச் சேர்ந்தவர்களும் தரநியமப்படுத்தப்பட்ட நேர்காணல் கருவியொன்றையும், மிகக் கடுமையான முறைமையியல் ஒன்றையும் பயன்படுத்தினார்கள். உதாரணமாக, தனது ஆவணப்படுத்தல் செயற்பாடுகள், குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வைக்கும் செயன்முறைகளிலும், அதே போல உண்மை, நினைவேந்தல் மற்றும் நல்லிணக்க முன்முயற்சிகளிலும் முதன்மையான ஒரு பங்கினை வகிக்குமென மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு நம்பிக்கை கொண்டுள்ளது. தரநியமப்படுத்தப்பட்ட ஒரு நேர்காணல் கருவி மற்றும் முறைமையியல் போன்ற ஒரே சீரான அணுகுமுறையொன்றை மேற்கொள்வதானது தரவுத்தளங்களிலிருக்கும் தகவல்களின் தரநியமங்களை பேணுவதற்கும், பெருந்தொகையான தகவல்களை சிறந்த விதத்தில் பகுப்பாய்வு செய்வதற்கும், ஆவணப்படுத்தலை பரந்த வீச்சிலான வழிமுறைகள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றுக்குள் எடுத்துச் செல்வதற்கும் ஆற்றலை பெற்றுக் கொடுக்கின்றது.

**ஆவணப்படுத்தல் பயிற்சிகள் டிஜிட்டல் பாதுகாப்பினையும் உள்ளடக்குதல் வேண்டும்.** கூட்டமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்க முன்னர் ஆவணப்படுத்துனர்கள் டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பான அறிவை கொண்டிருக்கவில்லை. பலவிதமான கடவுச் சொற்களை பயன்படுத்துதல் அல்லது மிகவும் உணர்திறன் கொண்ட தகவல்களை கையடக்கத் தொலைபேசிகளில் சேமித்து வைத்தல் போன்ற ஒரு சில டிஜிட்டல் பழக்கங்கள் எவ்வாறு அபாயகரமானதாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆவணப்படுத்துனர்களுக்கு கற்றுக் கொடுத்ததுடன், அத்தகைய ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்கான மிகச் சிறந்த நடைமுறைகளையும் பரிந்துரை

செய்திருந்தன. தொடக்கத்திலேயே ஆவணப்படுத்தல் பயிற்சிகள் உடல் ரீதியான அச்சுறுத்தல்கள் தவிர, டிஜிட்டல் பாதுகாப்பு எதிர்கொண்டு வரும் ஆபத்துக்களை மதிப்பிட்டு, அவற்றை தணித்துக் கொள்வதற்கான நுட்பங்களை ஆவணப்படுத்துனர்களுக்கு வழங்குதல் வேண்டும். நவீன தொழில்நுட்பம் குறித்த அறிவைக் கொண்டிராததனிநபர்களுக்கு பயிற்சியை வழங்கும் போது, குறிப்பாக இது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

**பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூருவதற்கும், நல்லிணக்கத்தை போஷித்து வளர்ப்பதற்கும் வாய்மொழி மூல வரலாறுகள் மற்றும் உடல் வரைபடங்கள் போன்ற பாரம்பரியமற்ற ஆவணப்படுத்தல் முறைகள் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.** கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள் நிலைமாறு கால நீதி தொடர்பான தமது முழுமையான அணுகுமுறைக்கு ஏற்ற விதத்தில் வாய்மொழி மூல வரலாறுகளை திரட்டுவதற்கு ஆவணப்படுத்துனர்களுக்கு பயிற்சியை வழங்கியதுடன், மோதல் குறித்த பரவலான கதையாடல்களை சேகரிக்கும் பொருட்டு உடல் வரைபட செயலமர்வுகளை நடத்தின. நினைவேந்தல் முன்முயற்சிகள் என்ற விதத்தில் வாய்மொழி மூல வரலாறுகள் மற்றும் உடல் வரைபடங்கள் என்பன பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கும், நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குமென பயன்படுத்தப்படுதல் வேண்டும். முறைசார்ந்த நிலைமாறு கால நீதி வழிமுறைகள் பாதிக்கப்பட்டிருக்கும் அனைத்து மக்களுக்கும் நிவாரணத்தை வழங்கும் ஆற்றலை கொண்டிராத பின்புலத்தில், ஆவணப்படுத்தல் முயற்சிகள் பாரம்பரியமற்ற நீதி வடிவங்களை வழங்கும் நோக்கத்துடன் பாரம்பரிய ஆவணப்படுத்தல் செயற்பாடுகளையும் உள்ளடக்குதல் வேண்டும். இதுவரையில் முறைசார்ந்த பொறிமுறைகள் உருவாக்கப்படாதிருக்கும் தென் சூடான் போன்ற நாடுகளில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் செயன்முறைகளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டும், நிலைமாறு கால நீதி குறிக்கோள்களை பரவலாக்கிக் கொள்ளும் பொருட்டும் சான்றுகள் மற்றும் கதைகள் என்பவற்றை சேகரிப்பதற்கென அனைத்து வடிவங்களிலான ஆவணப்படுத்தல் முறைகளும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

**தகவல் பரிமாற்றம் தொடர்பாக ஆவணப்படுத்துனர்கள் ஒழுங்குவிதிகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.** ஆவணப்படுத்தல் செயற்பாட்டின் தாக்கத்தை அதிகரித்துக் கொள்வதற்கென ஆவணப்படுத்துனர்கள் சேகரிக்கப்பட்டிருக்கும் தமது நேர்காணல் கதைகள் மற்றும் முதன்மையான முடிவுகள் என்பவற்றை ஏனைய சிவில் சமூக அமைப்புக்களுடனும், அதே போல சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புக்களுடனும் பகிர்ந்து கொள்வது அவசியமாகும். எனவே, தொடக்கத்திலேயே தகவல் பரிமாற்ற நடைமுறைகளுக்கு வழிகாட்டும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் உறுப்பினர்கள் ஒரு உடன்பாட்டுக்கு வந்திருந்தார்கள். இந்த ஒழுங்குவிதிகள் நெறிப்படுத்தும் கமிட்டியின் கொள்கைகளில் உள்வாங்கப்பட்டிருந்தன. சிவில் சமூகத்திற்கிடையிலான அவநம்பிக்கையும், அதன் விளைவான பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் நிலவி வரும் தென் சூடானில் இது மிக முக்கியமானதாகும். அத்தகைய ஒழுங்குவிதிகள் உருவாக்கிக் கொள்வது அவநம்பிக்கையை போக்குவதற்கும், வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திக் கொள்வதற்கும் உதவ முடியும். பாதுகாப்பு கரிசனைகள் காரணமாக உள்ளூர் மக்கள் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கு தயக்கம் காட்டி வரும் நிலையில் குறிப்பாக இது முக்கியத்துவம் பெறுகிறது.

**ஆவணப்படுத்துனர்கள் உலகெங்கிலும் செயற்பட்டு வரும் சிவில் சமூகங்களின் அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டு, வளர்ச்சியடைதல் வேண்டும்.** கம்போடியாவில் இடம்பெற்ற அறிவுப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் போதும், கூட்டமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட பயிற்சிகளின் போதும் உலகெங்கிலுமிருந்து சமூகமளித்திருந்த உள்ளூர் மட்டத்திலான சிவில் சமூக அமைப்புக்கள் ஆவணப்படுத்தல் தொடர்பான சிறந்த நடைமுறைகளையும், ஆவணக் காப்பகங்கள், சன சமூக நிலையங்கள் மற்றும் ஏனைய கல்வி முன்முயற்சிகள் என்பவற்றுக்கான ஓர் அடித்தளமாக அவற்றின் உபயோகம் குறித்த விபரங்களையும் பகிர்ந்து கொண்டார்கள். குறிப்பாக, சிவில் சமூக அமைப்புக்கள் புதிதாக தோன்றியிருப்பதுடன், ஒருங்கிணைப்பற்ற விதத்தில் செயற்படும் நிலைமைகளில் அறிவுப் பரிமாற்றங்கள் பயனுள்ளவையாக இருந்து வர முடியும். உலகளாவிய வலையமைப்பு

ஆவணப்படுத்தல் முயற்சிகளில் உள்ளூர் உரித்தினை தக்க வைத்துக் கொள்வதற்கான வளங்களை பெற்றுக் கொடுக்க முடியும்.

**பொது சர்வதேச சட்டம் மற்றும் கொள்கைக் குழுவின் (PILPG) சார்பில் சாரா ப்ரட்ஷோ மற்றும் அனா மொயோ குபேட்டோ ஆகியோரின் பங்களிப்புக்களுடன் டிப்பானி சொமாதோஸி மற்றும் பிரிட்ஜட் ருத்போர்ட் ஆகியோரினால் தயாரிக்கப்பட்டது.**

1. அதன் ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் 2015 சமாதான ஒப்பந்தத்தினால் அவசியப்படுத்தப்பட்டிருக்கும் நிலைமாறு கால நீதி பொறிமுறைகளுக்கு பங்களிப்புச் செய்ய முடியுமென மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பு (HRDI) நம்புகின்றது.

2. மனித உரிமை மீறல்கள் ஆவணப்படுத்துவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பணிப்பாணையை செயலகம் கொண்டுள்ளது. நெறிப்படுத்தல் கமிட்டி மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்னெடுப்பின் குறிக்கோள்கள் மற்றும் பாதை வழிகாட்டியின் அமுலாக்கல் என்பன தொடர்பான உயர் மட்டத்திலான கண்காணிப்பை மேற்கொண்டதுடன், செயலகத்தின் வேலைகளையும் நிர்வகித்தது.

3. உடல் வரைபடங்கள் என்பவை மனித உடலின் அதே அளவிலான படங்களாக இருந்து வருவதுடன், அவற்றில் பாதிக்கப்பட்டவர்கள் கடும் மன அதிர்ச்சி மற்றும் மோதல் தொடர்பான தமது அனுபவங்களை எழுதி, படங்களாக வரைகின்றார்கள். இது மற்றவர்களிடமும் பரவலான பொது மக்களிடமும் தமது வரலாறுகளை ஆய்வு செய்து, வெளிப்படுத்திக் காட்டுவதற்கான பாதுகாப்பான ஒருவழியை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குகின்றது. மேலும், தாம் கற்பனை செய்யும் தமது எதிர்காலத்தை தமது உடல் வரைப்படங்களில் எடுத்துக் காட்டுமாறும் பாதிக்கப்பட்டவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். 'வாழ்வின் நதி' என்பது தனிப்பட்ட வரலாறுகளை கலந்துரையாடும் மற்றொரு கட்புல வழிமுறையாக இருந்து வருகின்றது.

4. உதாரணமாக, பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்ற பங்கேற்பாளர்கள் Youth for Peaceஅமைப்பினால் தயாரிக்கப்பட்டிருந்த '*Initiating a Way to Address Legacy of Memory in Cambodia.*' என்ற சிறு நூலை பெற்றுக் கொண்டார்கள். இந்நூல் முன்னைய கெமரூச் கொலைக் களமொன்றை உள்ளூர் சமூகத்திற்குச் சொந்தமான ஒரு சமாதான கற்றல் நிலையமொன்றாக ஒன்றான நிலைமாற்றம் செய்வதற்கு உதவிய சமூகத்துடனான கலந்தாலோசனை செயன்முறையை விரிவாக எடுத்து விளக்குகின்றது. மேலும், கம்போடியா ஆவணப்படுத்தல் நிலையத்திலிருந்து எழுத்துப் பிரதிகள் மற்றும் DVDக்கள் என்பவற்றையும் அப்பங்கேற்பாளர்கள் பெற்றுக் கொண்டார்கள். அவை குற்றமிழைத்த நபர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் ஆகிய இரு தரப்பினரதும் வாய்மொழி வரலாறுகள் தொடர்பான உதாரணங்களை கொண்டிருந்தன.



சிரியாவில் தற்போது இடம்பெற்று வரும் மோதல் காரணமாக சுமார் 12 மில்லியன் மக்கள் - போருக்கு முற்பட்ட நாட்டின் குடித்தொகையில் அரைவாசிப் பேர் - இடம்பெயர்ந்துள்ளார்கள்.

*Photo credit: UNHCR / S. Rich / April 2013*
https://www.flickr.com/photos/101268966@N04/11116320723 https://creativecommons.org/licenses/by-nc/2.0/legalcode

# அத்தியாயம் 2

## சிரியாவில் மனித உரிமை மீறல்கள் காரணமாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் நிதியளிப்பு தொடர்பான ஒரு மதிப்பீடு

### சிரியாவில் காணப்படும் நிலை

டியுனீசியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் ஆட்சியாளர்களுக்கெதிராக எழுச்சியடைந்த 2011 ஆம் ஆண்டின் அரேபிய வசந்தத்தையடுத்து, சிரியாவில் ஆரம்பமாகிய ஆயுத மோதல் எதேச்சதிகார ஆட்சிக்கு எதிரான சிரியா மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் வடிவில் ஆரம்பமாகியது. அரேபிய வசந்தத்துக்கு ஆதரவாக வரைந்திருந்த சுவரோவியங்கள் காரணமாக 2011 மார்ச் மாதத்தில், 15 இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டார்கள். எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதுடன், இதற்கு எதிர்வினையாற்றும் விதத்தில் ஜனாதிபதி பஷர் அல் அசாத் மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் எதிர்ப்புச் செயற்பாடுகளை வன்முறையுடன் கூடிய விதத்தில் முறியடித்தார்கள். நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களை கொலை செய்ததன் மூலமும், மேலும் பெருந்தொகையானவர்களை சிறைப்படுத்தியதன் மூலமும் இந்த எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது. இராணுவத்திலிருந்து வெளியேறியவர்கள் 2011 ஜூலை மாதத்தில் சுதந்திர சிரிய இராணுவம் என்ற ஒரு குழுவை உருவாக்கிக் கொண்டார்கள். இது அரசாங்கத்தை கவிழ்ப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்த ஒரு சிறு ஆயுதக் குழுவாக இருந்து வந்ததுடன், வன்முறைச் சம்பவங்களின் தீவிரத் தன்மை ஆயுத மோதல் மட்டங்கள் வரை அதிகரிக்கத் தொடங்கியது. 2011 ஆம் ஆண்டில் சிரியாவில் சுதந்திரமான இராணுவம் எழுச்சியடைந்தது தொடக்கம் ஆசாத் அரசாங்கத்திற்கு ஆதரவாக அல்லது எதிராக அரச கூட்டணிகள் உருவாக்கப்பட்டதுடன், பெருந்தொகையான தீவிரவாதக் குழுக்கள் சிரியாவில் சண்டையில் இணைந்து கொண்டன. இந்த ஆயுதக் குழுக்கள் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வன்முறையுடன் கூடிய விதத்தில் போட்டியிட்டு வந்திருப்பதுடன், அவர்களுடைய சண்டைகள் ஒரு சில சந்தர்ப்பங்களில் லெபனான் வரையில் கசிந்து சென்றுள்ளன. அது அந்நாட்டின் அரசியல் இரு துருவ நிலையை தீவிரப்படுத்தியுள்ளது.

மோதலின் அனைத்துத் தரப்பினர்களும் மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல்களை தொடர்ந்தும் நிகழ்த்தி வந்துள்ளார்கள். கொடூராமான குற்றச் செயல்கள் குறித்த குற்றச்சாட்டுக்களையும் இவை உள்ளடக்குகின்றன. சாதாரண குடிமக்கள் இந்த துன்பங்களை அனுபவிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. சிரிய அரேபிய குடியரசு தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஸ்தாபிக்கப்பட்ட சுயாதீனமான சர்வதேச விசாரணை ஆணைக்குழு புதுப்பிக்கப்பட்ட தொடர்ச்சியான ஒரு பணிப்பாணையைக் கொண்டுள்ளது. இந்த ஆணைக்குழு நீதிமன்ற நடைமுறைக்கு வெளியிலான கொலைகள், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள், தன்னிச்சையான தடுப்பு வைப்புக்கள், சித்திரவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் என்பவற்றை உள்ளடக்கிய பரந்த வீச்சிலான மனித உரிமை மீறல்களை எடுத்துக் காட்டியுள்ளது. அத்துமீறல்களில் மிகப் பெரும்பாலானவற்றை சிரிய அரசாங்கமே நிகழ்த்தியுள்ளது.

மனித உரிமைகளை ஆவணப்படுத்தும் ஓர் அரசு சாரா அமைப்பான மனித உரிமைகளுக்கான சிரியாவின் கண்காணிப்பகம் ஆயுத மோதலில் ஆகக் குறைந்தது 330,000 - 475000 சிரியாவின் குடிமக்கள் மற்றும் போராளிகள் ஆகியோர் கொல்லப்பட்டிருப்பதாக 2017 ஜூலை மாதத்தில் அறிவித்தது. மொத்த மரணங்களில் சுமார் 100,000 மரணங்கள் சாதாரண குடிமக்களின் மரணங்களாக இருந்து வந்தன. இதில் ஆகக் குறைந்தது 18,000 சிறுவர்கள் மற்றும் 11,000 பெண்கள் ஆகியோரும் அடங்குகின்றனர். இந்த 100,000 மரணங்கள் அரசாங்க தடுப்பு முகாம்களில் இடம்பெற்ற சுமார் 15,000 சிவிலியன்களின் மரணங்களையும் உள்ளடக்குகின்றன. அதில் 118 சிறுவர்களும், 57 பெண்களும் அடங்கியிருந்தனர். மேலும் 48 தடுப்புக் காவல் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டுள்ளனர்.[1] இது தவிர, பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் காயமடைந்திருப்பதுடன், 12 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் - போருக்கு முற்பட்ட நாட்டின் குடித்தொகையில் அரைவாசி பேர் - இடம்பெயர்ந்துள்ளார்கள். சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை என்பன பாரிய அளவில் இடம்பெற்று வந்துள்ளன என்ற விடயம் நன்கு அறியப்பட்டிருக்கும் அதே வேளையில், இந்த

புள்ளிவிபரங்கள் பல்லாயிரம் மடங்கு உயர்வானவையாக இருந்து வருகின்றன என்பதற்கு அப்பால் இக்குற்றச் செயல்கள் தொடர்பான புள்ளிவிபரங்களை வழங்குவது சிரமமாக இருந்து வருகின்றது. இந்த உண்மைகளும், புள்ளி விபரங்களும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோருக்கு - குறிப்பாக, முன்னைய தடுப்புக் காவல் கைதிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோருக்கு - உள சமூக மற்றும் உடல் ரீதியான புனர் வாழ்வளிப்பு ஆதரவு உடனடியாக தேவையாக இருந்து வருகின்றது என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. எவ்வாறிருப்பினும், சிரியாவில் பாதிக்கப்பட்டிருக்கும் ஆட்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்ந்து வருபவர்கள் ஆகியோரின் - சிரியாவிலோ அல்லது அகதிகள் வாழ்ந்து வரும் ஏனைய நாடுகளிலோ வாழ்ந்து வருபவர்களின் - திட்டவட்டமான உயர் சமூக தேவைகள் குறித்து சர்வதேச சமூகம் குறைந்த அளவிலான அறிவையே கொண்டுள்ளது.

விரிவான மதிப்பீடுகள் மற்றும் கலந்தாலோசனை மூலம் சிரிய மக்கள் பெருமளவுக்கு பயனடைய முடியுமென நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான உலகளாவிய முன்னெடுப்பு கூட்டமைப்பு நம்புகின்றது. அத்தகைய மதிப்பீடுகள், கலந்தாலோசனைகள் என்பன மக்கள் அனுபவித்திருக்கும் துன்பங்களையும், குற்றச் செயல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டிய பொறிமுறைகள் குறித்த சிரிய மக்களின் நோக்குகளையும் நிர்ணயிக்க முடியும். இந்த வகையைச் சேர்ந்த பங்கேற்பு அணுகுமுறை பெருமளவுக்கு பொருத்தமானதாக இருந்து வருகின்றது. ஏனெனில், சிரிய மக்கள் வழங்கும் உள்ளீடுகள் நிலைமாறு கால நீதிக்கான அடிப்படையை உருவாக்குவதுடன், நிலைமாறு கால நீதி வழிமுறைகளில் உண்மையான உள்ளூர் உரித்துக்கும் பங்களிப்புச் செய்ய முடியும். மேலும், இச்செயன்முறை நம்பகத் தன்மை மற்றும் சட்டபூர்வத் தன்மை என்பவற்றை அபிவிருத்தி செய்து, சட்டத்தின் ஆட்சியை மீண்டும் ஸ்தாபிக்க முடியும்.

## சிரியாவில் மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பான - நிதிப்படுத்தல் மதிப்பீடு

சிரியாவில் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்ந்து வருபவர்கள் ஆகியோரின் தேவைகளை இனங்கண்டு கொள்ளும் பொருட்டு கூட்டமைப்பு ஆறு மாத கால மதிப்பீடொன்றை துவக்கி வைத்தது. மனச்சாட்சிசார் மையங்களுக்கான சர்வதேச கூட்டணி (ICSC), வன்முறை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான ஆய்வு நிலையம் (CSVR) மற்றும் பொது சர்வதேச சட்ட கொள்கைக் குழு (PILPG) இக் கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்களாக இருந்து வந்தன. கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்கள் மூன்று உள்ளூர் பங்காளர் அமைப்புக்களுடன் கூட்டாக இணைந்து செயற்பட்டன. அவையாவன: நீதி மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றுக்கான சிரிய நிலையம் (SJAC), புள்ளிவிபரங்கள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான சிரிய நிலையம் (SCSR) மற்றும் சிரியாவுக்கான ஒளிமயமான எதிர்காலம் அமைப்பு (SBF)[2]. இந்தக் கருத்திட்டம் முக்கியமாக சிரியாவினால் நெறிப்படுத்தப்பட்டு வரும் நிறுவனங்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்களை உள்ளடக்கியிருந்தது. துருக்கி, ஜோர்டான் மற்றும் லெபனான் ஆகிய நாடுகளுக்குத் தப்பிச் சென்றவர்கள் மற்றும் சிரியாவில் தங்கியிருந்தவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய சிரிய நாட்டின் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் உயிர் தப்பி வாழ்பவர்கள் ஆகியோருக்குக் கிடைக்கும் மன நல மற்றும் உள சமூக ஆதரவை மதிப்பிடுதல், மருத்துவ, சட்ட மற்றும் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் சேவைகள் என்பவற்றை கண்டறிதல் என்பன இதில் அடங்கியிருந்தன. இந்த மதிப்பீடு சிரியாவின் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அவற்றின் ஆற்றல்கள் என்பன தொடர்பான ஒரு வரைபடத்தை உருவாக்க முயன்றது; கிடைக்கும் சேவைகள் மற்றும் ஆட்களை வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கும் நடைமுறைகள் என்பவற்றை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை கண்டறிதல் - மன நல மற்றும் உள சமூக சேவைகளை வழங்குனர்கள் மற்றும் மனித உரிமை ஆவணப்படுத்தல் அமைப்புக்கள் போன்ற பல்வேறு சேவை வழங்குனர்களிடம் ஆட்களை அனுப்பி வைத்தல்; தடுப்புக் காவல் கைதிகள், முன்னாள் தடுப்புக் காவல் கைதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்கள் ஆகியோரின் திட்டவட்டமான தேவைகளை புரிந்து கொள்ளல் என்பன இதில் அடங்கியிருந்தன.

மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிரிய நாட்டு மக்கள் மற்றும் அவற்றை அனுபவித்து தப்பிப் பிழைத்து வாழ்ந்து வருபவர்கள் ஆகியோருக்கான ஒரு நிதியம் ஸ்தாபிக்கப்படுதல் இந்தக் கருத்திட்டத்தின் ஒரு வெளியீடாக இருந்து வர முடியும். இந்த நிதியத்திற்கு ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் மற்றும் ஏனைய இரு தரப்பு பங்காளர் அமைப்புக்கள் என்பவற்றின் ஆதரவு வழங்கப்பட முடியும். அத்தகைய ஒரு நிதியம் மனித உரிமை பாதுகாவலர்கள் தற்போதைய மற்றும் முன்னைய தடுப்புக் காவல் கைதிகள் மற்றும்

தடுப்புக் காவல் கைதிகளின் குடும்பத்தினர் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்ந்து வருபவர்கள் ஆகியோருக்கு உடனடியாக மிக முக்கியமான சேவைகளை வழங்குவதற்கென சர்வதேச சமூகத்துக்கும், உள்ளூர் சேவை வழங்குனர்களுக்கும் இயலுமையயை பெற்றுக் கொடுக்க முடியும். தீவிரமாக மோதல் இடம்பெற்று வரும் போது உத்தேச நிதியத்தின் உருவாக்கம் மற்றும் அதற்கான வளப் பகிர்வு என்பன மிக முக்கியமான ஒரு மாற்றத்தை எடுத்து வருவதுடன், மூன்று முதன்மையான குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளும் நோக்கத்துடன் செயற்பட முடியும். முதலாவதாக, இந்த நிதியம் தற்போதைய மற்றும் முன்னாள் தடுப்புக் காவல் கைதிகளுக்கு உடனடியான மனநல உள சமூக சேவைகளையும், புனர்வாழ்வளிப்பு ஆதரவினையும் இந்த நிதியம் பெற்றுக் கொடுக்க முடியும்; ஒரு சில சந்தர்ப்பங்களில் அவர்களுடைய குடும்பங்களுக்கும் அத்தகைய சேவைகளை வழங்க முடியும்[3]. இரண்டாவதாக, உரிய இடங்களுக்கு அனுப்பி வைப்பது தொடர்பான ஒரு வலையமைப்பை சேவை வழங்குனர்களுக்கு மத்தியில் அபிவிருத்தி செய்வதன் மூலம் உரிமை மீறல்களை முறையான அடிப்படையில் பதிவு செய்வதற்கான முயற்சிகளை இந்த நிதியம் விரிவுபடுத்த முடியும். ஆவணப்படுத்துனர்களுடன் தமது கதைகளை உடனடியாக பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பினை பாதிக்கப்பட்டவர்களுக்கும், தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்களுக்கும் அது வழங்க முடியும். மூன்றாவதாக,இந்த நிதியம் ஒரு இழப்பீட்டு செயன்முறைக்கான அத்திவாரத்தை இடக் கூடியதாகவும் இருந்து வருகின்றது. சிரிய நாட்டு மக்கள் எதிர்கொண்டு வந்திருக்கும் மனித உரிமை மீறல்களை அங்கீகரிப்பதற்கு நேர்காணல் நடத்தப்பட வேண்டிய குறிப்பாக, தற்போதைய மற்றும் முன்னாள் தடுப்புக் காவல் கைதிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோர் எதிர்கொண்டு வந்திருக்கும் உரிமை மீறல்களை அங்கீகரிப்பதற்கு - இச்செயன்முறை உதவ முடியும்.

அலுவலக ஆவண மட்டத்திலான ஆராய்ச்சி மற்றும் உள்ளூர் பங்காளர்களிடமிருந்து கிடைத்த உள்ளீடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த நேர்காணல் நடத்தப்பட வேண்டிய மனநில மற்றும் உள சமூக சேவைகள், மருத்துவ, சட்ட மற்றும் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் சேவை வழங்குனர்களின் ஒரு விரிவான பட்டியலை இந்த அணி தயாரித்தது. இந்தக் கருத்திட்டம் அலுவலகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆவண ஆராய்ச்சி, பின்புலம் சார்ந்த நேர்காணல்கள், முதன்மை தகவல் வழங்குனர்களுடனான நேர்காணல்கள், இலக்குக் குழுக்கள் மற்றும் கள விஜயங்கள் என்பவற்றை உள்ளடக்கிய பல்வேறு விதமான முறைமைகளை கொண்டிருந்தது. மனநல மற்றும் உள சமூக சேவைகள் தொடர்பான சிரிய மற்றும் சர்வதேச வழிகாட்டுதல்களுடன் இணைந்த விதத்தில் இந்த அணி சிரிய மக்கள் தொடர்பாக மனநல மற்றும் உள சமூக சேவைகள் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் மனநல மற்றும் உள சமூகத் சேவைகள் தொடர்பான சர்வதேச வழிகாட்டிகள் என்பவற்றை கொண்டு அணி ஒரு நேர்காணல் வழிகாட்டியை அபிவிருத்தி செய்தது[4]. இந்த மதிப்பீடு சிரியாவின் நிலைமைக்கு பொருத்தமானதாக இருந்து வருவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, அணி தேவை மதிப்பீட்டை தொடக்கி வைப்பதற்கு முன்னர் மோதல் தொடர்பாக உள்ளூர் பங்காளர்கள் மற்றும் ஏனைய நிபுணர்கள் ஆகியோருடன் பின்புலம் சார்ந்த 6 நேர்காணல்களை நடத்தியது.

மதிப்பீட்டு செயற்பாட்டின் போது அணி (இஸ்தான்புல், கசியன்டெப் மற்றும் ஹடே மாகாணம்) துருக்கி மற்றும் ஜோர்டான் (அம்மான்) ஆகிய நாடுகளில் 2015 நவம்பர் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையில் 46 நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் ஸ்கைப் தொழில்நுட்பத்துக்கு ஊடாகவும், நேரடியாகவும் 52 நேர்காணல்களை நடத்தியது. துருக்கியில் நான்கு இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன (முன்னாள் ஆண் தடுப்புக் காவல் கைதிகளுடன் ஒரு கலந்துரையாடலும், பெண் தடுப்புக் காவல் கைதிகளுடன் ஒரு கலந்துரையாடலும், மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் மற்றும் மோதல் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் சட்ட சேவைகளை வழங்குதல் என்பவற்றில் ஈடுபட்டிருந்த சிரியாவின் நீதித்துறையின் முன்னாள் உறுப்பினர்கள் இருவருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் என்பவற்றை இவை உள்ளடக்குகின்றன.) மேலும், இந்த அணி காசெய்ன்டெப், ஹடே மாகாணம் மற்றும் அம்மான் ஆகிய பிரதேங்களுக்கு கள விஜயங்களை மேற்கொண்டது. இந்த அமைவிடங்களிலேயே சிரிய அகதிகளில் பெரும்பாலானவர்கள் வசித்து வந்தனர். சிரிய மக்களுக்கு கிடைத்து வரும் சேவைகள் எவை? அவை எவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றன. என்ற விடயத்தை நிர்ணயித்துக் கொள்ளும் பொருட்டு இந்த அணி 25 நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை மதிப்பீடு செய்தது, அணி 2016 ஜனவரி மற்றம் பெப்ரவரி மாதங்களில் துருக்கியிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் வாழ்ந்து வரும் முன்னைய தடுப்புக் காவல் கைதிகளுடன் மேலும் அதிகளவிலான நேர்காணல்களை நடத்தியது. தடுப்புக் காவல் கைதிகளின் தேவைகள் தொடர்பாக மதிப்பீட்டு செயற்பாட்டின் கவன மையத்தை பலப்படுத்துவதற்கென இந்த நேர்காணல்கள் நடத்தப்பட்டன. இவற்றின்

காண்புகள் மற்றும் பரிந்துரைகள்என்பவற்றின் வரைவுகள், முன்னரே நிர்ணயிக்கப்பட்ட தனிநபர்களுடன் நடத்தப்பட்ட தொடர் நேர்காணல்களின் போது தேவை மதிப்பீட்டு பங்கேற்பாளர்களினால் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருந்தன. பிரச்சினைகளை தெளிவுபடுத்தல் மற்றும் பின்னூட்டங்களை வழங்குதல் என்பன தொடர்பாக ஆற்றலைக் கொண்டிருக்கும் அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள்.

## சிரியாவில் மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டு உயிர் வாழ்ந்து வருபவர்கள் நிதியளிப்பு தொடர்பான மதிப்பீடு

சிரியாவில் மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டு, உயிர் வாழ்ந்து வருபவர்கள் தொடர்பான நிதியளிப்பு மதிப்பீடு மிகவும் சுவாரஷ்யமான ஒரு சம்பவக் கற்கையாக இருந்து வருகின்றது. ஏனெனில், அது தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் உயர் வீச்சிலான மோதல் நிலைமையொன்று தொடர்பாக உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்களுடன் கூட்டாக இணைந்து ஒரு தேவை மதிப்பீட்டை கொள்வதற்கான தனித்துவமான வாய்ப்பினை வழங்குகின்றது. குறிப்பாக, அது பல்துறை சார்ந்த, ஒவ்வொரு துறையுடனும் சம்பந்தப்பட்ட கூட்டுச் செயற்பாட்டு அணுகுமுறையை கொண்டிருப்பதனால் மிகவும் பெறுமதி வாய்ந்த ஒரு செயன்முறையாக இருந்து வருகின்றது. கூட்டமைப்பும், அதே போல உள்ளூர் பங்காளர் அமைப்புக்களும் இந்த அணுகுமுறையை பயன்படுத்தி வந்துள்ளன. மேலும், மன நல மற்றும் உள சமூக சேவைகள், மருத்துவ, சட்ட மற்றும் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் சேவைகள் என்பவற்றுடன் பிணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கான கருத்திட்டத்தின் புத்தாக்க இயல்பிலான குறிக்கோளையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். இந்த அத்தியாயம் இக் கருத்திட்டத்தையும், சிரியாவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் மோதலிலிருந்து தப்பிப் பிழைத்து உயிர் வாழ்ந்து வருபவர்கள் ஆகியோருக்கு நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அதன் பங்களிப்புக்கள் என்பவற்றையும் மதிப்பீடு செய்வதுடன், சிரியாவிலும் அதே போல மோதலினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஏனைய நிலைமைகளிலும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் தலையீடுகள் தொடர்பாக தகவல்களை வழங்குவதற்கு தேவை மதிப்பீடுகளை மேற்கொள்வது தொடர்பான பரிந்துரைகளை முன்வைக்கின்றது.

### ஒவ்வொரு துறையுடனும் பிணைப்புக்களை கொண்ட பல்துறைசார் மற்றும் பால்நிலை கூருணர்வு கூறுகளைக் கொண்ட ஒரு அணியை ஸ்தாபித்தல்

நாட்டுக்கான அணி வன்முறை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆய்வு நிலையத்தின் மூன்று ஊழியர் உறுப்பினர்களையும் (ஒரு சமூக பணியாளர், ஒரு சமூக விஞ்ஞானி மற்றும் மனித உரிமைகள் சட்டத்தரணிகள்), இரு PILPG ஊழியர்களையும் (இருவரும் மனித உரிமைகள் சட்டத்தரணிகள், இரு SBF ஊழியர்களின் (ஒரு மருத்துவர், ஒரு உள சமூகவியலாளர்) ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. சுகாதாரம், சட்டம் போன்ற பல்வேறு தொழில்சார் பின்புலங்களை ஒன்றாக எடுத்து வந்ததன் மூலம் கருத்திட்டம் ஒரு பல்துறைசார் அணுகுமுறையை பயன்படுத்திக் கொண்டது. அவர்களுடைய வேறுபட்ட தொழில்சார் பின்புலங்கள் மற்றும் இணைப்புக்கள் என்பவற்றுக்கு மத்தியிலும், இந்த அணி ஒத்திசைவான கருத்திட்டமொன்றை கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்தது. அந்த வகையில் அணியின் உறுப்பினர்கள் தமது பல்வேறு துறைகள் சார்ந்த நிபுணத்துவ அறிவை ஒருங்கிணைத்ததுடன், கருத்திட்டத்தை வினைத்திறன்மிக்க விதத்தில் அமுல் செய்யும் பொருட்டு ஒவ்வொருவருடைய துறைகள் மற்றும் கண்ணோட்டங்கள் என்பவற்றிலிருந்து கற்றுக் கொண்டார்கள். இந்த அணி தகவல் பரிமாற்றத்தின் மூலமும், மதிப்பீட்டின் முடிவின் போதும் பெறுமதி மிக்க பாடங்களை பெற்றுக் கொண்டது. குழுவின் தனிப்பட்ட உறுப்பினர்கள் விசேட அறிவு மற்றும் அதிகாரம் என்பன தொடர்பான பிரத்தியேகமான கோரிக்கைகளை முன்வைக்கக் கூடாது என்ற விடயத்தை அவர்கள்

> “பல்துறை சார்ந்த ஒரு அணியில் சட்டத்தரணிகளுடன் செயற்படுவதானது, மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் நடைமுறையில் எவ்வாறு இடம்பெற்று வருகின்றன என்பது குறித்த ஒரு விளக்கத்தை எனக்குப் பெற்றுத் தந்தது. அது சித்திரவதைக்கு உள்ளாகி இருப்பவர்களை நேர்காணல் நடத்தும் எமது அணுகுமுறைகள் மற்றும் ‘ஒரு வழக்கை கட்டியெழுப்புவதற்கு’ எத்தகைய தகவல்கள் தேவைப்படுகின்றன என்பது தொடர்பான பெருமளவுக்கு செயன்முறையை அடிப்படையாகக் கொண்ட எமது அணுகுமுறைக்கும் இடையிலான வேறுபாட்டை அறிந்து கொள்வதற்கு எனக்கு உதவியது.”
>
> - உள சமூக நிபுணத்துவத்துடன் கூடிய மதிப்பீட்டு குழுவைச் சேர்ந்த பெண் உறுப்பினர் ஒருவர்

வலியுறுத்தினார்கள். அதற்குப் பதிலாக நிபுணத்துவத்துடன் கூடிய விதத்தில் வெளிப்படையாக செயற்படுவதானது இந்த மதிப்பீட்டை வினைத்திறன்மிக்க விதத்திலும், உரிய காலத்திலும், வளங்களின் செயல்திறன்மிக்க பயன்பாட்டுடனும் அமுல் செய்வதற்கான முழுமையான ஒரு அணுகுமுறையை பெற்றுக் கொடுத்தது.



சமாதானமும், நகரத்தின் வசதிகளும் பேணி பாதுகாக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்து வட அலெப்போ ஜராபுலூஸ் நகரில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு பதாகை - நவம்பர் 2016

Photo credit: Enab Baladi

மேலும், அணியின் ஆறு உறுப்பினர்களில் ஐந்து பேர் பெண்களாக இருந்து வந்தார்கள்; SBF ஐ சேர்ந்த மருத்துவர் ஓர் ஆணாக இருந்து வந்தார். உறுப்பினர்களின் தெரிவை பொறுத்தவரையில் பால்நிலையிலும் பார்க்க தொழில்சார் நிபுணத்துவமே முதன்மையாக கவனத்தில் எடுக்கப்பட்ட விடயமாக இருந்து வந்த போதிலும், சிரிய நாட்டு பின்புலத்தில் பால்நிலை இயங்கியலை கவனத்தில் எடுக்க வேண்டிய தேவையை அணி கருத்தில் கொண்டிருந்தது. குறிப்பாக பெருமளவுக்கு சமய உணர்வை கொண்டவர்களாகவும், பாரம்பரியத்தை போற்றுபவர்களாகவும் இருந்து வரும் ஆண்களுடன் உரையாடும் பொழுது பின்பற்ற வேண்டிய பால்நிலை கூருணர்வுடன் கூடிய ஒழுக்க நெறிமுறைகள் குறித்து SBF அணிக்கு விளக்கமளித்திருந்தது. உதாரணமாக, ஆண்களுடன் உரையாடும் பொழுது, பெண்கள் தமது தலைகளை மூடும் விதத்தில் ஆடைகளை அணிந்திருந்தனர். அதே வேளையில், அணியின் ஆண் உறுப்பினர் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட பெண்களின் தேவைகள் குறித்து கூருணர்வுடன் செயற்பட்டதுடன், நேர்காணலின் போது அவர்களுடைய சௌகரிய நிலைமைகளை கருத்தில் கொண்டு தேவையான சந்தர்ப்பங்களில் அந்த இடத்திலிருந்து வெளியேறுவார். பால்நிலை கூருணர்வுடன் கூடிய அணுகுமுறை இந்த மதிப்பீட்டின் வினைத்திறனுக்கு வசதி செய்து கொடுத்தது. ஏனெனில்,இந்த அணி நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்களையும், பெண்களையும் பால்நிலை அடிப்படையிலான தீங்குகள் மற்றும் தேவைகள் என்பன குறித்து கலந்துரையாடக் கூடிய ஒரு சகஜ நிலைக்கு எடுத்து வரக் கூடிய ஆற்றலை கொண்டிருந்தது.

## உள்ளூர் நிபுணத்துவத்தை பெற்றுக் கொள்ளல் மற்றும் நிலைத்திருக்கக் கூடிய நிலையை மேம்படுத்துதல் என்பவற்றுக்கென கூட்டாக செயற்படுதல்

உள்ளூர் பங்கேற்பு மற்றும் உரித்து என்பவற்றுக்குகூட்டமைப்பு வழங்கி வரும் முக்கியத்துவத்துடன் இணைந்த விதத்தில், கூட்டமைப்பின் பங்காளர்கள், முறைசார்ந்த

விதத்தில் தமது பணிக்கு ஆதரவை பெற்றுக் கொள்ளும் பொருட்டு மூன்று உள்ளூர் பங்காளர்களுடன் இணைந்து செயற்பட்டனர். அந்நாட்டுக்குள் வழங்கப்பட்ட அவர்களுடைய பங்களிப்புக்கள் கருத்திட்டத்தின் வெற்றிக்கு காரணமாக இருந்து வந்தன. குறிப்பாக, மிகவும் பாரதூரமான பாதுகாப்புத் துறை சவால்கள் மற்றும் அணியின் வரையறுக்கப்பட்டநிதி வளங்கள், சிறிய அளவு மற்றும் சிரியாவிலோ அல்லது சிரிய அகதிகளை கொண்டிருந்த அயல் நாடுகளிலோ பிணைப்புக்கள் இல்லாத நிலை என்பவற்றின் பின்னணியில் இது மிக முக்கியமானதாக இருந்து வந்தது. அவர்களுடைய பணியை புரிந்து கொள்வதற்கும், கருத்திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் தொடர்பாக அவர்களுடைய உள்ளீடுகளை பெற்றுக் கொள்வதற்கும் என அணி ஒவ்வொரு உள்ளூர் பங்காளருடனும் தனிப்பட்ட சந்திப்புக்களை நடத்தியது. இச்சந்திப்புக்களின் போது சிரிய சிரியாவின் சிவில் சமூகத்தின் தேவைகள் மற்றும் சவால்கள் குறித்தும், அதே போல உள்ளூர் ஆற்றல் மற்றும் தலையீட்டு உத்திகள் என்பன குறித்தும் கூட்டமைப்பின் பங்காளர்கள் கலந்துரையாடினார்கள். இது உள்ளூர் பங்காளர்களின் நிபுணத்துவத்தை ஊர்ஜிதம் செய்வதற்கும், அவர்களுடைய குரல்கள் செவிமடுக்கப்படுவதற்கும் உதவியது. அதாவது, பொருத்தமான மற்றும் நிலைத்து நிற்கக் கூடிய தலையீடுகளில் ஒரு முக்கிய கூறாக இது இருந்து வந்தது. மேலும், இத்தகைய சந்திப்புக்கள் கூட்டமைப்பின் பங்காளர்களுக்கும், உள்ளூர் பங்காளர்களுக்குமிடையிலான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட நிறுவன ரீதியான ஒரு உறவுமுறையையும் கட்டியெழுப்பியது. இது கூட்டமைப்புடன் உள்ளூர் பங்காளர்கள் மேற்கொள்ளும் முதலாவது தொடர்பாக இருந்து வந்த நிலையில் மிக முக்கியமானதாக காணப்பட்டது.

கருத்திட்டம் முழுவதிலும் சிரியா தொடர்பான ஆலோசகராகவும், தொழில்நுட்ப நிபுணராகவும் செயற்படுவதற்கென ஒவ்வொரு உள்ளூர் பங்காளர் அமைப்பும் ஊழியர் அணியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரை நியமனஞ் செய்திருந்தது. இந்த நிபுணர்கள் திட்டமிடல் கட்டத்தின் போது இரு வாரங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட்ட சந்திப்புக்களில் பங்கேற்றதுடன், மதிப்பீட்டின் செயற்பரப்பை வரையறை செய்து கொள்வதற்கு பெருமளவுக்கு உதவினார்கள். கூட்டமைப்பின் பங்காளர்கள் தமது கருத்துக்களை அணியின் அணுகுமுறைக்குள் எடுத்து வந்ததுடன், வடிவமைப்பு கட்டத்திலிருந்து ஆக்கபூர்வமான ஒரு கூட்டுச் செயற்பாட்டுக்கான இயலுமையை பெற்றுக் கொடுத்தார்கள். மேலும், உள்ளூர் பங்காளர்களின் கூட்டுச் செயற்பாடு, கூட்டமைப்பின் இலக்கு நிறுவனங்களை அணுகுவதற்கான அவர்களுடைய நிபுணத்துவத்தை அவர்கள் வளர்த்துக் கொள்வதனையும் உறுதிப்படுத்தியது. அது மதிப்பீட்டு வெளியீடுகளின் தாக்கத்தை அநேகமாக அதிகரித்துக் கொண்டிருக்க முடியும். அமுலாக்கல் உத்திகளின் எண்ணக்கருக்களை உருவாக்குவதில் உள்ளூர் பங்காளர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. ஏனெனில், அவர்கள் மக்களின் உள்ளார்ந்த தேவைகளையும் உள்ளடக்கிய விதத்தில் பின்புலம் சார்ந்த அறிவைக் கொண்டிருந்தார்கள். அதன் பிரகாரம், கருத்திட்டத்தின் திட்டமிடல் கட்டங்கள் செயல்திறனுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கள ஆதரவு தொடர்பான கூட்டமைப்பின் தேவை ஒருங்கிணைக்கப்பட்டிருந்தமையும், உள்ளூர் பங்காளர்களின் நிபுணத்துவமும் இதற்கான காரணமாகும்.

### தேவைகளை மதிப்பிடுவதற்கென உள்ளூர் அமைப்புக்களுடன் கூட்டாக இணைந்து செயற்படுதல்

உள்ளூர் பங்காளர்களில் பலர் சிரியாவின் ஆயுத மோதலில் பாதிக்கப்பட்டவர்களாகவும், அதிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களாகவும் இருந்து வரும் காரணத்தினால் அங்கு நிலவும் பின்புலம் குறித்த ஆழமான ஒரு தெளிவினை அவர்கள் கொண்டுள்ளார்கள். நிலைமை குறித்த அவர்களுடைய தெளிவான அறிவு மற்றும் உடனடியான, நம்பகமான நடப்புத் தகவல்களை அணுகக் கூடிய அவர்களுடைய வாய்ப்பு என்பன அவர்களை பெறுமதிமிக்க பின்புலம் சார்ந்த நிபுணர்களாக ஆக்கியுள்ளன. மேலும், தீவிரமான விதத்தில் இடம்பெற்று வரும் மோதல் மற்றும் சிரியாவுக்கு வெளியில் நிலவி வரும் உயர் பாதுகாப்புச் சூழல் என்பவற்றை தாண்டிச் செல்லக் கூடிய அவர்களுடைய ஆற்றல், ஏனைய வழிகளில் தொடர்பு கொண்டு, நேர்காணலுக்கு உட்படுத்துவது சிரமமாக இருந்து வரக் கூடிய சமூகங்கள், பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் தப்பிப் பிழைத்தவர்கள் ஆகியோரை இந்த அணி அணுகுவதற்கான வாய்ப்பினை வழங்கியது. கூட்டமைப்பின் பங்காளர்களுக்கு ஆதரவளிக்கக் கூடிய உள்ளூர் பங்காளர்களின் ஆற்றல் கருத்திட்டத்தின் வெற்றிக்கு இன்றியமையாததாக இருந்து வந்ததுடன், தாக்க மதிப்பீடுகளின் வினைத்திறனை விருத்தி செய்வதற்கென உள்ளூர் பங்காளர்களுடன் மிகவும் நெருக்கமான விதத்தில் கூட்டாக செயற்பட்டு வருவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டியது. உதாரணமாக, துருக்கி மற்றும் ஜோர்டான்

ஆகிய நாடுகளில் SBF நேரடியாக பொது வசதிகள் ஆதரவினை வழங்கியது; அதே வேளையில், அணி நேர காலத்துடன் வேண்டுகோள்களை விடுத்திருந்ததுடன், நேர்காணல்களை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளும் விடயத்தில்SBF நாளாந்தம் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், உரைபெயர்ப்பாளர்களையும் ஏற்பாடு செய்திருந்தது.மேலும், தேவைப்படும் ஆவணங்களின் அறபு மொழிப்பெயர்ப்புக்களை அது பெற்றுக் கொண்டிருந்தது. அது தவிர, காசியன்டெப்பில் செயற்பட்டு வரும் SBF அணியின் ஒரு மூத்த உறுப்பினர். துருக்கியில் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த அனைத்து நேர்காணல்களையும் அணி மேற்கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு நாளாந்தம் அவர்களுடன் இணைந்து சென்றார்.SBF ஊழியர் அணியின் உறுப்பினர் துருக்கியிலிருந்து ஜோர்தானுக்கு பயணம் செய்ய முடியாதிருந்த காரணத்தினால் அத்தகைய ஆதரவை வழங்கும் பொருட்டு அவர் ஜோர்டானில் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். மதிப்பீட்டு குழு அம்மான் நகரை வந்தடைந்த பொழுது. அந்நாட்டை சேர்ந்த இரண்டு SBF ஊழியர்கள் அவர்களுடன் இணைந்து கொண்டார்கள்.



2014 ஆம் ஆண்டில் மனச்சாட்சி மையங்களின் சர்வதேச கூட்டணியின் சிரிய நாட்டின் உறுப்பினர்கள் - எனாட் பலாடி மற்றும் மனித உரிமைகள் ஆய்வுக்கான டமஸ்கஸ் நிலையத்தின் உறுப்பினர்கள் - சிரிய அகதிகளிடமிருந்தும், இடம்பெயர்ந்திருந்த மக்களிடமிருந்தும் வாய்மொழி மூல வரலாறுகளை சேகரித்தார்கள். சிரிய மோதலின் பல்வேறு தரப்புக்களைச் சேர்ந்த சிவிலியன்களின் கதைகள் துல்லியமான விதத்தில் முன்வைக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கென அவர்கள் இச்செயற்பாட்டை முன்னெடுத்தார்கள். 2015 ஆம் ஆண்டில் மனச்சாட்சி மையங்களுக்கான சர்வதேச கூட்டணி இந்த தனிப்பட்ட விவரணங்களுக்கு மேலும் விரிவான விளக்கங்களையும், ஆழ அகலத்தையும் வழங்கும் பொருட்டு நேபாள அமெரிக்க கலைஞர் அனுஜ் சிரேஷ்தா வுடன் சேர்ந்து செயற்பட்டது.

பாதுகாப்பு கரிசனைகளுக்கு மத்தியிலும், உள்நாட்டு பங்காளர்களை கொண்டிருந்தமை காரணமாக தேவை மதிப்பீட்டினை மிகவும் வினைத்திறன்மிக்க விதத்தில் மேற்கொள்வதற்கான அணியின் ஆற்றல் விருத்தியடைந்திருந்தது. உதாரணமாக, அதிகரித்த அளவிலான தீவிரவாத குழுக்களின் வன்முறை தாக்குதல்கள் மற்றும் சிரிய எல்லைப் பகுதியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் என்பவற்றின் காரணமாக குறிப்பாக, காசியன்டெக் மற்றும் ஹடே மாகாணம் ஆகிய பிரதேசங்களில் நிலவி வந்த பாதுகாப்புப் பிரச்சினை குறித்து அணி நன்கு அறிந்திருந்தது. அதன் பின்விளைவாக துருக்கி மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளில் முழு நேர பாதுகாப்பு ஊழியர்களின் சேவைகளப் பெற்றுக் கொள்ளுமாறு நிதியுதவி வழங்குபவர்கள் கருத்திட்டத்திற்கு ஆலோசனை வழங்கியிருந்தார்கள். எவ்வாறிருப்பினும், உள்ளூர் பங்காளர்கள் அவ்விதம் பாதுகாப்பு ஊழியர்களை சேவைக்கு அமர்த்தும் விடயத்திற்கு எதிராக பரிந்துரைகளை செய்திருந்ததுடன், அதற்குப் பதிலாக உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்கள். பாதுகாப்பு ஆபத்துக்களை தணித்துக் கொள்வதற்கு தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் உத்திகள் என்பவற்றையும் அவர்கள் வழங்கியிருந்தார்கள். அவர்களுடைய உள்ளீடுகள் மற்றும் அவர்களுடைய நம்பிக்கையை பெற்றுக் கொள்வதற்கான விருப்பு என்பவற்றின் அடிப்படையில், பாதுகாப்பு ஊழியர்களை சேவைக்கு அமர்த்துவதில்லை என அணி முடிவு செய்தது; அதற்குப் பதிலாக அபாய மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கென அணி உள்ளூர் பங்காளர்களின் ஒருங்கிணைப்புடன் செயற்பட்டதுடன், அவர்களுடைய வழிகாட்டுதல்களுக்கும் இணங்கியொழுகியது. உள்ளூர் அமைப்புக்களின் கண்காணிப்பு மற்றும் பிரசன்னம் என்பன மதிப்பீட்டை பாதுகாப்பான விதத்தில் பூர்த்தி செய்வதற்கு இடமளித்தன என அணி நம்புகின்றது.

### உள்ளூர் பங்காளர்களின் எதிர்பார்ப்புக்களையும், பங்கேற்பினையும் நிர்வகித்தல்

ஆய்வாளர்கள் என்ற முறையில் தமது வகி பங்கு குறித்து அணி தெளிவான ஒரு கருத்தைக் கொண்டிருந்ததுடன், அந்த வகையில், தேவை மதிப்பீட்டுக்கு அப்பால் எத்தகைய உத்தரவாதங்களையும் வழங்க முடியாத குறுங்கால ஆலோசகர்களாக அவர்கள் தம்மை கருதினார்கள். அணியின் உறுப்பினர்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் மேலதிக கரிசனைகளை இயல்பாகவே கருத்தில் கொள்ள வேண்டிய தேவையை கொண்டிருந்த செயற்பாட்டாளர் என்ற முறையில் இது மிகவும் நிர்ணயகரமான, கடினமான ஒரு விடயமாக இருந்து வந்தது. மேலும், கூட்டமைப்பு பங்காளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மதிப்பீட்டுகளுக்கு அப்பால் தம்மால் ஆதரவுகளை வழங்க முடியாத நிலை, உள்ளூர் பங்காளர்களுடனான தமது கூட்டுச் செயற்பாடுகள் மீது ஒரு தாக்கத்தை எடுத்து வர முடியுமென கவலை கொண்டிருந்தனர். பொய் வாக்குறுதிகளை வழங்காது, துல்லியமான விதத்தில் மக்களின் எதிர்பார்ப்புக்களை சமாளிக்க வேண்டிய தேவை குறித்தும் அவர்கள் திட்டவட்டமாக அறிந்திருந்தார்கள். ஏனைய அமைப்புக்கள் முன்னர் இவ்விதம் பொய் வாக்குறுதிகளை வழங்கியிருந்தன. ஆய்வாளர், செயற்பாட்டாளர் என்ற ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் வகி பங்குகளுக்கூடாக செல்ல வேண்டியிருந்த சிரமங்களுக்கு மத்தியிலும் கூட, இந்த அணியின் உறுப்பினர்கள் ஆய்வாளர்கள் என்ற விதத்தில் முழுமையாக தமது கவனத்தைச் செலுத்தக் கூடியவர்களாக இருந்து வந்தார்கள். எவ்வாறிருப்பினும், அமர்வுகளின்

முடிவின் போது, தாம் கரிசனை செலுத்தி வரும் விடயங்கள் தொடர்பாக நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் முன்னோக்கிச் செல்வதற்கு உதவும் பொருட்டு தொடர்புகள் மற்றும் தகவல்கள் என்பவற்றை வழங்குவதன் மூலம் அவர்கள் தம்மை பெருமளவுக்கு செயற்பாட்டாளர்களாகவே காட்டிக் கொண்டார்கள். அதிர்ஷ்டவசமாக உள்ளூர் பங்காளர்கள் அணியின் பணிப்பாணையை புரிந்து கொண்டிருந்ததுடன், மதிப்பீட்டில் இனங்காணப்பட்டிருக்கும் தேவைகளை கவனத்தில் எடுக்கும் பொருட்டு தலையீடுகளை நிலையாக வைத்திருப்பதற்கு தேவையான வழிமுறைகளை வகுப்பதில் அக்கறை கொண்டிருந்தனர். சர்வதேச பங்கேற்பு இல்லாத நிலையிலும், குறைந்த அளவிலான நிதியளிப்புடனும் இந்நிலைமை இடம்பெற்று வந்தது. உதாரணமாக, தமது கருத்திட்டத்திற்கு பின்னரான செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும், தற்போதைய நிகழ்ச்சித்திட்டங்களை பெண்கள், பிள்ளைகள் மற்றும் சிரியாவுக்குள்ளே அல்லது சிரியாவுக்கு வெளியில் வாழ்ந்து வந்த பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சித்திரவதையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் ஆகியோரை உள்வாங்கிக் கொள்வதற்கு இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்து வந்தார்கள்.மனநலம் மற்றும் உள சமூக சேவைகள் குறிப்பிட்ட குழுக்களின் திட்டவட்டமான சேவைகளுக்கு பொருந்தக் கூடிய விதத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்ற விடயத்தையும் அவை பிள்ளைகளுக்கான விளையாட்டு மூலமான சிகிச்சை அல்லது குழுக்களுக்கான சிகிச்சை அமர்வுகள் என்பற்றுக்கு அப்பால் விடயங்களை உள்ளடக்க வேண்டுமென்ற விடயத்தையும் உள்ளூர் பங்காளர்கள் அங்கீகரித்திருந்தார்கள்.



வன்முறை மற்றும் நல்லிணக்க நிலையம் மற்றும் சிரியாவுக்கான ஒளிமயமான எதிர்காலம் SBF அமைப்பின் அம்மான் குழு.

Photo credit: The Centre for the Study of Violence and Reconciliation

## பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்ந்து வருபவர்கள் மருத்துவ மற்றும் உள சமூக தேவைகளை கவனத்தில் எடுத்தல்

தேவை மதிப்பீட்டில் பங்கேற்ற நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட நபர்கள் தற்போது நிலவி வரும் சமூக நிந்தனை நிலை ஆட்கள் மனநல மற்றும் உள சமூக சேவைகளை பெற்றுக் கொள்வதிலிருந்தும் அவர்களை தடுத்து வருவதாக அல்லது தாமதப்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்கள். உளவியல் சிகிச்சையையும் உள்ளடக்கிய மனநல மற்றும் உள சமூக சேவைகள் போருக்கு முற்பட்ட சிரியாவிலும் கூட சிறந்த விதத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. என எழுத்தாக்கங்களும் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட ஏனைய தரப்புக்களும் குறிப்பிட்டிருந்தன; உதாரணமாக, உளவியல் பெருமளவுக்கு மனநலம் சார்ந்த பாதிப்புக்கள்

> "முற்றுகையிடப்பட்ட பிரதேசங்களை சேர்ந்த மிகவும் பலவீனமான மக்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு சர்வதேச அரசு சாரா அமைப்புக்களும், கொடை வழங்குனர்களும் எமக்கு உதவ வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம். அந்த தரப்புக்கள் இப்பொழுது இதனைச் செய்து வரவில்லை. அரசியல் தடைகள், நாம் சேவைகளை வழங்காதிருப்பதற்கான ஒரு காரணமாக இருந்து வர முடியாது."
>
> - சிரியாவைச் சேர்ந்த ஆண் NGO பணியாளர்

தொடர்பாக கவனம் செலுத்தியிருந்ததுடன், அது சிகிச்சையளிக்கும் அணுகுமுறைகள் மற்றும் உள சிகிச்சை தலையீடுகள் என்பவற்றையே பயன்படுத்தி வந்துள்ளது[5]. மற்றொரு உதாரணம் சிரியாவின் உளவியலாளர்கள் எத்தகைய நடைமுறை மற்றும் சிகிச்சைப் பயிற்சிகள் இல்லாத விதத்தில் பட்டம் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதாகும். எனவே, அத்தகைய தொழில் அனுபவங்கள் தேவைப்படும் நாடுகளில் தமக்குத் தேவையான உரிமங்களை பெற்றுக் கொள்வதில் அவர்கள் சிரமங்களை பெற்றுக் கொண்டு வருகின்றார்கள்.

51-52 பக்கங்களின் ஓடியோ இல்லை

பொதுவாக, இந்தத் தேவைகள் மதிப்பீடு சிறிய நிறுவனங்களுக்கு மத்தியில் ஒருங்கிணைப்பில் காணப்படும் இடைவெளிகளை கண்டறிந்துள்ளது; சிரிய அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களுக்கிடையிலும் ஒருங்கிணைப்பு காணப்படவில்லை. சிரிய நிறுவனங்கள் தமது வேலைகளின் செயல் பரப்பு, செயற்பாடுகள் அல்லது திட்டங்கள் என்பன குறித்து ஒருவருடன் ஒருவர் ஒழுங்கான அடிப்படையில் தொடர்பாடல்களை மேற்கொள்வதில்லை என்ற விடயத்தை இந்த மதிப்பீடு கண்டறிந்திருந்தது. மேலும் தமது சம்பந்தப்பட்ட துறைக்கு வெளியில் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குவது குறித்த அறிவினையும் அந்த நிறுவனங்கள் போதியளவில் கொண்டிருக்கவில்லை. அது தவிர,நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குவதற்கு அல்லது நிதி வளங்களை நேரடியாக அணுகுவதற்கு அவசியமான முறைசார்ந்த வெளிகளை சிரிய அமைப்புக்களினால் அரிதாகவே அணுக முடிகின்றது. சர்வதேச அமைப்புக்கள் உள்ளூர் முன்முயற்சிகளில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதற்கு அல்லது அவற்றுக்கு ஆதரவளிப்பதற்கு பதிலாக, சிரியாவில் தற்போது அமுல் செய்யப்பட்டு வரும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் நேரடியாக போட்டியிடும் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கியுள்ளன. மேலும், சர்வதேச அமைப்புக்கள் தமக்கு மத்தியில் முயற்சிகளை ஒருங்கிணைத்திருக்கவில்லை; அல்லது திட்டவட்டமாக குறிப்பிட்ட துறைகளுக்குள் உள்ளூர் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ளவில்லை. உதாரணமாக, சர்வதேச மனித நேய உதவி மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய துறைகள் தனிமைப்படுத்தப்பட்ட, முற்றுகையிடப்பட்டிருக்கும் சமூகங்களுடன் தொடர்புகளை பராமரித்து வரும் உள்ளூர் அமைப்புக்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டிருக்கவில்லை. இதன் விளைவாக, எளிதில் அணுகக் கூடிய நகரப் பிரதேசங்களில் பொருத்தமற்ற சேவைகள் இடம்பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. மிக மோசமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மனநலம் மற்றும் உள சமூக சேவைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் இதன் விளைவாக பாதிக்கப்பட்டுள்ளன. இடைவெளிகள் மற்றும் சவால்கள் என்பவற்றை இனங்கண்டு கொள்வது தேவைகள் மதிப்பீட்டின் மிக முக்கியமான பங்களிப்பொன்றாக இருந்து வந்தது. ஏனெனில், அது சேவைகள் நிலைமையைமிகச் சிறந்த விதத்தில் புரிந்து கொள்வதற்கு பாதிக்கப்பட்ட குடித்தொகையினருக்கு பொருத்தமான தீர்வுகளை உருவாக்குவதற்கும்இந்த அணிக்கு உதவியுள்ளது.

ஆட்களை இடங்களுக்கு அனுப்பி வைக்கும் வலையமைப்பு, அமைப்புக்கள் நிபுணத்துவ ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கென ஒன்றுடன் ஒன்று மிக விரைவில் தொடர்பு கொள்ளக் கூடிய இயலுமையை ஏற்படுத்துவதன் மூலம் வளங்களின் வினைத்திறன் மிக்க பாவனைக்கு பங்களிப்புச் செய்ய முடியுமென கூட்டமைப்பு நம்புகின்றது. மேலும், இந்த வலையமைப்பு சிரியாவின் சேவை விநியோகத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்திசைவு என்பவற்றையும் மனித உரிமைகளையும் விருத்தி செய்வதும் அவசியமாகும்.

## போதிய நேரம் மற்றும் நிதியளிப்பு என்பவற்றை ஒதுக்குதல்

கருத்திட்ட பங்காளர்களின் எண்ணிக்கை மற்றும் முன்னோடி தேவைகள் மதிப்பீடு என்ற முறையில் கருத்திட்டத்தின் இயல்பு என்பவற்றின் பின்னணியில் நிதியளிப்பு வரையறுக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வந்துள்ளது. கருத்திட்டம் அதன் குறிக்கோள்களை வெற்றிகரமான விதத்தில் நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு பன்முக பங்காளர்கள் மீது தங்கியிருந்து வந்தது. இது மனித உரிமை ஆவணப்படுத்தல் மற்றும் உள சமூக ஆதரவு, அதே போல மிக ஆழமான பின்புலம் சார்ந்த அறிவு என்பன தொடர்பான பல்துறை சார் நிபுணத்துவத்தை அவசியப்படுத்தியது. கணிசமான அளவிலான பின்புலம் சார்ந்த நிபுணத்துவத்தை எடுத்து வந்த உள்ளூர் பங்காளர்களை பொறுத்தவரையில், ஆலோசனை கட்டணம் என்ற வடிவில் வரவுசெலவுத் திட்டம் நிதியளிப்பினை ஒதுக்கியது. எவ்வாறிருப்பினும், உள்ளூர் பங்காளர்கள் தேவைகள் மதிப்பீட்டில் இனங்காணப்பட்டிருக்கும் இடைவெளிகளை நிரப்புவதற்கென மதிப்பீட்டுக்குப் பின்னரான தலையீடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு மேலும் அதிகளவிலான நிதியளிப்பு தேவையாக இருந்து வருகின்றது.

தீவிரமான விதத்தில் மோதல்கள் இடம்பெற்று வரும் பிரதேசங்களிலும், பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் அகதி சமூகங்களுடனும் பணியாற்றுவது பிரயாணம் செய்வதற்கான மேலதிக நேரத்தை அவசியப்படுத்தியது. ஜோர்தானை பொறுத்தவரையில் இந்த அணி போதியளவிலான நேரத்தை கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஸாத்தாரி அகதிகள் முகாம் போன்ற இடங்களில் அம்மான் நகருக்கு வெளியில் வசித்து வரும் சிரிய மக்களுடன் உரையாடுவதற்கான இயலுமையை அது கொண்டிருக்கவில்லை. இந்த அகதிகள் முகாம் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் 80,000 க்கும் மேற்பட்ட அகதிகளை கொண்டிருந்தது. நபர்களுடன் நேரடியாக மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகளின் முடிவுகள் மட்டுமே ஸ்தான்புல், காஸியன்டெப், துருக்கி ஹடே மாகாணம் மற்றும் ஜோர்தானில் அம்மான் ஆகிய இடங்களில் வசித்து வரும் சிரிய மக்களின் அனுபவங்களை கண்டறிந்து கொள்வதற்கு உதவ முடியுமென்ற விடயத்தை பங்காளர்கள் அறிந்திருந்தமையினால் அவர்கள் ஸ்கைப் மூலம் நடத்தப்பட்ட நேர்காணல்களை தமது களப் பணிக்கு குறைநிரப்பு செய்தார்கள். எவ்வாறிருப்பினும், பகுப்பாய்வு மதிப்பீடு, அகதிகள் எங்கு வாழ்ந்து வந்தாலும் அவர்களுடைய பொதுவான பல தேவைகளை பதிவு செய்திருந்தது.

இறுதியில், அணியின் உறுப்பினர்கள் விளக்கமளிப்பதற்கான தமது ஆற்றலை பலப்படுத்திக் கொள்ளல் இரண்டாம் நிலை கடும் மன அதிர்ச்சியை தடுத்து, அதை கவனத்தில் எடுத்தல் மற்றும் நேர்காணல்களின் போது துயரத்தை அடக்கிக் கொள்ளும் திறன்களை பயன்படுத்திக் கொள்ளல் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கான போதிய கால அவகாசத்தை கொண்டிருக்கவில்லை[6]. அவர்களுடைய முழுமையான நேர்காணல் அட்டவணை மற்றும் முறைப்படுத்தி, அவற்றின் தகவல்களை பிரித்து வேறாக்குவதற்குக் கிடைத்த கால அவகாசம் என்பன காரணமாக அணியினர் கடும் மன அதிர்ச்சிக்குப் பின்னரான மன அழுத்த ஒழுங்கீனம் (PTSD), அதீத களைப்பு மற்றும் மன விரக்தி என்பவற்றின் பல்வேறு மட்டங்களை மதிப்பீட்டின் முடிவின் போது, அனுபவித்திருந்தார்கள்.

> - "ஒவ்வொரு குண்டு வெடிப்பு நிகழும் சந்தர்ப்பத்திலும் என்னால் செய்திகளையும் அல்லது சமூக வலையத்தள வீடியோக்களையோ பார்க்க முடியவில்லை. நான் சந்திக்கும் ஆண்கள், பெண்கள் மற்றும் பிள்ளைகளின் முகங்களை நான் பார்த்தேன்."
>
> - மனித உரிமைகள் மற்றும் சட்ட நிபுணத்துவத்துடன் கூடிய மதிப்பீட்டு அணியின் பெண் உறுப்பினர்

தமது சொந்த உள சமூக தேவைகள் குறித்து குறிப்பாக, களப் பணியின் போதும், களப் பணியின் பின்னரும் அணியின் உறுப்பினர்கள் அறிந்திருப்பது அவசியமாகும். அதன் பிரகாரம், அவர்களுக்கு நேர்காணலுக்குப் பின்னரான உள சமூக ஆதரவினை வழங்குவதும் அவசியமாகும். தமது நாளாந்த வேலையின் போது, முதன்மை அல்லது இரண்டாம் நிலை கடும் மன அதிர்ச்சியை தொடர்ச்சியாக அனுபவித்து வரக் கூடிய உள்ளூர் பங்காளர்களை பொறுத்தவரையில் இது மிக முக்கியமாக தேவைப்படுகின்றது. ஒரு சில உள்ளூர் பங்காளர்கள் தகவல்களை விளக்கிக் கூறுவதற்கு அவர்களுக்கு மேலும் அதிகளவில் நேரம் ஒதுக்கப்பட்டிருந்தால், அதன் மூலம் பயனடைந்திருப்பார்கள் என்பது தெளிவாகும். ஒட்டுமொத்தமாக உள சமூக ஆதரவு இல்லாத நிலை தனிப்பட்ட நபர்களை சுகப்படுத்தும் விடயத்தில் எதிர்மறையான விளைவுகளை எடுத்துவர முடியும். அந்த உள சமூக ஆதரவு நிலைத்திருக்கக் கூடிய நிலைமாறு கால நீதி தலையீடுகளில் ஒரு கூறாக இருந்து வருகின்றது.

# கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் பரிந்துரைகள்

**தேவை மதிப்பீடுகளை வடிவமைத்து, அமுல் செய்வதில் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட பல்துறை சார் அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.** இந்த அணி வேறுபட்ட தொழிசார் பின்னணிகளைக் கொண்டிந்த உறுப்பினர்களைக் கொண்டிருந்தது: ஒரு சமூகப் பணியாளர், ஒரு சமூக விஞ்ஞானி, ஒரு மருத்துவர், இரு உளவியலாளர்கள், மனித உரிமைகள் சட்டத்தரணிகள் மூவர் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட பல்துறை சார் அணுகுமுறை மற்றும் பல்வேறு பின்னணிகள் ஒருங்கிணைக்கப்பட்டமை என்பன தகவல் பரிமாற்றத்தின் முக்கியத்துவத்தை மதித்துப் போற்றுவதற்கும், பிரச்சினை தொடர்பாக பல்வேறு கண்ணோட்டங்களை பிரயோகிப்பதற்கும் அணியின் உறுப்பினர்களுக்கு இயலுமையை வழங்கியிருந்தன. இது பெருமளவுக்கு முழுமையான சிந்தனையை மேற்கொள்வதற்கும், தேவைகள் மதிப்பீட்டினை அமுல் செய்யும் சந்தர்ப்பத்தில் முழுமையாக சமூகத்துடன் ஈடுபடுவதற்கும் அணிக்கு வாய்ப்பினை வழங்கியது. நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் மற்றும் நேர்காணல் நடத்துபவர்கள் ஆகிய இரு தரப்பினர் தொடர்பாகவும் ஒன்றுடன் சம்பந்தப்பட்ட பல்துறை சார் அணுகுமுறையின் பயன்களின் பின்னணியில் தேவைகள் மதிப்பீட்டு கருத்திட்டங்கள் இந்த முறைமையியலை பயன்படுத்தும் விடயத்தை கருத்தில் எடுத்தல் வேண்டும்.

**தேவைகள் மதிப்பீட்டு கருத்திட்டங்கள் உள்ளூர் பங்காளர்களையும், அபிவிருத்தி தொடக்கம் அமுலாக்கம் வரையிலான அனைத்து மட்டங்களிலும் அவர்களுடைய நிபுணத்துவத்தையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.** கூட்டமைப்பு அதன் மூன்று உள்ளூர் பங்காளர்களினதும் குறிப்பாக SBF அமைப்பின் பின்புலம் சார்ந்த நிபுணத்துவம் மற்றும் ஆதரவு என்பவற்றிலிருந்து பெருமளவுக்கு பயனடைந்தது. நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட உறவுகளை கட்டியெழுப்புவதன் மூலமும் வடிவமைப்புக் கட்டம் தொடக்கம் உள்ளூர் பங்காளர்களிடம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட உறவுகளை கட்டியெழுப்பிக் கொண்டதன் மூலமும், அவர்களுடைய பங்கேற்பை பெற்றுக்கொண்டதன் மூலமும் கூட்டமைப்பு கருத்திட்டத்திற்குள் உள்ளூர் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றலைக் கொண்டிருந்தது. மேலும், அதற்கூடாக பல்வேறு சமூகங்களை அணுகும் வாய்ப்பும், கள நிலைமைகளில் காணப்படும் சவால்களுக்கு விரைவாக எதிர்வினையாற்றக்கூடிய ஆற்றலும் கிடைத்திருந்தது. சர்வதேச அமைப்புக்கள் உள்ளூர் பங்காளர்களுடன் கூட்டாக செயற்பட்டு நிலைமாறு கால நீதி தலையீடுகளில் வெற்றி மற்றும் நிலைத்திருக்கக்கூடிய தன்மை என்பவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு அவர்களுடைய நிபுணத்துவம் மற்றும் தொடர்புகள் என்பவற்றை பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

**தேவைகள் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கென ஆய்வாளர்களுக்கு போதிய காலம் மற்றும் நிதிப்படுத்தல் என்பன அவசியமாகும்.** கூட்டமைப்பு உலகெங்கிலும் தற்பொழுது இடம்பெற்று வரும் நெருக்கடிகள் தொடர்பாக உடனடியாக, உரிய நேரத்திலான தகவல்களை வழங்குவதன் மூலம் துரித எதிர்வினை அலகு ஒன்றாக செயற்பட்டு வருகின்றது. அந்த நிலையில், அது தலையீடுகளை அபிவிருத்தி செய்வதற்கென அல்லது குறிப்பிட்ட சமூகங்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் விதத்தில் நிதிகளை திசை திருப்புவதற்கென DRL அமைப்புக்கு உதவுவதற்கென தகவல்களை பயன்படுத்திக்கொள்கின்றது. உடனடியாக எதிர்வினையாற்றக்கூடிய ஆற்றல் மிகவும் பெறுமதியானதாக இருந்துவரும் அதே வேளையில், இந்த வேகம் மிகவும் கவனமான விதத்தில் கருத்திட்டத்தை வடிவமைத்தல் மற்றும் அமுலாக்கல் என்பவற்றுக்கான தேவையுடன் சமவிகிதத்தில் பொருந்திச் செல்வது அவசியமாகும். எதிர்வினைகள் முழுமையானதாக இல்லாதிருப்பின், அவை பாதிக்கப்பட்ட சமூகங்களின் தேவைகள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றை முழுமையான விதத்தில் நிறைவு செய்து வைக்கமாட்டாது. நிலைமாறு கால நீதி தலையீடுகளின் வெற்றிக்கு முழுமையான எதிர்வினைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

**பல்வேறு நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்யும் அணியின் உறுப்பினர்கள் தமது வகிபங்குகளை புரிந்து கொண்டு, தமது வகிபங்குகள் மற்றும் தாம் பகிர்ந்துகொள்ளும் குறிக்கோள்கள் என்பவற்றை தேவைகள் மதிப்பீட்டுக்கு முன்னர் புரிந்து கொள்வது அவசியமாகும்.** குழு உறுப்பினர்கள் மதிப்பீட்டு செயன்முறை, கருவிகள் மற்றும் பொருட்கள் என்பன குறித்து கலந்துரையாடுவதற்கென ஒழுங்கான அடிப்படையில் ஸ்கைப் அழைப்புக்களை மேற்கொண்டிருந்த போதிலும், காஸியன்டெப் பிரதேசத்தில் மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்ட போது அவர்கள் முதல் தடவையாக சந்தித்தார்கள். எவ்வாறிருப்பினும், ஒரு மீள் சிந்தனையின் பின்னர், ஒவ்வொரு நிறுவனத்தினதும் வகிபங்கு, பொறுப்புக்கள் மற்றும் பகிர்ந்து கொள்ளும் குறிக்கோள்கள் என்பன குறித்த ஆழமான கலந்துரையாடல்கள். குறைந்தது ஒரு நாள் முழுவதும் அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டுமென அணி நம்புகின்றது. தனிநபர் சந்திப்பின் போது இந்த அணி கருத்திட்டத்தின் குறிக்கோள்களையும், அதேவேளையில் அதன் மூலம் விநியோகிக்கப்படவிருக்கும் விடயங்களையும் மீளாய்வு செய்து, கூட்டு தேவைகள் மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட எண்ணக்கருக்கள் மற்றும் செயன்முறைகள் என்பன குறித்த ஒரு கருத்தொற்றுமையை எட்டுதல் வேண்டும்.

**தேவைகள் மதிப்பீட்டு கருத்திட்டங்கள் குறிப்பாக உள்ளூர் பங்காளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டிருக்கும் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் நபர்கள் ஆகியோரின் எதிர்பார்ப்புக்களை சமாளித்தல் வேண்டும்.** ஆராய்ச்சி நோக்கிலான மதிப்பீடுகளை மேற்கொள்வது குறிப்பாக செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் ஆகியோரை பொறுத்தவரையில் சவால் மிக்க ஒரு காரியமாக இருந்துவர முடியும். தேவைகள் மதிப்பீட்டுக்கு அப்பால் நேர்காணலுக்கு உட்படுத்தப்படும் நபர்களுக்கு தம்மால் உதவி வழங்க இயலாதிருக்கும் நிலையுடன் அணியின் உறுப்பினர்கள் போராட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம், நேர்காணலுக்கு உட்படுத்தப்படுவோரின் எதிர்பார்ப்புக்களையும் அவர்கள் சமாளிக்க வேண்டிய தேவை இருந்து வந்தது. மேலும், இந்த அணி உள்ளூர் பங்காளர்களை உள்ளடக்கியிருந்தமையினால் நிதியளிப்பு மற்றும் நிலைத்திருக்கக்கூடிய தன்மை என்பன குறித்த அவர்களுடைய கரிசனைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. உள்ளூர் வாசிகள் அல்லாதவர்கள் 'நாட்டிற்குள் வந்து நாட்டிலிருந்து பறந்து செல்லும்' கூறு ஒன்றுடன் தேவைகள் மதிப்பீட்டினை மேற்கொள்வதனால், உள்ளூர் பங்காளர்களும், நேர்காணலுக்கு உட்படுத்தப்படுபவர்களும் இந்த அணியின் நோக்கம் மற்றும் மதிப்பீடு என்பவற்றை புரிந்து கொள்வது மிக முக்கியமானதாகும்.

**தேவை மதிப்பீடுகள், முறைசார்ந்த நிலைமாறுகால நிதி வழிமுறைகள் இல்லாத சந்தர்ப்பங்களிலும் கூட, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோரின் உடனடி பின்புலம் சார்ந்த தேவைகளை இனங்காண்பதற்கு முயற்சித்தல் வேண்டும்.** சிரியா தேச மக்களின் உடனடித் தேவைகளை நிர்ணயித்து –அவற்றை நிறைவேற்றிவைப்பதற்கு ஆரம்பித்து வைப்பதற்கென - கூட்டமைப்பு இக்கருத்திட்டத்தை உருவாக்கியது. சிரியாவில் இடம்பெற்ற ஆயுதமோதல் சமாதானத்திற்கான எத்தகைய அறிகுறிகளும் இன்றி தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த நிலையில், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோர் தமக்குத் தேவையான அத்தியாவசியமான மனநல மற்றும் உளசமூக சேவைகள் , மருத்துவ மற்றும் சட்டத் தேவைகள் என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கு முறைசார்ந்த பொறிமுறைகள் உருவாக்கப்படும் வரையில் காத்திருக்க வேண்டுமென நிர்பந்திக்க முடியாது. தேவை மதிப்பீடுகள் மற்றும் கலந்தாலோசனைகள் என்பன பெண்கள், இளைஞர் யுவதிகள், வயோதிபர்கள் உடல் இயலாமையைக் கொண்டிருக்கும் நபர்கள், சிறுபான்மைக் குழுக்கள், இடம்பெயர்ந்த நபர்கள் மற்றும் அகதிகள் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் சம்பந்தப்பட்ட அனைத்து பங்கீடுபாட்டாளர்களையும் முழுமையாக உள்ளடக்குதல் வேண்டும். அது தவிர, இந்த மதிப்பீடுகள் தற்போதைய நிலையையும், பல்வேறு தேவைகளையும், திட்டவட்டமான நிலைமாறு கால நீதி செயன்முறைகள் அல்லது பொறிமுறைகள் என்பவற்றை குறித்துரைக்காமல் பிரதிபலித்துக்காட்டக் கூடியவையாக இருந்து வருதல் வேண்டும்.


**ஆட்களை அனுப்பிவைக்கும் முறைசார்ந்த இடங்களை கொண்ட வலயமைப்புக்கள் பல்வேறு சேவை வழங்குனர்களுக்கு மத்தியில் தொடர்பாடல், கூட்டுச் செயற்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு என்பவற்றை போஷித்து வளர்த்தல் வேண்டும்.** பல்வேறு சேவை

வழங்குனர்களுக்கு மத்தியில் போதியளவிலான ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடல் என்பன இடம்பெற்று வரவில்லை என்ற விடயத்தை தேவைகள் மதிப்பீடு எடுத்துக்காட்டியது. இந்த விடயத்தை கவனத்தில் எடுக்கும் பொருட்டு அனுப்பிவைக்கும் இடங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகள் மற்றும் வலயமைப்புக்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் விதித்துரைக்கப்படாத வழிகாட்டுதலை கூட்டமைப்பு வழங்கியது. சேவை விநியோகத்தின் செயற்திறன் மற்றும் ஒருங்கிணைப்பு என்பவற்றை அதிகரித்துக்கொள்ளும் பொருட்டு இந்த வழிகாட்டல் வழங்கப்பட்டிருந்தது. அது தவிர, அனுப்பிவைக்கப்படும் நிறுவனங்களின் வலயமைப்புக்கு ஊடாக மனித உரிமைகள் ஆவணப்படுத்துனர்கள் தகவல்களை சேகரிப்பதற்கென பாதிக்கப்பட்ட மற்றும் தப்பிப் பிழைத்து உயிர்வாழும் சிரிய மக்களை எளிதில் (தகவல் அறிந்த நிலையில் அவர்கள் வழங்கியிருக்கும் ஒப்புதலுடன்) அணுகக்கூடியதாக இருந்து வரும். அனுப்பி வைக்கப்படும் இடங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகள், நடைமுறைகள் மற்றும் வலமைப்புக்கள் என்பன பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்பவர்கள் ஆகியோர் தொடர்பான இரகசியத்தன்மையை மீறாத விதத்தில் நேரடிச் சேவை விநியோகம் மற்றும் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் ஆகியவற்றின் பெறுபேறுகளை உயர்த்த முடியும்.



சிரியா, மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியம் நெடுகிலும் அமைந்திருக்கும் சிறைக் கூடங்கள், சோதனைச் சாவடிகள் மற்றும் முன்னைய சித்திரவதைக் கூடங்கள் என்பன அழிக்கப்படக் கூடிய அல்லது சீரழிவை எதிர்கொள்ளக் கூடிய ஆபத்தை எதிர்கொண்டுள்ளன. இந்த அலையை தடுக்கும் பொருட்டு மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தைச் சேர்ந்த ஏழு நாடுகள் 2016 - 2017 இல் ஒன்று கூடி டிஜிட்டல் வரைபடமொன்றைத் தயாரித்தன. பிராந்தியத்தில் அமைந்திருக்கும் மனித உரிமை மீறல் இடங்களை இனங்காண்பதற்கு இந்த வரைபடம் தயாரிக்கப்பட்டது.

# அத்தியாயம் 2 : சிரியாவில் மனித உரிமை மீறல்கள் காரணமாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் நிதியளிப்பு தொடர்பான ஒரு மதிப்பீடு



கொழும்பில் 2017 ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற நீதி உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பின் உடல் வரைபடத் தயாரிப்பு செயலமர்வு ஒன்றின் தனது வரலாற்றை பதிவு செய்யும் ஒரு

# அத்தியாயம் 3

## இலங்கையில் உண்மை, நீதி, நல்லிணக்கம் என்பவற்றுக்கான உள்ளூர் ஆற்றலை கட்டியெழுப்புதல்

### இலங்கையில் காணப்படும் நிலைமை

இலங்கை 1948 இல் சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் அடக்குமுறையுடன் கூடிய சட்டவாக்கங்கள் மற்றும் வன்முறை என்பவற்றுக்கூடாக தமிழ் சிறுபான்மைச் சமூகத்திற்கு எதிரான சிங்கள இனத்துவ தேசியவாதம் மற்றும் பாரபட்சம் காட்டப்படும் நிலை என்பன வளர்ச்சியடைந்து வந்தன. பல தசாப்த காலம் இடம்பெற்று வந்த பாரபட்சம் காட்டும் செயற்பாடுகள் மற்றும் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நிலவிய தண்டனை விலக்குரிமை என்பவற்றின் பின்னர், அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையில் ஓர் உள்நாட்டு ஆயுதப்போராட்டம் வெடித்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு தனி நாட்டையும், தமிழ் மக்களுக்கான பெருமளவுக்கு சுயநிர்ணய உரிமையையும் நிலைநாட்டுவதனை நோக்கமாக கொண்டிருந்தது. இந்த ஆயுத மோதல் 1983 யூலை மாதம் ஆரம்பித்ததுடன் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் சிறைக்கைதிகள் பிடிக்கப்படாத இராணுவ செயற்பாடு ஒன்றின் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை 2009ஆம் ஆண்டு தோற்கடித்தது. 2008 ஜனவரி தொடக்கம் 2009 மே மாதம் வரையில் இந்த மோதல் மிகவும் உக்கிரமான வடிவில் இடம்பெற்று வந்ததுடன், மனித உரிமை மீறல்களும் நிகழ்ந்தன. அரசாங்கத் தரப்பு மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆகிய இரு தரப்புக்களும் மிகவும் கொடூரமான குற்றச்செயல்களை இழைத்திருப்பது குறித்த குற்றச்சாட்டுக்களும் இதில் அடங்கியிருந்தன. இதன் விளைவாக வடக்கு கிழக்கைச் சேர்ந்த சுமார் 40,000 தமிழ் சிவிலியன்கள் காணாமற் போனார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள். மேலும், 300,000 மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தனர்.

பரவலாக விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்ட அரசாங்கத்தின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) புலன் விசாணையை உள்ளடக்கிய விதத்தில் தண்டனை விலக்குரிமை காணப்பட்ட ஐந்து வருட காலப் பிரிவை அடுத்து ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தது. ராஜபஷவுடன் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலில் 2015 ஜனவரி மாதம் வெற்றியீட்டியதனை அடுத்து இந்த நிலைமை மாற்றமடையத் தொடங்கியதுடன், இலங்கையில் சர்வதேச பங்கேற்புக்கான கதவு திறந்துவிடப்பட்டது. உதாரணமாக, இலங்கை 2015 அக்டோபர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ‘இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்தல்’ என்ற தலைப்பிலான இல. 30/1 தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியது. இதனையடுத்து, பெருமளவுக்கு அடக்குமுறை இயல்பைக் கொண்ட 1978ஆம் ஆண்டின் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான தமிழ் தடுப்புக்காவல் கைதிகளை விடுவிப்பதாகவும் அது வாக்குறுதி அளித்தது; வடக்கு கிழக்கில் இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கும் தமிழர்களின் காணிகளை திருப்பி அளித்தல்; காணாமற் போன ஆட்களுக்கான அலுவலகத்தையும் உள்ளடக்கிய விதத்தில் நம்பகமான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகளை ஸ்தாபித்தல் என்பன இந்த வாக்குறுதிகளில் அடங்கியிருந்தன.

உத்தேச நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகள் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை சேகரிக்கும் பொருட்டு பிரதம மந்திரி 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கலந்தாலோசனை செயலணி ஒன்றை (CTF) நியமனம் செய்தார். துரதிர்ஷ்டவசமாக அதன் கடப்பாடுகள் குறித்த அரசாங்கத்தின் முன்னேற்றம் ஏமாற்றமளிக்கும் விதத்தில் மந்த கதியில் இடம்பெற்று வந்திருப்பதுடன், அரசியல் விருப்பு இல்லாத நிலையில் புத்தாக்க இயல்பிலான நிலைமாறு கால தீர்வுகளை அது அவசியப்படுத்தியது.


### கூட்டமைப்பு இலங்கையில் செயற்படுத்தி வரும் கருத்திட்டம் குறித்த பொது நோக்கு

நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான உலகளாவிய முன்னெடுப்பு கூட்டமைப்பு இந்த பின்புலத்திலும், இலங்கையின் நிலைமாறு கால நிதிச் செயன்முறை குறித்த எதிர்பார்ப்புடனும் அரசாங்கத்தினால் நெறிப்படுத்தப்பட்டு வரும் தேசிய கலந்தாலோசனை செயன்முறைக்கு ஆதரவளிப்பதற்கும், உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்களுக்கு தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கும், நிலைமாறு கால நீதிச் செயன்முறைகளில் ஈடுபடுவதற்கென உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அரசாங்க செயற்பாட்டாளர்கள் ஆகிய தரப்புக்களின் ஆற்றலை கட்டியெழுப்புவதற்கும் ஒரு கருத்திட்டத்தை அபிவிருத்தி செய்தது. அனைவரையும் உள்ளடக்கிய விதத்தில் சமாதானத்தை கட்டியெழுப்புவதும், நிலைமாறு கால நீதி மற்றும் இலங்கையில் நல்லிணக்க

முயற்சிகள் என்பவற்றை போஷித்து வளர்ப்பதும் அக்கருத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். அது எதிர்காலத்திற்கான பொதுத்தேவைகள் மற்றும் நோக்கு என்பன தொடர்பான நம்பிக்கையையும் கருத்தொற்றுமையையும் கட்டியெழுப்பும் விடயத்தில் பல்வேறு சமூகக் குழுக்களை ஒன்றாக எடுத்துவருமென எதிர்பார்க்கப்பட்டது. இக்கருத்திட்டம் விரிவான தேவைகள் மதிப்பீடு மற்றும் சிவில் சமூகம் மற்றும் அரசாங்க செயற்பாட்டாளர்கள் ஆகிய தரப்புக்களுக்கான ஆற்றல்களை கட்டியெழுப்பும் செயலமர்வுகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. சிவில் சமூக அமைப்புக்களுக்கு நடத்தப்பட்ட செயலமர்வுகளின் இறுதி விளைவாக உள்ளூர் சமூகங்களின் தலைமையிலான உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் (TRF) உருவாக்கப்பட்டது. இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் நிலைமாறு கால நீதி தொடர்பான முயற்சிகளில் உள்ளூர் சமூகம் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் என்பவற்றின் பங்கேற்புக்கு அனுசரணை வழங்கியது. கொழும்பை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்கள் ஒட்டுமொத்தமாக இத்தகைய தலையீடுகள் மற்றும் களப்பணிகள் என்பவற்றில் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலையில் இது ஒரு தெளிவான தேவையாக இருந்து வந்தது. கூட்டமைப்பின் முறைமையியலின் பிரகாரம் இக்கருத்திட்டம் பல்வேறு அடையாளங்களைச் சேர்ந்த தனிநபர்களை பயனுள்ள விதத்தில் பங்கேற்கச் செய்வதற்கும், நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்குமென பின்புலம் சார்ந்த உள்ளூர் உறுப்பினரைக் கொண்ட பன்முக இயல்பிலான அணுகுமுறை ஒன்றை பின்பற்றியது.

### தேவைகள் மதிப்பீடு

கூட்டமைப்பின் பங்காளர்களான மனச்சாட்சி சார் மையங்களின் சர்வதேசக் கூட்டணி, கௌதமாலா தடய மானிடவியல் மன்றம் (FAFG) மற்றும் அப்போதைய பங்காளரான காணாமற் போன நபர்கள் தொடர்பான சர்வதேச ஆணைக்குழு (ICLG) என்பன சமூக அபிவிருத்தி நிறுவனம் (ISD) விழுது மற்றும் Herstories அமைப்பு ஆகிய இரண்டு உள்ளூர் பங்காளர்களுடன் இணைந்து 2015 அக்டோபர் தொடக்கம் 2015 மார்ச் மாதம் வரையில் ஒரு தேவை மதிப்பீட்டினை மேற்கொண்டன. பால் நிலை, வயது, சமயம் மற்றும் இனத்துவம் என்பவற்றின் பிரதிநிதித்துவத்திற்கான தேவையை கருத்தில் கொண்டு, உள்ளூர் பங்காளர்கள் நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய பாகங்களிலிருந்து பங்கேற்பாளர்களை இதற்கென அடையாளம் கண்டிருந்தார்கள். இந்த மதிப்பீடு 32 தனிபர்களுடன் நடத்தப்பட்ட கலந்தாலோசனைகள், ஒவ்வொன்றும் பத்து தொடக்கம் பதினைந்து வரையிலான பங்கேற்பாளர்களுடன் நடத்தப்பட்ட இலக்குக்குழு கலந்துரையாடல்கள், பல்வேறு இனத்துவ, சமய மற்றும் அரசியல் பின்னணிகளையும் அதேபோல பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் மொத்தம் 114 பேருடன் நடத்தப்பட்ட மூன்று பங்கேற்பு ஆராய்ச்சி செயலமர்வுகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.[1]



“போர் முடிவடைந்த பொழுது நான் மகிழ்ச்சியடைந்தேன்” என்கிறார் கிளிநொச்சியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயான இந்த 34 வயதுப் பெண்மணி. அவருடைய கதை இலங்கையின் வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 285 தாய்மார்களின் தனிப்பட்ட கதைகளை சேகரித்த ஒரு கருத்திட்டத்தின் வரலாற்று ஆவணக்காப்பகத்தின் ஒரு பாகமாகும்.

கொழும்பிலும், (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய) வடக்கு கிழக்குப் பிரதேசத்திலும் கலந்தாலோசனைகளும், இலக்குக்குழு கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டதுடன், வவுனியா (வடக்கு), திருகோணமலை (கிழக்கு) மற்றும் மொனராகல (தெற்கு) ஆகிய பிரதேசங்களில் பங்கேற்பு ஆராய்ச்சி செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இந்தப் பங்கேற்பு ஆராய்ச்சி செயலமர்வுகள் குறிப்பாக நிலைமாறு கால நீதி தொடர்பாகவும் இலங்கையின் செயன்முறை தொடர்பாகவும் வரையறுக்கப்பட்ட புரிந்துணர்வை மட்டுமே கொண்டிருந்த மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் நபர்களுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டிருந்தன. அதே வேளையில், உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்கள், பாதிக்கப்பட்டவர்கள் குழுக்கள், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்பத்தினர், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்த சிறைக்கைதிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் கலந்தாலோசனைகள் மற்றும் இலக்குக்குழு கலந்துரையாடல்கள் என்பன நடத்தப்பட்டன. இது தவிர, வடக்கு குறிப்பாக முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு அருகில் அரசாங்கத்தின் முன்முயச்சியுடன் அமைக்கப்பட்டிருந்த நினைவேந்தல் இடங்களையும் கருத்திட்டத்தின்

பங்காளர்கள் சென்று பார்வையிட்டனர். அரசாங்கத்தினால் வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் போர் குறித்த எத்தகைய கதைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன என்ற விடயத்தை நன்றாக புரிந்துகொள்ளும் நோக்கத்துடனேயே இந்த விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இறுதியாக, போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களை அரசாங்கம் மீளக் குடியேற்றியிருக்கும் யாழ்ப்பாணத்திற்கு வெளியிலிருக்கும் நீதவான் மற்றும் கோணபுலம் முகாம்களையும் கருத்திட்ட பங்காளர்கள் சென்று பார்வையிட்டார்கள். உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருக்கும் நபர்களின் தேவைகளை மதிப்பிட்டுக் கொள்ளும் பொருட்டு இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக கொழும்புக்கு வெளியில் ஆட்களுக்கு மத்தியில் நிலைமாறு கால நீதி தொடர்பான அறிவு மற்றும் திறன்கள் என்பன குறைவாக இருந்துவரும் நிலையை இந்தத் தேவை மதிப்பீடு எடுத்துக்காட்டியிருந்தது. நாடு தழுவிய ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் சிவில் சமூக அமைப்புக்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பு குறைவாக காணப்படும் நிலை; குற்றச் செயல்களுக்கு பொறுப்புக் கூறும் நிலை தொடர்பாக வடக்கு கிழக்கிலும், நாட்டின் தென் பகுதியிலும் நிலவிவரும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கண்ணோட்டங்கள் ; வடக்கிலும், கிழக்கிலும் சமாதானத்தை கட்டியெழுப்புதல், பொறுப்புக்கூறல் மற்றும் சமூக அரசியல் வெளிகளை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பவற்றுக்கான தேவை என்பவற்றையும் அது எடுத்துக்காட்டியிருந்தது. குறிப்பாக, இந்த தேவை மதிப்பீடு 2016 நவம்பர் மாதத்தில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்கத்தினால் நெறிப்படுத்தப்பட்ட கலந்தாலோசனை செயலணியின் கள முடிவுகளை பிரதிபலித்துக் காட்டியது.

**உள்ளூர் சமூகத்தினால் நெறிப்படுத்தப்பட்ட அனைவரையும் உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதில் சிவில் சமூகம் எதிர்கொண்டு வரும் சவால்கள்**. கொழும்பை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரும் அமைப்புக்கள் வடக்கிற்கும், சர்வதேச சமூகத்திற்கும் இடையிலான இடைத்தரகர்களாக செயற்பட்டு வருவதாக வட பிரதேசத்தைச் சேர்ந்த தமிழர்கள் கவலை தெரிவித்திருந்தனர். நிதியளிப்புக்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் வடக்கில் இடம்பெற்றுவரும் தலையீடுகளில் உள்ளூர் சமூகத்தின் உரித்தினை இல்லாமல் செய்தல் என்பன தொடர்பான பிரச்சினைகளை இது எழுப்புகின்றது. அதே வேளையில், மொனராகலை செயலமர்வில் பங்கேற்ற சிங்கள பங்கேற்பாளர்கள் வடக்கு கிழக்கை மட்டும் கவன மையமாகக் கொண்டு செயற்பட்டும் வரும் சிவில் சமூக அமைப்புக்கள் தம்மை புறக்கணித்துள்ளன என்ற உணர்வை கொண்டிருந்தார்கள். இந்த சிவில் சமூக அமைப்புக்கள் மோதலுடன் சம்பந்தப்பட்ட விதத்தில் தென்னிலங்கையில் மக்கள் எதிர்கொண்டுவரும் பலவீனமான நிலை மற்றும் பாதிப்புக்கள் என்பவற்றை அங்கீகரிக்கத் தவறியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

**பொறுப்புக் கூறல்.** வடக்கு கிழக்கில் நடத்தப்பட்ட செயலமர்வில் பங்கேற்ற பெருந்தொகையான தமிழ் பங்கேற்பாளர்கள் மன்னிப்பு வழங்கப்பட்டாத நிலையில் குற்றமிழைத்தவர்களை பொறுப்புக்கூற வைக்க வேண்டிய தேவை இருந்து வருகின்றது என்பதனையும், நம்பகமான சாட்சிகள் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தேவையாக இருந்து வருகின்றது என்பதனையும் சர்வதேச நீதிபதிகள், வழக்குத்தொடுநர்கள், புலன் விசாரணையாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் ஆகியோரின் பங்கேற்பு அவசியமாக இருந்து வருகின்றது என்பதனையும் வலியுறுத்தினார்கள். எவ்வாறிருப்பினும், செயலமர்வுக்குகென தென்னிலங்கையிலிருந்து வந்திருந்த சிங்களப் பங்கேற்பாளர்கள் குற்றவியல் வழக்குத் தொடுப்புக்கள் மற்றும் சத்திய விசாரணை ஆணைக்குழுக்கள் என்பன குறிப்பாக சர்வதேசமயப்படுத்தப்படும் அத்தகைய அமைப்புக்கள் - பெருந்தொகையான சிங்கள மக்களால் “போர் வீரர்களாக” கருதப்பட்டு, மதிக்கப்பட்டு வருபர்களை இலக்காகக் கொள்ள முடியும் என்ற அச்சத்தை தெரித்திருந்தார்கள். அதற்கு பதிலாக, சர்வதேச பங்கேற்பு இல்லாத விதத்தில் அரசாங்கம் பொறுப்புக் கூறும் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியுமென அவர்கள் நம்பினார்கள். வடக்கில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் போது அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளும் ஓர் ஒப்பந்தம் மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தம் என்பவற்றையும் உள்ளடக்கிய அரசியல் தீர்வொன்றுக்கான தேவை தொடர்பாகவும் கவனஞ் செலுத்தப்பட்டது. வடக்கு கிழக்கு நெடுகிலும் வாழ்ந்துவரும் தமிழர்கள் அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, முடியுமானவரையில் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்ற விடயத்திற்கு உடன்பட்டதுடன் வடக்கைச் சேர்ந்த அனைத்து பங்கேற்பாளர்களும் இராணுவத்தின் வெளியேற்றம் மற்றும் பாதுகாப்புத் துறை சீர்த்திருத்தம் என்பவற்றுக்கான தேவையையும் வலியுறுத்தினார்கள்.

**பலவந்தமாக ஆட்கள் காணாமற் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் நினைவேந்தல் செயற்பாடுகள்**. ஆயுத மோதல் ஆரம்பமாகிய காலத்திலிருந்து காணாமற் போன ஆட்கள் தொடர்பான சம்பவங்களைப் பொருத்தவரையில் உலகின் ஆக்கூடிய விகிதங்களில் ஒன்றை இலங்கை கொண்டிருந்தது. அரசாங்கத்தின் ஒப்புதலுடன் நடத்தப்பட்ட பாரியளவில் ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் பல்வேறு காலப் பிரிவுகளில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, ஆயுத மோதல் தொடர்பாக பெருமளவுக்கு தமிழர்களே இவ்விதமாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். ஆனால், 1970 களில் மற்றும் 1980 களில் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணி (JVP) கிளர்ச்சிகளின் பின்புலத்தில் சிங்களவர்களும் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். இலங்கையில் 40,000 க்கு மேற்பட்ட ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் இருந்து வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு மதிப்பிட்டுள்ளது. காணாமற் போன ஆட்கள் தொடர்பான முறைப்பாடுகளை புலன் விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு அல்லது பரணகம ஆணைக்குழு முன்னைய ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்களினால் நியமனம் செய்யப்பட்டிருந்தது. அது 1990-2009 காலப் பிரிவை உள்ளடக்கியதுடன், சிவிலியன்களிலிருந்து 2017 மே வரையில் அந்த ஆணைக்குழுவிற்கு 18249 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. பாதுகாப்பு படைகளிலிருந்தும் சுமார் 5000 க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. எவ்வாறிருப்பினும், பரணகம ஆணைக்குழு போன்ற பொறிமுறைகள் வினைத்திறன் அற்றவையாக கருதப்பட்டன. அது அரசியல் ரீதியான விருப்பற்றதாக இருந்து வந்தது என்றும் கருதப்பட்டது.

*"எனது மகளுக்கு என்ன நடந்தது என்பதனை நான் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். நான் இறுதி அணைக்குழுவுக்கு சென்றதுடன், அங்கிருந்து உண்மையை தெரிந்து கொள்ள எதிர்பார்த்தேன். ஆனால், எதுவுமே நடக்கவில்லை"*

- *பங்கேற்பு ஆராய்ச்சி செயலமர்வொன்றில் பங்கேற்ற ஒரு தமிழ் தாய்.*

உதாரணமாக, காணாமல் ஆக்கப்பட்டிருக்கும் நபர்களின் பெருந்தொகையான குடும்பங்கள் எத்தனைய தகவல்களையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. மேலும், அவர்கள் விசாரணை இடங்களில் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், மரணச் சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளுமாறு நிர்பந்திக்கப்பட்டிருந்தனர். பரணகம ஆணைக்குழுவின் பிரச்சினைகள், நல்லிணக்கத்தை பொறுத்தவரையில் அதற்கு உசிதமாக இருந்து வருவதைப் பார்க்கிலும், அதற்கு பெருமளவுக்கு சேதம் விளைவிக்க கூடியயாகவே இருந்து வருகின்றன என பலர் கருதுகின்றார்கள். ஆட்கள் காணாமற் போன சம்பவங்களை கையாளும் அரசாங்கத்தின் விருப்பு மீதான எஞ்சியிருக்கும் நம்பிக்கையையும் அது இல்லாமல் செய்கின்றது. இந்த விடயம் கூட்டமைப்பின் பங்காளர்களின் ஆராய்ச்சியின் மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருந்தது. கீழ்மே உள்ள பிரிவு அதனை எடுத்துக் காட்டுகின்றது.

## பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் ஆட்கள் காணாமல் போயிருக்கும் சம்பவங்கள் என்பன தொடர்பான முதன்மையான முடிவுகள்

இலங்கையில் பலவந்தமாக ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் காணாமற் போயிருக்கும் ஆட்கள் தொடர்பான சம்பவங்கள் என்பன தொடர்பாக கௌதமாலா தடயவியல் மானிடவியல் மன்றம் (FAFG) மற்றும் காணாமற் போன ஆட்கள் தொடர்பான ஆணைக்குழு ICMD என்பன 2015 தொடக்கம் 2016 வரையில் மிகவும் செறிவான தேவைகள் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டிருந்தன. இந்த மதிப்பீடு வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பங்கீடுபாட்டளார்களுடன் நடத்தப்பட்ட 35 இற்கு மேற்பட்ட கூட்டங்கள் கலந்தாலோசனைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் குடும்பங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் நடத்தப்பட்ட இரண்டு சுற்று வட்டமேசை மாநாடுகள் என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தன. காணாமற் போயிருக்கும் ஆட்களின் குடும்பத்தவர்களின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் என்பவற்றை கவனத்தில் எடுப்பது எவ்வாறு என்பதனை நிர்ணயித்துக்கொள்வதற்கென இச்சந்திப்புக்கள் நடத்தப்பட்டன. உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் செயன்முறைகளின் அபிவிருத்தியில் பாதிக்கப்பட்டவர்களின் குரல்கள் முதன்மையான இடத்தை பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இக்கலந்துரையாடல்கள் முயன்றன.

காணாமற் போன சம்பவங்கள் தொடர்பாக புலன் விசாரணைகளை நடத்துவதில் தேசிய மட்டத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட அறிவு மற்றும் தடயவியல் விஞ்ஞானங்களை பாவிப்பது தொடர்பான வரையறைகள் என்பனவும், அதேபோல, காணாமற் போயிருக்கும் ஆட்களுக்கு நேர்ந்த கதி தொடர்பாக விருப்பு வெறுப்பற்ற, விஞ்ஞான ரீதியான மற்றும் முழுமையான புலன் விசாரணைகளை நடத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாத நிலை என்பவற்றை இந்த மதிப்பீடு எடுத்துக்காட்டியிருந்தது. தேசிய முறைமை தற்பொழுது கட்டமைப்பு மற்றும் ஆற்றல் என்பவற்றை கொண்டிருக்கவில்லை – பெரும்பாலான மாவட்ட மட்ட சட்ட மருத்துவ அதிகாரிகள் இவற்றை தமது பணிகளுக்குள் உள்ளடக்கிக் கொள்வதற்கான வளங்களை கொண்டிருக்கவில்லை. இது தவிர, இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் விடயத்தில் சிவில் சமூக அமைப்புக்களுக்கு போதியளவில் பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. பல்வேறு இனத்துவ, சமய மற்றும் அரசியல் குழுக்களுக்கு மத்தியில் குறிப்பாக காணாமல் போன சம்பவங்களின் கால கட்டங்களின் பின்னணியில் இந்தப் பிரச்சினையை கையாள்வது எப்படி என்பது குறித்த அரசியல் தகராறுகள் காரணமாக இச்சவால்கள் மேலும் சிக்கலடைந்துள்ளன.

முக்கியமான முடிவுகளில் ஒன்று இதே மாதிரியான பின்புலங்களைக் கொண்டிருக்கும் ஏனைய நாடுகளுடன் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான தேவையாகும். அரசாங்க மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு மத்தியில் தடயவியல் புலன் விசாரணகளை நடத்துவதற்கனா உள்ளூர் ஆற்றலை கட்டியெழுப்புவதற்கு இந்த அனுபவப் பகிர்வு அவசியமாகும். அது தவிர, ஆட்கள் காணாமற் போன பிரச்சினை தொடர்பாக செயற்பட்டுவரும் உள்ளூர் சமூகங்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றுக்கு மத்தியில் பரப்புரை, உரையாடல், வலையமைப்புக்களை உருவாக்குதல் மற்றும் பொதுவாக விழிப்புணர்வைத் தூண்டுதல் என்பன மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

சர்வதேச அமைப்புக்கள், - குறிப்பாக வடக்கு கிழக்கைச் சேர்ந்த உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்கள், தேவாலயங்கள் என்பன முனைப்பான விதத்தில் காணாமற் போன சம்பவங்களை ஆவணப்படுத்தியுள்ளன. ஆனால், சிவில் சமூக செயற்பாடுகளில் பெரும்பாலானவை ஒருங்கிணைக்கப்பட்டிருக்கவில்லை. ஆவணப்படுத்தலை ஒன்றுதிட்டி வைத்திருக்கும் மத்திய தரவுத்தளம் ஒன்று அல்லது ஆவணக்காப்பகம் ஒன்று இருந்து வரவில்லை. அரசாங்கத்தின் கண்காணிப்புக் குறித்த அவநம்பிக்கை மற்றும் கரிசனைகள் என்பவற்றின் காரணமாக சிவில் சமூக அமைப்புக்கள் தகவல்களை பகிர்ந்து கொள்ளவதற்கு விருப்பற்ற நிலையில் இருந்து வருவது இதற்கு ஓரளவு காரணமாகும். மேலும், குறிப்பாக வடக்கு கிழக்கு பிரதேசத்தில் இடம்பெற்று வரும் அத்தகைய கண்காணிப்புக் காரணமாக தமிழ் குடும்பங்கள் தாம் இழந்திருப்பவர்களை நினைவுகூர்ந்து, பகிரங்கமாக அஞ்சலி செலுத்த முடியாத நிலை காணப்படுகிறது.[2] சிங்கள மக்கள் போர் வீரர்களை பகிரங்கமாக நினைவுகூரக்கூடிய நிலையில் இருந்துவரும் அதே வேளையில், தமிழ் மக்கள் நினைவேந்தல் நிகழ்வுகளைக் கூட மேற்கொள்ள முடியாத நிலையில் இருந்து வருவது குறித்து பல தமிழ் பங்கேற்பாளர்கள் விரக்தியைத் தெரிவித்திருந்தனர்.



கொழும்பில் 2016 நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் ஒரு பங்கேற்பாளர்.

**நல்லிணக்கம்.** வடக்கு கிழக்கைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் நல்லிணக்கத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு அனைத்து இலங்கையர்களுக்கும் -தமிழர்கள், சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய அனைவருக்கும் - இயலுமையை பெற்றுக்கொடுப்பது முக்கியமானது என்ற விடயத்தை வலியுறுத்தினார்கள்.[3] உதாரணமாக, தமிழ் மக்களை இலங்கை குடிமக்களாக மீண்டும் ஒருங்கிணைப்பது அரசாங்கம் தமிழ் மொழியை ஒரு தேசிய மொழியாக அங்கீகரிக்கும் விடயத்தில் தங்கியிருப்பதாக பலர் கூறிப்பிட்டார்கள். வடக்கு கிழக்கைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் குறிப்பாக பௌத்த மற்றும் தமிழ் தீவிரவாதிகளினால் முஸ்லிம்களை இலக்கு வைத்து அதிகரித்தளவில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து பௌத்த தீவிரவாதிகள் நடத்திவரும் சம்பவங்கள் என்பவற்றின் பின்னணியில், சமயங்களுக்கு இடையிலான உறவுகளை கட்டியெழுப்ப வேண்டிய தேவையை எடுத்துக்காட்டியிருந்தார்கள். இந்த வன்முறைச் சம்பவங்கள் ஆகக் குறைந்தது 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்று வந்துள்ளன.

முஸ்லிம் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களை சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்தின் பிரகாரம், முஸ்லிம் மக்கள் குறிப்பாக சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் நிலைமாறுகால நீதி முன்முயற்சிகளிலிருந்து புறமொதுக்கப்பட்டிருக்கும் நிலை காரணமாக சமயங்களுக்கு இடையிலான பதற்ற நிலைமைகளை கையாள்வது சவால்மிக்க ஒரு காரியமாக இருந்து வருகின்றது.

## ஆற்றலை கட்டியெழுப்பும் செயலமர்வுகள்

தேவைகள் மதிப்பீட்டின் முக்கியமான முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு கருத்திட்ட பங்காளர்கள் நிலைமாறு கால நீதியின் தொழில்நுட்ப அம்சங்கள் தொடர்பாக உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும், இலங்கையின் பின்புலத்திற்கு பொருந்தக்கூடிய உத்திகளை அடையாளம் கண்டுகொள்வதற்கும் தொடரான பல பிராந்திய செயலமர்வுகளை நடத்தினார்கள். 2016 யூலை மாதத்தில் நிலைமாறு கால நீதி தொடர்பான மூன்று நாள் செயலமர்வுகள் மூன்று கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் (வடக்கு), மட்டக்களப்பிலும் (கிழக்கு) நடத்தப்பட்டன. இந்தச் செயலமர்வுகளில் சிவில் சமூக அமைப்புக்களைச் சேர்ந்த சுமார் 75 பேர் பங்குபற்றினார்கள். குறிப்பாக மட்டக்களப்பிலும், கொழும்பிலும் நடத்தப்பட்ட செயலமர்வுகள் பல்வேறு இனத்துவ மற்றும் சயமப் பின்னணிகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்களை ஒன்றாக எடுத்து வந்திருந்தன. சிவில் சமூக அமைப்புக்களுக்கான ஆற்றலை கட்டியெழுப்பும் செயமர்வுகளின் இறுதித் தினத்தின் போது மூன்று பிராந்திய செயலமர்வுகளின் பங்கேற்பாளர்கள் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு என்பவற்றுக்கென மூன்று பிராந்திய செயல் கமிட்டிகளை உருவாக்குவதற்கென ஒவ்வொன்றிலிருந்தும் பத்து பிரதிநிதிகளை நியமனம் செய்தார்கள். தனிநபர்களை இதற்கென பரிந்துரை செய்வதில் பங்கேற்பாளர்கள் பால் நிலை சமத்துவம் மற்றும் மாவட்ட மட்ட பிரதிநிதித்துவம் ஆகிய விடயங்களை கவனத்தில் எடுத்திருந்தார்கள்.



இலங்கையில் கண்டியில் அமைந்திருக்கும் மனச்சாட்சி சார் மையம் ஒன்றான சமூக அபிவிருத்தி நிறுவகம் ஒப்புரவு, நீதி, சுதந்திரம், சமாதானம் மற்றும் தோழமை உணர்வு என்பவற்றின் அடிப்படையில் சமூக மாற்றத்திற்காக செயற்படுவதற்கென பெருந்தோட்டச் சமூகங்களின் ஆற்றலை பலப்படுத்தும் நோக்கத்துடன் ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கானவர்களை சந்திக்கின்றது. மனச்சாட்சி சார் மையங்களின் சர்வதேச கூட்டணியின் ஆதரவுடன் அவர்கள் பெருந்தோட்ட தமிழர்களின் வாய்மொழிமூல வரலாறுகளை சேகரித்துள்ளார்கள். இவர்கள் புறமொதுக்கப்பட்ட ஒரு பெருந்தோட்டச் சமூகமாக இருந்து வருகின்றனர். நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்து வந்த போதிலும், 1948 இல் நாடு சுதந்திரமடைந்த பின்னர் அவர்களுடைய பிரஜா உரிமை பறிக்கப்பட்டிருந்தது. இலங்கை உள்நாட்டு போரின் போது (1983-2009) இவர்கள் பெருமளவுக்கு துன்பங்களை அனுபவித்திருந்தார்கள்.



கொழும்பில் 2017 ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட உடல் வரைபட தயாரிப்பு செயலமர்வில் ஓர் பங்கேற்பாளர்.

கருத்திட்ட பங்காளர்கள் அரசாங்கத்தின் நல்லிணக்க பொறிமுறைகளுக்கான ஒருங்கிணைப்பு செயலகத்துடன் கூட்டாக இணைந்து 2016 செப்டம்பர் மாதத்தில் அரசாங்கத் துறைக்கான இரண்டு நாள் செயலமர்வுகள் இரண்டை நடத்தினார்கள். இதில் ஒரு செயலமர்வு சுமார் 25 உள்ளூர் அரசாங்க அதிகாரிகளுக்கு எனவும், மற்றொரு செயலமர்வு தேசிய மட்டத்திலான அரசாங்க அதிகாரிகள் அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் என்பவற்றையும் உள்ளடக்கிய பல்வேறு அமைப்புக்களையும் சேர்ந்த 20 பிரதிநிதிகளுக்கு நடத்தப்பட்டது.

இந்தச் செயலமர்வுகள் அனைத்தும் கௌதமாலா, பெரு, உகாண்டா, சியாலியோன், தென்னாபிரிக்கா மற்றும் முன்னைய யூகோஸ்கலாவியா ஆகிய நாடுகளில் நிலைமாறு கால நீதி தொடர்பாக முன்னெடுக்கப்பட்டிருந்த முயற்சிகளிலிருந்து கிடைத்த பாடங்களை பகிர்ந்து கொண்டன. நெறிப்படுத்தப்பட்ட உரையாடலுக்கு ஊடாக பங்கேற்பாளர்கள் பன்முக அணுகுமுறைகளையும், இலங்கை தொடர்பான அவற்றின் உள்ளார்ந்த பொருத்தப்பாட்டையும் கவனத்தில் எடுத்தார்கள். அனைத்துச் செயலமர்வுகளும் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலான சமகால உரைபெயர்ப்புடன் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டன.

**உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் (TRF)**

மூன்று பிராந்திய செயற் கமிற்றிகளை சேர்ந்த பிரதிநிதிகள் 2016 செப்ரம்பர் மாதத்தில் தேசிய செயற்குழு ஒன்றின் முதலாவது கூட்டத்தை நடத்தின. உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் சிங்கள பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இந்து தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய நாட்டின் பிரதான இன மற்றும் சயக்குழுக்களை சேர்ந்த 20 பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. இவர்கள் மூன்று பிராந்திய செயற் கமிட்டிகளினால் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் சமூக அபிவிருத்தி

நிறுவகத்தினால் கூட்டமைப்பின் பங்காளர்களின் ஆதரவுடன் நிர்வகிக்கப்பட்டு வருவதுடன், அது 20 பங்கேற்பாளர்களில் 11 பேரைக் கொண்ட ஒரு நிறைவேற்று கமிட்டியினால் நெறிப்படுத்தப்பட்டு வருகின்றது. துரதிர்ஷ்டவசமாக உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியத்தின் பிரதிநிதிகளில் பால்நிலை சமத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கருத்திட்ட பங்காளர்கள் உத்தேசித்திருந்த அதே வேளையில், குடும்பக் கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றின் காரணமாக தம்மால் இந்த ஒன்றியத்தின் பணிகளில் அர்ப்பணிப்புடன் முனைப்பாக பங்கேற்க முடியாதுள்ளதென பல பெண்கள் கூறினார்கள்.



உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியத்தின் உறுப்பினர் ஒருவர் 2016 நவம்பர் மாதத்தில் உள்ளூர் சமூகங்களுக்கு மத்தியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கின்றார்.

சமூகப் பங்கேற்பை அதிகரித்தல் மற்றும் உள்ளூர் சமூகங்களினால் முன்னெடுக்கப்படும் நிலைமாறு கால நீதி செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் என்பவற்றுக்கென அம்மாதத்தில் ஒருங்கிணைப்பதற்கான உத்திகளை உருவாக்கும் பொருட்டு அம்மாதத்தில் இக்குழு ஒரு சந்திப்பை நடத்தியது வடக்கு கிழக்கு, தெற்கு ஆகிய பிரதேசங்களில் முன்வைக்கப்பட்டிருந்த வேறுபட்ட விதங்களிலான கரிசனைகளை அங்கீகரிக்கும் விதத்தில் உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் ஓர் பரப்புரைக்குழு ஒன்ற முறையில் தமது கட்டமைப்பை எடுத்து விளக்கும் ஒரு பிரகடனத்தை தயாரித்தது. அப் பிரகடனம் உள்ளூர் சமூகங்களுக்கு மத்தியில் அரசாங்கத்தினாலும், அதேபோல சிவில் சமூகத்தினாலும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலைமாறு கால நீதி தலையீடுகள் தொடர்பாக விழிப்புணர்வை தூண்டுவதனை நோக்கமாக கொண்டுள்ளது; தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான தேசிய செயலகம் போன்ற அரசாங்கச் செயன்முறைகள் மற்றும் பொறிமுறைகளுடன் உள்ளூர் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளல், மற்றும் தேசிய மட்டத்திலான செயன்முறையில் உள்ளூர் பங்கேற்புக்கு அனுசரணை வழங்குதல் என்பன இதன் நோக்கங்களாக இருந்து வந்தன. இந்தப் பிரகடனம் பல்வேறு பிராந்திய தேவைகளையும் கவனத்தில் எடுப்பதுடன், உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் பிராந்திய நலன்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு தேசிய அரங்காக இருந்து வருகின்றது என்றும் குறிப்பிடுகின்றது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உருவாக்கப்பட்டது தொடக்கம் இந்த ஒன்றியத்தின் பிரதிநிதிகள் தமது பிராந்திய செயற் கமிட்டிகளுடனும் ஆற்றலைக் கட்டியெழுப்பும் செயலமர்வுகளின் பங்கேற்பாளர்களுடனும் சந்திப்புக்களை நடத்தியிருப்பதுடன் உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியத்தையும் அதன் பணிகளையும் அறிமுகம் செய்து வைக்கும் பொருட்டு சமூக ஒன்று கூடல்களையும் ஏற்பாடு செய்துள்ளது. 2017 மார்ச் மாதமளவில் (வடக்கில்) யாழ்ப்பாணத்தில் மூன்று முன்னோடி பிராந்திய பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன் (கிழக்கில்) மட்டக்களப்பு மற்றும் (தெற்கில்) கண்டி ஆகிய பிரதேசங்கள் என்பவற்றில் மூன்று முன்னோடி பிராந்திய பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. 2017 அக்டோபர் மாதமளவில் நாடெங்கிலும் மேலும் ஆறு பிராந்திய பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கும் பரவலான வெளிக்களச் செயற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு மற்றும் 14 மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் திட்டமிட்டுள்ளது.

இந்த மதிப்பீடு கருத்திட்ட பங்காளர்களுக்கும் கூட்டமைப்பின் செயற்பாடுகளில் தொடர்ந்தும் பங்கேற்று வந்த உள்ளூர் சமூக உறுப்பினர்களுக்கும் இடையில் நம்பிக்கையை கட்டியெழுப்பும் விடயத்தில் பொதுவாக வெற்றியீட்டியுள்ளது. மேலும், அது நிலைமாறு கால நீதியில் சம்பந்தப்பட்டிருக்கும் பங்கீடுபாட்டாளர்களின் வீச்சு, நிகழ்ச்சித்திட்ட தயாரிப்புக்களில் காணப்படும் இடைவெளிகள் மற்றும் வடக்கு கிழக்கு மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களில் செயற்பட்டுவரும் சிவில் சமூக அமைப்புக்களின் ஆற்றல் என்பவற்றையும் இணங்கண்டுள்ளது. அது தவிர, வடக்கில் பெண்களுக்கு மட்டும் பிரத்தியேகமான ஒரு இலக்குக்குழு கலந்துரையாடலுக்கு அனுசரணை வழங்கியதன் மூலமும், தமது பிரச்சினைகளை பால்நிலை அடிப்படையில் பெரும்போக்குபடுத்துவதன் மூலமும் கருத்திட்ட பங்காளர்கள் உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கம் என்பன தொடர்பான ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் வேறுபட்ட தேவைகளை சிறப்பான விதத்தில் புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இருந்து வந்துள்ளார்கள்.

இச்செயன்முறைக்கு ஊடாக கருத்திட்டத்தின் பங்காளர்கள் நிலைமாறு கால நீதி தொடர்பாக தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் ஆகிய தரப்புக்கள் கொண்டிருக்கும் பன்முகத் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் என்பன குறித்த ஒரு ஆழமான புரிந்துணர்வை பெற்றுக் கொண்டார்கள். உதாரணமாக, தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுடன் செயற்படுவதன் மூலம், நல்லிணக்கத்தைச் சாதித்துக்கொள்ளும் பொருட்டு சிங்கள மக்கள் இச்செயன்முறையை ஏற்றுக்கொள்வதும் அதில் அவர்கள் பங்கேற்பதும் அவசியமாக இருந்து வருகின்றது என்பதனை இக்கருத்திட்ட பங்காளர்கள் புரிந்து கொண்டுள்ளார்கள். அதனையடுத்து, இனம் என்னவாக இருந்தாலும் இச்செயன்முறையின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய நீண்டகால மற்றும் பரஸ்பர பயன்களை பங்காளர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். நல்லிணக்கம் அனைத்து இனக்குழுக்களையும் உள்ளடக்கிக் கொள்ள வேண்டும் என்றும், ‘தமிழ் பிரச்சினை’ மீது மட்டும் அது கவனம் செலுத்தக்கூடாது என்றும் தமிழ் இளைஞர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். கூட்டமைப்பில் அனைவரையும் உள்ளடக்கிக்கொள்ளும் அணுகுமுறை நிலைமாறு கால நீதி நாடு தழுவிய பொருத்தப்பாட்டைக் கொண்டிருக்கும் ஒரு விடயம் என்ற சட்டகத்தை முன்வைத்தது. இது செயன்முறையிலும், நல்லிணக்க முயற்சிகளிலும் பங்கேற்பின் மீது பரவலான ஒரு தாக்கத்தை எடுத்துவர முடியும்.

*“நீங்கள் நல்லிணக்கம் குறித்து பேசும் பொழுது தென்னிலங்கை மக்களுடன் நீங்கள் பேச வேண்டும். அவர்கள் எம்மைப் பார்த்து அச்சம் கொள்ளக்கூடாது”*
–வவுனியாவில் நடத்தப்பட்ட இலக்குக்குழு கலந்துரையாடலில் தமிழ் ஆண் பங்கேற்பாளர்

இந்த மதிப்பீடு மிகவும் விரிவான விதத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன், உரிய தருணத்தில் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால், நிலைமாறு கால நீதி மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட அரசியல் முடிவுகள் என்பன விரைவாக அபிவிருத்தியடைந்துவரும் பின்புலத்தில், உள்ளூர் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய விதத்தில் நிகழ்ச்சிதிட்டங்களை பொருத்தமாக அமைத்துக் கொள்வதற்கான ஒரு வீதி வரைபடமாக அதனை பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஆற்றலை கருத்திட்ட பங்காளர்கள் கொண்டிருந்தார்கள். இந்த மதிப்பீடு உள்ளூர் பங்காளர்களின் தற்போதைய வலயமைப்புக்களை பயன்படுத்திக் கொள்வதன் மூலமும், சிங்கள, தமிழ், முஸ்லிம்

சமூகங்களுக்கு மத்தியில் காணப்படும் தொடர்புகளை பயன்படுத்திக் கொள்வதன் மூலமும் குறைந்தபட்ச வளங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டமையினால் மிகவும் செயல்திறன் மிக்கதாக இருந்து வந்தது. பன்முகக் குரல்கள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்தில் அது மேற்கொள்ளப்பட்டிருந்தது. துரதிர்ஷ்டவசமாக பாதுகாப்பு கரிசனைகள் காரணமாக மதிப்பீட்டு அறிக்கையை பரவலாக பகிர்ந்து கொள்ள முடியாத நிலையில், இருந்து வந்தனர். எனவே, அதனை கலந்தாலோசனை செயலணி செயல்முறையின் மூலம் அல்லது ஏனைய சிவில் சமூக அமைப்புக்களின் கலந்தாலோசனைகளின் மூலம் பயன்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. எவ்வாறிருப்பினும், கருத்திட்ட பங்காளர்கள் இந்த அறிக்கையின் முடிவுகளை உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியத்தின் உருவாக்கத்திலும், அதன் உபாய ரீதியான திட்டத்தின் வடிவமைப்பிலும் வழிகாட்டுதலை பெற்றுக்கொள்வதற்கென பயன்படுத்தியிருந்தார்கள்.

### பாரம்பரிய மற்றும் பராம்பரியமற்ற முறைமையியல்களை ஒன்றாக இணைத்தல்

இரண்டு நாள் பங்கேற்பு தேவைகள் மதிப்பீடு செயலமர்வுகள் நிலைமாறு கால நீதி மற்றும் நல்லிணக்கம் என்பன தொடர்பாக அழமாக சிந்தித்துப் பார்ப்பதற்கும், அது தொடர்பான கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கும் பங்கேற்பாளர்களுக்கு ஒரு இயலுமையை வழங்கியிருந்தன. செயலமர்வின் முறைமையியல் தகவல்களை பரிமாறிக்கொள்ளல் மற்றும் பரஸ்பரம் கற்றல் என்பவற்றை மையமாக கொண்டிருந்தது. இது நிலைமாறு கால நீதி தொடர்பான விடயங்களை எடுத்துக் கூறுவதற்கும், சம்பந்தப்பட்ட கலந்துரையாடல்களில் பயனுள்ள விதத்திலான பங்கேற்பை பெற்றுக்கொள்வதற்குமான ஒரு வெற்றிகரமான வழியாக இருந்து வந்தது. நிலைமாறு கால நீதியின் எண்ணக்கருக்கள் மற்றும் பொறிமுறைகள் தொடர்பாக பங்கேற்பாளர்களுக்கு பயிற்சியை வழங்குவதன் மூலமும் – உதாரணமாக, நேபாள நாட்டின் நிலைமையை பயன்படுத்துவதன் மூலம் காணாமற் போன ஆட்கள் தொடர்பான தீக்கப்படாத பிரச்சினைகள் குறித்த இலங்கையின் இணையான நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதன் மூலமும் - கருத்திட்ட பங்காளர்கள் கடந்த காலம் குறித்த உரையாடலை தூண்டிவிடுவதற்கென ஆவணக்காப்பக காட்சிப்படுத்தல்களை பயன்படுத்தினார்கள்.[6] நெறிப்படுத்தப்பட்ட உரையாடல் கண்காட்சிக்கு முன்னர் இடம்பெற்றதுடன், அது கோபம், அச்சம், அவநம்பிக்கை மற்றும் ஒத்துணர்வு போன்ற உணர்வு சார்ந்த எதிர்வினைகள் குறித்த புரிந்துணர்வை பெற்றுக்கொள்வதற்கு கருத்திட்ட பங்காளர்களுக்கு உதவியது. கண்காட்சியைச் சூழ நடத்தப்பட்ட பரஸ்பர உரையாடல் இல்லாதிருப்பின் நல்லிணக்கத்திற்கு அவசியமான மனப்பாங்கு ரீதியான மாற்றங்களின் உணர்வு ரீதியான வெளிப்பாடுகளை கருத்திட்ட பங்காளர்கள் இலகுவில் இணங்கண்டு கொள்ள முடியாதிருந்திருக்கும். தேவைகள் மதிப்பீடு தொடர்பான கூட்டமைப்பின் முழுமையான ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட மற்றும் பங்கேற்பு ரீதியான அணுகுமுறை, நல்லிணக்கம் எதிர்கொண்டுவரும் உணர்வுசார் தடைகளை நிர்ணயித்துக் கொள்வதற்கான ஆற்றலை வழங்கும் விடயத்தில் தாக்கமானதாக இருந்து வந்துள்ளது. போர் குறித்த ஒவ்வொரு சமூகத்தினதும் உணர்வுகளை புரிந்து கொள்வது மோதலுக்கான மூல காரணங்கள் மற்றும் தூண்டுதல்கள் என்பவற்றில் நேர்மறையான விதத்தில் தாக்கங்களை எடுத்துவரக்கூடிய நிலைமாறுகால நீதி தலையீடுகளை மேற்கொள்வதற்கு இலங்கையர்களுக்கு உதவக்கூடிய இயலுமையை கூட்டமைப்புக்கு வழங்கும்.

### நிலைமாறு கால நீதியில் பயனுள்ள விதத்தில் பங்கேற்கும் பொருட்டு உள்ளூர் மக்களின் ஆற்றலை கட்டியெழுப்புதல்

தேவைகள் மதிப்பீடு தீர்மானம் 30/1 நிறைவேற்றப்பட்டதனையடுத்தும் பெரும் எண்ணிக்கையிலான சர்வதேச அரசு சாரா அமைப்புக்கள் நாட்டுக்குள் வந்துள்ளன. அந்த நிலையில், உள்ளூர் அரச சாரா அமைப்புக்களுடன் ஒரு நாள் கலந்தாலோசனைகள் மற்றும் ஒரு நாள் நிலைமாறு கால நீதி பயிற்சிகள் என்பன கூட்டாக நடத்தப்பட்டுள்ளன. அவசர பயிற்சி நெறிகளிலிருந்து பங்கேற்பாளர்கள் நிலைமாறு கால நீதி தொடர்பாக பெற்றுக்கொண்டிருக்கும் அறிவை உரிய விதத்தில் நடைமுறைப்படுத்த முடியாதவர்களாக இருந்து வருகின்றார்கள் என்ற விடயத்தை கருத்திட்டப் பங்காளர்கள் கண்டறிந்திருந்தனர். அதற்குப் பதிலாக, நிலைமாறு நீதி தொடர்பான அவர்களுடைய புரிந்துணர்வு நான்கு தூண்களைக் கொண்ட அடிப்படை அறிவுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தது.

பெரும்பாலான பங்கேற்பாளர்கள் குறிப்பிட்ட ஒரு வழிமுறையின் பிரயோகம் அல்லது இலங்கையின் பின்புலத்தில் அது எடுத்துவரக்கூடிய தாக்கம் என்பவற்றை நிர்ணயித்துக் கொள்ள முடியாதவர்களாக இருந்து வந்தனர்.

இந்த முடிவுகள் காரணமாக, நிலைமாறு கால எண்ணக்கருக்கள் மற்றும் செயல்முறைகள் என்பன தொடர்பான நுட்பங்களை பல்வேறு நாடுகளின் பாடங்களுக்கு ஊடாக கற்றுக்கொடுக்கும் ஒரு செயலமர்வு முறையை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானித்தார்கள். மேலும், ஒவ்வொரு பாடமும் இலங்கை தொடர்பாக பொருத்தப்பாட்டைக் கொண்டிருக்கும் மட்டத்தைக் கண்டறிவதற்கென சிறு அளவிலான குழுக் கலந்துரையாடல்களுக்கும் அவர்கள் அனுசரணை வழங்கினார்கள். இந்த அணுகுமுறை இலங்கை தொடர்பாக பின்பற்றக்கூடிய உத்திகளை இனங்கண்டு கொள்வதற்கு பங்கேற்பாளர்களுக்கு வாய்ப்பளித்ததுடன், களத்தில் புதிதாக உருவாகிவரும் தேவைகளுக்கு எதிர்வினையாற்றும் கூட்டமைப்பின் விருப்பினையும் எடுத்துக்காட்டியது. மேலும், கருத்திட்ட பங்காளர்கள் பெரும் எண்ணிக்கையிலான ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து அறிந்திருந்ததுடன், இரட்டிப்பாக்கலை தவிர்த்துக்கொள்ளும் விதத்திலும், ஒருங்கிணைக்கப்பட்ட நிலைமாறு கால நீதி முறைமை ஒன்றுக்கு பங்களிப்புச் செய்யும் விதத்திலும் ஏனைய செயற்பாடுகளை திட்டமிட்டிருந்தார்கள்.

ஆற்றலை கட்டியெழுப்பும் செயலமர்வுகள் நம்ப முடியாதளவில் பொருத்தப்பாட்டினை கொண்டுள்ளன என்ற விடயத்தை பெரும்பாலான சிவில் சமூக பங்கேற்பாளர்கள் கண்டறிந்து கொண்டார்கள். ஏனைய நாடுகளின் உதாரணங்கள் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை சாதித்துக்கொள்வதற்கு அவசியமான நேரம், நிதிகள் மற்றும் நிபுணத்துவ அறிவு என்பவற்றை அறிந்து கொள்வதற்கு பங்கேற்பாளர்களுக்கு இயலுமையை வழங்கியது. இச்செயலமர்வுகள் பொறுப்புக்கூறல் தொடர்பான தனது எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்வதற்கு உதவியிருந்தன என ஒரு தமிழ் பங்கேற்பாளர் குறிப்பிட்டார். நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளின் உள்ளார்ந்த வரையறைகள் மற்றும் அவற்றின் அரசியல் விருப்பில் பெருமளவுக்கு தங்கியிருக்கும் நிலை என்பவற்றின் காரணமாக அனைத்து தேவைகளையும், அனைத்து பிரச்சினைகளையும் நிறைவேற்றி வைக்க முடியாது என்ற விடயத்தை தான் புரிந்து கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். பல்வேறு இனங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் பல பங்கேற்பாளர்கள் ஏனைய பல நாடுகள் தமது நிலைமாறு கால நீதி தொடர்பான முயற்சிகளின் போது தனித்துவமான சவால்களையும், பல்வேறு அளவுகளிலான வெற்றிகளையும் சாதித்துக் கொண்டுள்ளன என்ற விடயத்தை கற்றதன் மூலம் இது தொடர்பாக தமக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாக கூடத் தெரிவித்திருந்தனர். மிகவும் திட்டவட்டமான விதத்தில் இலங்கை தொடர்பாக ஒரு சில திட்டவட்டமான பாடங்களை ஏற்று, பிரயோகிப்பது குறித்து அவர்கள் மகிழ்ச்சியை தெரிவித்தார்கள். எனவே, உதாரணத்தின் மூலம் கற்றுக்கொடுப்பது நிலைமாறு காலநீதி எண்ணக்கருக்களின் நடைமுறை பிரயோகத்தை எடுத்துக்காட்டும் விடயத்தில் மிகவும் தாக்கமானதாக இருந்து வருகின்றது. இலங்கையின் செயன்முறையில் பங்கேற்க விரும்பும் பங்கீடுபாட்டாளர்களை பொறுத்தவரையில் இது மிகவும் பொருத்தமான ஒரு செயலாக இருந்து வருகின்றது. மிகச்சிறந்த நடைமுறைகளை நிகழ்ச்சித்திட்டங்களுள் எடுத்து வருவதற்கான ஆற்றலைக் கொண்டிருக்கும் பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் நிலைமாறுகால நீதி தொடர்பான தலையீடுகளின் தாக்கம் மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய தன்மை என்பவற்றுக்கும் இந்த அறிவு பங்களிப்புச் செய்யும்

*“இச்செயலமர்வுகள் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் பிராந்திய கண்ணோட்டத்திலிருந்து தமது யதார்த்தங்கள் குறித்து உரையாடுவதற்கும், நிலைமாறு கால நீதிச் செயன்முறைகள் அனைத்து தரப்பினர் தொடர்பாகவும் எடுத்துவரக்கூடிய தாக்கங்கள் குறித்த ஒரு பொதுவான புரிந்துணர்வை எட்டுவதற்கும் ஒரு வெளியை வழங்கின.”*

-கொழும்பில் இடம்பெற்ற ஆற்றலைக் கட்டியெழுப்பும் செயலமர்வில் பங்கேற்ற ஒரு சிங்கள ஆண் பங்கேற்பாளர் - பல இனங்கள் மற்றும் சமயங்கள் என்பவற்றைச் சேர்ந்த பெருந்தொகையான பங்கேற்பாளர்களினால் பகிர்ந்து கொள்ளப்பட்ட ஒரு உணர்வை வெளிப்படுத்தி காட்டிய பொழுது

## சிவில் சமூகத்தின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கு பங்கேற்பு எதனையும் மற்றும் விதித்தித்துரைக்காத ஒரு அணுகுமுறையை மேற்கொள்ளல்

சிவில் சமூக அமைப்புக்களுக்கென நடத்தப்பட்ட மூன்று செயலமர்வுகள் நெடுகிலும் பங்கேற்பாளர்கள் செயலமர்வுகளின் பங்கேற்பு மற்றும் எதனையும் விதித்துரைக்காத இயல்பினையும் அதேபோல புதிதாக தோன்றும் தேவைகளின் அடிப்படையில் நிகழ்ச்சி நிரலை மாற்றியமைத்துக் கொள்ளும் விடயத்தில் கருத்திட்ட பங்கேற்பாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் - இலகுபடுத்துநர்கள் காட்டிய நெகிழ்ச்சித்தன்மையையும் பாராட்டினார்கள். உதாணரமாக, யாழ்ப்பாண செயலமர்வின் இரண்டாவது தினத்தின் போது தமிழ் பங்கேற்பாளர் ஒருவர் தனது வாழ்க்கை அனுபவத்தில் எத்தகைய குறிப்பிடத்தக்க மாற்றங்களையும் காணாத நிலையில் தான் பெருந்தொகையான நிலைமாறு காலநீதி செயலமர்வுகளில் பங்கேற்றிருக்கும் விடயம் குறித்து விரக்தியுணர்வை நிலையை வெளிப்படுத்திக் காட்டினார். முன்னைய செயலமர்வுகள் அனைத்தும் செயலின்றி வெறுமனே சொற்களை பயன்படுத்திய செயலமர்வுகளாக இருந்து வந்தன என்ற விடயம் குறித்து அவர் கவலை கொண்டிருந்தார். அவருடைய இந்த ஆவேசக் குரலையடுத்து, இலகுபடுத்துநர்கள் சபையினருக்கு இது குறித்து கலந்தாலோசனை நடத்துவதற்கு வாய்ப்பளித்தனர். இச்செயலமர்வில் பங்கேற்ற பலர் - அவர்கள் அனைவரும் தமிழர்களாக இருந்து வந்தனர் - பல்வேறு செயலமர்வுகளில் பங்கேற்றதன் மூலம் தமக்கு ஏற்பட்டிருக்கும் களைப்பு உணர்வை வலியுறுத்திக் கூறினார்கள். ஆனால், இச்செயலமர்வு அதன் பங்கேற்பு, விதித்துரைக்காத மற்றும் வெளியீட்டை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை காரணமாக ஒரு தனித்துவமான செயலமர்வாக இருந்து வருகின்றது எனப் பலர் கருதினார்கள். ஒரு தமிழ் பெண்மணி செயலமர்வில் தொடர்ந்து பங்கேற்குமாறு ஒவ்வொருவரிடமும் வலிந்து கேட்டுக்கொண்ட பொழுது இந்த உணர்வை வெளிப்படுத்திக் காட்டினார். எதிர்கால சந்ததியினரின் நலனைக் கருத்தில் கொண்டு அனைவரும் நிலைமாறு கால நீதிச் செயன்முறையில் பங்கேற்க வேண்டுமென அவர் கூறிப்பிட்டார்.

இலங்கையில் பெருந்தொகையான விளிம்பு நிலைக் குழுக்கள் அநேகமாக மௌனிகளாக்கப்பட்டுள்ளனர்; அதன் காரணமாக கூட்டமைப்பின் பங்கேற்பு அணுகுமுறை, நிலைமாறு காலநீதி வழிமுறைகளுக்கு கருத்துக்களை வழங்கும் பொருட்டு சிறுபான்மைக்குழுக்கள் தமது கரிசனைகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான வெளியினை வழங்கியது. இந்த முறைமையியல் தமது கருத்துக்களை முன்வைப்பதற்கான பங்கேற்பாளர்களின் தேவைகளுக்கு எதிர்வினையாற்றியதுடன், கருத்திட்ட பங்காளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் ஆகியோருக்கு மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்பியது. இச்செயலமர்வுகளின் “பங்கேற்பாளரை முதன்மைப்படுத்திய” இயல்பு மற்றும் பங்கேற்பாளர்களின் தேவைகளை கவனத்தில் எடுக்கும் பொருட்டு நெகிழ்ச்சித்தன்மையுடன் கூடிய நிகழ்ச்சி நிரல்கள் பயன்படுத்தப்பட்டமை ஆகிய அனைத்தும் தமக்கு இச்செயன்முறை தொடர்பான ஒரு உரித்துணர்வை வழங்கியுள்ளது என ஒரு தமிழ் பங்கேற்பாளர் குறிப்பிட்டார். இது மறுபுறத்தில் பங்கேற்பாளர்களின் அர்ப்பணிப்புணர்வு மற்றும் ஈடுபாடு என்பவற்றை போஷித்து வளர்த்திருப்பதுடன், தலையீடுகளின் நிலைத்து நிற்கக்கூடிய தன்மைக்கு இந்த இரு அம்சங்களும் அத்தியாவசியமாக இருந்து வருகின்றன.

மேலும், செயலமர்வுகளின் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பங்கேற்பு சார்ந்த இயல்பு குழுக்களுக்கு இடையில் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு வசதி செய்து கொடுத்ததுடன், நல்லிணக்கத்திற்கு ஆதரவளிக்கும் கூட்டமைப்பின் குறிக்கோள்கள் தொடர்பாக பெருமளவுக்கு பயனுள்ளதாக இருந்து வந்தது. மட்டக்களப்பிலும், கொழும்பிலும் பங்கேற்பாளர்கள் ஆற்றலைக் கட்டியெழுப்பும் செயலமர்வுகளில் காணப்படும் பன்முகத்தன்மையை பெரிதும் மதித்தனர். மேலும், தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு குறித்தும், வேறு விதத்தில் தம்மால் எந்த விதத்திலும் தொடர்பு கொள்ள முடியாதிருந்திருக்கும் தனிநபர்களின் குரல்களுக்கு செவிமடுக்க வாய்ப்புக் கிடைத்தமை குறித்தும் அவர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்திருந்தனர்.



இலங்கையில் வன்முறையை எதிர்கொண்டு தப்பிப் பிழைத்திருக்கும் 20 பெண்மணிகளுக்கென 2017 ஆகஸ்ட் மாதத்தில் நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான உலகளாவிய முன்னெடுப்பு கூட்டணியினால் (GIJTR Consortium) நடத்தப்பட்ட உடல் வரைபடத் தயாரிப்பு செயலமர்வு

**நிலைமாறு கால நீதியில் அரசாங்க செயற்பாட்டாளர்களின் பங்கேற்பை பெற்றுக்கொள்வதும், சிறுபான்மையினரின் பிரச்சினைகளும்**

பெருந்தொகையான நேர்மறையான பெறுபேறுகளுக்கு வழிகோழிய சிவில் சமூக அமைப்புக்களுக்கான செயலமர்வுகளை போலன்றி, குறிப்பாக, அரசாங்க அதிபர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் ஆகியோரைக் கொண்ட அரசாங்கத்தின் சிவில் அதிகரிளுக்குகென நடத்தப்பட்ட செயலமர்வுகளின் ஆக்கபூர்வத்தன்மை குறைவானதாகவே இருந்து வந்தது. அநேகமாக அனைத்துப் பங்கேற்பாளர்களும் நிலைமாறு கால நீதிச் செயன்முறை குறித்து தமது சம்பந்தப்பட்ட அமைச்சுக்களினால் தமக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என முறைப்பாடு செய்ததுடன், அமைச்சின் பணிப்புரை இல்லாத நிலையில் நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்துடன் ஒருங்கிணைப்புடன் செயற்படுவதற்கான தமது தயக்க நிலையை வெளிப்படுத்தியிருந்தார்கள். மேலும், சிவில் சமூக அமைப்புக்களின் பங்கேற்பாளர்கள் குழுக்களுக்கு இடையிலான உரையாடல்களை மேற்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்திருந்த அதே வேளையில், அரசாங்க அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாக பெருமளவுக்கு வேறுபட்ட கருத்துக்களை கொண்டிருந்தார்கள். உதாரணமாக, தென்னிலங்கையில் பணியாற்றிவரும் ஒரு சில அதிகாரிகள் தமிழ் மக்கள் குறித்து பாரபட்ச இயல்பிலான ஒரு சில கருத்துக்களை தெரிவித்திருந்த போதிலும், வடக்கு கிழக்கில் பணியாற்றிவரும் சிங்கள அதிகாரிகள் காணி அபகரிப்பு மற்றும் பொலிஸ் அச்சுறுத்தல் என்பவற்றை உள்ளடக்கிய தமிழ் மக்களின் கரிசனைகள் போன்ற குறிப்பிட்ட ஒரு சில பிரச்சினைகள் தொடர்பாக பெருமளவுக்கு அனுதாப உணர்வை வெளிப்படுத்தியிருந்தார்கள். உள்ளூர் அரசாங்க அதிகாரிகளில் கணிசமான எண்ணிக்கையினர் - அரசாங்க அதிபர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் ஆகியோர் - சிங்களவர்களாக இருந்து வருவதால், தமது கருத்துக்களை பங்களிப்புச் செய்யுமாறு இலகுபடுத்துநர்கள் சமூகமளித்திருந்த ஒரு சில தமிழ் பங்கேற்பாளர்களை தூண்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்விதம் கருத்துக்களை முன்வைப்பது இச்செயலமர்வை சீர்குலைக்க முடியும் என்றும், அதன் விளைவாக பின்னர் பழிவாங்கல்கள் இடம்பெற முடியும் என்றும் கருதி ஒரு சிலர் பேசுவதற்கு பயப்பட்டார்கள். உள்ளூர் மற்றும் மாகாண மட்ட அதிகாரிகளுக்கு மத்தியில் இச்செயலமர்வுகளின் விளைவாக ஒரு உடன்பாடு எட்டப்படவில்லை; எனினும், உள்ளூர் மட்ட அரசாங்க அதிகாரிகள் நிலைமாறு காலநீதிச் செயன்முறையை அங்கீகரிப்பதனை

உறுதிப்படுத்திக்கொள்வதற்கு தேவைப்படும் கருத்தொற்றுமையை கட்டியெழுப்ப வேண்டிய விடயத்தை அவர்கள் வலியுறுத்தியிருந்தார்கள். அரசாங்கத்தின் ஆதரவு கூட்டமைப்பின் பணிகளின் வினைத்திறன் மற்றும் தாக்கம் என்பவற்றின் மீது செல்வாக்குச் செலுத்த முடியும். மேலும், பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லிணக்கம் என்பன சம்பந்தப்பட்ட பெறுபேறுகள் என்பவற்றின் மீதும் செல்வாக்குச் செலுத்த முடியும்.

உதாரணமாக, நிலைமாறு கால நீதி குற்றங்களுக்கு பொறுப்புக் கூறவைக்கும் ஒரு செயற்பாடாக மட்டுமே இருந்து வருகின்றது என்ற தப்பெண்ணத்தை திருத்திக்கொள்வதற்கு இச்செயலமர்வுகள் உதவியிருந்தன. மேலும், அவை அரசாங்க அதிகாரிகளுக்கு மத்தியில் உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் குறித்த விழிப்புணர்வையும் அதிகரித்தது. அதன் விளைவாக, உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் தென்னிலங்கையில் அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களிலும், வடக்கில் வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களிலும் உள்ளூர் அரசாங்க அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான விதத்தில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. மேலும், மூத்த அரசாங்க அதிகாரிகள் தமது கனிஷ்ட ஊழியர்களுக்கு நிலைமாறு கால நீதி தொடர்பான மேலதிக பயிற்சியை வழங்குமாறு உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

### உள்ளூர் சமூகத்திற்கு சொந்தமான ஒரு ஒருங்கிணைப்பு பொறிமுறையை ஸ்தாபித்தல்

உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியத்தின் உருவாக்கத்துக்கு அனுசரணை மூலம் குறிப்பாக கொழும்பு மற்றும் நகர மையங்களுக்கு வெளியில் சிவில் சமூக அமைப்புக்களின் முயற்சிகளை பெருமளவுக்கு ஒருங்கிணைப்பது தொடர்பாகவும், தகவல்களை பரிமாறிக்கொள்வது தொடர்பாகவும் நிலவிவரும் தேவைக்கு கருத்திட்டத்தின் பங்கேற்பாளர்கள் நேரடியாக எதிர்வினையாற்றினார்கள். உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் உள்ளூர் சமூகத்திற்கு உரித்தான ஓர் அமைப்பு என்ற முறையில் நிலைமாறு கால நீதி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்து, உள்ளூர் சமூகங்கள் மற்றும் அமைப்புக்கள் என்பவற்றுக்கும், கொழும்பை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க நிறுவனங்களுக்கும் இடையில் ஒரு இடைத்தரகராக செயற்பட முடியும். உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியத்தின் ஸ்தாபிதம் பல்வேறு பிராந்தியங்களைச் சேர்ந்த சிவில் சமூக அமைப்புக்களுக்கு மத்தியில் உயரளவிலான அறிவுப் பரிமாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதுடன், தமது சக அமைப்புக்களுடன் வலயமைப்புக்களை உருவாக்கிக் கொள்வதற்கான வாய்ப்புக்களையும் வழங்குகின்றது. சிவில் சமூக அமைப்புக்களுக்கென நடத்தப்பட்ட ஆற்றல்களை கட்டியெழுப்பும் மூன்று செயலமர்வுகளிலும் பங்கேற்ற பங்கேற்பாளர்கள் ஏனைய நிலைமாறு கால நீதி செயலமர்வுகளைப் போலன்றி, கூட்டமைப்பினால் நடத்தப்பட்ட செயலமர்வுகள் வெளியில் தெரியத்தக்க பெறுபேற்றினை எடுத்துவந்துள்ளது என்ற விடயத்தை பாராட்டுடன் குறிப்பிட்டார்கள். உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியமே அந்தப் பெறுபேறாகும். அதன் பின்விளைவாக, உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியத்துக்கு கூட்டமைப்பை வழங்கும் ஆதரவு இலங்கை சிவில் சமூக அமைப்புக்களின் பங்களிப்புக்களை வலுப்படுத்த முடியும். இது தவிர உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியம் உள்ளூர் சமூகத்திற்கு உரித்தானதாக இருந்துவரும் காரணத்தால் அதன் பயன்கள் நிலைத்து நிற்கக் கூடியவையாக உள்ளன.

*"பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உள்ளூர் NGO களை சேர்ந்தவர்கள் ஆகியோர் நிலைமாறு கால நீதிப் பிரச்சினைகள் தொடர்பாக செயற்படுதல் வேண்டும். கொழும்பு NGO கள் வடக்கிலுள்ள பிரச்சினைகளிலிருந்தும், சர்வதேச NGO களுடன் அவை கொண்டிருக்கும் தொடர்புகளிலிருந்தும் (உள்ளூர் மக்களின் செலவில்) பயனடைந்துவருகின்றன".*

- வவுனியா இலக்குக்குழு கலந்துரையாடலில் தமிழ் ஆண் பங்கேற்பாளர

உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியத்தின் பிரதிநிதிகள் வேறுபட்ட இனத்துவ சமயக் குழுக்களிலிருந்து வருவதுடன், தமது சமூகங்களில் நன்மதிப்பை பெற்றுக் கொண்டுள்ளார்கள். இந்த ஒன்றியம் ஏற்கனவே அரசாங்க அதிபர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வைத் தூண்டும் கூட்டங்களை நடத்தியிருப்பதுடன், ஒன்றியத்திற்கு ஆதரவளிப்பதற்கும், அதன் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் விடயத்தில் அதிகாரிகளை வெற்றிகரமான

முறையில் இணங்கச் செய்துள்ளது. உண்மை மற்றும் நல்லிணக்க ஒன்றியத்திற்கு கூட்டமைப்பு தொடர்ச்சியாக வழங்கி வரும் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி இலங்கையின் நிலைமாறுகால நீதிச் செயன்முறையின் பங்கேற்பதற்கான உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்களின் ஆற்றலை நிலைத்திருக்கச் செய்யும். வருங்கால ஆற்றல் அபிவிருத்தி மற்றும் “பயிற்றுனர்களை பயிற்றுவிக்கும்” செயற்பாடுகள் என்பன இந்த ஆதரவில் அடங்குகின்றன. இறுதியாக, பொறிமுறைகளை உருவாக்குவதிலும்ஈ, தேசிய மட்டத்தில் முன்னேற்றத்தை எடுத்து வருவதிலும் அரசாங்கத்தின் தரப்பில் நிலவி வரும் தாமதங்களுக்கு மத்தியிலும் கூட, இந்த ஒன்றியத்தின் செயற்பாடுகள் உள்ளூர் மட்டத்தில் நிலைமாறுகால நீதி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்படுவதை உறுதிப்படுத்தும்.



1975-1990 காலப் பிரிவின் போது லெபனானில் உக்கிரமாக இடம்பெற்ற உள்நாட்டு போர் காரணமாக அந்நாடு எதிர்கொண்ட வன்முறையுடன் கூடிய கடந்த கால நிகழ்வுகளை ஆவணப்படுத்துவதற்கென UMAM ஆவணப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி நிலையம் பல்வேறு வகைகளைச் சேர்ந்த வரலாற்றுச் சான்றுகள் மற்றும் கலைப் பொருட்கள் என்பவற்றை சேகரித்து, பாதுகாத்து, பகிரங்கமாக மேம்படுத்துவதன் மூலம் உதவுகின்றது.

Photo credit: Wael Hamzeh, UMAM Documentation and Research

# அத்தியாயம் 4

## மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நிலைமாறு கால நீதி கல்விக் கழகம்

### மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தில் காணப்படும் நிலை

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க (MENA) பிராந்தியம் வன்முறை சம்பவங்கள் இடம்பெற்ற கால கட்டங்களில் அல்லது எதேச்சாதிகார ஆட்சி இடம்பெற்ற கால கட்டங்களையடுத்து தமது நிலைமாறுக் கால செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றன; அல்லது ஏற்கனவே இடம்பெற்று வரும் அத்தகைய செயன்முறைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றன. இந்த நிலையில், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றன[1]. அத்தகைய முயற்சிகளின் தாக்கம் மற்றும் நிலைத்திருக்கக் கூடிய தன்மை என்வற்றை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஆகிய தரப்புக்களையும் உள்ளடக்கிய உள்ளூர் பங்கீடுபாட்டாளர்கள் உள்ளூர் தேவைகள் மற்றும் கலாசாரங்கள் என்பவற்றுக்கும் நீதி குறித்த புரிந்துணர்வுக்கும் பங்களிப்புச் செய்யக் கூடிய நிலைமாறு கால நீதி வழிமுறைகளை அபிவிருத்தி செய்வதிலும், அமுல் செய்வதிலும் சம்பந்தப்படுதல் அவசியமாகும். எவ்வாறிருப்பினும், மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தில் இதுவரையில் இடம்பெற்று வந்திருக்கும் பெரும்பாலான நிலைமாறு கால நீதி நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய மட்டத்திலான முயற்சிகள் மீதும், பாரம்பரிய செயற்பாட்டாளர்கள் மீதும் அதிக அளவுக்கு கவனம் செலுத்தி வந்துள்ளன. இந்த பயிற்சிகள் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டம் என்பவற்றை மீளாய்வு செய்வதுடன், குற்றவியல் வழக்குத் தொடுப்புக்கள், சத்திய விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் இழப்பீடுகள் போன்ற அரசினால் நெறிப்படுத்தப்பட்டு வரும் நிலைமாறு கால நீதி செயற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளன. உள்ளூர் சமூகங்களின் பங்கேற்பை பெற்றுக் கொள்வதற்கு பதிலாக அவை சர்வதேச நிபுணத்துவத்தை இறக்குமதி செய்யும் ஒரு போக்கை கொண்டிருப்பது இங்குள்ள பிரச்சினையாகும். இந்நிலைமை தேசிய மற்றும் பிராந்திய சவால்கள் தொடர்பாக தீர்வுகளை எடுத்து வருவதில் கூட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் உள்ளூர் மக்கள் ஆற்றலை இல்லாமல் செய்துள்ளது. அதன் பின்விளைவாக, மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தில் உள்ளூர் செயற்பாட்டாளர்களை - குறிப்பாக, பாரம்பரியமற்ற செயற்பாட்டாளர்களை - நிலைமாறு கால நீதி தொடர்பாகவும், சமூக மட்டத்திலான கருத்திட்டங்களை வடிவமைத்து, அவற்றுக்கு செயல்வடிவம் கொடுப்பது எப்படி என்பது குறித்தும் பயிற்றுவிக்க வேண்டிய ஒரு தேவை இருந்து வருகின்றது.

### மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நிலைமாறு கால நீதி கல்விக் கழகம் ஒரு பொது நோக்கு

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தின் நிறைவேற்றப்படாதிருக்கும் தேவைகளை கவனத்தில் எடுக்கும் பொருட்டு நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான உலகளாவிய முன்னெடுப்பு கூட்டமைப்பின் 4 பங்காளர்கள் - மனச்சாட்சிசார் மையங்களுக்கான சர்வதேச கூட்டணி வன்முறை மற்றும் நல்லிணக்கம் என்பன தொடர்பான ஆய்வு நிலையம், கௌதமாலா தடயவியல் மானிடவியல் மன்றம் மற்றும் பொது சர்வதேச சட்ட மற்றும் கொள்கைக் குழு என்பன - 2016 ஜனவரி மாதம் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நிலைமாறு கால நீதி கல்விக் கழகத்தை துவக்கி வைத்தன. இந்தக் கல்விக் கழகம் வழக்குத் தொடுத்தல்கள், உண்மையைக் கூறுதல், இழப்பீடுகள், நிறுவன ரீதியான சீர்த்திருத்தம் மற்றும் நினைவேந்தல் செயற்பாடுகள் போன்ற பரந்த வீச்சிலான வழிமுறைகளை எடுத்து விளக்குவதன் மூலம் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கும், சமூகங்களை சுகப்படுத்துவதற்குமென பொறுப்புக் கூறும் நிலை குறித்த ஒரு ஒட்டுமொத்தமான ஓர் அணுகுமுறையை பின்பற்றியது. தடய அறிவியல், நினைவேந்தல் செயற்பாடுகள், உள சமூக ஆதரவு, சமூகவியல், மனித உரிமைகள் மற்றும் சட்டம் ஆகிய துறைகளில் கூட்டமைப்பின் பங்காளர்கள் பெற்றுக் கொண்டிருக்கும் பரந்த அனுபவத்தை பயன்படுத்திக் கொண்டதன் மூலம் நிலைமாறு கால நீதி என்ற விடயத்தை அது ஒரு பல்துறைசார் கண்ணோட்டத்தில் நோக்கியது. மேலும், பல்துறைசார் கண்ணோட்டமொன்றை வழங்கும் நோக்கத்துடன் இலகுபடுத்தப்பட்ட செயலமர்வுகளுக்குள் பங்காளர்களின்

நிபுணத்துவத் துறைகள் கூட்டாக ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன. உதாரணமாக, உண்மையைக் கூறுதல் தொடர்பான சமர்ப்பணத்தை பொது சர்வதேச சட்டம் மற்றும் கொள்கை குழு (PILPG) மற்றும் வழிமுறை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆய்வு நிலையம் (CSVR) அமைப்பு என்பவற்றின் இலகுபடுத்துனர்கள் மேற்கொண்டார்கள். அவர்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆவணப்படுத்தல் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடியதுடன், மனச்சாட்சிசார் மையங்களின் சர்வதேச கூட்டணியின் இலகுபடுத்துனர்கள் போருக்குப் பின்னர் வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்த்திருத்தங்கள் தொடர்பான உதாரணங்களை பகிர்ந்து கொண்டார்கள்.

உள்ளூர் சமூகத்தினால் முன்னெடுக்கப்படும், உரிய பின்புலம் குறித்த கூருணர்வைக் கொண்டிருக்கும் நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளை உருவாக்குவதும், அவற்றில் பங்கேற்பதில் அடிமட்ட மற்றும் விளிம்பு நிலை சமூகங்களின் ஈடுபாட்டினை விரிவாக்கிக் கொள்வதும் இக் கல்விக் கழகத்தின் நோக்கமாக இருந்து வந்தது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய பாதிக்கப்பட்ட குடித்தொகையினர் ஆகியோர் இது மேற்கொள்ளப்பட்டது. இக்குறிக்கோளை சாதித்துக் கொள்ளும் பொருட்டு முதலில் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தைச் சேர்ந்த பாரம்பரிய மற்றும் பாரிம்பரியமற்ற செயற்பாட்டாளர்களின் நிலைமாறு கால நீதி தொடர்பான அறிவுத்தளத்தை - குறிப்பாக, உள்ளூர் சமூகங்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பங்கேற்பு வழிகளிலான நிலைமாறு கால நீதி தொடர்பான அறிவுத்தளத்தை - விரிவாக்கிக் கொள்வதற்கு கழகம் எதிர்பார்த்தது[3]. அதன் இரண்டாவது குறிக்கோள் மோதல் அல்லது பாதுகாப்புத் துறை அச்சுறுத்தல்கள் காரணமாக அபாய நிலைகளை எதிர்கொண்டு வருபவர்களுக்கு ஆதரவளிப்பதற்கென நிலைமாறு கால நீதி தொடர்பான செயற்பாட்டாளர்களின் பிராந்திய வலையமைப்பை ஸ்தாபித்து, அதனை வலுப்படுத்துவதாகும். இறுதியாக, நிலைமாறு கால நீதி தெரிவுகளை நிர்ணயித்துக் கொள்வதிலும், உள்ளூர் தேவைகளுக்கு எதிர்வினையாற்றக் கூடிய முன்முயற்சிகளை அபிவிருத்தி செய்வதிலும் சமூகத்தின் பங்கேற்பை அதிகரித்துக் கொள்வதற்கு இக் கல்விக் கழகம் முயற்சிகளை மேற்கொண்டது.

இக்கல்விக் கழகம் 2016 ஜனவரி மாதம் தொடக்கம் 2017 ஏப்ரல் மாதம் வரையில் இடம்பெற்றதுடன், அல்ஜீரியா, எகிப்து,ஈராக், மொரோக்கோ, சிரியா, டியுனீசியா மற்றும் யெமன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற செயற்பாட்டாளர்களுடன் இக்காலக் கட்டத்தில் நான்கு சந்திப்புக்களை நடத்தியது. மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியம் எங்கிலுமிருந்து கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்களுக்கு 120 விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. இந்தக் கல்விக் கழகம் வழங்குவதைப் போன்ற பயிற்சி வசதிகளுக்கான உள்ளூர் தேவை மற்றும் அது தொடர்பாக மக்கள் காட்டி வரும் அக்கறை என்பவற்றை இது எடுத்துக் காட்டியது. தமது உத்தேச நிலைமாறு கால நீதி கருத்திட்டங்களின் வலிமையை அடிப்படையாகக் கொண்டு கூட்டமைப்பின் பங்காளர்கள் 24 பங்கேற்பாளர்களை தெரிவு செய்தார்கள். இலக்குச் சமூகத்துடனான அவர்களுடைய பிணைப்புக்களும் கவனத்தில் எடுக்கப்பட்டிருந்தன. நாடு, பால்நிலை மற்றும் கருத்திட்ட குறிக்கோள் என்பன தொடர்பாக பன்முகத் தன்மையை உறுதிப்படுத்தும் விதத்தில் தெரிவு மேற்கொள்ளப்பட்டது. 19 பங்கேற்பாளர்கள் இந்தக் கல்வி கழகத்திலிருந்து பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்கள்[4].

கல்விக் கழகம் செயற்பட்டு வந்த காலப் பிரிவின் போது பங்கேற்பாளர்கள் ஓர் அறிமுக செயலமர்விலும், உப தலைப்புக்கள் மீது கவனம் செலுத்திய மூன்று மேலதிக செயலமர்வுகளிலும் பங்கேற்றார்கள். ஒவ்வொரு செயலமர்விலும் பரந்த வீச்சிலான தலைப்புக்கள் விரிவாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், பின்வரும் உப தலைப்புக்களை அவர்கள் மிக விரிவாக கற்றுக் கொண்டார்கள்: உண்மையைக் கூறுதல், நிறுவன ரீதியான சீர்த்திருத்தம் மற்றும் நிலைமாறு கால நீதியில் பொருளாதார சமூக உரிமைகள். பங்கேற்பாளர்கள் ஏற்கனவே தொடர்புகளை கொண்டிருக்கும் சிவில் சமூகத்தினர் மற்றும் காணாமற் போயிருக்கும் நபர்களின் குடும்பத்தினர் போன்றவர்களின் பங்கேற்புக்களை பெற்றுக் கொள்வது எவ்வாறு என்பது போன்ற உள்ளூர் சமூகங்களில் செயற்பாடுகளை வடிவமைத்து, மேற்கொள்ளும் நுட்பங்கள் குறித்து கற்றுக் கொண்டார்கள். தேவை மதிப்பீடுகளை நடத்துதல், பரப்புரை முன்முயற்சிகள் மற்றும் கொள்கை பரிந்துரைகள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல், தமது உள்ளூர் தலையீடுகளை தக்க வைத்துக் கொள்வதற்கென நிதி திரட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் என்பவற்றை மேற்கொள்வதற்கென பங்கேற்பு அணுகுமுறைகளை பயன்படுத்துவதற்கென அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருந்தார்கள். கல்விக் கழகம் முன்னெப்பொழுதும் இருந்திராத அளவிலான கருத்திட்ட கருக்கட்டல் கூறொன்றினை கொண்டிருந்ததுடன், அதற்கூடாக தாமே தெரிவு செய்திருக்கும் தலையீடுகளை



கோலாலம்பூரில் 2016 நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற செயலமர்வொன்றில் பங்கேற்ற நிலைமாறு கால நீதி கல்விக் கழகம் மற்றும் நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பு என்பவற்றின் பங்காளர்கள்

அமுல் செய்வதற்கென உப நிதியளிப்புக்களை பெற்றுக் கொண்டார்கள். செயலமர்வுகள் மற்றும் கூட்டமைப்பு பங்காளர்களின் கலந்தாலோசனைகள் என்பவற்றின் அடிப்படையில் இத்தலையீடுகள் உருவாக்கப்பட்டிருந்தன. இறுதியாக, இக்கல்வி கழகத்தின் நடவடிக்கைகள் பெருமளவுக்கு அறபு மொழியில் நடத்தப்பட்டன; அல்லது செயற்பாடுகளின் போது ஆங்கில மொழியிலிருந்து அறபு மொழிக்கு சமகால மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. இது பொதுவாக மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தைச் சேர்ந்த பங்கேற்பாளர்களுக்கு நடத்தப்படும் பெரும்பாலான நிலைமாறு கால நீதிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பார்க்க வேறுபட்டதாக இருந்து வந்தது. ஏனெனில், அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் அறபு மொழியை பயன்படுத்தவில்லை.

## மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நிலைமாறு கால நீதி கல்விக் கழகம் குறித்த ஒரு மதிப்பீடு

உள்ளூர் பங்கீடுபாட்டாளர்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதற்கென இந்தக் கல்விக் கழகம் புதுமையான மற்றும் முழுமையான பல்துறைசார் முறையொன்றை பயன்படுத்தி வந்தமை காரணமாக இது ஒரு பெறுமதிமிக்க சம்பவக் கற்கையாக இருந்து வருகின்றது. உதாரணமாக, நிலைமாறு கால நீதி எதிர்கொள்ளும் தடங்கல்களுக்கான முதன்மை எதிர்வினைகளாக கருத்திட்ட கருக்கட்டல் காலம் மற்றும் வலையமைப்புக்களை உருவாக்குதல் என்பவற்றின் மூலம் இக் கல்விக் கழகம் ஒரு தனித்துவமான அணுகுமுறையை பின்பற்றியது. இக்கல்விக் கழகத்தின் நடவடிக்கைகளும், ஏனைய புத்தாக்கங்களும் இந்த அத்தியாயம் நெடுகிலும் விவரிக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்படுகின்றன. இந்த மதிப்பீடு பங்கேற்பாளர்கள் மற்றும் இலகுபடுத்துனர்கள் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட உள்ளீடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அது பிராந்திய மட்டத்திலான நிலைமாறு கால நீதி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகவும், பொதுவாக பயிற்சிகள் தொடர்பாகவும் கூட்டமைப்பின் பரிந்துரைகளுக்கு தகவல்களை வழங்குகின்றது.

இப்பிராந்தியத்தில் மோதலைத் தூண்டி வரும் பிரதான காரணிகள் மீது அது எடுத்து வந்திருக்கும் தாக்கம் போன்ற குறிப்பாக நீண்ட கால காரணிகள் குறித்து கல்விக் கழகத்தின் செயற்பாட்டினை துல்லியமாக மதிப்பீடு செய்வதற்கு இன்னமும் உரிய தருணம் வரவில்லை என்ற விடயத்தை கூட்டமைப்பு இங்கு குறிப்பிட விரும்புகின்றது. ஏனெனில், இந்த அத்தியாயத்தை எழுதுவதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னரேயே கல்விக் கழகம் அதன் செயற்பாடுகளை முடித்துக் கொண்டிருந்தது.

## செயலமர்வுகள் தொடர்பாக முழுமையான, பல்துறைசார் அணுகுமுறையொன்றை மேற்கொள்ளல்

இக்கல்விக் கழகம் நிலைமாறு கால நீதி தொடர்பான பங்கேற்பாளரின் அறிவையும், அதனை தமது சொந்த பின்புலங்களில் உபயோகிப்பது எப்படி என்பது குறித்த அறிவையும் கணிசமான அளவில் விருத்தி செய்திருந்தது. கோட்பாட்டின் மீது அல்லது நடைமுறையின் மீது முழுமையாக கவனம் செலுத்திய ஏனைய பயிற்சிகளுடன் ஒப்பிடும் பொழுது, இக் கல்விக் கழகம் பின்பற்றிய கூட்டு அணுகுமுறை நிலைமாறு கால நீதி தொடர்பாக பங்கேற்பாளர்களை பயிற்றுவிப்பதற்கென மிகவும் வினைத்திறன்மிக்க ஒரு முறைமையியலாக இருந்து வந்தது என பங்கேற்பாளர்கள் கருதினார்கள். இந்த விதத்தில் சம்பவக் கற்கைகளை அடிப்படையாகக் கொண்ட சமர்ப்பணங்களை முன்வைப்பதற்கூடாவும், பங்கேற்பாளர்களின் உத்தேச கருத்திட்டம் குறித்த தமது தனிப்பட்ட பின்னூட்டல்களை வழங்கியதன் மூலமும் செயலமர்வுகளின் போது கூட்டமைப்பின் பங்காளர்களும் நிலைமாறு கால நீதி தொடர்பான பல்வேறு விடயங்களை கவனத்தில் எடுத்திருந்தார்கள். அது தவிர, கல்விக் கழகத்தின் பல்துறைசார் இயல்பு காரணமாக, உண்மையை கூறுவதில் தடய அறிவியலின் வகிபங்கு, பாதிக்கப்பட்டவர்களின் உள சமூக தேவைகள் மற்றும் சுய பராமரிப்பு போன்ற பாரம்பரியமற்ற தலைப்புக்களை உள்வாங்கியிருந்த கருத்திட்டங்களை உருவாக்கிக் கொள்ளக் கூடிய ஆற்றலை பங்கேற்பாளர்கள் கொண்டிருந்தார்கள். இந்த அனைத்துத் தலைப்புக்களும் அவர்களுடைய நிலைமைகளை பொறுத்தவரையில் பெருமளவுக்குப் பொருத்தப்பாட்டினை கொண்டிருந்தன. இப்பிராந்தியத்தில் நிலவி வரும் நிலைமாறு கால நீதி தொடர்பான பிரச்சினைகளின் பன்முகத் தன்மைகளின் பின்னணியில், பல்வேறு துறைகள் மற்றும் செயன்முறைகள் குறித்த கூட்டமைப்பு பங்காளர்களின் அனுபவங்கள் பங்கேற்பாளர்களின் பரந்த வீச்சிலான தேவைகளுக்கு எதிர்வினையாற்றுவதற்கு நிர்ணயகரமாக அவசியமாக இருந்து வந்ததுடன், அவற்றை பங்கேற்பாளர்கள் மிகச் சிறந்த முறையில் வரவேற்றார்கள். பங்காளர்களின் திறன்கள் ஒருங்கிணைக்கப்பட்டமையின் விளைவாக, செயலமர்வுகள் செயல்திறன்மிக்க விதத்தில் இலகுபடுத்தப்பட்டிருந்தன. கூட்டமைப்பின் பல்வேறு நிபுணத்துவத் துறைகள், அதன் பங்காளர் அமைப்புக்களின் ஆளணி மற்றும் வலையமைப்புக்கள் என்பவற்றிலிருந்து நேரடியாக இருந்து வந்த காரணத்தினால் வெளிப்பயிற்றுனர்களுக்கான தேவையை அது இல்லாமல் செய்தது.

கல்விக் கழகத்தினால் பின்பற்றப்பட்ட முழுமையான அணுகுமுறை புத்தாக்க இயல்பிலான கருத்துக்களை போஷித்து வளர்த்தது மட்டுமன்றி, பங்கேற்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட வெளி நிதிப்படுத்தலுக்கான விண்ணப்பங்களுக்கும் ஒரு ஊக்கியாக செயற்பட்டு வந்தது. உதாரணமாக, கல்விக் கழகம் முடிவுக்கு வந்த பின்னர் யெமன் நாட்டைச் சேர்ந்த பங்கேற்பாளர் ஒருவர் பொறுப்புக் கூறும் செயற்பாட்டில் நினைவேந்தலின் வகிபங்கு குறித்து கல்விக் கழகத்தில் தான் கற்றுக் கொண்ட கருத்துக்களை பயன்படுத்தி, உருவாக்கியிருந்த நிலைமாறு கால நீதி கருத்திட்டமொன்றுக்கு வெளி நிதிப்படுத்தலை பெற்றுக் கொண்டார்.

## நிலைமாறு கால நீதியின் வெற்றிகள் மற்றும் சவால்கள் என்பன குறித்த ஓர் ஒப்பீடு

கல்விக் கழகம் அதன் செயலமர்வுகளில் ஓர் ஒப்பீட்டு ரீதியான முறைமையியலை பின்பற்றியது. இந்த முறைமையியல் தமது நாடுகளில் நிலவி வரும் தேவைகள் குறித்து ஆழமாக சிந்தித்துப் பார்ப்பதற்கும், ஏனைய நாடுகளின் படிப்பினைகளை பிரயோகிப்பதற்கும் பங்கேற்பாளர்களை தூண்டியது. நிபுணத்துவ இலகுபடுத்துனர்கள் - மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தையும் உள்ளடக்கிய விதத்தில் கூட்டமைப்பின் பங்காளர் அமைப்புக்களின் ஆளணியினரும் சர்வதேச ஆலோசகர்களும் - மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியம் மற்றும் ஏனைய பிராந்தியங்கள் குறித்த தமது சம்வக் கற்கைகளை பகிர்ந்து கொண்டனர். இத்தகவல்களை பரிசீலனை செய்வதற்கும், பங்கேற்பாளர்களின் தாய் நாட்டு நிலைமைகள் தொடர்பான அவற்றின் பொருத்தப்பாட்டினை கண்டறிந்து கொள்வதற்குமென சிறு குழு வேலைகளும், கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டன. நிலைமாறு கால நீதியுடன் சம்பந்தப்பட்டிருக்கும் சிரமங்களை எடுத்துக் காட்டும் பொருட்டு பங்கேற்பாளர்கள் போலி நடிப்புக்கள் மற்றும் பாத்திர நடிப்புக்கள் என்பவற்றை பயன்படுத்தினார்கள். இந்த ஒப்பீடு பிராந்திய செயலமர்வுகள் தொடர்பாக பெருமளவுக்கு ஒரு பெறுமதியை எடுத்து வந்ததுடன், பங்கேற்பாளர்களுக்கு மத்தியில் அறிவை பகிர்ந்து கொள்வதற்கும் வாய்ப்பளித்தது. உண்மையில், ஏனைய பின்புலங்களைச் சேர்ந்த கூட்டமைப்பு பங்காளர்களின் அனுபவங்களை செவிமடுத்துக் கேட்டதன் மூலம் கல்விக் கழகத்திலிருந்து தாம் பல விடயங்களை கற்றுக் கொண்டதாக ஒரு சில பங்கேற்பாளர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். இந்த அணுகுமுறை பலவந்தமாக ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கும் தென் அமெரிக்கா, மொரோக்கோ போன்ற நாடுகளுக்கிடையிலான பொதுத் தன்மைகளை

இனங்கண்டு கொள்வதற்கு பங்காளர்களுக்கு கற்றுக் கொடுத்தது. மேலும், அதன் மூலம் அவர்கள் தமக்கு பொருந்தக் கூடிய படிப்பினைகளையும் பெற்றுக் கொண்டார்கள். அதன் விளைவாக, ஏனைய நாடுகளின் தீர்வுகளை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் நிலைமாறு கால நீதி வழிமுறைகளை அமுல் செய்யும் விடயத்தில் சவால்களை சந்திப்பதற்கு தம்மை மிகச் சிறந்த விதத்தில் தயார்படுத்திக் கொள்ள முடிந்தது.

இலகுபடுத்தப்பட்ட அமர்வுகளுக்கூடாக உள்நாட்டு மற்றும் சர்வதேச வழக்கு விசாரணைகள், உண்மையைக் கூறுதல், இழப்பீடுகள், நிறுவன ரீதியான சீர்த்திருத்தம், மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் மற்றும் பால்நிலை பெரும்போக்குப்படுத்தல் என்பன தொடர்பான தமது அனுபவங்களை பங்கேற்பாளர்கள் பகிர்ந்து கொண்டார்கள். இலகுபடுத்துனர்கள் இக்கலந்துரையாடல்களை எதனையும் விதித்துரைக்காத விதத்தில் நடத்தினார்கள். அதாவது, பரிந்துரை எவற்றையும் திணிக்காமல் இலகுபடுத்துனர்கள் பங்கேற்பாளர்களுக்கு அறிவு மற்றும் கருவிகள் என்பவற்றை வழங்கினார்கள். இந்த அணுகுமுறையை பயன்படுத்துவதன் மூலம் பிராந்திய மட்டத்திலான நிலைமாறு கால நீதி குறித்து ஆக்கபூர்வமான விதத்திலும், கூட்டாகவும் சிந்தித்துப் பார்ப்பதற்கான வெளியை பங்கேற்பாளர்களுக்கு அது வழங்கியது. மேலும், நிபுணத்துவ இலகுபடுத்துனர்களின் கருத்துக்களுக்கு வரையறுக்கப்படாது, தமது சொந்த முடிவுகளை மேற்கொள்வதற்கும் அது அவர்களுக்கு வாய்ப்பினை வழங்கியது. கல்விக் கழகத்தின் பன்முக அணுகுமுறை, தமது சொந்த நாடுகளில் எத்தகைய செயற்பாடுகளை வெற்றிகரமாக செயற்படுத்த முடியும் என்ற விடயம் குறித்த தமது எண்ணக்கருக்களை விசாலப்படுத்தியிருப்பதாக பன்முக பங்கேற்பாளர்கள் குறிப்பிட்டார்கள். உதாரணமாக, பங்கேற்பாளர்கள் முன்வைத்த கருத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், வழக்குத் தாக்கல் செய்தல் அல்லது சத்திய விசாரணைகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கும் அப்பால் சென்றிருந்தன. நினைவேந்தல் செயற்பாடுகளும் அவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இக்கல்விக் கழகத்தின் செயற்பாட்டுக்கு முன்னர் நினைவேந்தல் செயற்பாடுகள் நிலைமாறு கால நீதியின் ஓர் உள்ளார்ந்த கூறாக இருந்து வருகின்றது என ஒரு சில பங்கேற்பாளர்கள் கருதியிருக்கவில்லை.

> *"பிராந்திய செயற்பாட்டாளர்களுடன் இணைந்து பெருந்தொகையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் இணைந்து பங்கேற்றமை நிலைமாறுக் கால நீதித் துறையல் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பணிகளை பகுப்பாய்வு செய்து மதிப்பிடுவதற்கு எனக்கு பெருமளவுக்கு ஆற்றலை பெற்றுத் தந்துள்ளது. மேலும், ஒப்பீட்டு ரீதியானவை என கருதத்தக்க கடந்த கால அனுபவங்களிலிருந்து பயனடைவதற்கும் அது எனக்கு வாய்ப்பளித்துள்ளது. மேலும்,புதிய அறிவை பெற்றக் கொள்வதற்கும் நாங்கள் மற்றும் இதனை ஆரம்பிப்பது எங்கு போன்ற விடயங்கள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்கும் இது வாய்ப்பினை வழங்கியது."*
>
> *- சிரியாவைச் சேர்ந்த பங்கேற்பாளர்*

நிலைமாறு கால நீதி இன்னமும் குழந்தைப் பருவத்தில் இருந்து வரும் சிரியா மற்றும் யெமன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் அறிவை பகிர்ந்து கொள்ளும் செயன்முறை பெருமளவுக்கு பயனுள்ளதாக இருந்து வருகின்றது எனக் கருதினார்கள். ஏனெனில், அவர்களுடைய நாடுகளை பொறுத்தவரையில் இன்னமும் ஆரம்ப கட்டங்களிலிருந்து வரும் நிலைமாறு கால நீதிச் செயன்முறைகள் மீது அதிகளவுக்குச் செல்வாக்குச் செலுத்தக் கூடிய நிலையில் அவர்கள் இருந்து வந்தனர். எனினும், பொறுப்புக் கூற வைக்கும் விடயம் மிகவும் வளர்ச்சியடைந்த கட்டத்திலிருந்து வரும் பங்கேற்பாளர்களை பொறுத்தவரையில் புத்தாக்க இயல்பிலான தலையீடுகளுக்கு குறைந்த அளவிலான வாய்ப்புக்களே காணப்படுகின்றன.

### பிராந்திய அனுபவங்களை பகிர்ந்து கொள்ளல் மோதல் மற்றும் நிலைமாறு கால நீதி தொடர்பான கண்ணோட்டங்கள்

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தைச் சேர்ந்த பல்வேறு நாடுகளில் நிலைமாறு கால நீதி கருத்திட்டங்களை அமுல் செய்வதுடன் சம்பந்தப்பட்ட முறைமைகள் மற்றும் சவால்கள் என்பவற்றை புரிந்து கொண்டமை, தமது சொந்த நாட்டில் முன்னெடுக்கப்படவிருக்கும் எதிர்கால செயற்பாடுகள் குறித்த விளக்கத்தை ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் வழங்கியது. ஒரு புதிய தேசம் குறித்த தூர நோக்கினை உருவாக்கிக் கொள்வதிலும், ஒருங்கிணைக்கப்பட்ட, கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதிலும் உள்ளூர் சமூகங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் ஆகியோரின் பங்கேற்பினை பெற்றுக் கொள்வதன் மதிப்பினை பங்கேற்பாளர்கள் கற்றுக்

கொண்டார்கள். அந்த வகையில், பிராந்தியம் நெடுகிலும் நிலவி வரும் சவால்கள் குறித்த கருத்துக்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் தமது சொந்த நாடுகளில் நிலைமாறு கால நீதி எதிர்கொள்ளக் கூடிய இடையூறுகளை எதிர்பார்க்கும் தமது ஆற்றலை பங்கேற்பாளர்கள் விருத்தி செய்து கொண்டார்கள். மேலும், ஒரே மாதிரியான பின்புலங்களிலிருந்து கற்றுக் கொள்ளும் பொருட்டு ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது, தமது நாட்டின் மோதல் மற்றும் பொறுப்புக் கூறல் செயற்பாடுகள் என்பவற்றின் பண்புக் கூறுகளை இனங்கண்டு கொள்வதன் முக்கியத்துவம் குறித்த தனது நம்பிக்கையை இக் கழகம் ஊர்ஜிதம் செய்தது.


பல சூழ்நிலைகளுக்குப் பொதுவான ஒருமித்த தன்மைகளை இனங் காணப்பட்டிருந்த போதிலும், மோதல்களை எதிர்கொண்டு வரும் நாடுகள் தொடர்பாக மட்டும் கண்டிப்பான விதத்தில் பொருந்தும் தலைப்புக்கள் ஏற்கனவே நிலைமாறு கால நீதி வழிமுறைகளை பின்பற்றி வரும் நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்களுக்கு பொருத்தமானவையாக இருந்து வரவில்லை எனவும், அதேபோல தமது நாடுகளின் அனுபவங்கள் முதல் பிரிவு நாடுகளுக்கு பொருத்தமானதாக இருந்து வரவில்லை எனவும், ஒரு சில பங்கேற்பாளர்கள் கருதினார்கள். எவ்வாறிருப்பினும், பொருத்தப்பாட்டை பொறுத்தவரையில் வேறுபட்ட மட்டங்களில் அனைத்து பங்கேற்பாளர்களும் ஒவ்வொருவரிட மிருந்தும் கற்றுக் கொண்டார்கள்.

*"[பிராந்தியஅனுபவங்கள் குறித்த] திட்டவட்டமான தகவல்கள், பல்வேறு நாடுகளின் அத்துமீறல்கள் தொடர்பாக தற்போது நிலவி வரும் போக்குகளின் பரிமாணங்கள் மற்றும் பின்னணிகள் என்பவற்றை புரிந்து கொள்வதற்கு மிகவும் முக்கியமானவையாகும். இந்த அனுபவங்கள் மற்றும் தகவல்கள் என்பன டியுனீசியாவில் நினைவேந்தல் கருத்திட்டமொன்றை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எனக்கு உதவ முடியும். மேலும், மிக முக்கியமாக டியுனீசியாவிலும் பிராந்தியத்தைச் சேர்ந்த ஏனைய நாடுகளிலும் செயற்பட்டு வரும் செயற்பாட்டாளர்களுக்கு நான் வழங்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் அவை உதவும்."*

- டியுனீசியாவைச் சேர்ந்த பங்கேற்பாளர்

### சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் பிராந்திய நிலைமாறு கால நீதி வலையமைப்பொன்றை ஸ்தாபித்தல்

ஒரே குழு நான்கு தடவை ஒன்று கூடிய காரணத்தினால் கல்விக் கழகம் இப்பங்கேற்பாளர்களுக்கு மத்தியில் உறவுகளை போஷித்து வளர்த்தது. மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியம் நெடுகிலும் ஒரு பிராந்திய வலையமைப்பு தொடர்ந்து செயற்பட்டு வருவதன் காரணமாக அது நிலையான ஒரு தாக்கத்தை எடுத்து வந்திருக்க முடியும். மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க மட்டத்தில் ஒரு வலையமைப்பை உருவாக்கிக் கொள்வதற்கு தமக்கு வாய்ப்பு வழங்கப்பட்டமை குறித்து பங்கேற்பாளர்கள் நன்றி தெரிவித்திருந்தனர். இந்தப் பிராந்திய ரீதியான தோழமையுணர்வு தமது பரப்புரை செயற்பாடுகளை வலுப்படுத்துமென அவர்கள் நம்பினார்கள். குறிப்பாக, உள்ளூர் அதிகாரிகளினால் தொடர்ந்து துன்புறுத்தல்களை எதிர்கொண்டு வந்த பங்கேற்பாளர்கள், பிராந்திய வலையமைப்பை பெரிதும் பாராட்டினார்கள். ஏனெனில், தமது தாய்நாட்டில் அவர்கள் எதிர்கொண்டு வரும் பாதுகாப்பு தொடர்பான ஆபத்துக்கள் உள்ளூர் மட்டத்தில் ஏனையவர்களுடன் பிணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதிலிருந்தும் அவர்களை தடுத்து வருகின்றன. மேலும், பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் ஆதரவை வழங்குதல் மற்றும் ஆதரவைப் பெற்றுக் கொடுத்தல் என்பன தொடர்பாகவும் பங்கேற்பாளர்கள் ஒரு பாதுகாப்பு உணர்வை அனுபவித்தார்கள். கல்விக் கழகம் பங்கேற்பாளர்களை பிராந்திய மற்றும் சர்வதேச ஆளுமைகளுடனும், பழிவாங்கல் செயற்பாடுகளிலிருந்து பாதுகாப்பை வழங்கக் கூடிய நிறுவனங்களுடனும் இணைத்ததன் மூலம் அவர்களுடைய ஆளுமை மதிப்பை உயர்த்தியமை இதற்கு ஓரளவுக்குக் காரணமாக இருந்து வந்தது.




மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நிலைமாறு கால நீதி கல்விக் கழகத்தின் நிதியளிப்புடன் 2016 நவம்பர் மாதத்தில் யெமனில் நடத்தப்பட்ட ஒரு செயலமர்வின் போது மோதலுக்கான மூல காரணங்களை பகுப்பாய்வு செய்வதற்கென மரம் ஒரு கருவியாக பயன்படுத்தப்பட்டது.

நிலைமாறு கால நீதி செயற்பாட்டாளர்களின் பிராந்திய வலையமைப்பொன்றில் தொடர்ந்து சம்பந்தப்படுவதிலும், அதற்கூடாக அறிவை பகிர்ந்து கொள்வதிலும் பங்கேற்பாளர்கள் பெருமளவுக்கு ஆர்வம் காட்டி வந்தார்கள்; எதிர்கால கருத்திட்டங்களில் கூட்டாக செயற்படுதல்மற்றும் தமது உப நிதியளிப்புக் கருத்திட்டங்களுக்கென பங்கேற்பாளர்களினால் உருவாக்கப்பட்டிருக்கும் பாடத்திட்டம் மற்றும் கல்வி ஆவணங்கள் போன்ற கல்விக் கழகத்திற்கூடாக அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் வளங்களை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளல் என்பவற்றில் அவர்கள் ஆர்வத்துடன் இருந்து வந்தார்கள். உதாரணமாக, கல்விக் கழகம் முடிவுக்கு வந்த பின்னரும் பங்கேற்பாளர்கள் வளங்கள், பிந்திய தகவல்கள் மற்றும் கண்ணோட்டங்கள் என்பவற்றை மின்னஞ்சல் மற்றும் சமூக வலைத்தளங்கள் என்பவற்றுக்கூடாக பரிமாறிக் கொள்வதனையும் உள்ளடக்கிய விதத்தில் ஒருவருடன் ஒருவர் முறைசாராத விதத்தில் தொடர்பாடலை பராமரித்து வந்தார்கள். குறிப்பாக, பிராந்திய மற்றும் சர்வதேச பெரும் போக்கு ஊடகங்களினால் பொதுவாக தவிர்க்கப்பட்டு வரும் தமது நாடுகளில் நிலவி வரும் அபிப்பிராயங்களை அவர்கள் மற்றவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்கள்.

*"நிலைமாறுக் கால நீதி கவனத்தில் எடுக்கக வேண்டிய ஏனைய [போர் சாராத] பிரச்சினைகளும் இருந்து வருகின்றன… குறிப்பாக, விளிம்பு நிலை சமூகங்கள் மற்றும் வசதி வாய்ப்புக்கள் இல்லாத குழுக்கள் ஆகியோருக்கு பொருளாதார மற்றும் சமூக ஆதரவினை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை குறிப்பிட முடியும். உதாரணமாக, உலகெங்கிலும் பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும், சமூக ரீதியிலும் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் பெருந்தொகையான சமூகங்கள் இருந்து வருவதுடன், பொருளாதார, அரசியல் மற்றும் சமூக வலுவூட்டல் என்பவற்றுக்கூடாக அவற்றுக்கு நீதி வழங்கப்படுதல் வேண்டும்."*

- யெமன் நாட்டைச் சேர்ந்த பங்கேற்பாளர்

## உள்ளூர் சமூகங்களினால் முன்னெடுக்கப்படும் நிலைமாறுக் கால நீதி பயிற்சி திட்டங்களை ஸ்தாபித்தல்

கல்விக் கழகம் மற்றும் அதன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தாம் கட்டுப்பாட்டை கொண்டிருப்பதாக பல பங்கேற்பாளர்கள் கருதினார்கள். உள்ளூர் நிபுணர்களாக செயற்படும் விதத்திலும், மற்றவர்களுக்கான வளங்களாக இருக்கும் விதத்திலும், பிராந்திய நிலைமாறு கால நீதி தலையீடுகளுக்கு ஆதரவாளர்களாக செயற்படும் விதத்திலும் கல்விக் கழகம் தம்மை தயார்படுத்தியிருந்ததாக பங்கேற்பாளர்கள் நம்பினார்கள். நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான அவர்களுடைய உரித்துணர்வு, நீண்ட கால இயல்பிலான பயன்கள் மற்றும் நேர்மறையான பெறுபேறுகள் என்பவற்றுக்கான சாத்தியப்பாட்டை எடுத்துக் காட்டுகின்றன. பங்கேற்பாளர்களின் ஈடுபாட்டையும், கல்விக் கழகத்தின் நிறுவன ரீதியான அறிவையும் மேலும் நிலைநிறுத்திக் கொள்ளும் பொருட்டு கல்விக் கழகத்திற்கென அறபு மொழியில் தயாரிக்கப்பட்டிருக்கும் திட்டவட்டமான ஆவணங்கள் கூட்டமைப்பின் பங்களார்கள் மற்றும் ஏனைய பங்கீடுபாட்டாளர்கள் ஆகியோருக்கு இணையதள நூலகமொன்றுக்கூடாக வழங்கப்படும். இந்த வளங்கள் உயர் மட்டத்திலான பிராந்திய நிலைமாறு கால நீதி நிபுணர்களுடன் (அவர்கள் பங்கேற்பாளர்களின் நாடுகளைச் சேர்ந்த வலையமைப்புக்களின் ஒரு பாகமாக இருந்து வருகின்றனர்) தமது நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் செயன்முறைகள் குறித்து பங்கேற்பாளர்கள் நடத்திய நேர்காணல்களை கொண்ட ஏழு வீடியோக்கள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. அடுத்து வரும் காலப் பிரிவின் போது, இந்த இணைய நூலகம் கல்விக் கழகத்தின் செயலமர்வுகள் மற்றும் பங்கேற்பாளர்களின் கருத்திட்டங்கள என்பவற்றுக்கூடாக பெறப்பட்டிருக்கும் அறிவை பாதுகாத்து, சேகரித்து வைப்பதற்கும், விநியோகிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளும்.

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியம் முழுவதிலும் நிலைமாறு கால நீதியை வலுப்படுத்துவதற்கும், பரப்புரை செய்வதற்குமென தமது நிபுணத்துவத்தை பயன்படுத்திக் கொள்ளும் பெருமளவுக்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பிராந்திய வலையமைப்பொன்றை ஸ்தாபிப்பதன் சாத்தியப்பாடு குறித்தும் பங்கேற்பாளர்கள் ஆழமாக சிந்தித்து வருகின்றனர். கல்விக் கழகத்தின் வெற்றி குறித்து பங்கேற்பாளர்கள், நிதி வழங்குனர்கள் மற்றும் கூட்டமைப்பின் பங்காளர்கள் ஆகியோருக்கு மத்தியில் நிலவி வரும் மனப் பதிவு காரணமாக,



அபயான் பிரதேசத்திலிருந்து அல்கைதா இயக்கம் வெளியேறிய பின்னர் அப்பிரதேசத்தைச் சேர்ந்த பங்காளர் அமைப்புக்களின் உறுப்பினர்கள் யெமனில் இடம்பெற்ற ஒரு செயலமர்வில் மோதல் பகுப்பாய்வு மற்றும் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள் என்பன குறித்து கலந்துரையாடுகின்றனர். இச்செயலமர்வு மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நிலைமாறு கால கல்விக் கழகத்தின் நிதியுதவிடன் 2016 நவம்பர் மாதத்தில் நடத்தப்பட்டது.

இந்தக் கல்விக் கழகம் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க செயற்பாட்டாளர்களுக்கென தொகுதியினருக்கென புதுபிக்கப்பட்டிருப்பதுடன், அது 2017 இன் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இரண்டாவது கல்விக் கழகத்தில் வருகை இலகுபடுத்துனர்களாக முதலாவது கல்விக் கழகத்தில் பங்கேற்ற மிகவும் வலிமையானவர்களுக்கு அழைப்பு விடுக்க முடியுமா என்ற விடயத்தை பங்காளர்கள் பரிசீலித்து வருகின்றனர். இறுதியாக, கல்விக் கழகத்தின் நிகழ்ச்சி நிரல் பல்வேறு பிராந்தியங்களுக்கு மாற்றப்படக் கூடியதாகவும், நிலைமாறு கால நீதித் துறைகளுக்கூடாக பிரயோகிக்கப்படக் கூடிய இருந்து வருகின்றது என கூட்டமைப்பின் பங்காளர்களும், பங்கேற்பாளர்களும் நம்புகின்றார்கள். அதன் பின் விளைவாக, கூட்டமைப்பின் பங்காளர்களும், கல்விக் கழகத்தின் முதலாவது தொகுதியைச் சேர்ந்தவர்களும் நிலைமாறு கால நீதி தொடர்பாக சவால்களை எதிர்கொண்டு வரும் தென்னாசியா போன்ற மற்றொரு பிராந்தியத்தில் இதே மாதிரியான ஒரு கல்விக் கழகம் ஸ்தாபிக்க வேண்டுமென்ற விடயத்தை ஊக்குவித்துள்ளனர்.

## செயலமர்வுகளின் அனைத்து கட்டங்களிலும் சமூக பங்கீடுபாட்டாளர்களின் தேவைகளை கவனத்தில் எடுத்தல்

கல்விக் கழகம் நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதையும் உள்ளிட்ட அனைத்து கட்டங்களிலும் பங்கேற்பாளர்களின் பங்கேற்பை பெற்றுக் கொண்டது. அதன் குறிக்கோள்கள், நோக்கங்கள், முறைமையியல் மற்றும் பாடத்திட்டம் என்பன பங்கீடுபாட்டாளர்களின் தேவைகளுக்கு பொருந்தக் கூடியவையாக இருந்து வரும் விடயம் உறுதிப்படுத்தப்பட்டது. அவை அவர்களுடைய விண்ணப்பங்களிலிருந்தும், கூட்டமைப்பு பங்காளர்களின் அனுபவங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டிருத்தல். உதாரணமாக, இரண்டாவது மற்றும்

மூன்றாவது செயலமர்வுகளின் போது அடுத்த செயலமர்வுக்கென முன்னரேயே நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஏழு விடயங்களை கொண்ட பட்டியலொன்றிலிருந்து இரண்டு உப தலைப்புக்களை தெரிவு செய்துகொள்ளுமாறு இலகுபடுத்துனர்கள் பங்கேற்பாளர்களுடன் கேட்டுக் கொண்டார்கள். பங்கேற்பாளர்களின் முன்னுரிமைகளின் அடிப்படையில் நிகழ்ச்சிநிரல் உருவாக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு இவ்வாறு அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்த விதத்தில் கல்விக் கழகம் பங்கேற்பாளர்களின் தேவைகளை பங்காளர்களின் நிபுணத்துவத் துறையுடன் ஒருங்கிணைத்தது. இதன் விளைவாக, செயலமர்வுகள் பங்கேற்பாளர்களுக்கு தமது பின்புலத்திற்கு ஏற்ற விடயங்களை உருவக்கிக் கொள்வதற்கு இடமளிக்கும் அதே வேளையில், பரந்த வீச்சிலான நிலைமாறுக் கால நீதி தொடர்பான பிரச்சினைகளை செயல்திறன்மிக்க விதத்தில் உள்ளடக்கியிருந்தது. நிகழ்ச்சிநிரலை உருவாக்குவதில் பங்கேற்பாளர்களையும் உள்ளடக்கிக் கொள்ளும் கலந்தாலோசனை செயன்முறை அவர்களின் ஆழமான உரித்துணர்வு ஏற்படுவதற்கு வகை செய்தது.

மேலும், இந்தச் செயலமர்வுகள் பங்கேற்பாளர்களுக்கு ஒழுங்கான அடிப்படையில் அனுபவங்களை பரிமாறிக் கொள்வதற்கும், பாதுகாப்பு உத்திகளை உருவாக்கிக் கொள்வதற்கும் தொடர்ச்சியாக வாய்ப்புக்களை வழங்கியதன் மூலம் பங்கேற்பாளர்களின் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளை வினைத்திறன்மிக்க விதத்தில் கவனத்தில் எடுத்திருந்தன. அனுபவங்களை பகிர்ந்து கொள்வது என்பது பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்த பங்கேற்பாளர்களின் புரிந்துணர்வை உயர்த்தும் தாக்கமான ஒரு வழிமுறையாகவும், அவற்றை தவிர்ந்து கொள்வது எப்படியென்பதனை உறுதிப்படுத்தும் ஒரு வழிமுறையாகவும் இருந்து வந்தது. உதாரணமாக, செயலமர்வு உரையாடல்கள் காரணமாக ஒரு சில பங்கேற்பாளர்கள் கையடக்க தொலைபேசிகளுக்கு மிகவும் பாதுகாப்பான விதத்தில் அனுப்பும் ஒரு முறையான Telegram முறையை பயன்படுத்தத் தொடங்கினார்கள். முன்னர் அவர்கள் கடவுச் சொல் இல்லாத விதத்தில் செய்திகளை அனுப்பி வைத்ததற்கு பதிலாக இப்பொழுது கடவுச் சொற்களுடன் செய்திகளை அனுப்பி வைக்கக் கூடிய வாய்ப்பினை அது வழங்கியது. பாதுகாப்பற்ற சூழ்நிலைகளில் நிதி திரட்டுவது தொடர்பாக நிலவி வரும் சவால்கள் குறித்த கலந்துரையாடல்களின், போது உள்நாட்டில் நிலவி வரும் பாதுகாப்பற்ற நிலைமைகள் காரணமாக நிதி வழங்குனர்கள் தமது ஆதரவினை விலக்கிக் கொள்வது குறித்து பங்கேற்பாளர்கள் மனவிரக்தியை வெளிப்படுத்தியிருந்தார்கள். நிதி வழங்குனர்களை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளும் விதத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை தம்மால் எவ்வாறு பாதுகாப்பாக முன்னெடுக்க முடியும் என்ற விடயத்தை அவர்களுக்கு நிரூபித்துக் காட்டுவது எப்படி என்பது குறித்து அவர்கள் யோசித்தார்கள். இதற்கு எதிர்வினையாக நிதி உதவியை கோரும் அனைத்து முன்மொழிவுகளிலும் குறிப்பிட்ட நிறுவனம் எதிர்கொள்ளக் கூடிய அச்சுறுத்தல்களை தணித்துக் கொள்வதற்கு எவ்வாறு செயற்பட்டு வந்துள்ளது என்பதனை எடுத்துக் காட்டுவதற்கும், நிதியளிப்பு எவ்வாறு பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகளை விருத்திச் செய்ய முடியுமென்பதனை எடுத்துக் காட்டுவதற்கும் ஒரு ஆபத்து மதிப்பீட்டை உள்ளடக்குவதனை பங்கேற்பாளர் ஒருவர் பரிந்துரை செய்திருந்தார். இந்த முன்மொழிவு விளக்கமானதாகவும், பொருத்தமானதாகவும் இருந்து வருகின்றது என ஏனைய பங்கேற்பாளர்கள் கருதினார்கள்.

### சமூக பங்கீடுபாட்டாளர்களுக்கு வலுவூட்டுதல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல்

மோதல் மற்றும் பாதுகாப்பற்ற நிலை என்பவற்றினால் கணிசமான அளவில் பாதிப்புக்களை எதிர்கொண்டிருக்கும் பெண்கள், சிறுவர்கள் மற்றும் அகதிகள் போன்ற பல நலிவுற்ற குழுக்கள் வாழ்ந்து வரும் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தை பொறுத்தவரையில் அனைவரையும் உள்ளடக்கிய நிலைமாறு கால நீதி ஒரு அவசர தேவையாக காணப்படுகின்றது. உள்ளூர் தேவைகள் மற்றும் புரிந்துணர்வுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அனைவரையும் உள்ளடக்கிய நிலைமாறு கால நீதியை உள்ளூர் சமூகங்களும், பாரம்பரியமற்ற செயற்பாட்டாளர்களும் எவ்வாறு மேம்படுத்த முடியும் என்ற விடயம் குறித்து கூட்டமைப்பு பங்காளர்கள் மற்றும் கல்விக் கழகத்தின் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் மத்தியில் கல்விக் கழகம் ஏற்கனவே பகுப்பாய்வு மற்றும் சிந்தனை என்பவற்றை மேம்படுத்தியுள்ளது. ஆற்றலை கட்டியெழுப்புதல், அதே போல சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு நிதி மற்றும் நேரடி ஆதரவு என்பவற்றை வழங்குதல் என்பவற்றுக்கூடாக பங்கேற்பு அணுகுமுறையை பயன்படுத்துவதன் மூலம் தேவை மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும், நிலைமாறு கால நீதி நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதற்குமான பங்கேற்பாளர்களின் ஆற்றலை கல்விக் கழகம் அதிகரித்துள்ளது. இது அனைவரையும் உள்ளடக்கிய நடைமுறைகள் குறித்து

பங்கேற்பாளர்களுக்கு உணர்வூட்டும் விடயத்தில் கல்விக் கழகம் கொண்டிருக்கும் வினைத்திறன்மிக்க செயற்பாட்டை எடுத்துக் காட்டுகின்றது. அனைவரையும் உள்ளடக்க வேண்டிய தேவை குறித்து பங்கேற்பாளர்களை பயிற்றுவித்தல் பெருமளவுக்கு நலிவு நிலையில் இருந்து வரும் குழுக்களுடன் நடத்தப்படும் கலந்தாலோசனைகள் மற்றும் செயன்முறைகளுக்கூடாக ஒரு தாக்கத்தை எடுத்து வர முடியும். இது பெருமளவுக்கு பின்புலத்துடன் பொருந்தக் கூடிய நிலைமாறு கால நீதி பெறுபேறுகளை எடுத்து வர முடியும்.

## நிலைமாறு கால நீதியின் பெண்களின் பங்கேற்பை பெற்றுக் கொள்ளல்

அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் விடயம் தொடர்பாக பெண்கள் எதிர்கொண்டு வரும் நிலைமாறு கால நீதி சவால்களுக்கு பிராந்திய ரீதியான தீர்வொன்றை வடிவமைப்பதற்கு கல்விக் கழகம் பங்களிப்புச் செய்துள்ளது. செயலமர்வில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் பிராந்தியம் நெடுகிலும் இடம்பெற்று வரும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் பெண்கள் எதிர் கொண்டு வரும் பொருளாதார பாதுகாப்பற்ற நிலை என்பவற்றை ஊர்ஜியப்படுத்தின. மோதலின் போது பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் ஆகியோர் சந்தித்திருக்கும் சிக்கலான மற்றும் பன்முக அனுபவங்களை எடுத்துக் காட்டும் ஒப்பீட்டு ரீதியான உதாரணங்களை இலகுபடுத்துனர்கள் முன்வைத்ததுடன், அவர்களுடைய நிலைமைகளை நிலைமாறு கால நீதி எவ்வாறு நிவர்த்தி செய்து வைக்க முடியும் என்பதனையும் சுட்டிக் காட்டினார்கள். உதாரணமாக, உண்மையைக் கூறும் முன்முயற்சிகள் பால்நிலை கூருணர்வுடன் கூடிய சாட்சிகள் பாதுகாப்பினை உறுதிப்படுத்த முடியும்.

> *“கல்விக் கழகம் எமது நம்பிக்கைகளை மாற்றியமைத்துள்ளது. கல்விக் கழகத்திற்கு சமூகமளிப்பதற்கு முன்னர் நிலைமாறு கால நீதி மற்றும் அதன் பொறிமுறைகள் என்பவற்றை அமுல் செய்வது தொடர்பாக நான் பரவசமடைந்திருந்தேன்... யெமன் நாட்டின் கலாசார மற்றும் சமூக தனித்தன்மைகளை கவனத்தில் எடுக்காமல் அவ்விதம் நான் பரவச நிலையில் இருந்து வந்தேன்.”*
>
> - யெமன் நாட்டைச் சேர்ந்த பங்கேற்பாளர்

மேலும், கூட்டமைப்பு பால்நிலை சமத்துவம் தொடர்பாக தன்னை அர்ப்பணித்திருப்பதுடன், கருத்திட்டத்தின் ஆரம்பத்தின் போதும், விண்ணப்பங்களை மீளாய்வு செய்யும் கட்டத்தின் போதும் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பங்கேற்பாளர்களுக்கு மத்தியில் பால்நிலை சமத்துவத்தை எடுத்து வருவதற்கு பங்காளர் அமைப்புக்கள் முயற்சித்தன. அதனையடுத்து, கல்விக் கழகத்தின் நிகழ்ச்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 19 பங்கேற்பாளர்களில் எட்டுப் பேர் பெண்களாக இருந்து வந்தார்கள். மேலும், கல்விக் கழகம் இப்பிராந்தியத்தில் நிலைமாறு கால நீதி முயற்சிகளில் பெண்களின் பங்கேற்பை அதிகரிப்பது எப்படி என்பது குறித்த உத்திகளை உருவாக்குவதற்கான வாய்ப்பினையும் பங்கேற்பாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்தது. இந்த விடயம் அனைதததுத் தரப்புக்களுடனும் சம்பந்தப்பட்ட ஒரு விடயமாக இருந்து வருவதுடன், அது ஒவ்வொருவருடைய பின்புலத்திற்கும் பொருந்தக் கூடியதாக இருந்து வருகின்றது என்பதனையும் விடயத்தையும் பங்கேற்பாளர்கள் இனங்கண்டிருந்தனர். பெண்களின் பங்கேற்பை மேலும் ஸ்தாபித்துக் கொள்வதற்கும், தக்க வைத்துக் கொள்வதற்குமென கல்விக் கழகம் உப நிதியளிப்புக்களுக்கூடாக பெண்களின் பங்கேற்பின் மீது கவனம் செலுத்திய ஒரு சில கருத்திட்டங்களுக்கு நிதியுதவியளித்தது. உதாரணமாக, ஈராக் பெண்மணி ஒருவர் 30 பெண்களுக்கும், 10 ஆண்களுக்கும் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல், பொதுவான தலைமைத்துவ திறன்கள் மற்றும் ஆவணப்படுத்தல் செயற்பாடுகளில் மற்றவர்களுக்கு பயிற்சியளித்தல் எவ்வாறு போன்ற விடயங்கள் குறித்து பயிற்றுனர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடத்தினார். இவையனைத்தும் எதிர்கால தேசிய நல்லிணக்க செயன்முறையில் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய பாதிக்கப்பட்டவர்களின் சான்றுகளை திரட்டிக் கொள்வதற்கு உதவியளித்தன. இந்த உப நிதியளிப்புக்களுடன் கூடிய கருத்திட்டங்கள் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தில் நிலைமாறு கால நீதி கருத்திட்டங்களில் பெண்களின் பங்கேற்பினை உயர்த்துவதற்கு இலட்சிய ரீதியாக பங்களிப்புச் செய்ய முடியும். அது மறுபுறத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கான பயனுள்ள நிவாரணங்களை மேற்கொள்ளப்படுவதற்கு வழிகோல முடியும்.

## கருத்திட்ட கருக்கட்டல் மற்றும் உப நிதியளிப்புக்கள் என்பவற்றுக்கூடாக சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்களுக்கு ஆதரவளித்தல்

கல்விக் கழகத்தின் தனித்துவமான உப நிதியளிப்புக் கூறுக்கூடாக சமூகத்துடனான கலந்தாலோசனைகள், தேவை மதிப்பீடுகள் மற்றும் ஏனைய தலையீடுகள் என்பவற்றை

வடிவமைத்து, நடத்துவதற்கென பங்கேற்பாளர்களுக்கு சிறு நிதியளிப்புக்கள் வழங்கப்பட்டன. அதனுடன் இணைந்த விதத்திலான பங்கேற்பு ரீதியான அணுகுமுறைக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் கூடிய விதத்தில் பாதிக்கப்பட்டவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றி வைக்கக் கூடிய விதத்தில் தமது கருத்திட்டங்களை வடிவமைத்துக் கொள்வதற்கு பங்கேற்பாளர்களுக்கு இந்த நிதியளிப்பு இயலுமையை வழங்கியது. இந்த விதத்தில் இந்த உப நிதியளிப்புக்கள் பெரும்பாலான மிகவும் நலிவுற்ற குழுக்களையும் உள்ளடக்கிய விதத்தில் நிலைமாறு கால நீதி செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு பொருந்தக் கூடியவையாக உருவாக்கப்பட்டு, நிறைவேற்றப்படுவதற்கு வசதி செய்து கொடுத்தன. மேலும், அவை அத்தகைய பிரிவினர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்கள் என்பவற்றையும் வினைத்திறன்மிக்க விதத்தில் நிறைவேற்றி வைக்க முடியும். உதாரணமாக, சிரியா, டியுனீசியா ஆகிய நாடுகளில் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் செயற்பாடுகள், ஈராக்கில் இழப்பீடுகள் தொடர்பாக சமூகத்துடனான கலந்தாலோசனைகள் நடத்துதல் மற்றும் மெரோக்கோவில் நினைவேந்தல் செயற்பாடுகள் என்பவற்றுக்கு உப நிதியளிப்புக்களுக்கூடாக நிதிகள் வழங்கப்பட்டிருந்தன. அல்ஜீரியா, எகிப்து,ஈராக், மொரோக்கோ, சிரியா, டியுனேசியா மற்றும் யெமன் ஆகிய 7 நாடுகளில் மொத்தம் 19 கருத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. அது குறிப்பாக, மனித உரிமைகள் ஆவணப்படுத்தல், இழப்பீடுகள் மற்றும் நினைவேந்தல் என்பன தொடர்பான செயற்பாடுகளை உள்ளடக்ககிய விதத்தில் இப் பிராந்தியத்தில் நிலைமாறு கால நீதியின் இயல்பின் மீது ஒரு தாக்கத்தை எடுத்து வந்திருந்தது.

ஒரு சில பங்கேற்பாளர்களை பொறுத்தவரையில் கருத்திட்டக் கருக்கட்டல் காலம் கல்விக் கழகத்திலிருந்து ஆதரவு வழங்கப்பட்ட மிகவும் பெறுமதிமிக்க ஒரு ஆதரவு மூலமாக இருந்து வந்தது. கருத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள், இலகுபடுத்துனர்கள் தனிப்பட்ட முறையில் பங்காளர்களுக்கு வழங்கிய பின்னூட்டல் மற்றும் அவர்கள் ஒருவருக்கொருவர் வழங்கிய பின்னூட்டல் என்பன நிதி வழங்குனர்கள் போன்ற தரப்புக்களின் வெளி முன்னுரிமைகளை கவனத்தில் எடுப்பதற்கு பதிலாக, தமது சொந்த நிலைமைகளின் அடிப்படையில் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கான அரிய சுதந்திரத்தை பங்கேற்பாளர்ளுக்கு வழங்கின. தாம் தெரிவு செய்திருக்கும் கருத்திட்டங்களை மிகவும் பாதுகாப்பான விதத்தில் அமுல் செய்தற்குத் தேவையான அறிவு மற்றும் கருவிகள் என்பவற்றை தாம் பெற்றுக் கொண்டிருப்பதாக பங்கேற்பாளர்கள் கருதினார்கள். தேவைகள் மதிப்பீடுகள் மற்றும் சமூகத்தில் நடத்தப்படும் கலந்துரையாடல்கள் என்பன குறித்த பயிற்சிகளை பெற்றுக் கொண்டிருப்பதனால் கருத்திட்ட வடிவமைப்பின் அனைத்து அம்சங்களையும் சமூக உறுப்பினர்களின் எண்ணங்கள் மற்றும் தேவைகள் என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை பங்கேற்பாளர்கள் புரிந்து கொண்டார்கள். மேலும், உப நிதியளிப்புக் கூறினை கூட்டமைப்பின் பங்காளர்கள் உயர் மதிப்பை வழங்கினார்கள். ஏனெனில் அது கல்விக் கழகத்தில் முழுமையாக கற்றுக் கொண்ட விடயங்களை எடுத்துக் காட்டுவதற்கும், பிரயோகிப்பதற்கும் அவர்களுக்கு வாய்ப்பினை வழங்கியது.

தமது உள சமூக தேவைகளையும், நேர்காணலுக்குட்படுத்தப்படுபவர்களின் சமாளிப்பதற்கென உள்ளூர் மக்களுக்கு பயிற்சி அளித்தல்.

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட நிலைமாறுக் கால நீதி தொடர்பான தலையீடுகள் கடும் மன அதிர்ச்சியை கையாள்வது தொடர்பான நடைமுறை பயிற்சியை முக்கியமாக உள்ளடக்கியிருக்கவில்லை. எவ்வாறிருப்பினும், கல்விக் கழகம் அத்தகைய பயிற்சியொன்றை உள்ளடக்கியிருந்தது.அது மனித உரிமை மீறல்கள், மோதலுடன் சம்பந்தப்பட்ட கடும் அதிர்ச்சி மற்றும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் துன்புறுத்தல் என்பன தொடர்பான தமது முதன்மை மற்றும் இரண்டாம் நிலை அனுபவங்களை தாங்கிக் கொள்வதற்கான பங்கேற்பாளர்களின் ஆற்றலை விருத்தி செய்திருந்தது. வன்முறை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆய்வு நிலையத்தினால் சுயபராமரிப்பு தொடர்பாக நடத்தப்பட்ட அமர்வுகளுக்கூடாக தம்மையோ அல்லது பாதிக்கப்பட்டவர்களையோ கடும் மன அதிர்ச்சிக்கு உள்ளாக்காத விதத்தில் கடும் மன அதிர்ச்சி தொடர்பான நோய்க் குறிகள் மற்றும் நேர்காணலுக்குட்படுத்தப்பட்ட பாதிக்கப்பட்டவர்களின் நோய் குறிகள் என்பவற்றை கண்காணிப்பதற்கான நுட்பங்களை பங்கேற்பாளர்கள் கற்றுக் கொண்டார்கள். கல்விக் கழகத்தின் பங்காளர்கள் செயற்பட்டு வரும் அபாயகரமான நிலைமைகள் மற்றும் அவர்கள் உயர் மட்டத்திலான வன்முறையை



நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பு கூட்டமைப்பினால் வழங்கப்பட்ட உப நிதியளிப்புடன் யெமனில் அமுல் செய்யப்பட்ட கருத்திட்டமொன்றில் - நவம்பர் 2016

எதிர்கொண்டிருக்கும் நிலை என்பன காரணமாக சுய பராமரிப்பு தொடர்பான அமர்வு தமது உள சமூக தேவைகளை பொறுத்தவரையில் பொருத்தப்பாட்டினை கொண்டுள்ளது என அவர்கள் கருதினார்கள். இது தவிர, சுய பராமரிப்பின் முக்கியத்துவம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்ட விடயம் தமக்கு பெருமளவுக்கு உதவியாக இருந்து வந்தது என பல பங்கேற்பாளர்கள் கருதினார்கள். இதற்கு முன்னர் அவர்கள் சமூகமளித்திருந்த ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் உள சமூக ஆதரவுக்கான தனிப்பட்ட தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கியிருக்கவில்லை. கடும் மன அதிர்ச்சி தொடர்பான கலந்துரையாடல்களை அதன் நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கியதன் மூலம் கல்விக் கழகம் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணோட்டத்திலிருந்து நிலைமாறுக் கால நீதியை நோக்குவதற்கு அவர்களுக்கு கற்றுக் கொடுத்தது. இது பல்துறைசார் அணுகுமுறையின் வினைத்திறனை எடுத்துக் காட்டுகின்றது.



டாகியோ மாகாணத்தில் இடம்பெற்ற இனப் படுகொலை நினைவிடம் ஒன்றின் திறப்பு விழாவில் பங்கேற்கும் மாணவர்கள்.

# அத்தியாயம் 5:

## சிவில் சமூகத்தின் ஆவணப்படுத்தல் மற்றும் குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வைத்தல்

### சிவில் சமூகத்தினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமைகள் தொடர்பான ஆவணப்படுத்தல்

மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் செயல்பாடு பாதிக்கப்பட்டவர்கள் குரலெழுப்புவதற்கு வாய்ப்பளிப்பதுடன், வரலாறு குறித்த பொது மக்களின் புரிந்துணர்வையும் வடிவமைக்கின்றது. மேலும், அது குற்றச் செயல்கள், குற்றம் சாராத செயல்கள் என்பவற்றை நிகழ்த்தியிருப்பவர்கள் அவற்றுக்கு பொறுப்புக் கூற வேண்டிய நிலைக்கும் பங்களிப்புச் செய்கின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஆயுத மோதல்கள் மற்றும் மனிதநேய நெருக்கடிகள் நிகழும் போது சிவில் சமூக அமைப்புக்களே முதலில் களத்தில் இறங்கும் அமைப்புக்களாக இருந்து வருகின்றன. அவை அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக பெறுமதிமிக்க ஆவணங்கள், பொருட்கள் மற்றும் சாட்சிகளாக பயன்படுத்தக் கூடிய சான்றுகள் என்பவற்றை திரட்டுகின்றன. போர் வலயங்களை பொறுத்தவரையில் குறிப்பாக, அரசின் ஒத்துழைப்பு இல்லாதிருக்கும் நிலையில், துல்லியமான தகவல்களுக்கான நம்பகமான ஒரேயொரு மூலமாக சிவில் சமூக அமைப்புக்களே இருந்து வருகின்றன. அதன் விளைவாக, குற்றமிழைத்திருக்கும் நபர்களை அவற்றுக்கு பொறுப்புக் கூற வைக்கும் நோக்கத்துடன், சான்றுகளை சேகரித்து, பாதுகாத்து வைத்து, அவற்றுக்கூடாக பொது மக்களின் விழிப்புணர்வைத் தூண்டும் கணிசமான அளவிலான ஆற்றலை சிவில் சமூக அமைப்புக்கள் கொண்டுள்ளன. சிவில் சமூக அமைப்புக்களினால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் ஆவணப்படுத்தல் முயற்சிகள் குற்றங்களுக்கு ஆட்களை பொறுப்புக் கூற வைத்தல், பொது மக்கள் நிகழ்ச்சித்திட்டங்கள், கல்வி மற்றும் நினைவேந்தல் என்பவற்றுக்கு ஆதரவளிக்கும் அரசாங்க, அரசாங்கங்களுக்கிடையிலான, அரசுசாரா அமைப்புக்களின் ஆதரவைத் தூண்டியிருப்பதுடன், அவற்றுக்கு குறைநிரப்பும் செய்துள்ளன.

### குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வைக்கும் விடயத்தில் சிவில் சமூகஆவணப்படுத்தலின் வரலாறு மற்றும் வகிபங்கு

ஆகக் குறைந்தது இரு நூற்றாண்டு காலமாக சிவில் சமூக அமைப்புக்கள் மனித உரிமை மீறல்களை முனைப்பான விதத்தில் ஆவணப்படுத்தி வந்துள்ளன. அடிமை வணிகம் தொடர்பாக மக்களின் உணர்வைத் தூண்டும் பொருட்டு அத்லாந்திக் பிராந்தியத்தில் இடம்பெற்ற அடிமை வணிகம் தொடர்பாக முன்னைய அடிமைகள் மற்றும் அடிமை முறைக்கு எதிராக போராடியவர்கள் ஆகியோரின் சான்றுகளை திரட்டி, சிவில் சமூக அமைப்புக்கள் பிரசுரித்த காலம் தொடக்கம் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது[1]. நவீன சர்வதேச மனித உரிமைகள் இயக்கம் 1960 களில் எழுச்சியடைந்த போதும், 1990 கள் வரையில் குற்றங்களை நிகழ்த்தியிருக்கும் நபர்களை பொறுப்புக் கூற வைப்பதற்கென சிவில் சமூக அமைப்புக்கள் ஆவணப்படுத்தலை பயன்படுத்தியிருக்கவில்லை[2]. இந்த தாமதத்துக்கு தண்டனை விலக்குரிமை பரவலாக காணப்பட்டமை மற்றும் குற்றவியல் நீதித்துறையிலும் பார்க்க அரசியல் ஒழுங்கு, சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பன மேலோங்கி இருந்து வந்த நிலைமை என்பன பங்களிப்புச் செய்திருந்தன[3]. அதன் பிரகாரம், அக்காலக்கட்டத்தின் போது முன்னெடுக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான பணிகள், குற்றவியல் வழக்குத் தொடுப்புக்களுக்கு பங்களிப்புச் செய்வதற்கு பதிலாக[4] மனித உரிமை மீறல்கள் தொடர்பான விழிப்புணர்வைத் தூண்டுவதற்கும், அவற்றைத் தடுப்பதற்கும், அவற்றை தணிப்பதற்கும் என கெடுபிடி யுத்தத்தின் முடிவு சர்வதேச மட்டத்தில் குற்றச் செயல்களை நடத்தியிருக்கும் தனிநபர்களை பொறுப்புக் கூற வைப்பது தொடர்பாக நிலவி வந்த அரசியல் இடையூறுகளை குறைத்தது; அல்லது நீக்கியது. 1990 களில் சட்டத்தை வலுவுக்கிடுவதற்கான சர்வதேச பொறிமுறைகள் உருவாக்கப்பட்டதன் காரணமாக அவ்வப்போது விசாரணை மன்றங்கள் அமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் சிவில் சமூக அமைப்புக்கள் தமது ஆவணப்படுத்தல் முயற்சிகளுடன் இணைந்த விதத்தில் குற்றச் செயல்களுக்கு ஆட்களை பொறுப்புக் கூற வைக்கும் செயற்பாட்டுக்கு ஆதரவளிக்கத் தொடங்கின.

## சம்பவக் கற்கைகள் தொடர்பான ஒரு பொது நோக்கு: கம்போடியா, முன்னைய யுகொஸ்லோவியா மற்றும் கௌதமாலா

இந்த அத்தியாயம் மூன்று சிவில் சமூக அமைப்புக்கள் தொடர்பான சம்பவக் கற்கைகளை முன்வைக்கின்றது. 1990 கள் தொடக்கம் இந்த சிவில் சமூக அமைப்புக்கள் மேற்கொண்டு வந்த ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் தமது நாடுகளில் குற்றங்களை இழைத்திருக்கும் நபர்களை அவற்றுக்கு பொறுப்புக் கூற வைப்பதற்கும், மனித உரிமைகளை ஆவணப்படுத்துதல் தொடர்பான மிகச் சிறந்த நடைமுறைகளுக்கும் பங்களிப்புச் செய்துள்ளன.

முதலாவது சம்பவக் கற்கை 1997 ஆம் ஆண்டில் முறையான அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட கம்போடிய ஆவணப்படுத்தல் (DC-Cam) பணியினை எடுத்து விளக்குகின்றது. இந்த நிலையம் கம்போடிய நீதிமன்றங்களின் அதிவிசேட விசாரணை மன்றங்களுக்கு ஆதரவளித்தது. அது கெமரூச் வரலாறு தொடர்பான மிகப் பெரிய ஆவணக் காப்பகத்தை கொண்டுள்ளது; இந்த ஆவணக் காப்பகம் 900,000 ஆவணங்களையும், 11,000 புகைப்படங்களையும், 8,000 க்கும் மேற்பட்ட நேர்காணல்களையும் உள்ளடக்குகின்றது. கம்போடியாவுக்கான அதிவிசேட நீதிமன்றம் உருவாக்கப்பட்டமையை நியாயப்படுத்துவதற்கென இந்த ஆவணங்களை பயன்படுத்துவது மட்டுமன்றி, புலன் விசாரணைகள் மற்றும் வழக்கு விசாரணைகள் என்பவற்றுக்கு சாட்சிகளை வழங்குவதற்கு குற்றச் செயல்களுக்கு ஆட்களை பொறுப்புக் கூற வைத்து, பொது மக்களுக்கு கல்வியூட்டுவதற்கும் அவை பயன்படுத்தப்பட்டுள்ளன. கம்போடியா ஆவணப்படுத்தல் நிலையத்தின் பாடங்கள் முறையான ஒழுங்கிலான நிறுவனமயப்படுத்தப்பட்ட ஆவணப்படுத்தல், நிதியளிப்பின் வெளிப்படைத் தன்மை மற்றும் சமூக மாற்றத்தை எடுத்து வரும் பொருட்டு விருப்பு வெறுப்பற்ற விதத்தில் ஆவணத்தலை மேற்கொள்ளல் என்பவற்றின் முக்கியத்துவத்தை உள்ளடக்குகின்றன.

இரண்டாவது சம்பவக் கற்கை முன்னைய யுகோஸ்லோவியாவில் மிகப் பெரிய ஆவணப்படுத்தலை மேற்கொள்ளல் நிலையமாக இருந்து வரும் மனித நேய சட்ட மையத்தின் (HLC) பணிகளை உள்ளடக்குகின்றது. இந்த நிலையம் போர் கால குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் ஆகியோரின் 30,000 க்கும் மேற்பட்ட வாக்குமூலங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் ஆவணப்படுத்தல் செயற்பாடு 1992 இல் ஆரம்பமானதுடன், அந்த ஆவணங்கள் நீதி மன்றங்களில் சான்றுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. அதே போல வழக்குத் தொடுனர்கள் குற்றச் செயல்களின் பின்புலம் சார்ந்த புரந்துணர்வை விருத்திச் செய்து கொள்வதற்கும். புலன் விசாரணைக்கு துப்புக்களை வழங்குவதற்கும் அவை உதவியுள்ளன. மனித நேய சட்ட நிலையம் பாரபட்சம் தொடர்பான குற்றச்சாட்டுக்களை முறியடிப்பதற்கென விருப்பு வெறுப்பற்ற விதத்தில் ஆவணப்படுத்தலை மேற்கொள்வது தொடர்பான படிப்பினைகளை பகிர்ந்து கொள்கின்றது. மேலும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருடன் நேர்காணலை நடத்தும் பொழுது 'தீங்கிழைக்காமை' கோட்பாட்டையும் அது பின்பற்றுகின்றது.

இறுதி சம்பவக் கற்கை கௌதமாலாவின் தடயவியல் மானிடவியல் மன்றத்தின் பணிகளை விரிவாக எடுத்து விளக்குகின்றது. கௌதமாலாவின் உள்நாட்டு போர் காலகட்டத்தில் நிகழ்த்தப்பட்ட கொடூரச் செயல்களை நிரூபிப்பதற்கென இந்த மன்றத்தின் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இக்காலக்கட்டத்தின் போது நிகழ்த்தப்பட்டிருக்கும் குற்றச் செயல்கள் தொடர்பான சான்று விவரணங்களுக்கு பங்களிப்புச் செய்யும் பொருட்டு 1997 தொடக்கம் இந்த மன்றம் பல்துறைச்சார் தடயவியல் புலன்விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. இந்த மன்றத்தின் தடயவியல் சான்றுகள் சாட்சிகளின் வாக்குமூலங்களை உறுதிப்படுத்துவதற்கும், குற்றமிழைத்த நபர்களை குற்றச் செயல்களுடன் தொடர்புபடுத்துவதற்கும், சம்பவங்களை ஒரு கால வரிசையில் முன்வைப்பதற்கும், உள்நோக்கத்தை நிரூபிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இப்பிரிவு தடயவியல் சான்று மற்றும் சாட்சியம் என்பவற்றுக்கிடையிலான கூட்டுச் செயற்பாட்டிலிருந்து எவ்வாறு பயனடைய முடியும் என்பது குறித்தும், அதே போல தடயவியல் சான்றுகள், குற்றவியல் நீதி நடைமுறைகளின் போது பாதிக்கப்பட்டவர்கள் குரலெழுப்புவதற்கு எவ்வாறு உதவ முடியும் என்ற விடயம் குறித்தும் பரிந்துரைகளை முன்வைக்கின்றது.



தப்பிப் பிழைத்த ஒருவர் தென் சூடான் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முன்முயற்சி உறுப்பினர் ஒருவருடன் 2016 டிசம்பர் மாதத்தில் கம்போடிய Youth for Peace அமைப்பில் ஒரு கலந்துரையாடலில் ஈடுபடுகின்றார்.

## கம்போடியா ஆவணப்படுத்தலுக்கான ஆவணப்படுத்தல் நிலையம்

### கம்போடியாவில் கமரூச் யுகம் குறித்த பின்னணி

பொதுவாக, கமரூச் என அழைக்கப்படும் கம்யூனிச சக்திகள் 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி கம்போடியாவை தமது கட்டுப்பாட்டில் எடுத்து வந்தது. ஜனநாயக கம்பூச்சிய அரசை ஸ்தாபித்தன. சுமார் 4 வருட காலம் கமரூச் இயக்கத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பன 1.4 தொடக்கம் 2.2 மில்லியன் வரையிலான மக்களின் மரணங்களை எடுத்து வந்திருந்தன. இந்த ஆட்சியின் பயங்கரம், சித்திரவதை மற்றும் கொலைகள் என்பன 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆந் திகதி வியட்நாம் படைகள் கம்போடியா மீது படையெடுத்து, தலைநகரத்தை கைப்பற்றும் வரையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன. எனினும், 1998 ஆம் ஆண்டு வரையிலும் கமரூச் ஒரு கெரில்லா இயக்கமாக நிலைத்திருந்தது.

கெமரூச் ஆட்சிக் காலத்தின் போது, இடம்பெற்றிருந்த குற்றச் செயல்களின் இயல்பை நிர்ணயித்துக் கொள்வதற்கென 1998 நவம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு கம்போடியாவுக்கும் தாய்லாந்துக்கும் நிபுணர்களின் ஒரு குழுவை அனுப்பி வைத்தது. கெமரூச் தலைமைக்கு எதிராக குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்வதனை நியாயப்படுத்தக் கூடிய போதியளவிலான பௌதீக சாட்சியங்களும், சாட்சிகளின் வாக்குமூலங்களும் இந்த நிபுணர் குழுவுக்குக் கிடைத்தன. இனப் படுகொலை மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் என்பன தொடர்பான குற்றச்சாட்டுக்களை புலன் விசாரணை செய்து, வழக்குத் தாக்கல் செய்வதற்கென ஐ நா பணிப்பானையின் கீழ் சர்வதேச நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென அவர்கள் பரிந்துரை செய்திருந்தார்கள். எவ்வாறிருப்பினும், ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் செயற்படும் ஓர் உள்நாட்டு நீதிமன்றத்தினால் குற்றச் செயல்களை கையாள முடியுமென கம்போடியா அரசாங்கம் கருதியது. 2003 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பும், கம்போடிய அரசாங்கமும் ஓர் ஒப்பந்தத்தை செய்து கொண்டதுடன், அது இப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கென கம்போடியா நீதிமன்றங்களில் அதி விசேட

விசாரணை மன்றங்களை ஸ்தாபித்து, செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை கொண்டிருந்தது. இந்த ஒப்பந்ததின் கீழ் அதி விசேட நீதிமன்றத்தை கம்போடியாவின் உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் அமைக்க வேண்டியிருந்தது. ஆனால், அந்த நீதிமன்றம் ஒரு சர்வதேச இயல்பைக் கொண்டிருப்பதுடன், கம்போடியர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் ஆகியோரை உள்ளடக்கும். இந்த நீதிமன்றம் ஜனநாயக கம்போடியாவின் மூத்த தலைவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான பணிப்பாணையை கொண்டிருப்பதுடன், 1975 ஏப்ரல் 17 ஆந் திகதி தொடக்கம் 1979 ஜனவரி 6 ஆந்திகதி வரை இடம்பெற்ற மிகவும் பாரதூரமான சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்டங்களின் மீறல்களுக்கு பொறுப்பாக இருந்து வந்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவிருந்தது.

### கம்போடியாவின் ஆவணப்படுத்தல் நிலையம் குறித்து

கம்போடியாவின் ஆவணப்படுத்தல் நிலையம் உள்ளூர் சமூகத்தினால் நெறிப்படுத்தப்படும் ஓர் அரசு சாரா அமைப்பாகும். அது கம்போடியாவில் சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு உதவும் பொருட்டு கமரூச் வரலாற்றினை பதிவு செய்து, பாதுகாத்து வைக்கின்றது. இந்த நிலையத்தின் தோற்றம், 1994 ஏப்ரல் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய அமெரிக்க கம்போடிய இனப் படுகொலைக்கான நீதி சட்டத்திலிருந்து உருவாகியது. இந்தச் சட்டம் கம்போடிய இனப்படுகொலை புலன் விசாரணைக்கான ஐக்கிய அமெரிக்க ஸ்தாபிப்பதற்கான பணிப்பாணையை கொண்டிருந்தது. கம்போடியாவில் இடம்பெற்ற இனப் படுகொலை மற்றும் மனித குலத்திற்கெதிரான குற்றச் செயல்கள் என்பன தொடர்பாக ஒரு ஆராய்ச்சியை மேற்கொள்ளும் பொருட்டு இந்த அலுவலகம் யேல் பல்கலைக்கழகத்திற்கு அது ஒரு கொடையை வழங்கியது. கம்போடிய 1995 தொடக்கம் 1996 ஆம் ஆண்டு முடிவு வரையில் அதன் ஆராய்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு இயலச் செய்யும் விதத்தில் யேல் பல்கலைக்கழகம் ஒரு கள அலுவலகமாக கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையத்தை ஸ்தாபித்தது. 1996 ஆம் ஆண்டின் முடிவில் இதற்கான நிதியளிப்பு முடிவுக்கு வந்தது. கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையம் 1997 ஆம் ஆண்டு அது இன்று அறியப்படும் DC – Cam என்ற பெயரில் ஒரு சுயாதீனமான அமைப்பாக மாற்றமடைந்தது.

கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையம் கெமரூச் வரலாற்றை தொகுத்து, பகுப்பாய்வு செய்து, பேணிப் பாதுகாத்து, பகிர்ந்தளிப்பதற்கான முதலது நம்பகமான முயற்சியாக இருந்து வருகின்றது என பரவலாக கருதப்படுகின்றது. அது கெமரூச் தொடர்பான உலகிலேயே மிகப் பெரிய ஆவணத் தொகுப்பைக் கொண்டிருப்பதுடன், கம்போடியாவின் தண்டனை விலக்குரிமைக்கெதிராக மிக முக்கியமான ஒரு வகிபங்கினை வகித்து வந்துள்ளது. 2017 ஜூன் மாதம் அளவில் இந்நிலையம் சுமார் 900,000 பக்கங்களுக்கு மேற்பட்ட கெமரூச் ஆவணங்களை சேகரித்திருந்தது; 11,000 புகைப்படங்கள், உயிர் தப்பி வாழ்வோருடன் நடத்தப்பட்ட 8,000 நேர்காணல்கள் வெளிநாட்டு அரசாங்கங்களின் ஆவணங்கள் மற்றும் சமகால திரைப்படக் காட்சிகள் என்பவற்றையும் அது சேகரித்து வைத்திருந்தது. மேலும், இந்த நிலையம் ஆவணப்படங்கள், அறிவுத்துறை பிரசுரங்கள், நாடக பிரதிகள் பாடல்கள் போன்ற பல்வேறு விதமான ஊடகங்களையும் உருவாக்கியிருந்தது.

கம்போடியா ஆவணப்படுத்தல் நிலையத்தின் ஆவணப்படுத்தல் செயற்பாடு கம்போடியாவிற்கான விசேட நீதிமன்றத்திற்கான தேவையை நியாயப்படுத்துவதற்கு உதவியது. அந்த நீதிமன்றம் அதன் ஸ்தாபிதம் தொடக்கம் சாட்சிகள் அல்லது சான்றுகளுக்கான வழிகாட்டுதல்களாக இந்நிலையத்தின் ஆவணங்களை பயன்படுத்தி வந்துள்ளது. மேலும், குற்றச் செயல்களில் குறிப்பிட்ட சில தனிநபர்களின் வகிபங்கினை புரிந்து கொள்வதற்கும் இழப்பீடுகள் தொடர்பான பாதிக்கப்பட்டவர்களின் சட்டபூர்வமான வேண்டுகோள்கள், குறிப்பாக நினைவேந்தல் செயற்பாடுகள் மற்றும் பொது மக்களுக்கான கல்வி என்பன குறித்த வேண்டுகோள்கள் என்பவற்றை நிறைவேற்றி வைப்பதற்கென கருத்திட்டங்களை அமுல' செய்வதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் தேவைகளுக்கு எதிர்வினையாற்றியுள்ளது. இறுதியாக, கம்போடியாவில் குற்றச் செயல்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய தேவை குறித்த உள்நாட்டு மற்றும் சர்வதேச விழிப்புணர்வையும் அது தூண்டியுள்ளது.

### கம்போடியாவின் அதி விசேட நீதிமன்றத்திற்கு நேரடியாக உதவுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள்

கம்போடியா ஆவணப்படுத்தல் நிலையத்தினால் சேகரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் ஆவணச் சான்றுகள் விரிவான ஆவணப்படுத்தல்களுக்கூடாக சர்வதேச மற்றும் கம்போடிய சட்டத்தின்

கீழ் பாரிய குற்றச் செயல்கள் புரியப்பட்டுள்ளன என்ற விடயத்தை ஊர்ஜிதம் செய்ததன் மூலம் கம்போடியாவுக்கான அதி விசேட நீதிமன்றத்தின் உருவாக்கத்தை நியாயப்படுத்தியது. ஐ நா நிபுணர் குழு 1998 இல் கம்போடியாவுக்கு விஜயம் செய்த பொழுது, கம்போடியா ஆவணப்படுத்தல் நிலையம் ஆயிரக்கணக்கான கொலைக் களங்களின் அமைவிடங்கள் தொடர்பான விபரங்களையும், பாரிய புதைக்குழிகள் தொடர்பான விபரங்களையும், அதே போல மரணங்களுக்கான காரணங்களை உறுதிப்படுத்தும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் அவர்களுக்கு வழங்கியது. பகிர்ந்து கொள்ளப்பட்ட இந்த ஆவணங்கள், குற்றச் செயல்களை நேரடியாக இழைத்த நபர்கள் என்ற முறையில் அல்லது கட்டளை, கண்காணிப்பு வகிபங்கினை கொண்டிருந்தவர்கள் தனிநபர்கள் திட்டவட்டமான பின்னணியை வழங்கியமையால் இது பயனுள்ளதாக இருந்து வந்தன.

கம்போடியாவின் அதி விசேட நீதிமன்றத்தின் தோற்றத்தையடுத்து கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையம் பரந்த வீச்சிலான ஆவணங்கள், சாட்சிகள், திரைபடங்கள், புகைப்படங்கள் என்பவற்றை – அந்த நீதிமன்றத்துடன் முறையான ஒரு ஒப்பந்தம் இல்லாத நிலையில் - வழங்கியதன் மூலம் அதன் புலன்விசாரணைகள் மற்றும் வழக்குகள் என்பவற்றுக்கு ஆதரவளித்துள்ளது.[5] கம்போடியா ஆவணப்படுத்தல் நிலையத்தின் ஆராய்ச்சி, அதிவிசேட நீதிமன்றத்திற்குசாட்சிகள் தொடர்பான தகவல்களையும், சம்பந்தப்பட்ட ஆவணப்படுத்தல் சான்றுகளையும் வழங்கியதுடன், குற்றச் செயல்களில் குறிப்பிட்ட சில தனிநபர்களின் வகிபங்குகளையும் எடுத்து விளக்கியது. கம்போடிய விசேட நீதிமன்றத்தின் புலன் விசாரணையாளர்கள், வழக்குத் தொடுப்போர் மற்றும் வாதி தரப்பு சட்டத்தரணிகள் ஆகியோர் தமது பணியை உறுதிப்படுத்துவதற்கு, மேம்படுத்துவதற்கு அல்லது சீராக்கம் செய்து கொள்வதற்கு உதவியை பெற்றுக் கொள்வதற்கென ஆவணங்களை பெற்றுத் தருமாறு ஆவணப்படுத்தல் நிலையத்திடம் அடிக்கடி கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்கள். உண்மையிலேயே ஆவணப்படுத்தல் நிலையத்தினால் வழங்கப்பட்ட ஆவணங்கள் குறிப்பாக, இந்த நீதிமன்றம் தொடர்ச்சியாக எதிர்கொண்டு வந்த வளங்கள் தொடர்பான சவால்களின் பின்னணியில் அதற்கு கணிசமான அளவு ஆதரவினை வழங்கியிருந்த விடயத்தை அதிவிசேட நீதிமன்றம் வெளிப்படையாக அங்கீகரித்திருந்தது[6]. 2017 ஜுன் மாதமளவில் கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையம் பிரதானமாக சான்றுகளின் வடிவில் 3.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி வாய்ந்த பொருள்சார் உதவியை பங்களிப்புச் செய்திருந்தது.

### குற்றச் செயல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டி நபர்கள் தொடர்பாக விழிப்புணர்வைத் தூண்டுவதற்கென பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள்

குற்றச் செயல்களுக்கு ஆட்களை பொறுப்புக் கூற வைப்பது தொடர்பாக மக்களுக்கு கல்வியூட்டுவதற்கும், அந்தச் செயற்பாட்டுக்கு ஆதரவளிப்பதற்கும், அரசியல் மற்றும் சமூக மாற்றத்தை தூண்டுவதற்கும் பதிவுகளை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முடியுமென்ற விடயத்தை கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையம் புரிந்து கொண்டுள்ளது. முறைசார்ந்த கல்வித் துறையைப் பொறுத்தவரையில் கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையம் அந்நாட்டின் கல்வி மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சுடன் மிக நெருக்கமாக இணைந்து பணியாற்றி வந்துள்ளது. அனைத்து இரண்டாம் நிலை பாடசாலைகளிலும் கமரூச் வரலாற்றை கற்றுக் கொடுப்பதற்கென இந்த அமைச்சு கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையத்தின் பாடத்திட்டத்தை பயன்படுத்துகின்றது. இந்தப் பாடத் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கான கையெட, இனப் படுகொலை மற்றும் இடப்பெயர்ச்சி என்பவற்றுக்கான வரைவிலக்கணங்கள் தொடர்பாக செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது; அதேபோல மூல்போசெரேயில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பான கலந்துரையாடல்களும் இக்கைநூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் கையேட்டின் பிந்திய கையேட்டுக்கென கம்போடியாவுக்கான விசேட நீதிமன்றத்தின் சட்டத்துறை முடிவுகள் மற்றும் தீர்ப்புக்கள் என்பன தொடர்பான ஒரு மேலதிக அத்தியாயத்தை சேர்த்துக் கொள்வதற்கு கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையம் எதிர்பார்க்கின்றது.

சுகப்படுத்தலை மேம்படுத்துவதற்கும், குற்றச் செயல்களுக்கு ஆட்களை பொறுப்புக் கூற வைப்பதற்கும், விழிப்புணர்வைத் தூண்டுவதற்கும் என கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையத்தின் ஆவணத் தொகுப்புக்கள் பல்வேறு விதமான கலை, இலக்கிய மற்றும் அறிவுத் துறை செயற்பாடுகளுக்கு தகவல்களை வழங்கியுள்ளது. பரவலாக, சர்வதேச மட்டத்தில் கமரூச் இயக்கத்தின் கொடூரமான குற்றச் செயல்கள், கம்போடியாவிற்கான அதி விசேட நீதிமன்றம் மற்றும் நல்லிணக்கம் போன்ற விடயங்களை அலசி ஆராய்வதற்கென திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு ஆதரவளித்து வந்துள்ளது.

இறுதியாக, இந்த ஆவணப்படுத்தல் நிலையம் கமரூச் வரலாறு குறித்தும் கம்போடியாவுக்கான அதி விசேட நீதிமன்றம் குறித்தும் பொது மக்களுக்கான வெளிக்கள நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. அது ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை தொலை தூர சமூகங்களில் கிராமிய ஒன்றியங்களில் கூட்டங்களை நடத்துவதுடன், தமது அனுபவங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு சமூக உறுப்பினர்களை ஊக்குவிக்கின்றது. மேலும், அந்நிலையத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கும் திரைப்படங்களை அவர்களுக்கு திரையிட்டு காட்டுகிறது; கமரூச் வரலாறு மற்றும் கம்போடிய அதி விசேட நீதிமன்றத்தின் பணிகள் என்பன குறித்த சமர்ப்பணங்களையும் முன் வைக்கின்றது. இது தவிர, தீர்ப்புக்கள் மற்றும் தண்டனைகள் என்பன வழங்கப்படும் நிகழ்வுகள் போன்ற மிக முக்கியமான போது நாடெங்கிலும் இந்த அமர்வுகளை நேரடியாக ஒளிபரப்புச் செய்கின்றது. நாம்பென்னில் அமைந்திருக்கும் நீதிமன்றத்திற்கு உயிர் தப்பி வாழ்பவர்களை போக்குவரத்துச் செய்வதன் மூலம் கம்போடிய அதிவிசேட நீதிமன்றங்களின் விசாரணைகளில் சமூகமளிப்பதற்கு அவர்களுக்கு வசதி செய்து கொடுத்துள்ளது.



நாடக நிகழ்ச்சிகளுக்கூடாக இளைஞர் யுவதிகள் கம்போடியாவின் வன்முறை சூழ்ந்த கடந்த காலம் குறித்து கற்றுக் கொள்கின்றார்கள்.

## கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் பரிந்துரைகள்

**ஆவணப்படுத்தல் அமைப்புக்கள் முறைமை சார்ந்த, விருப்பு வெறுப்பற்ற விதத்திலான ஆராய்ச்சி முறைமையொன்றை பின்பற்றுதல் வேண்டும்.** 002 வழக்கின் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையத்தின் பாரபட்சமற்ற நிலை குறித்து சந்தேகங்களை எழுப்பியதுடன், குறிப்பிட்ட சில மூலாதாரங்களுக்கு முன்னுரிமை வழங்குவது போன்ற ஒரு சில தெரிவுகளை அந்நிலையம் ஏன் மேற்கொண்டது என்ற விடயத்தை ஆழமாக ஆராய்வதற்கு முயற்சித்தார். ஆவணப்படுத்துனர் (வாதி தரப்புக்கு சாதகமான விதத்திலும், பிரதிவாதி தரப்புக்கு பாதகமான வித்ததிலும் வழக்கை நடத்துவதற்கான சாட்சியங்களை சேகரிக்கும் விடயத்தில் பாரபட்சத்துடன் நடந்து கொண்டுள்ளாரா என்பதனையும் நிர்ணயிப்பதற்கு பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி முயற்சித்தார். கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையம் ஆவணப்படுத்தல் பணியை முறைமைப்படுத்துதல் மற்றும் நிறுவனமயப்படுத்துதல் என்பவற்றின் ஒரு பாகமாக ஆவணப்படுத்தல் பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் முறைமை சார்ந்த ஒரு முறையை பயன்படுத்துவது விருப்பு வெறுப்பற்ற தன்மை தொடர்பான கரிசனைகளை முறியடிக்கும் அதே வேளையில், ஒரு சில தெரிவுகள் ஏன் மேற்கொள்ளப்பட்டன என்பது தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு உதவ முடியும் என்பதனை அதன் அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டுள்ளது.

**ஆவணப்படுத்தல் பணி முறைசார்ந்த நிறுவனமயப்படுத்தப்பட்ட விதிமுறைகளின் வழிகாட்டுதலை பெற்றுக் கொள்ள வேண்டும்.**

ஆவணங்கள் நீதிமன்றத்தில் ஏற்கதக்கவையாக இருக்க வேண்டுமானால், அவை நம்பகமானவையாக, உண்மையானவையாக, பொருத்தமானவையாக, அதிகாரபூர்வமானவையாக இருந்து வருகின்றன என்ற விடயம் தீர்மானிக்கப்பட வேண்டும்[9]. உதாரணமாக, 002/01 வழக்கில் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி பதிவுகளின் அதிகாரபூர்வத் தன்மை மற்றும் அவற்றின் கட்டுப்பாடு சங்கிலித் தொடர் என்பவற்றை நிர்ணயித்துக் கொள்வதற்கான கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையம் ஏதேனும் திட்டவட்டமான ஒழுங்குமுறைகளை கொண்டுள்ளதா எனக் கேட்டார். அக்கேள்விக்கு பதிலளித்த ஆவணப்படுத்தல் நிலையத்தின் பணிப்பாளர், அது முறைமைப்படுத்தப்பட்ட எழுத்து மூலமான ஒழுங்குமுறைகளை பின்பற்றி வருவதாக கூறினார். அதிகாரபூர்வதன்மை, கட்டுக்காவல், கட்டுப்பாட்டு சங்கிலி மற்றும் ஏற்புடைய தன்மையை ஸ்தாபிப்பதற்கான ஏனைய காரணிகள், உள்ளடக்கிய ஆவணப்படுத்தல் பணியின் முறைமைப்படுத்தல், நம்பகத் தன்மைக்கு அத்தியாவசியமாக இருந்து வருகின்றது என கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையம் கண்டறிந்து கொண்டுள்ளது. இது தவிர, நிறுவனமயப்படுத்தல், ஆவணங்களை பெற்றுக் கொண்டிருக்கும் நபர் சாட்சியமளிப்பதற்கு சமூகமளிக்க முடியாத நிலை காணப்படுமிடத்து, ஆவணப்படுத்தல் முறைமையியல் குறித்து ஊழியர் ஒருவர் சாட்சியமளிப்பதற்கான இயலுமையை வழங்குகின்றது.

**ஆவணப்படுத்தல் அமைப்புக்கள் அவற்றின் நிதி வழங்குனர்கள் மற்றும் பங்காளர்களுடன் உறவுகள் தொடர்பாகவும் வெளிப்படைத் தன்மையைக் காட்டுவதற்கு முயற்சிக்க வேண்டும்.**

நிதி பெறப்படும் மூலங்கள் மற்றும் உறவுகள் என்பன ஆவணப்படுத்தல் முயற்சிகளின் சுயாதீனம் மீது ஒரு தாக்கத்தை எடுத்து வருகின்றன. உதாரணமாக, 002 வழக்கின் பிரதிவாதி தரப்பின் சட்டத்தரணி கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையம் பல்வேறு மூலாதாரங்களிலிருந்து குறிப்பாக, கம்போடியா அரசாங்கத்திலிருந்து எவ்வாறு ஆவணங்களை பெற்றுக் கொள்ள முடிந்தது என்றும், நிதிப் பங்களிப்புக்கள் எவ்வாறு ஆவணப்படுத்தலின் செயல்நெறியின் மீது செல்வாக்குச் செலுத்தியது என்பது குறித்தும் கேள்விகளை எழுப்பினார். ஆவணப்படுத்தல் நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் சாட்சியமளிக்கும் பொழுது, கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையத்திற்கு கமரூச் தொடர்பாக எந்தவொரு நபரிடமிருந்தும், எந்தவொரு இடத்திலிருந்தும் ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு கம்போடிய அரசாங்கம் அனுமதி வழங்கியிருப்பதாக கூறினார். மேலும், அந்த அமைப்பின் பதிவுகளுக்கான தேடல் தொடர்பான பரவலான செயல் பரப்பையும் பணிப்பாளர் அங்கு எடுத்து விளக்கினார்[10]. அது தவிர, திட்டவட்டமான பணிகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தொடர்பாக கம்போடியா ஆவணப்படுத்தல் நிலைய நிதிகள் வெளிப்படைத் தன்மை குற்றச்சாட்டுக்களை முறியடிப்பதற்கு உதவியது. அதாவது, ஒரு சில புலன் விசாரணைகள் இடம்பெற வேண்டும்

அவற்றின் பெறுபேறுகள் முன்வைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையிலேயே நிதிப்படுத்தல் வழங்கப்பட்டிருந்தது.



கம்போடியாவின் சமூக நினைவேந்தல் முன்னெடுப்பொன்றான Youth for Peace அமைப்பின் இளைஞர்கள். இந்த அமைப்பு பாரிய கொலைக் களங்களை உரையாடல்கள், நினைவேந்தல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பவற்றுக்கான நிலையங்களாக மாற்றியமைப்பதற்கான நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய விதத்தில் சமாதான கற்றல் நிலையங்களுக்கு ஆதரவளித்து வருகின்றது.

**ஆவணப்படுத்தல் முயற்சிகள், அரசியல் மற்றும் சமூக மாற்றத்திற்கான கருவிகள் என்ற தமது வகி பாத்திரத்துடன் பாரபட்ச மற்ற விதத்தில் நடந்து கொள்ள வேண்டிய தேவையை சமநிலையில் வைத்திருத்தல் வேண்டும்.**நம்பகமான ஆவணப்படுத்தல் செயற்பாட்டுக்கென அரசியல் மற்றும் சட்ட நிகழ்ச்சிநிரல்களிலிருந்து சுயாதீனம் தேவைப்படுகிறது; எவ்வாறிருப்பினும், அரசியல் மற்றும் சமூக மாற்றத்திற்கான ஒரு கல்விக் கருவி என்ற முறையில் ஆவணப்படுத்தல் வகிக்கும் வகி பங்குடன் இது முரண்படுகின்றது. அதி விசேட நீதிமன்றத்துக்கு குற்றங்களுக்கான சாட்சியங்களை வழங்குதல் மற்றும் பொது மக்களுக்கு கல்வியூட்டல் ஆகிய அதன் வகி பங்கு காரணமாக, கம்போடிய ஆவணப்படுத்தல் நிலையம் இந்த பதற்ற நிலைமையை நன்றாக புரிந்து கொள்கின்றது. ஆவணப்படுத்தல், குற்றங்களுக்கான சாட்சியங்கள் போன்ற நேரடி விளைவுகளை மட்டுமன்றி கல்வி மற்றும் நினைவேந்தல் போன்ற மறைமுக விளைவுகளையும் தூண்டும் ஆற்றலை கொண்டுள்ளது. என்ற விடயத்தை இந்த நிலையம் கண்டறிந்து கொண்டுள்ளது.

## முன்னைய யுகோஸ்லோவியாவில் மனித நேய சட்ட நிலையத்தின் ஆவணப்படுத்தல்

### முன்னைய யுகோஸ்லோவியாவில் இடம்பெற்ற ஆயுத மோதல்களின் பின்னணி

1990 களில் முன்னைய யுகோஸ்லாவியாவில் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தொடர்பான அப்பட்டமான மீறல்களையும் சர்வதேச மனிதநேயச் சட்டம் தொடர்பான பாரதூரமான மீறல்களையும், எடுத்து வந்திருந்தன. அங்கு கொல்லப்பட்ட 130,000 க்கும் மேற்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சிவிலியன்களாக இருந்து வந்ததுடன், அவர்கள் மிகக் கொடூரமான குற்றச் செயல்களின் மூலம் கொல்லப்பட்டுள்ளார்கள்[11]. இந்த நிலைமை தொடர்பான சட்ட ரீதியான நிவாரணங்களை வழங்குவதற்கு உள்நாட்டு நிறுவனங்கள் முடியாதவையாக அல்லது விருப்பமற்றவையாக இருந்து வந்த காரணத்தினால் ஐ நா பாதுகாப்புச் சபை முன்னைய யுகோஸ்லோவியாவுக்கான சர்வதேச குற்றவியல் விசாரணை மன்றத்தை 1993 ஆம் ஆண்டில் ஸ்தாபித்தது. குற்றச் செயல்களை நிகழ்த்தியிருக்கும் நபர்களுக்கெதிராக வழக்குகளை தாக்கல் செய்யும் பொருட்டு இந்த விசாரணை மன்றம் உருவாக்கப்பட்டது. ஐ நா பாதுகாப்புச் சபை இந்த விசாரணை மன்றத்தின் பணிகள்

முடிவடைந்திருப்பதாக 2004 இல் அறிவித்தது. அதனையடுத்து வழக்குத் தாக்கல் செய்வதற்கான நீதித்துறை அரங்கு என்ற முறையில், உள்நாட்டு நீதிமன்றங்கள் சர்வதேச விசாரணை மன்றத்தின் வழக்குகளை பொறுப்பேற்க வேண்டுமென அது கேட்டுக் கொண்டது[12].

### மனிதநேய சட்ட நிலையம் (HLC)

மனிதநேய சட்ட நிலையம் உள்நாட்டு சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஒரு முயற்சியாக இருந்து வருவதுடன், ஆயுத மோதல்களின் பின்னணியில் இடம்பெற்று வந்த அத்துமீறல்களை கண்காணித்து, ஆவணப்படுத்தும் நோக்கத்திற்கென சேர்பியன் செயற்பாட்டாளர்களினால் அது 1992 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. கடந்த பல வருட காலமாக இந்த நிலையம் முன்னைய யுகோஸ்லோவியாவின் மிகப் பெரிய ஆவணப்படுத்தல் நிலையமாக உருவாகி வந்திருப்பதுடன், 1990 களிலிருந்து இடம்பெற்று வந்த கொடூரமான குற்றச் செயல்களின் ஆவணக் காப்பகத்தை தொழில்சார் முறை ரீதியில் நிர்வகித்து வருகின்றது. இந்த நிலையத்தின் ஆவணக் காபகம் முன்னைய யுகோஸ்லாவியாவிற்கான சர்வதேச விசாரணை மன்றத்தின் வழக்குகளின் குரல் பதிவுகள் மற்றும் வீடியோ பதிவுகளில் 95% க்கும் மேற்பட்ட ஆவணங்களை தன்வசம் கொண்டுள்ளது. இந்த ஆவணங்கள் இணையத்தில் கிடைப்பதில்லை. மேலும், சாட்சிகளிடமிருந்து பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தும் பெறப்பட்ட 30,000 வாக்குமூலங்கள், போர் கால செய்தி பத்திரிகை வெளியீடுகளின் ஒரு ஊடக ஆவணக் காப்பகம் நீதிமன்ற ஆவணங்கள் மற்றும் ஏனைய ஆவண வகைகள் என்பவற்றையும் அது கொண்டுள்ளது[13]. 2005 ஆம் ஆண்டு தொடக்கம் கொஸோவோ ஆவணப்படுத்தல் நிலையம் மற்றும் குரோஷியா ஆவணப்படுத்தல் நிலையம் என்பவற்றுடன் இணைந்து மனிதநேய சட்ட நிலையம் மோதலுடன் சம்பந்தப்பட்ட மரணங்கள் மற்றும் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. 1990 களில் இடம்பெற்ற ஆயுத மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான அனைத்துமடங்கிய, துல்லியமான பதிவேடொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் செயற்படும் மனித இழப்புக்கள் கருத்திட்டத்திற்கென இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவரின் இனம், சமயம், பால், வயது, உடல் இயலாமை, போராளி அல்லது சிவிலியன் அந்தஸ்து என்பவற்றையும் கவனத்தில் கொள்ளாது அனைத்து நபர்கள் தொடர்பான விபரங்களையும் இது உள்ளடக்குகின்றது[14].

மனிதநேய சட்ட நிலையத்தின் அதியுயர் நன்மதிப்பு காரணமாக பொஸ்னியா, குரோஷியா மற்றும் கொஸோவோ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நபர்களும், சாட்சிகளும் - குற்றமிழைத்தவர்களும் கூட இந்த நிறுவனத்திற்கூடாக சாட்சியமளிப்பதற்கு முன் வந்திருந்தார்கள். உதாரணமாக, 2004 நவம்பர் மாதத்தில் ஸ்கோர்பியன் பொலிஸ் அலகைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் ஸ்ரெபபிரேனிகாவைச் சேர்ந்த இளம் ஆண்கள் மற்றும் இளம் பையன்களைக் கொண்ட ஒரு குழு கொலை செய்யப்பட்ட காட்சியை உள்ளடக்கிய ஒரேயொரு வீடியோவை இந்த நிலையத்திடம் ஒப்படைத்தார். இந்த வீடியோ ஸ்ரெபிரனிகாவில் நான்கு ஸ்கோர்பியன் உறுப்பினர்களுக்கெதிரான மிகவும் முக்கியமான ஒரு சாட்சியமாக அது இருந்தது; குரேஷியாவில் மற்றொரு ஸ்கோர்பியன் உறுப்பினருக்கெதிரான வழக்கிலும், உயர் மட்ட அரசியல், இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கெதிரான முன்னைய யூகோஸ்லாவியுக்கான சர்வதேச குற்றவியல் விசாரணை மன்றத்தின் ஆறு வழக்குகளிலும் அது முக்கிய சாட்சியமாக இருந்து வந்தது[15]. இந்த வீடியோ படம் இரண்டு மாத காலத்தில் ஸ்பெரனிகாவிலும், சர்வதேச மட்டத்திலும் 500 தடவைகளுக்கு மேல் ஒளிபரப்பப்பட்டது. அதன் மூலம் விழிப்புணர்வைத் தூண்டும் ஒரு பணி மேற்கொள்ளப்பட்டது.

வழக்குத் தொடுக்கும் அதிகாரிகள் குற்றச் செயல்கள் இடம்பெற்ற பின்புலம் குறித்த தமது புரிந்துணர்வை விருத்திச் செய்து கொள்வதற்கென மனிதநேய சட்ட நிலையத்தின் ஆவணங்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள்; யூகோஸ்லாவிய விசாரணை மன்றம் மற்றும் போர் குற்றங்களுக்கான வழக்குத் தொடுக்கும் சேர்பியா அலுவலகம் என்பவற்றினால் புலன் விசாரணைக்கான ஆதாரங்களாக அவை பயன்படுத்தப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட நபர்கள், சாட்சிகள், ஆகியோரையும் சான்றுகளையும் அடையாளம் கண்டு கொள்வதற்கெனவும் அந்த ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டு வந்ததுள்ளன. பல டசன் கணக்கான வழக்குகள் தொடர்பாக போர்க குற்ற வழக்குத் தாக்குதல் செய்யும் சேர்பிய அலுவலகம் தகவல்களை சேகரிப்பதில் உதவியை பெற்றுக் கொள்வதற்கென மனிதநேய சட்ட நிலையத்தை தொடர்பு கொண்டுள்ளது[16].

மனிதநேய சட்ட நிலையம் சேர்பியாவின் நேரடி அல்லது மறைமுக கட்டுப்பாட்டில் இருந்து வந்த அலகுகள் தொடர்பான கோப்புகளை 2011 ஆம் ஆண்டு தொடக்கம் தொகுத்துள்ளது. இந்த அலகுகள் பொஸ்னியா, குரோஷியா மற்றும் கொஸோவே ஆகிய இடங்களில் தண்டனை விலக்குரிமைகளுடன் கூடிய விதத்தில் குற்றச் செயல்களை நிகழ்த்தியிருந்தன. இந்தக் கோப்புக்கள் 1990 களின் ஆயுத மோதல்களின் போது கொடூரமான குற்றச் செயல்கள் நிகழ்த்தப்பட்ட இடங்களில் முனைப்பாக செயற்பட்டு வந்த இராணுவ மற்றும் பொலிஸ் அலகுகளின் செயற்பாடுகளை பகுப்பாய்வு செய்கின்றன. மேலும், அவை குற்றச் செயல்கள் இழைக்கப்பட்ட பின்னர் குற்றமிழைத்தவர்களின் நிலை தொடர்பான தகவல்களையும் உள்ளடக்குகின்றன. அதாவது, இப்பொழுது அரசாங்க பதவிகளை வகித்து வரும் நபர்கள் தொடர்பாக குறிப்பிடுவதுடன், சம்பவங்கள் தொடர்பான சரியான விவரணங்கள், அலகுகள் மற்றும் குற்றமிழைத்த நபர்களின் குற்றவியல் வகி பங்குகள், சான்று மற்றும் மூலங்கள் என்பவற்றின் ஒரு பட்டியல், முன்னெடுக்க வேண்டிய குற்றவியல் வழக்கு நடைமுறைக்கான யோசனைகள் என்பவற்றை இக்கோப்புகள் கொண்டுள்ளன. அதாவது, குற்றச் செயல்களை வகைப்படுத்துவது எப்படி? மற்றும் மேலதிக சான்றுகளை சேகரிப்பது எப்படி? போன்ற விடயங்களை அவை குறிப்பிடுகின்றன[18].

போர் குற்றத் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யும் சேர்பியா அலுவலகத்தினால் புலன் விசாரணைகள் மற்றும் வழக்குத் தாக்கல் செய்யும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கேட்டு இதுவரையில் மனிதநேய சட்ட நிலையம் ஏழு கோப்புத் தொகுதிகளை பிரசுரித்துள்ளது. உண்மையிலேயே இதில் கோப்புத் தொகுதி போர் குற்ற வழக்கு அலுவலகத்தினால் தற்பொழுது தாக்கல் செய்யப்பட்டு, முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு வழக்குக்குத் தூண்டுதலாக அமைந்தது. மேலும் கோப்புக்களில் விவரிக்கப்பட்டிருக்கும் தொடர்பான நடவடிக்கை தற்பொழுது போர் குற்ற வழக்கு அலுவலகத்தின் புலன் விசாரணைக்கு முன்னரான கட்டத்தில் இருந்து வருகின்றன. இது தவிர, யுகோஸ்லோவியாவின் இராணுவத்தின் 125 ஆவது படையணி குறித்த இக்கோப்பு பிரசுரிக்கப்பட்டதனையடுத்து, போர் குற்ற வழக்கு அலுவலகம் உயர் மட்ட சேர்பிய அதிகாரிக்கு ஒருவருக்கு எதிரான அதன் முதலாவது புலன் விசாரணைக்கான கட்டளையை வெளியிட்டது.



1995 ஸ்ரெபரனிகா இனப் படுகொலை ஆண்டு நிறைவின் போது ஒவ்வொரு வருடமும் மனச்சாட்சிசார் மையங்களின் சர்வதேச கூட்டணியின் ஒரு உறுப்பினரான ஸ்ரெபனிகா - பொடோகாரி நினைவுச் சின்ன நிலையம் மற்றும் மயானம் புதிதாக இனங்காணப்பட்ட இனப்படுகொலைக்கு பலியானவர்களை அங்கு புதைக்கின்றது. இந்த இனப் படுகொலையின் போது 8000 க்கும் மேற்பட்ட பொஸ்னியா முஸ்லிம் ஆண்களும், இளம் பையன்களும் கொல்லப்பட்டார்கள்.

Photo credit: The Srebrenica-Potocari Memorial Center & Cemetery

### சேர்பியன் நீதிமன்றங்களுக்கு எதிரில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக ஆஜராதல் மற்றும் வழக்குத் தொடுத்தல்

மனிதநேய சட்ட நிலையம் பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் சட்ட ரீதியான பிரதிநிதித்துவத்தை வழங்குவதுடன், ஏற்கனவே, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாக சேர்பிய நீதிமன்றங்களில் 1200 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் சார்பில் அது ஆஜராகி உள்ளது[20]. இந்நிலையம் 2016 ஆம் ஆண்டில் மட்டும் பெல்கிரேட் உயர் நீதிமன்றத்தின் போர் குற்ற திணைக்களத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்கள் சார்பாக 8 வழக்குகளை வழக்குத் தாக்கல் செய்திருந்தது. இந்நிலையத்தின் சட்ட ரீதியான தலையீடுகள் கொடூரமான குற்றச் செயல்களை நிகழ்த்தியிருக்கும் நபர்கள் தொடர்பாக புலன் விசாரணைகள் நடத்தி, வழக்குகளை தாக்கல் செய்வதற்கு சேர்பிய போர் குற்ற வழக்கு அலுவலகத்தை தூண்டியுள்ளது. உதாரணமாக, ஸ்வோர்கின் வழக்கில் பிரதான விசாரணைகளின் போது மனிதநேய சட்ட நிலையத்தின் வழக்கறிஞர்களினால் நிகழ்த்தப்பட்ட விசாரணைகள், ஒரு போர் குற்றம் தொடர்பாக புலன் விசாரணையொன்றை நடத்துவதற்கு அந்த அலுவலகத்தை தூண்டியது. இது கொலை செய்யப்பட்ட 200 பேருக்கு நீதி வழங்குவதற்கான வாக்குறுதியை வழங்கியது.

மேலும், 2014 ஆம் ஆண்டு தொடக்கம் மனிதநேய சட்ட நிலையம், மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் சார்பில் ஆஜராகியிருந்தது. போர் குற்றங்கள் தொடர்பாக வினைத்திறன்மிக்க, சுயாதீனமான புலன் விசாரணைகளை நடத்துவதற்கான அரசின் கடப்பாட்டை வலியுறுத்தும் விதத்தில் அது நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தது. மனிதநேய சட்ட நிலையம் பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் ஆஜராகாதிருக்கும் வழக்குகளையும் உள்ளடக்கிய விதத்தில் சேர்பிய நீதிமன்றங்களில் இருந்து வரும் அனைத்து போர் குற்ற வழக்குகள தொடர்பாகவும் இன்னமும் அது தொடர்பான விபரங்களை கண்காணித்து, பொது மக்களுக்கு தகவல்களை வழங்கி வருகின்றது.

### சேர்பிய போர் குற்ற வழக்குத் தொடுனர் அலுவலகத்திற்கு வழங்கப்படும் ஏனைய வடிவங்களிலான ஆதரவு

குற்றச் செயல்கள் தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொண்டு, வழக்குத் தாக்கல் செய்வதற்கு சேர்பிய போர் குற்ற வழக்கு அலுவலகத்தை நேரடியாகத் தூண்டுவது தவிர, மனிதநேய சட்ட நிலையம் போர் குற்ற வழக்கு அலுவலகத்தில் ஏற்கனவே இருந்து வரும் வழக்குகளின் கேள்விக்குரிய சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை வழங்குவதன் மூலமும், சம்பந்தப்பட்ட சாட்சிகளை அடையாளம் கண்டு, சாட்சியமளிக்குமாறு ஊக்குவிப்பதன் மூலமும், சேர்பிய நிறுவனங்கள் தொடர்பாக அவநம்பிக்கையுடன் இருந்து வரும் சாட்சிகளுக்கென போக்குவரத்து மற்றும் ஏனைய வசதிகள் என்பவற்றை வழங்குவதன் மூலமும் இந்நீதிமன்றத்திற்கு ஆதரவளித்து வருகின்றது. போர் குற்ற வழக்கு அலுவலகத்துடன் மனிதநேய சட்ட நிலையம் கொண்டிருக்கும் முனைப்பான மற்றும் எதிர்வினையாற்றும் தொடர்புகள், ஆற்றல் மற்றும் அரசியல் விருப்பு என்பவற்றின் அடிப்படையில் போர் குற்ற வழக்கு அலுவலகம் எதிர்கொண்டு வரும் சவால்கள் காரணமாக மிக நிர்ணயகரமானவையாக இருந்து வருகின்றன.

# கௌதமாலாவின் தடயவியல் மானிடவியல் மன்றத்தின் ஆவணப்படுத்தல்

## கௌதமாலாவின் உள்நாட்டு ஆயுத மோதலின் பின்னணி

> *"எலும்புகள் மிகச் சிறந்த சாட்சிகளாக இருந்து வர முடியும். அவை ஒருபோதும் பொய் கூறுவதில்லை; ஒரு போதும் மறப்பதில்லை."*
>
> - கிளைட் ஸ்னோ

கௌதமாலா 1960 தொடக்கம் 1996 ஆம் ஆண்டு வரையில் உள்நாட்டு ஆயுத மோதலொன்றினால் பாதிக்கப்பட்டிருந்ததுடன், அந்த மோதலின் விளைவாக பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட 40,000 ஆட்களையும் உள்ளடக்கிய விதத்தில் சுமார் 200,000 மக்கள் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அது தவிர, சுமார் பத்து இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்தார்கள்[21]. 1996 இல் அரசாங்கத்திற்கும், கௌதமாலா தேசிய புரட்சிகர அமைப்புக்குமிடையில் ஐ நா ஒரு சாமாதான உடன்படிக்கையை எடுத்து வந்தது. கௌதமாலா தேசிய புரட்சிகர அமைப்பு என்ற கெரில்லா இயக்கம் (URNG) இதில் சம்பந்தப்பட்டிருந்தது. இதனையடுத்து ஏனைய வழிமுறைகளுக்கு மத்தியில், வரலாற்று ரீதியான நிலைமைகளை தெளிவுபடுத்துவதற்கான ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.இந்த ஆணைக்குழு 626 படுகொலைகளை ஆவணப்படுத்தியதுடன், ஆகக் குறைந்தது 400 கிராமங்கள் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டிருப்பதாக நிர்ணயித்தது. இந்த ஆணைக்குழுவின் பிரகாரம், அரசாங்க படைகள் 93% அத்துமீறல்களை நிகழ்த்தியிருந்தன; அங்கு பாதிக்கப்பட்ட மக்களில் 80% இனர் வரலாற்று ரீதியில் விளம்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த மாயா இனக் குழுக்களைச் சேர்ந்த ஒரு சமூகமாகவே இருந்து வந்தது. மலை பிரதேசங்களில் அவர்களுடைய வாழ்வும், காணிகளும் இராணுவத்தின் "பூமியை தீயிட்டுக் கொளுத்தும்" இயக்கத்தின் மூலம் நிர்மூலமாக்கப்பட்டிருந்தன. 1981 ஆம் ஆண்டுக்கும் 1983 ஆம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலப் பிரிவின் போது நாட்டின் 4 பிராந்தியங்களில் மாயா இனக் குழுக்களுக்கு எதிராக அரசாங்கம் "இனப் படுகொலை செயல்களை" நிகழ்த்தியிருந்ததாக ஆணைக்குழு முடிவாக குறிப்பிட்டிருந்தது[22]. நீதித்துறையின் பிரிவுகள் அதிகரித்தளவில் வலுவூட்டப்பட்டமை மற்றும் சுயாதீனத்தைப் பெற்றுக் கொண்டமை என்பவற்றின் காரணமாகவும், தடயவியல் புலன் விசாரணைகளின் ஆதரவு காரணமாகவும் அண்மைக் காலத்தில் நாட்டில் பரவலாக காணப்பட்ட தண்டனை விலக்குரிமை முடிவுக்கு வரத் தொடங்கியிருந்தது.

## கௌதமாலா தடயவியல் மானிடவியல் மன்றம் (FAFG)

கௌதமாலா தடயவியல் மானிடவியல் மன்றம் 1997 தொடக்கம் வன்முறையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டோர் ஆகியோரின் குடும்பங்களிடமிருந்து முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களின் பேரில் பல்துறைசார் தடயவியல் புலன் விசாரணைகளை நடத்தி வந்துள்ளது. உண்மை, நீதி மற்றும் தமது அன்புக்குரியவர்களின் இறுதிச் சடங்குகளை கண்ணியமான விதத்தில் நடத்துதல் என்பவற்றையும் உள்ளிட்ட நிவாரணம் மற்றும் இழப்பீடு என்பவற்றுக்கான தமது உரிமையை நிலைநிறுத்திக் கொள்வதற்கென அவர்கள் அந்த வேண்டுகோள்களை விடுத்திருந்தார்கள். இந்த மன்றத்தின் அணுகுமுறை பாதிக்கப்பட்டவர் தொடர்பான புலன் விசாரணைகள், தடயவியல் தொல்லியல், மற்றும் தடயவியல் மானுடவியல் ஆகிய துறைகளிலிருந்து நுட்பங்களை பெற்று, பயன்படுத்தியது ஆயுத மோதல் இடம்பெற்ற காலப் பிரிவின் போது நிகழ்ந்த படுகொலைகள், நீதிமன்ற நடைமுறைக்கு வெளியிலான கொலைகள் சட்ட விரோதமான கொலைகள் மற்றும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்திலான மனித உரிமை மீறல்களுக்கு பௌதீக சாட்சியங்களை மீளப் பெற்று, ஆவணப்படுத்தி, பகுப்பாய்வு செய்வது இதன் நோக்கமாகும்[23]. கௌதமாலா தடயவியல் மானுடவியல் மன்றம் அதன் புலன் விசாரணைகளின் போது சர்வதேச தரநியமங்களின் மிகவும் கண்டிப்பான ஒரு ஒழுங்குமுறையை பின்பற்றி வருகின்றது[24].

இம்மன்றம் தடயவியல் நிபுணர்களின் அறிக்கைகளை வழங்குவதன் மூலம் தேசிய குற்றவியல் நீதிச் செயன்முறைகளுக்கும் ஆதரவளித்து வருகின்றது. அதன் ஒவ்வொரு தடயவியல் விசாரணையிலிருந்தும் வழங்கப்படும் சம்பவங்கள் இடம்பெற்ற மாதிரியை எடுத்து

விளக்கும் அறிக்கைகளும் இதில் அடங்குகின்றன. ஆயுத மோதலுடன் சம்பந்தப்பட்ட வழக்குகள் தொடர்பாக தலைமை தாங்கும் நீதி அல்லது வழக்குத் தொடுக்கும் அதிகாரி இந்த மன்றத்தைச் சேர்ந்த தடயவியல் நிபுணர்களை நியமனம் செய்கின்றார் என்ற இங்கு விடயம் குறிப்பிட வேண்டும்[25]. 2017 ஜுன் மாதம் வரையில் இந்த மன்றம் 1850 க்கும் மேற்பட்ட தடயவியல் புலன் விசாரணைகளை நடத்தியிருந்தது. அது 8000 க்கும் மேற்பட்ட மனித உடல் எச்சங்களை மீளப் பெற்று, பகுப்பாய்வு செய்வதுடன் சம்பந்தப்பட்டிருந்தது. இப்பணியினையடுத்து சட்டமா அதிபர் அலுவலகத்துக்கு சுமார் 1500 க்கும் மேற்பட்ட நிபுணர் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அண்மைக் காலத்தில் நிலைமாறு கால நீதியில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களுடன் இணைந்த விதத்தில் இந்த நிபுணர் அறிக்கைகள் மனித உரிமை மீறல்களுக்கான சான்றுகளாக நீதிமன்ற வழக்குகளில் அதிகரித்த அளவில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. மேலும், அவை சாட்சியங்களை நிரூபித்திருப்பதுடன் குற்றமிழைத்த நபர்களை குற்றங்களுடன் தொடர்புபடுத்துவதற்கும் உதவியுள்ளன. சம்பவங்கள் கால வரிசை மற்றும் குற்றம் புரியும் எண்ணம் என்பவற்றை எடுத்துக் காட்டியுள்ளன.

### இனப்படுகொலையை நிரூபிப்பதற்கு உதவும் பொருட்டு தடயவியல் சாட்சிகள் பயன்படுத்தப்பட்டமை

கௌதமாலாவின் உயர் நீதிமன்றத்தின் விசாரணை மன்றம் A 2013 மே 10 ஆம் திகதி முன்னைய ஜனாதிபதி ஜெனரல் எப்ரேய்ன் ரியோஸ் மொன்ட்டுக்கு எதிராக இனப் படுகொலை மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் என்பவற்றை நிகழ்த்தியமைக்காக குற்றத் தீர்ப்பு வழங்கியது. மாயா லெக்ஸில் இனக் குழுவுக்கு எதிராக அவர் இச்செயல்களை நிகழ்த்தியிருந்தார்[26].

இனப் படுகொலை மற்றும் மனித குலத்திற்கெதிரான குற்றச் செயல்கள் என்பவற்றை நிரூபிக்கும் பொருட்டு வழக்கை தாக்கல் செய்த தரப்பின் சார்பில் உத்தியோகபூர்வ ஆவணங்கள் சாட்சிகளின் சான்றுகள், தடயவியல் சான்றுகள் மற்றும் நிபுணர்களின் அறிக்கைள் என்பன சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. முன்னாள் ஜனாதிபதி ரியோஸ் மொன்ட் குற்றத் தீர்ப்பில் மிகவும் நிர்ணயகரமாக இருந்து வந்த சாட்சியங்கள் தடயவியல் மானுடவியல் மன்றத்தின் தனிப்பட்ட 66 நிபுணத்துவ அறிக்கைள் மற்றும் லெக்ஸில் பிரதேசத்தில் (1982 தொடக்கம் 1983 வரையிலான ஆகஸ்ட் காலப் பிரிவின் போது) அவருடைய ஆட்சி காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 128 தடயவியல் புலன் விசாரணைகளிலிருந்து பெற்றுக் கொண்ட தகவல்கள் தொடர்பான போக்குகளை பகுப்பாய்வு செய்யும் ஒரு அறிக்கை என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்த தடயவியல் சான்றுகள் சாட்சிகள் கூறும் விடயங்களை உறுதிப்படுத்துவதற்கும், இனப் படுகொலை கூறுகள் மற்றும் மனிதக் குலத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் தொடர்பான கூறுகள் என்பன லெக்ஸில் பிரதேசத்தில் நிலவி வந்ததனை உறுதிப்படுத்துவதற்கும் உதவின. போக்குகள் தொடர்பான பகுப்பாய்வு பாதிக்கப்பட்டவர்களின் குடிசனவியல் பண்புகளையும், அதே போல குற்றமிழைத்த நபர்களினால் பயன்படுத்தப்பட்டு வந்த உத்திகள் மற்றும் வன்முறை வகைகள் என்பவற்றின் முறையான இயல்பினையும் எடுத்துக் காட்டியிருந்தன. உதாரணமாக, பௌதீக சான்றுகள், முகத்தை மூடும் துணிகள், வாயை மூடும் துணிகள் மற்றும் ஆட்களின் மணிக்கட்டுகளிலும், கணுக்கால்களிலும் கட்டும் கயிறுகள் என்பன முறையான ஒழுங்கில் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தன என்ற விடயத்தை எடுத்துக் காட்டியிருந்தன. அது தவிர, பெண்கள், பிள்ளைகள் மற்றும் முதியோர் ஆகியோர் இலக்கு வைத்து கொல்லப்பட்ட சம்பவங்களையும் அவை எடுத்துக் காட்டியிருந்தன. லெக்ஸில் இன மக்களை அரசின் எதிரியாக இனங்கண்டிருந்த இராணுவத்தின் திட்டத்தையும் உள்ளடக்கிய விதத்திலான ஆவணச் சான்றுகள் இந்த மன்றத்தின் முடிவுகளை உறுதிப்படுத்தியிருந்தன[27]. இறுதியாக, நீதிமன்றம் தடயவியல் மானுடவியல் மன்றத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த தடயவியல் சான்றுகளையும் ஆவண ரீதியான சான்றுகளையும் " லெக்ஸில் இன மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டிருக்கும் வன்முறைச் சம்பவங்கள் எதேச்சையாக நிகழ்த்தப்பட்ட சம்பவங்களாக இருந்து வரவில்லை; அதற்குப் பதிலாக, முன்னரேயே உருவாக்கப்பட்டிருந்த திட்டங்களை அமுல் செய்த ஒரு செயற்பாடாகவே அது இருந்து வந்துள்ளது. அது

குறிப்பிட்ட ஓர் இனக் குழுவினை அழித்தொழிப்பதற்கான அரச கொள்கையின் ஒரு பாகமாக இருந்து வந்துள்ளது[28]." எவ்வாறிருப்பினும், இத்தீர்ப்பு வழங்கப்பட்டு 10 நாட்களின் பின்னர், மிகத் தீவிரமான அரசியல் அழுத்தங்கள் காரணமாக அரசியலமைப்பு நீதிமன்றம் மே 10 ஆந் திகதி இந்த தீர்ப்பினை செல்லுபடியற்றதாக்கியதுடன், மீண்டும் ஒரு வழக்கு நடத்தப்பட வேண்டுமென கட்டளையிட்டது[29]. எனினும், லெக்ஸில் இனப் படுகொலை வழக்கு உள்நாட்டு நீதிமன்றங்கள் சாதித்துக் கொண்டிருக்கும் முன்னேற்றத்தை மிகவும் வலுவான விதத்தில் எடுத்துக் காட்டுவதுடன், மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளில் தடயவியல் சான்றுகளின் பங்களிப்புக்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

## பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக வாதாடுவதற்கும், சான்றுகளை உறுதிப்படுத்துவதற்கும் எனபவற்றுக்கென தடயவியல் சாட்சியங்களை பயன்படுத்துதல்

இந்தப் பின்புலத்தில் அரசாங்க வழக்குத் தொடுனர் அலுவலகம், மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் கௌதமாலா தடயவியல் மானிடவியல் மன்றம் என்பன குறிப்பாக வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஒரு கருவி என்ற முறையில், தடயவியல் சான்றுகளின் உயரளவிலான ஆற்றல் மற்றும் அவை குறித்த புரிந்துணர்வு என்பவற்றை அங்கீகரித்தன. அதன் விளைவாக, தடயவியல் மானிடவியல் மன்றம் 2015 இல் தடயவியல் பௌதீக சான்றுகள் தொடர்பான நிறுவனங்களுக்கிடையிலான நடவடிக்கை குழுவை ஸ்தாபித்தது. இந்த நடவடிக்கை இக்குழு தடயவியல் சான்றுகளை உள்வாங்குவது எப்படி என்பது குறித்தும், சாட்சியமளிப்பவர்களின் சாட்சியங்கள், தடயவியல் மற்றும் ஆவணச் சான்றுகள் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகள் குறித்தும் வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரிகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு பயிற்சிகளை வழங்கியது. சேர்பூர் சார்கோ வழக்கு மற்றும் கிரீம் பாஸ் வழக்கு என்பன, தடயவியல் சான்றுகளை பயன்படுத்துவதற்கென வழக்கு தாக்கல் செய்யும் அதிகாரிகளின் ஆற்றலை அதிகரிக்கும் விடயத்தில் இந்த நடவடிக்கை எடுத்து வந்திருக்கும் நேர்மறையான தாக்கத்தை எடுத்துக் காட்டியிருந்தது.

**சேபூர் ஸார்கோ வழக்கு** (*Sepur Zarco* case) : கௌதமாலாவின் உயர் நீதிமன்றத்தின் விசாரணை மன்றம் A இந்த வழக்கில் 2016 பெப்ரவரி 26 ஆந் திகதி இரு மூத்த இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக குற்றத்தீர்ப்பினை வழங்கியது. பாலியல் வன்முறை என்பவற்றுடன் கூடிய விதத்தில் மனித குலத்திற்கு எதிரான குற்றச் செயல்களை நிகழ்த்தியமை, பாலியல் அடிமை முறை மற்றும் 15 மாயா குவேச்சி இன பெண்களை வீட்டு அடிமைகளாக வைத்திருந்தமை மற்றும் அவர்களுடைய உறவினர்களை படுகொலை செய்தமை மற்றும் பலவந்தமாக காணாமல் ஆக்கச் செய்தமை ஆகிய குற்றங்கள் தொடர்பாக இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இது உலகிலேயே பாலியல் அடிமை முறை மற்றும் வீட்டில் ஆட்களை அடிமையாக வைத்திருத்தல் என்பன தொடர்பாக உள்நாட்டில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வழக்காக இருந்து வருகின்றது. மேலும், கௌதமாலாவில் பாலியல் வன்முறை குற்றத்திற்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வழக்காகவும் உள்ளது.

## பாதிக்கப்பட்டவர்களின் பங்கேற்பினை இயலச் செய்யும் பொருட்டு பயன்படுத்தப்பட்ட தடயவியல் சான்றுகள்

சாட்சிகள் வழங்கும் சாட்சியம் மற்றும் தடயவியல் சான்றுகள் என்பன பரஸ்பரம் ஒன்றையொன்று ஊர்ஜிதம் செய்யும் ஒரு தொடர்பை கொண்டுள்ளன. உதாரணமாக, தடயவியல் சான்றுகள் பலவந்தமாக ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பாக சாட்சிகள் வழங்கிய சாட்சியங்களை ஊர்ஜிதப்படுத்தின. அதாவது, நீதிமன்றத்திற்கு வெளியிலும், நீதிமன்றத்திற்கு உள்ளேயும் அவ்விதம் அக் குற்றச் செயல்கள் நிரூபிக்கப்பட்டிருந்தன. அதே வேளையில், இந்த மன்றம்



2017 ஜுன் அளவில் கௌதமாலா தடயவியல் மானிடவியல் மன்றம் 1850 க்கும் மேற்பட்ட தடயவியல் புலன் விசாரணைகளை நடத்தியிருந்ததுடன், அவை 8000 க்கும் மேற்பட்ட மனித உடல் எச்சங்களை மீட்டு, பகுப்பாய்வு செய்வதுடன், சம்பந்தப்பட்டிருந்தன.
Photo Credit: FAFG

புதை குழிகளின் அமைவிடங்களை கண்டுபிடிப்பதற்கும், ஒ பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கும், அவர்களது மரணங்கள் நிகழ்ந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளை புரிந்து கொள்வதற்கும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் ஆகியோரிடமிருந்து தகவல்களை பெற்றுக் கொண்டுள்ளது[35]. அது இத்தகவல்களை ஆவணப்படுத்தி, அதன் நிபுணர் அறிக்கைகளின் ஒரு பாகமாக சமர்ப்பிக்கின்றது. தடயவியல் சான்றுகள் மற்றும் சாட்சிகள் அளிக்கும் சாட்சியங்கள் என்பன கணிசமான அளவிலான முக்கிய இயலுமையை வழக்குகளின் போது குற்றச் செயல்களை நிருபிப்பதற்கு அரச தரப்பு வழக்கறிஞர்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ளன.



தடயவியல் மானிடவியல் மன்றம், தடயவியல் சான்றுகளுக்கு மேலதிகமாக புதை குழிகளை கண்டு பிடிப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கும், அவர்களுடைய மரணங்கள் நிகழ்ந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளை புரிந்து கொள்வதற்கும் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் ஆகியோரிடம் தகவல்களை பெற்றுக் கொள்கிறது.



டோல் ஸ்லெங் இனப் படுகொலை அருங்காட்சியகம், 1975 ஆம் ஆண்டில் கமரூச் ஆட்சி எழுச்சியடைந்தது தொடக்கம் 1979 இல் அதன் வீழச்சி வரையில் பாதுகாப்புச் சிறைச்சாலை ‘21’ ஆக பயன்படுத்தப்பட்டு வந்த ஒரு முன்னைய உயர் பாடசாலை கட்டடமாகும். இங்கு சுமார் 15,000 பேர் சிறைப்படுத்தப்பட்டிருந்தார்கள். அவர்களில் 12 பேர் மட்டுமே உயிர் தப்பி வாழ்வதாக அறியக் கிடக்கின்றது. இந்தக் கட்டடங்கள் கமரூச் ஆட்சியாளர்கள் இந்த இடத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்ட பொழுது அதே நிலைமையில் இப்பொழுது பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

Photo credit: Tuol Sleng Genocide Museum

# அத்தியாயம் 6:

## கொலம்பியாவில் காணாமற்போன அல்லது காணாமலாக்கப்பட்ட ஆட்கள்: மதிப்பீட்டு அறிக்கையின் சாராம்சம்

### கொலம்பியாவின் நிலைமை




Building a Learning Community: Lessons for a Holistic and Sustainable Approach to Transitional Justice

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் தினத்தின் போது 2010 ஆகஸ்ட் மாதத்தில் வுகோட்டா பிரதான சதுக்கத்தில் உறவினர்கள் தமது அன்புக்குரியவர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்றார்கள்

கொலம்பிய அரசாங்கத்துக்கும், பல்வேறு கொலம்பிய கெரில்லாக் குழுக்களுக்குமிடையில் 1940 கள் தொடக்கம் நீண்டகாலமாக இடம்பெற்று வந்த உள்நாட்டு ஆயுத மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட பெருந்தொகையான முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. 2016 ஆம் ஆண்டின் முடிவில் மிகப் பெரிய கெரில்லாக் குழுவான கொலம்பியாவின் புரட்சிகர ஆயுதப் படைகள் அமைப்பும் (FARC) அரசாங்கமும் வெற்றிகரமாக ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்து கொண்டன. இந்த உடன்படிக்கை பிரதானமாக அனைத்துமடங்கிய ஒரு விவசாய அபிவிருத்திக் கொள்கை, அரசியல் பங்கேற்பு, சட்டவிரோதமான போதைவஸ்துக்களின் பிரச்சினை மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும் கோரிக்கைகள் என்பவற்றைக் கவனத்தில் எடுப்பதற்கான நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகள் என்பவற்றைப் பிரதானமாக கருத்தில் கொண்டிருந்தது. புதிய நிலைமாறுகால நீதிச் செயன்முறை 2005 ஆம் ஆண்டில் இடம்பெற்ற முன்னைய செயன்முறையின் தவறுகளை மீண்டும் மேற்கொள்ளமாட்டாது என கொலம்பியா மக்கள் உயரளவில் நம்பிக்கை கொண்டிருந்தனர். உதாரணமாக, 2005 ஆம் ஆண்டின் செயன்முறை பொதுமக்களின் பார்வைக்குக் கிடைக்காதிருக்கும் மிக அரிதாகப் பரீட்சித்துப் பார்க்கப்பட்ட பொக்கிசங்களுக்குப் பகரமாக ஆயுதக் களைவை மேற்கொண்ட துணைப்படைக் குழுக்களைச் சேர்ந்த போராளிகளுக்கு குறைந்தளவிலான தண்டனைகளை வழங்கியது.

1970 கள் தொடக்கம் குற்றச் செயல்களை இழைத்த பல்வேறு நபர்கள் சமூகங்கள் மீது தமது கட்டுப்பாட்டை எடுத்து வந்து பலவந்தமாக ஆட்கள் காணாமலாக்கப்படும் சம்பவங்களுக்கூடாக எதிர்க் குரல்களை மௌனிக்கச் செய்தார்கள். காணாமலாக்கப்பட்ட ஆக்களில் சமூகத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் ஆயுதம் தரித்த குழுக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்த சாதாரண பிரஜைகள் ஆகியோர் அடங்கியிருந்தனர். பலவந்தமாக காணாமலாக்கப்படும் சம்பவங்கள், படுகொலைகள், நீதிமன்றத்துக்கு வெளியிலான கொலைகள், பாலியல் வன்முறை மற்றும் பலவந்தமான இடப்பெயர்ச்சி போன்ற ஏனைய மனித உரிமை மீறல்களை எடுத்து வருகின்றன அல்லது அவற்றுடன் இணைந்த விதத்தில் இடம்பெறுகின்றன. வரலாற்று நினைவுக்கான தேசிய மையத்தின் கருத்தின் பிரகாரம் பலவந்தமாக ஆட்கள் காணாமலாக்கப்பட்ட பெரும்பாலான சம்பவங்களை (பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசின் பங்கேற்புடன் அல்லது ஆதரவுடன் இவை இடம்பெற்றுள்ளன) நிகழ்த்தியிருக்கின்றன. அதேவேளையில் FARC மற்றும் ஏனைய இடதுசாரி கெரில்லாக் குழுக்கள் பெருந்தொகையான ஆட்கடத்தல்களை நிகழ்த்தியிருந்தன. அவையும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பலவந்டமாக காணாமலாக்கப்பட்ட சம்பவங்களென வகைப்படுத்தப்பட்டிருந்தன. இராணுவமும் கணிசமானளவிலான பலவந்தமாக ஆட்கள் காணாமலாக்கப்பட்ட சம்பவங்களை நிகழ்த்தியிருந்தன.

பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான தனது ஒருமுகப்படுத்தப்பட்ட பதிவேட்டில் சுமார் 47,000 காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களும் 120,0000 அவ்விதம் காணாமலாக்கப்பட்ட நபர்களின் உறவினர்களும் இருந்து வந்ததாக குழம்பிய அரசாங்கம் 2016 அக்டோபர் மாதம் அறிவித்தது. எவ்வாறிருப்பினும் ஏனைய பல சம்பவங்கள் ஒருமுகப்படுத்தப்பட்ட பாதிக்கப்பட்டவர்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லையென பாதிக்கப்பட்டவர்கள் குழுக்களும் சிவில் சமூக அமைப்புக்களும் கூறுகின்றன. உதாரணமாக, 2000 ஆம் ஆண்டில் பலவந்தமாக ஆட்கள் காணாமலாக்கப்படும் சம்பவங்கள் குறித்த தகவல்களை சேகரிப்பதில் சவால்கள் இருந்து வருகின்றன. மேலும், பல்வேறு அரசாங்கப் பதிவகங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட எண்ணிக்கைகளைக் கொண்டிருப்பதுடன் அவற்றை அறிக்கையிடுகின்றன. உண்மையிலேயே 2017 யூலை மாதமளவில் காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான ஒன்றுதிரட்டப்பட்ட உத்தியோகபூர்வ பதிவுகள் இருந்து வரவில்லை. இது பலவந்தமாக ஆட்கள் காணாமலாக்கப்பட்ட சம்பவங்களின் அளவு, போக்குகள் மற்றும் தாக்கம் என்பவற்றை நிர்ணயித்து அது குறித்து பொதுமக்களின் விழிப்புணர்வைத் தூண்டுவதற்கான முயற்சிகளை வரையறை செய்கின்றது. இதுதவிர பலவந்தமாக ஆட்கள் காணாமலாக்கப்பட்ட சம்பவங்களின் போக்குகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை தரவுகளை அடிப்படையாகக் கொண்ட விதத்திலும் முறையான பகுப்பாய்வுடனும் அணுகுவதற்கான வலுவான ஓர் அணுகுமுறையை அரசாங்கம் கொண்டிருக்கவில்லை.

பலவந்தமாக ஆட்கள் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பங்களுக்கு தொடர்ச்சியான தீவிரமான துன்பங்களை எடுத்து வந்துள்ளன. பயனுள்ள விதத்திலான புலன் விசாரணைகளை நடத்துவதிலும் அவர்களுடைய அன்புக்குரியவர்கள் தொடர்பாக தகவல்களை வழங்குவதிலும் அரசாங்கம் தொடர்ச்சியாக தோல்வி கண்டிருக்கும் நிலை இதனை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் குடும்பத்தினர் ஒழுங்கமைப்பற்ற குற்றச் செயல் கும்பல்கள் மற்றும் இடதுசாரி கெரில்லாக் குழுக்கள் என்பவற்றின் அச்சுறுத்தல்களையும் உள்ளடக்கிய வகையில் ஏனைய இடையூறுகளையும் எதிர்கொண்டு வந்துள்ளார்கள். இந்தக் குழுக்கள் ஒரு சில பிராந்தியங்களில் இன்னமும் முனைப்பாக இருந்து. அது தவிர இராணுவம் மற்றும் ஆயுதக் குழுக்கள் என்பன ஒரு சில பிரதேசங்களில் இன்னமும் முனைப்பாக இயங்கி வருகின்றன. அத்துடன் இராணுவம் மற்றும் ஆயுதக் குழுக்கள் என்பன குடும்பங்களை தமது இல்லங்களிலிருந்து பலவந்தமாக இடம்பெயரச் செய்துள்ளன.

இந்தக் காரணிகள் நீதித்துறையின் மீதான நம்பிக்கையீனம், களங்கப்படுத்தப்படுதல் மற்றும் பழிவாங்கல் குறித்த திட்டங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய காரணிகளால் உள்ளூர் அதிகாரிகளிடம் சென்று முறையான முறைப்பாடுகளை பதிவு செய்யும் விடயத்தில் தயக்கம் காட்டி வந்துள்ளார்கள். இது பலவந்தமாக ஆட்கள் காணாமலாக்கப்பட்ட சம்பவங்களின் அளவு மற்றும் போக்குகள் என்பவற்றைப் புரிந்து கொள்வதற்கான முயற்சியை மேலும் பாதிக்கின்றது.

## காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்கள் குறித்த கூட்டமைப்பின் மதிப்பீடு தொடர்பான பொதுநோக்கு

50 வருடங்களுக்கு மேல் இடம்பெற்று வந்த ஆயுதமோதலை முடிவுக்குக் கொண்டு வரும் விதத்தில் 2016 நவம்பர் 26 ஆம் திகதி அரசாங்கமும் FARC அமைப்பும் ஓர் இறுதி உடன்பாட்டை செய்து கொண்டன. ஒரு வாரத்தின் பின்னர் காங்கிரஸ் சபை அந்த உடன்பாட்டை அத்தாட்சிப்படுத்தியது. அதனையடுத்து 2017 ஏப்ரல் மாதத்தில் அரசியலமைப்பு அந்தஸ்துடன் இணைந்த விதத்தில் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்நிகழாமை என்பவற்றுக்கான அனைத்துமடங்கிய முறைமை (SIVJRNR) உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு உண்மையைத் தெளிவுபடுத்துவதற்கான ஆணைக்குழு, சகவாழ்வு மற்றும் மீள்நிகழாமை அல்லது உண்மையைத் தெளிவுபடுத்தும் ஆணைக்குழு ஆயுதமோதலின் பின்புலத்திலும் ஆயுதமோதல் காரணமாகவும் காணாமலாக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும் ஆட்களைத் தேடுவதற்கான ஒரு அலகு அல்லது தேடல் அலகு மற்றும் சமாதானத்துக்கான விசேட நியாயாதிக்கம் என்பன ஸ்தாபிக்கப்பட்டன. இதனை உடனடுத்து (2017 ஆம் ஆண்டின் கட்டளை 580 க்கூடாக அரசாங்கம்) உண்மையைத் தெளிவுபடுத்தும் ஆணைக்குழுவை அமுல் செய்வதற்கான நடைமுறை ஒழுங்கு விதிகளை வெளியிட்டது. 2017 யூலை மாதத்தில் இதனை எழுதும் சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பு நீதிமன்றம் அப்பொழுதும் புதிய பொறிமுறையை அமுல் செய்வதற்கான நடைமுறை ஒழுங்கு விதிகளின் அரசியல் யாப்புடன் பொருந்திச் செல்லும் தன்மை குறித்து ஒரு சந்தேகம் காணப்பட்டது. அது தவிர அண்மைய ஆணையாளர்கள் அல்லது விசேட ஆணையாளர்கள் மற்றும் விசேட நியாயாதிக்க நீதிபதிகள் மற்றும் தேடல் பிரிவின் பணிப்பாளர் ஆகிய நியமனங்களை மேற்கொள்வதற்கென ஒரு விசேட கமிட்டி செயன்முறைளை முன்னெடுத்திருந்தது.

பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட சம்பவங்களை கவனத்திலெடுத்து ஒரு சம்பவத்தின் போது பெருந்தொகையான ஆட்கள் கொல்லப்பட்ட குழு படுகொலைகள் என்பன தொடர்பாகவும் சமூகத்தலைவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் திட்டமிட்டு ஒழுங்கில் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியவர்களை நிர்ணயித்துக் கொள்வதும் கொலம்பியாவில் நிலைமாறு கால நீதி மற்றும் நல்லிணக்கம் என்பவற்றின் நிர்ணயகரமான காரணிகளாக இருந்து வருகின்றன. புதிய நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகள் 2000 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே ஏற்கனவே அமுலில் இருந்து வரும் பொறிமுறைகளுக்கு குறை நிரப்புச் செய்து வருகின்றன. இந்தப் பின்புலத்தில் நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான உலளாவிய முன்னெடுப்பு கூட்டமைப்பு 2016 ஆம் ஆண்டின் சமாதான தீர்வின் விளைவாக நிலைமாறுகால நீதி தொடர்பாக காணப்படும் எரிர்பார்ப்புக்கள் மற்றும் வாய்ப்புக்கள் குறித்த ஒரு மதிப்பீட்டை நடத்தியது.

இந்த மதிப்பீட்டின் 2016 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாத சமாதான தீர்வு 2016 நவம்பர் மாதத்தில் இறுதி உடன்படிக்கையின் மூலம் திருத்தி அமைக்கப்பட்டது. மனச்சாட்சி சார் மையங்களின் சர்வதேச கூட்டணி,DPLF மற்றும் கௌத்தமாலாவின் தடயவியல் மானிடவியல் மன்றம் (FAFG) ஆகிய கூட்டமைப்புக்களைப் பிரதிநிதித்துவம் செய்த பல்துறைசார் அணியின் உறுப்பினர்கள் இந்த மதிப்பீட்டை 2016 யூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்கிடையில் மேற்கொண்டன.

இந்த அணி கொலம்பியாவில் 10 நாட்களைச் செலவிட்டதுடன் வொகோட்டா மற்றும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த இரு நகரங்கள் என்பவற்றுக்கு விஜயம் செய்தன. அன்ரிக்கிவியாவின் தலைநகரான மெடலின் இதில் ஒரு நகராகும். இந்த நகரம் நாட்டிலேயே ஆகக்கூடிய ஆட்கள் பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட விகிதத்தைக் கொண்டிருந்தது. லானோஸ் பிராந்தியத்தில் அமைந்திருக்கும் ஒரு மத்திய நகரான விலாவிஸ் ரென்ஸியோ இரண்டாவது இடமாகும். இந்நகரத்தில் அரசாங்கம் அண்மையில் மயானங்களில் உடல் எச்சங்களைக் கண்டுபிடிப்பதற்கான செறிவான தேடல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்துள்ளது. இந்த அணி அரசாங்க உத்தியோகத்தர்கள், பாதிக்கப்பட்டவர்களின் குழுக்கள் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சர்வதேச சமூத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடன் 80 க்கும் மேற்பட்ட நேர்காணல்களை நடத்தியது2 மேலும் அவர்கள் காணாமல் போன நபர்கள் மற்றும் பலவந்தமாக காணாமலாக்ப்பட்ட நபர்கள் ஆகியோரின் குடும்பங்களுடன் காணாமல் போயிருப்பவர்ளைத் தேடுதல், இனங்காணுதல் மற்றும் உடல் எச்சங்களைப் பெற்றுக் ளொள்ளல் என்பன தொடர்பாக ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் மற்றும் சவால்கள் என்பன குறித்து 4 இலக்குக் குழுக் கலந்துரையாடல்களையும் நடத்தினார்கள். இறுதியில் இந்த அணி நினைவேந்தல் முயற்சிகள் மற்றும் காணாமல் போன நபர்கள் மற்றும் பலவந்தமாக காணாமலாக்ப்பட்ட நபர்கள் தொடர்பான பிரச்சினை குறித்து விழிப்புணர்வைத் தூண்டக்கூடிய அவர்களுடைய ஆற்றல் என்பவற்றையும் மதிப்பீடு செய்தது. அதன் முடிவுகளின் அடிப்படையில் கூட்டமைப்பு குழம்பிய அரசாங்கம் ஐக்கிய அமெரிக்கா நிதியளிப்பு நாடுகள் மற்றும் சிவில் சமூகம் என்பவற்றையும் உள்ளடக்கிய பரந்த வீச்சிலான பங்கீடுபாட்டாளர்களிடம் பரிந்துரைகளை முன்வைத்தது.



காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான தினம் அனுஷ்டிக்கப்பட்ட பொழுது வொகோட்டா பொலிவார் அரங்கில் 2013 ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற கண்காட்சி

## காணாமல் போனவர்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினையைக் கையாள்வதில் தற்போதைய சாதாரண நீதித்துறை அதிகாரங்கள் மற்றும் நிலைமாறுகால நீதி பொறிமுறைகள் என்பவற்றில் காணப்படும் சவால்கள்

கடந்த இரு தசாப்த காலமாக கொலம்பியா காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் பிரச்சினையைக் கையாள்வதற்கென மிக வலுவான சட்டத் தொகுதியொன்றை அபிவிருத்தி செய்துள்ளது. எவ்வாறிருப்பினும் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட சம்பவங்களின் அளவு மற்றும் நாட்டுக்குள் சமூகம் இரு துருவங்களாகப் பிரிந்திருக்கும் நிலை என்பன சட்டங்களை அமுல் செய்யும் விடயத்தில் மிகவும் கடினமான நிலைமைகளை எடுத்து வந்துள்ளது. அது தவிர அண்மைய வருடங்களில் ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்களின் விகிதங்கள் கணிசமானளவில் குறைந்திருந்த போதிலும் தற்போதைய சம்பவங்கள் மெதுவாக தீர்த்து வைக்கப்பட்டு வரும் வேகத்திலும் பார்க்க கூடிய வேகத்தில் ஒரு சில புதிய சம்பவங்கள் வருகின்றன. அரசாங்க நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளும் பணி, தீர்த்து வைக்கப்பட வேண்டிய சம்பவங்களின் பாரிய எண்ணிக்கை மற்றும் காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான

வழக்குகளிலும் பார்க்க தற்போதைய குற்றவியல் வழக்குகளுக்கு முன்னுரிமை வழங்கும் நிலை என்பன இது தொடர்பாக எதிர்கொள்ளப்படும் மேலும் இடையூறுகளாக இருந்து வருகின்றன. உதாரணமாக கடந்த 5 வருட காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட சம்பவங்களில் 2 வீதமான வழக்குகளே சாதாரண நீதித்துறைப் பொறிமுறைகளின் கீழ் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தற்போதைய சாதாரண நீதித்துறைப் பொறிமுறைகளின் சவால்கள்

2000 ஆம் ஆண்டின் 5009 ஆம் இலக்கச் சட்டம் காணாமல்போன ஆட்களை தேடுவதற்கான தேசிய ஆணைக்குழுவை ஸ்தாபித்தது. பலவந்தமாக ஆட்கள் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக புலன்விசாரணைகளுக்கு ஆதரவளித்து அவற்றை மேம்படுத்துவதற்கும் அதேபோல காணாமல் போயிருக்கும் மற்றும் காணாமலாக்கப்பட்டிருக்கும் ஆட்களை தேடுவது சம்பந்தப்பட்ட திட்டங்களை வடிவமைத்து மடித்து மதிப்பீடு செய்து நிறைவேற்றி வைப்பதற்கும் என ஒரு தேடல் அலகு உருவாக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட தேசிய ஆணைக்குழுவும் இந்தத் தேடல் அலகும் புறம்பானவையாகும். எவ்வாறிருப்பினும் இந்த அலகின் வரையறுக்கப்பட்ட வரவு செலவு ஒதுக்கீடு மற்றும் கட்டமைப்பு என்பன காரணமாக வினைத்திறன் மிக்க தேடல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான ஆற்றலை அது கொண்டிருப்பதில்லை. இது குறித்து காணாமல் போயிருக்கும் மற்றும் காணாமலாக்கப்பட்டிருக்கும் ஆட்களின் குடும்பங்களும் பாதிக்கப்பட்டவர்களின் குழுக்களும் சிவில் சமூக அமைப்புக்களும் விரக்தியடைந்துள்ளன. அதற்குப் பதிலாக தேடுதல் ஆணைக்குழு சட்டமா அதிபர் திணைக்களம் ஒம்புட்ஸ்மன் அலுவலகம் தேசிய வழக்கறிஞர் அலுவலகம் ஆயுதப்படைகள் மற்றும் பொலீஸ் போன்ற காணாமல் போயிருக்கும் மற்றும் காணாமலாக்கப்பட்டிருக்கும் சம்பவங்களைக் கையாளும் எந்தவொரு அரசாங்க நிறுவனத்துக்கும் சட்டக்கருவிகள் மற்றும் நடைமுறைகள் என்பன தொடர்பான யோசனைகளை வழங்கும் விடயத்தில் கவனம் செலுத்தி வருகின்றது. ஆனால் அது எத்தகைய கண்காணிப்புத் திட்டங்களையும் பொறுப்பேற்பதில்லை. இது தவிர குறிப்பாக சட்டமா அதிபர் அலுவலகம் தேடுதல் தொடர்பான ஆணைக்குழுவின் நேரடியான வேண்டுகோள்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் தானே முன்வந்து புலன் விசாரணைகளை தொடக்கி வைப்பதில்லை. அவ்வாறு செய்வதற்கான சட்டரீதியான கடப்பாட்டினை அது கொண்டிருந்த போதிலும் அதனை செய்யவில்லை. மேலும், அது வழக்குகளை முன்னுரிமைப்படுத்துவதற்கான அதன் சொந்த அடிக்கடி மாறும் நடைமுறைகளையும் பின்பற்றி வருகின்றது. தேடுதல் ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கும் வழக்குகளை அது முன்னுரிமையாக எடுத்துக் கொள்வதில்லை.

ஓரளவுக்கேனும் பயனளிக்கக்கூடிய குறிப்பிடத்தக்க ஓர் அரசாங்கக் கருவி காணாமல்போன ஆட்கள் தொடர்பான தேசிய பதிவேடாகும். இது 2005 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பிரதான தரவுத்தளம் காணாமல்போன ஆட்கள் தொடர்பான வலையமைப்புத் தகவல் முறைமை என்பன 2007 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டன. அது சட்டமருத்துவம் தடயவியல் என்பவற்றுக்கான தேசிய நிறுவனத்துக்கான சேகரிக்கப்பட்ட தரவுகளுடன் அறிவிக்கப்பட்ட காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான தவல்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றது. துரதிஷ்ட வசமாக 2010 ஆம் ஆண்டின் 1608 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஒரு சட்டரீதியான கடப்பாடு இருந்து வந்த போதிலும் ஒரு சில அரசாங்க நிறுவனங்கள் மட்டுமே இது தொடர்பான தமது பதிவுகளை இற்றைப்படுத்தி வருகின்றன. உண்மையிலேயே இந்த வலையமைப்பு தகவல் முறைமை எதிர்கொண்டு வரும் மிக முக்கியமானதொரு சவால் தகவல்களை ஒழுங்கான அடிப்படையில் இற்றைப்படுத்தி ஊர்ஜிதம் செய்து கொள்வதற்கும் காணாமல் போயிருக்கும் மற்றும் காணாமலாக்கப்பட்டிருக்கும் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளை முறைமைக்குள் எடுத்து வருவதற்கும் காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் உறவினர்களிடமிருந்து உயிரியல் ரீதியான மாதிரிகளைச் சேகரித்து பகுப்பாய்வு செய்வதன் மூலம் காணாமல் போயிருக்கும் மற்றும் காணாமலாக்கப்பட்டிருக்கும் ஆட்கள் தொடர்பான மரபணுத் தரவு வங்கியை விரிவாக்குவதும் போதியளவிலான மனித மற்றும் நிதி வளங்கள் இல்லாத நிலையில் ஒரு பாரிய சவாலாக இருந்து வருகின்றது.

துணைப் படைகளின் இராணுவக் கலைப்புச் செயன்முறை தொடர்பான தகவல்களை அரசாங்கம் ஊர்ஜிதப்படுத்துவதில்லை.

துணைப்படைக் குழுக்களிலிருக்கும் போராளிகளை படைகளிலிருந்து கலைத்து விடுவதற்கென 2005 ஆம் ஆண்டின் 975 ஆம் இலக்க சட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் குற்றச் செயல்களை இழைத்திருக்கும் நபர்கள் புதைகுழிகள் அமைந்திருக்கும் இடங்களைக் காட்டுதல் மற்றும் பாதிக்கப்பட்டவரின் குடும்பங்களுக்கான இழப்பீடுகளை வழங்குதல் என்பவற்றுக்குப் பகரமாக கணிசமானளவில் தமது தண்டனைகள் குறைக்கப்படுவதற்கான உரித்தினைக் கொண்டுள்ளார்கள். பாரியளவிலான வைப்புக்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட வளங்கள் என்பவற்றின் காரணமாக வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரிகள் ஆவண வைப்புக்களை சரி பார்க்காமல் அவற்றின் முகப் பெறுமதியை எடுத்துள்ளார்கள். அதன் விளைவாக, உடல்களை மீளப் பெறாத விதத்தில் பாரியளவில் புதைகுழிகள் தோண்டப்பட்டுள்ளன. சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தகவல்களை ஊர்ஜிதம் செய்து கொள்ள முடியாத நிலைமையும் காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களுக்கும் சமூகங்களுக்கும் சிவில் அமைப்புக்களுக்கும் அரசாங்கம் பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட சம்பவங்களை கவனத்திலெடுப்பதற்கான அரசியல் விருப்பினைக் கொண்டிருக்கவில்லையென்ற எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளது.

உடல் எச்சங்களை மீட்டு அடையாளம் காணும் விடயத்தில் தடயவியல் புலன் விசாரணைகள் மெதுவாக இடம்பெற்று வருகின்றன.

சமாதான உடன்படிக்கையின் கீழ் புதிய நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு முன்னர் தடயவியல் நிறுவனம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் தொழில்நுட்ப விசாரணை உதவி அலகு நீதித்துறைப் பொறிமுறை பொலீஸ் இயக்குனரகம் மற்றும் தேசிய பொலீஸ் புலன் விசாரணைக்குழு என்பன மட்டுமே உடல் எச்சங்களை சட்டரீதியாகத் தோண்டி எடுக்கக்கூடிய நிறுவனங்களாக இருந்து வந்தன. உடல் எச்சங்களை அடையாளம் காண்பதற்கு உதவுவதற்கென தடயவியல் நிறுவனம் 2010 ஆம் ஆண்டில் ஒரு மரபணு தரவு வங்கியொன்றை உருவாக்கியது. அடையாளம் காணப்படாத சடலங்களின் DNA மூலக்கூறை காணாமல் போயிருக்கும் மற்றும் காணாமலாக்கப்பட்டிருக்கும் ஆட்களின் உறவினர்களிடமிருந்து பெறப்பட்ட DNA மூலக்கூறுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கென இத்தரவு வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. தடயவியல் நிறுவனமும் சட்டமா அதிபர் திணைக்களமும் சர்வதேச நிதி வழங்குனர்களின் ஆதரவுடன் பல விசேட ஆய்வு கூடங்களை ஸ்தாபித்தன. அவை 2016 யூலை மாதத்தில் காணாமல் போயிருக்கும் மற்றும் காணாமலாக்கப்பட்டிருக்கும் 107 நபர்களை அடையாளம் கண்டுள்ளனர். தடயவியல் நிறுவனம் 2015 இல் குற்றச் செயல்களை நிகழ்த்திய நபர்கள் பல சந்தர்ப்பங்களில் உடல்களைப் போட்டு வைக்கக்கூடிய மயானங்களில் உடல் எச்சங்களை மீளப் பெற்று அடையாளம் காண்பதற்கான ஒரு திட்டத்தை அமுல் செய்தது. 2016 அக்டோபர் மாதம் வரையில் அத்தகைய மயானங்களிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட 311 உடல் எச்சங்களில் 14 உடல் எச்சங்கள் மட்டுமே இனங்காணப்பட்டிருந்தன. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முயற்சிகள் ஒரே சீரானவையாகவோ அல்லது சுயாதீனமானவையாகவோ இருந்து வரவில்லை.

ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் 'காணாமல்போன ஆட்கள்' மற்றும் 'பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட நபர்கள்' என்ற பதம் தொடர்பாக வேறுபட்ட வரைவிலக்கணங்களை கொண்டுள்ளது. அதேபோல அந்தந்த நிறுவனத்தின் தொடர் நடவடிக்கை முறைகள் மற்றும் குறிகாட்டிகள் என்பன தவறான விதத்தில் வழிநடத்தக்கூடிய புள்ளி விபரங்களை உருவாக்கியிருப்பதுடன் காணாமல் போயிருக்கும் மற்றும் காணாமலாக்கப்பட்டிருக்கும் ஆட்கள் தொடர்பான தரவுகளை கண்டறியும் முயற்சிகளை துல்லியமான விதத்தில் கண்காணித்து மதிப்பீடு செய்வதனையும் சிரமமான ஒரு காரியமாக ஆக்கியுள்ளது. சட்டத்தின் மூலம் காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்கள் தொடர்பான பிரச்சினையின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கான பொறுப்பு தேடுதல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் அது நிர்வாக ரீதியிலும் நிதி ரீதியிலும் கண்காணிப் புமற்றும் மதிப்பீடு என்பவற்றுக்கான பணிப்பாணையை கொண்டிருக்கும் நிறுவனங்களில் தங்கியிருந்து வருகின்றது. அது தவிர அரசாங்கத்தின் பங்கேற்பு உடன்பாடு என்பவற்றுடன் அல்லது அவை இல்லாத வகையில் இடம்பெற்றிக்கும் காணமலாக்கப்ட்டிருக்கும்

சம்பவங்களுக்கிடையிலான தெளிவான சட்ட வேறுபாடு ஒன்று இல்லாத நிலையில் அரசாங்க நிறுவனங்கள் ஆட்கள் காணாமல்போன சம்பவங்கள் தொடர்பான வேறுபட்ட நடைமுறைகளை பின்பற்றுகின்றன. "பலவந்தமாக காணாமலாக்கப்படும்" என்ற பதத்துக்கான கொலம்பியாவின் குறைபாடுகளுடைய வரைவிலக்கணம் அரச பொறுப்பினைக் கண்காணித்தல் தொடர்பாகவும் மற்றொரு சவாலை எடுத்து வருவதுடன் பலவந்தமாக காணாமலாக்கப்படும் சம்பவங்கள் குறித்த ஐ நா கமிட்டியினால் விமர்சிக்கப்பட்டுள்ளது.




காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களுக்கென அர்ப்பணிக்கப்பட்டிருக்கும் ஒரு காட்சிக்கூடம் - சமாதானத்தை மேம்படுத்தும் ஒரு கண்காட்சி, 2010 ஒக்டோபர்.

வகைப்படுத்தப்பட்டிருக்கும் தகவல்களை அணுகுவது தொடர்பான சட்டம் முரண்பாடுகளைக் கொண்டுள்ளது.

தகவல்களை அணுகுவது தொடர்பாக தற்பொழுது 2 சட்டங்கள் இருந்து வருகின்றன. ஆனால் அந்த இரு சட்டங்களும் ஓரளவுக்கு ஒன்றுக்கொன்று முரண்படுபவையாகக் காணப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டின் 1621 சட்டத்தின் கீழ் (நியதிபூர்வமான புலனாய்வு மற்றும் எதிர்ப் புலனாய்வுச் சட்டம்) பாதுகாப்புத் துறை முகவரகங்களினால் உருவாக்கப்படும் அனைத்து தகவல் முகவரகங்களும் ஆகக்குறைந்தது 30 வருட காலப்பிரிவுக்கு வகைப்படுத்தப்பட்டு வரையறுக்கப்பட்டுள்ளது. அதேவேளையில் 2017 ஆம் ஆண்டின் 1712 சட்டம் (வெளிப்படைத்தன்மை மற்றும் தேசிய பொதுத் தகவல்களை அணுகுவதற்கான உரிமை தொடர்பான சட்டம்) திட்டவட்டமான முறையில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் கோப்புக்கள் தவிர அனைத்துத் தகவல்களும் பகிரங்கமாக மக்களுக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது. மேலும், இச்சட்டம் மனித உரிமை மீறல்கள் அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றச் செயல்கள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் குறித்த ஆவணங்களை வகைப்படுத்த முடியாது என்ற ஏற்பாட்டையும் ெண்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் குழுக்களுடன் அல்லது சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து செயற்படவில்லை.

காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களும் மற்றும் ஆதரவுக் குழுக்களும் அரசாங்க நிறுவனங்கள் தொடர்பாக தமது அவநம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர். காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் சம்பவங்களைத் தீர்த்து வைப்பதில் அரசாங்கம் தோல்வி கண்டிருக்கும் நிலை தொடர்பாகவும் மட்டுமன்றி குடும்பங்களை அரசாங்கங்கள் மோசமாக நடத்தி வரும் காரணத்தினாலும் இந்த அவநம்பிக்கை தோன்றியுள்ளது. கொலம்பியாவின் சிக்கலான நீதித்துறைக்கூடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சுமை குடும்பங்களின் முயற்சிகளை மேலும் சிக்கலாக்கியுள்ளது. பெரும்பாலான குடும்பங்களினால் வழக்கறிஞர்களை அமர்த்திக் கொள்ள முடியாத நிலை காரணமாகவும் ஓம்புட்ஸ்மன் அலுவலகம் போன்ற அரசாங்க நிறுவனங்ளினால் இலவச சட்ட உதவி வழங்கப்படும் நிலை காரணமாகவும் நீதியை அணுகுவதற்கான இடையூறு தடை உயரளவில் நிலவி வருகின்றது இவற்றின் பின்விளைவாக கடந்த பல வருடங்களின் போது உளசமூக ஆதரவு, தடயவியல் நுட்பங்கள் நீதித்துறைத் திறன்கள், ஆவணக் காப்பக ஆராய்ச்சி மற்றும் நினைவேந்தல் செயற்பாடுகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குழுக்களும் விசேட சிவில் சமூக

அமைப்புக்களும் காணமலாக்கப்பட்டிருக்கும் நபர்களை தேடி அடையாளம் காணுதல் தொடர்பான முக்கியமான துறைகளில் நிபுணத்துவ அறிவைப் பெற்றுக் கொண்டுள்ளன. சிவில் சமூக அமைப்புக்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படாத சேவைகளை அல்லது அரசாங்கம் போதியளவில் வழங்கி வராத சேவைகளை வழங்குவதன் மூலம் இது தொடர்பான இடைவெளிகளை வழங்குகின்றன. ஒரு சில குடும்பங்கள் அரசாங்க நிறுவனங்கள் குறித்த அவநம்பிக்கை காரணமாக விசேட திறன்களைக் கொண்டிருக்கும் விசேட நிபுணத்துவ அறிவைக் கொண்டிருக்கும் சிவில் சமூக அமைப்புக்களுக்கூடாக அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்புகளை மேற்கொள்ள விரும்புகின்றார்கள். உதாரணமாக, பாதிக்கப்பட்ட குழுக்கள் பல்வேறு உளசமூக நுட்பங்கள் குறித்த அறிவையும் கொண்டிருப்பதுடன் அவை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு பொதுச் சுகாதார அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கு விரிவான உதவி மற்றும் இழப்பீடுகள் என்பவற்றை வழங்குவதற்கான அலகுக்கு பொருத்தமான முறைகள் குறித்து எளிதில் ஆலோசனை வழங்கக்கூடியவையாக இருந்து வருகின்றன. இந்த நிலைமைக்கு மத்தியிலும் அந்த நிறுவனங்களினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நடைமுறைகளைத் தலையிடுவதற்கு அவர்களுக்கு இடமளிக்கப்பட்டிருக்கவில்லை.

காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான புலன்விசாரணைகள் சம்பவங்களை நிரூபிக்க வேண்டிய பொறுப்பினை குடும்பங்களுக்கு வழங்குவதினால் சிவில் சமூக அமைப்புக்கள் அவர்களுக்குப் பெருமளவுக்குத் தேவையான உதவியை வழங்க முடியும். அரசாங்கத்தின் செயற்பாடுகளின் முன்னேற்றம் இல்லாத காரணத்தினால் குடும்பங்கள் இணையான புலன் விசாரணைகளை நடத்தி வழக்குத் தொடுக்கும் அதிகாரிகளிடம் சான்றுகளை ஒப்படைப்பதற்கான முன்முயற்சிகளை எடுத்துள்ளன. எவ்வாறிருப்பினும் வழக்குத் தொடுக்கும் அதிகாரிகள் 3 ஆம் தரப்பு நிபுணர்கள் என்ற முறையில் சிவில் சமூக அமைப்புக்களின் பிரசன்னத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தயக்கம் காட்டி வந்துள்ளார்கள். மேலும், உடல் எச்சங்கள் காணப்படும் அமைவிடங்கள் தொடர்பாக சிவில் சமூக அமைப்புக்களின் தகவல்களை அவர்கள் குறைத்து மதிப்பிட்டுள்ளார்கள் அல்லது அலட்சியம் செய்துள்ளார்கள். இத்தகைய சான்றுகளை சட்டரீதியாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய தேவையை அவர்கள் கொண்டிருக்கவில்லை. ஒட்டுமொத்தமாக அரசாங்க அதிகாரிகள் பிரஜைகளின் மேற்பார்வையை மிக அரிதாகவே வரவேற்றிருக்கின்றார்கள் என்ற ஏனைய மதிப்பீடுகளின் முடிவுகளுடன் இது பொருந்துகின்றது.

பொறுப்புக்கூற வைக்கப்பட்டது தவிர பாதிக்கப்பட்டவர்களின் குழுக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் என்பன காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான விவகாரங்களில் அதிகளவிலான வெளிப்படைத்தன்மை வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளன. அந்தவகையில் அவை நிறுவனங்களின் செயலாற்றுகை தொடர்பான பிரஜைளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு என்பவற்றை உயர்த்துவதற்கென ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டுமென பரப்புரை செய்துள்ளன. பிரஜைகளின் மேற்பார்வையை வழங்குவதற்கென பாதிக்கப்பட்டவர்களின் குழுக்களுக்கும் சிவில்சமூக அமைப்புகளுக்கும் தேவைப்படும் ஆற்றல் மற்றும் நிபுணத்துவம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நிதியுதவி அத்தியாவசியமானதாக இருந்து வந்துள்ளது. ஆனால் கடந்த பல வருடங்களின் போது இந்த நிதியுதவி குறைவடைந்து வந்துள்ளது. நிதியுதவி வழங்குபவர்கள் சிவில் சமூக அமைப்புக்களுக்குப் பதிலாக அரசாங்க நிறுவனங்களின் ஆற்றலைக் கட்டியெழுப்பும் விடயத்தில் அதிகரித்தளவில் உதவிகளை வழங்கி வரும் நிலையில் தமக்கு கிடைக்கும் நிதியளிப்புக்களில் மேலும் குறைப்புக்கள் செய்யப்பட்டிருப்பது குறித்து பல நிறுவனங்களின் பிரதிநிதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

**குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பல்களும் முன்னைய துணைப்படைப் போராளிகளும் சமூகத்தலைவர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கின்றனர்.**

கொலம்பியாவின் பல பிரதேசங்களில் இன்னமும் தொடர்ச்சியாக செயற்பட்டு வரும் தமது படைகளைக் கலைக்காத BACRIM போன்ற துணைப்படைக் குழுக்களிடமிருந்து ஒரு சில குடும்பங்களுக்கு வரும் நேரடியான அச்சுறுத்தல்களை அடுத்து ஒரு சில குடும்பங்கள் தமது தேடல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இத்தகைய துணைப்படைக் குழுக்கள் நிகழ்த்தியிருக்கும் குற்றச் செயல்கள் தொடர்பாக நீதியைக் கோரி நிற்கும் காணாமல்போன நபர்கள் மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் ஆகியோரின்

குடும்பத்தினருக்கும் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கும் இவர்கள் அச்சுறுத்தல்களை விடுத்துள்ளார்கள். மேலும் அவர்கள் தற்பொழுது தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் பலவந்தமாகக் காணமலாக்கப்படும் சம்பவங்களின் பெரும்பாலானவற்றைத் தொடர்ச்சியாக நிகழ்த்தி வருகின்றார்கள். அதுதவிர படைகளிலிருந்து கலைக்கப்பட்ட துணைப்படைக் குழுக்களைச் சேர்ந்த பெருந்தொகையான போராளிகள் வெகு விரைவில் தமது தண்டனைக் காலங்களை பூர்த்தி செய்ய விருக்கின்றார்கள். அவர்களுடைய விடுதலை சமூகங்கள் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனிதஉரிமைப் பாதுகாலர்களைப் பொறுத்தவரையில் கரிசனைக்குரிய ஒரு காரணியாக இருந்து வருகின்றது.

ஏனெனில் இந்த முன்னைய போராளிகள் குறைந்தபட்ச தண்டனைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு குற்றச் செயல்களுக்கான பொறுப்பினை ஏற்க வேண்டியிருந்ததுடன் மீள்நிகழாமை தொடர்பான உத்தரவாதங்களை வழங்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்து வரவில்லை. இங்கு கவலைக்கரிய விடயம் என்னவென்றால் ஒரு சில போராளிகள் தமது குற்றச் செயல்களை நியாயப்படுத்துவதற்குக்கூட முயன்றுள்ளார்கள் என்பதாகும்.

இந்த ஆபாத்துக்களைக் கவனத்திலெடுப்பதற்கென 2009 ஆம் ஆண்டில் கொலம்பிய அரசாங்கம் மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு உத்தரவாதங்களை வழங்குவதற்கான தேசிய நடவடிக்கைக் குழுவை ஸ்தாபித்தது. இது மனிதஉரிமைப் பாதுகாவலர்களுக்கு உடல் ரீதியான பாதுகப்பை வழங்குவதற்கான ஒரு விசேட குழுவாக இருந்து வருவதுடன் அது அரசாங்கம் மற்றும் சிவில் சமூகம் ஆகிய இரு தரப்புக்களையும் கொண்டுள்ளது. தற்பொழுது அத்தகைய பாதுகாப்பு முறைக்கூடாக சுமார் 3500 மனித உரிமைப் பாதுகாவலர்கள் பயனடைந்து வருகிள்றார்கள். சமாதான உடன்படிக்கை மேதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் பாதுகாப்பு பந்தோபஸ்து என்பவற்றுக்கான அனைத்துமடங்கிய நிகழ்ச்சித்திட்டமொன்றை விதித்துரைத்திருந்த போதிலும் இத்தகைய முயற்சிகளை அமுல் செய்வது சவால் மிக்க ஒரு காரியமாகவே இருந்து வருகின்றது. கொலம்பியாவில் சமூகம் இரு துருவ நிலைகளில் பிரிந்திருக்கும் நிலை மற்றும் அரசாங்க அதிகாரிகளின் மறைமுகமான அனுமதியுடன்) மனித உரிமைப் போராளிகள் தொடர்ந்தும் களங்கப்படுத்தப்பட்டு வரும் நிலை என்பன காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மனித உரிமைப் பாதுகாவலர்கள் .டதுசாரிக் கெரில்லாக் குழுக்களின் ஆதரவாளர்களாக இருப்பதாக BICRAM கருதுகிறது. 2016 ஜனவரி தொடக்கம் 2017 யூலை வரையில் சமாதான உடன்படிக்கை காரணமாக கெரில்லாக் குழுக்கள் பிரதானமாக தமது செயற்பாடுகளிலிருந்து விலகிக் கொண்ட பிரதேசங்களைச் சேர்ந்த 180 க்கும் மேற்பட்ட சமூகத் தலைவர்கள் கொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

photo 133
காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் தினம்
2012 ஆகஸ்ட் மாதத்தில் வொகோட்டா நகரில் லோட்ஸ் சதுக்கத்தில்
அனுஷ்டிக்கப்படுகின்றது

**பாதிக்கப்பட்டவர் திருப்தி மற்றும் நினைவேந்தல் என்பன எதிர்கொண்டு வரும் சவால்கள்**

நினைவேந்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டவர் திருப்தி மற்றும் மீள்நிகழாமைக்கான உத்தரவாதங்கள் என்பனவற்றை உறுதிப்படுத்தும் அதன் ஆற்றலுக்குக்கூடாக மனிதஉரிமைகள்
குறித்த மோதலுக்குப் பிற்பட்ட கலாசாரமொன்றை போஷித்து வளர்க்க முடியும். அதன் பிரகாரம் காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களின் குடும்பங்கள் குற்றச் செயல்களை இழைத்திருக்கும் நபர்கள் குறைந்த பட்ச தண்டனைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மீள்நிகழாமைக்கான உத்தரவாதங்களை வழங்க வேண்டிய தேவை இருந்து வரவில்லை என்ற விடயம் குறித்து தமது கவலையை வெளிப்படுத்தியிருந்தனர். குறைந்தபட்ச தண்டனையைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு முன்நிபந்தனையாக மீள்நிகழாமைக்கான உத்தரவாதங்கள் வழங்கப்படுவது தவிர பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கும் ஒரு சில சம்பவங்களில் சாதாரண பொதுமக்களுக்கும் அரசாங்கம் இந்தக் கடப்பாடுகளை முன்வைக்க வேண்டுமென குடும்பங்கள் விரும்புகின்றன.

கடந்த காலத்தில் பாதிக்கப்பட்டவர் குழுக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் என்பன பிரத்தியேகமாக நினைவேந்தல் முயற்சிகளை முன்னெடுத்து வந்துள்ளன. ஆனால், கடந்த தசாப்தத்தின் போது அரசாங்கம் நினைவேந்தல் தொடர்பாகக் கவனம் செலுத்தும் பல நிறுவனங்களை உருவாக்கியுள்ளது. உதாரணமாக, வரலாற்று நினைவுக்கான தேசிய நிலையம் அரசியல் வன்முறை தொடர்பான வலுவான ஆராய்ச்சிகளை பிரசுரம் செய்வதன் மூலமும் நினைவு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான தேசிய ஆவணக் காப்பகத்தை அபிவருத்தி செய்வதன் மூலமும் சமூக மட்டதத்திலான நினைவேந்தல் செயற்பாடுகளுக்கு தொடர்ச்சியாக ஆதரவளிப்பதன் மூலமும் உண்மையைக் கூறும் விடயத்தில் மிக முக்கியமானதொரு வகிபங்கினை வகித்து வந்துள்ளது. மாநகர மட்டத்தில் வொகோட்டா நகரத்தின் நினைவு, சமாதானம், நல்லிணக்கம் என்பவற்றுக்கான நிலையம் மற்றும் மெடிலின் நகரின் நினைவு அருங்காட்சியக இல்லமும் சிறிய அளவில் இதேமாதிரியான பணிகளை முன்னெடுத்து வருகின்றன. எவ்வாறிருப்பினும் வரவு செலவு விடயத்தில் மேற்கொள்ளப்படும் வெட்டுக்கள் தொடக்கம் நிர்வாக அமைப்புக்களில் பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள் வரையறுக்கப்ட்ட அளவில் மட்டுமே இருந்து வருதல் போன்ற பல்வேறு சவால்கள் காரணமாக இந்த நினைவேந்தல் முன்னெடுப்புக்களின் நிலைத்து நிற்கக்கூடிய தன்மை எளிதற்றதாக இருந்து வருகின்றது. இலத்தீன் அமெரிக்காவில் ஏனைய நாடுகளில் காணப்படும் மிகச் சிறந்த நடைமுறைகளுக்கு மிகவும் இது நேர்மாறானதாக உள்ளது.

ஏனைய நினைவேந்தல் முயற்சிகள் மனிதஉரிமை மீறல்கள் கம்போடியாவில் அவை எடுத்து வந்திருக்கும் தாக்கம் தொடர்பான விழிப்புணர்வைத் துாண்டுவதற்கென பயன்படுத்தக்கூடிய பாடசாலைகளுக்கென கல்விசார் ஆக்கங்களை உருவாக்கும் விடயத்தில் கவனம் செலுத்தியுள்ளன. துரதிஷ்டவசமாக கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம் ஒவ்வொரு பாடசாலையினதும் கொள்கை மீது மிகவும் வலுவான விதத்தில் தங்கியிருந்து வருகின்றது. மறுபுறத்தில் அதன் விளைவாக இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் சீரற்ற விதத்திலும் பலவீனமான விதத்திலும் அமுல் செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

**காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களின் பிரச்சினையை கையாள்வதில் சர்வதேச சமூகத்தின் வகிபங்கு**

கொலம்பிய அரசாங்கம் மனிதஉரிமைகள் தொடர்பான அதன் கடப்பாடுகளை நிறைவேற்றி வைப்பதற்கென அரசாங்கத்தைப் பொறுப்புக் கூற வைப்பதற்கு உதவக்கூடிய மிகச் சிறந்த நிலையில் சர்வதேச சமூகம் இருந்து வருகின்றது. மேலும் அது **காணாமல்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்கள்** தொடர்பான விபரங்களை தொகுப்பதற்கான கொலம்பியாவின் முயற்சிகளுக்கு பெறுமதி மிக்க பல பங்களிப்புக்களையும் வழங்கியுள்ளது. உதாரணமாக தடயவியல் நிறுவனம் மற்றும் சட்டமா அதிபர் அலுவலகங்கள் என்பன சர்வதேச உதவி காரணமாக தமது தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்து கொண்டுள்ளன. UARIV, ஒம்புட்ஸ்மன் அலுவலகம் மற்றும் வரலாற்று நினைவுக்கான தேசிய நிலையம் என்பனவும் வெளிநாட்டு உதவியுடன்கூடிய நிறுவனங்களைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பயனடைந்துள்ளன. சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகத்தின் பாதிக்கப்பட்டவர்களை நிறுவனரீதியில் நெறிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜேர்மன் நிறுவனத்தினால் அமுல் செய்யப்பட்ட அதேமாதிரியான நிகழ்ச்சித்திட்டங்கள், கொலம்பியா சிவில் சமூக அமைப்புக்களின் ஒத்துழைப்புக்கென சுவீடிஷ் நோர்வேஜிய நிதியுதவியுடன் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன இங்கு குறிப்பிட முடியும். அதுதவிர கொலம்பியாவுக்கான ஐரோப்பிய யூனியன் துாதுக்குழு மற்றும் நிலைமாறுகால நீதி நிதிப்படுத்தலுக்கான ஐ நா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பனவும் இதில் சம்பந்தப்பட்டிருந்தன. இறுதியில் தேசிய மட்டத்தில் செயற்பட்டு வரும் மனித உரிமைகளுக்கான ஐ நா உயர் ஆணையாளர் அலுவலகம் அமெரிக்காவுக்கிடையிலான மனிதஉரிமைகள் முறைமை பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான ஐ நா கமிட்டி மற்றும் பல அரசாங்கங்கள் என்பன சர்வதேச சட்டங்களுடனான கொலம்பியாவின் உதவி இணங்கியொழுகும் நிலைமை மற்றும் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான தரநியமங்களை மேம்படுத்தியுள்ளன. இவ்விதம் வழங்கப்பட்ட சர்வதேச ஆதரவு காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டும் செயன்முறையின் போது

குடும்பங்களுக்கு உதவுவதற்கும் பிரஜைகளின் கண்காணிப்பை எடுத்து வருவதற்குமான சிவில் சமூக அமைப்புக்களின் முயற்சிகளை வலுப்படுத்தியுள்ளன.

பாரியளவிலான நிதிசார் மற்றும் வசதிகள் அடிப்படையிலான முதலீடு காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களைத் தேடுதல் அடையாளம் காணுதல் என்பன தொடர்பான கிராமியப்பிரதேசங்களையும் உள்ளடக்கிய விதத்தில் நாடுநெடுகிலும் போதியளவில் அமுல் செய்யப்படுவதனை உறுதிப்படுத்த முடியும். எவ்வாறிருப்பினும் கொலம்பியாவில் இருக்கும் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் மனித உரிமைகள் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு அரசாங்கம் தவறியிருக்கும் நிலை குறித்து விரக்கதியடைந்துள்ளனர். குறிப்பாக, ஐ நா மனிதஉரிமை உயர் ஆணையாளர் அலுவலகம், ஐ நா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பல தூதுவராலயங்கள் என்பவற்றைச் சேர்ந்த அதிகாரிகள், போருக்குப் பிற்பட்ட மனிதஉரிமைகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான அமைச்சர் / ஆலோசகர் ஆயுதக்களைவு மற்றும் இராணுவக் கலைப்பு மற்றும் மீள் ஒருங்கிணைப்பு மற்றும் கிராமிய அபிவிருத்தி போன்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உடனடி முன்னுரிமை வழங்கியிருக்கும் விடயம் குறித்து கவலை தெரிவித்துள்ளனர். இந்தநிலையில் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டும் நிகழ்ச்சித்திட்டங்களில் அவை அதிகளவில் கவனம் செலுத்தியிருக்கவில்லை.



குவண்டா, குவாலி இனப்படுகொலை நினைவிடத்தில் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் ஒரு பார்வையாளர், யூன் 2017

## அத்தியாயம் 7: கூட்டமைப்பின் நிகழ்ச்சித்திட்ட மதிப்பீடு எடுத்துக்காட்டும் பாடங்கள்

***அத்தியாயங்களின் இந்தக் கையேடும் ஒட்டுமொத்தமாக பல்வேறு பின்புலங்கள் மற்றும் நிலைமாறு கால நீதி முறைமையியல்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பாடங்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை முன்வைக்கின்றன. ஒவ்வொரு கருத்திட்டமும் நிலைமாறு கால நீதிக்கான முதன்மை முதல்வர்களாக உள்ளூர் சமூகத்தினரை ஈடுபடுத்தியதுடன் முழுமையான நிலைத்து நிற்கக்கூடிய நிலைமாறு கால நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்து அமுல் செய்யும் பொருட்டு அவர்களுக்கு வலுவூட்டியது. இந்த விதத்தில் கருத்திட்டங்கள் தொடர்பாக உள்ளூர் சமூகங்கள் உரித்தைக் கொண்டிருந்ததுடன் அவை அனைவரையும் உள்ளடக்கியதாகவும் சம்பந்தப்பட்ட பின்புலத்திற்கு பொருந்தக்கூடியதாகவும் இருந்துவந்தன. வெற்றிகரமான நிலைமாறு கால நீதியை எதிர் கொண்டுவரும் ஒரு சில பிரதான இடையுறுகளையும் அவை கவனத்தில் எடுத்திருந்தன.***

நீதி ,உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான உலகளாவிய முன்னெடுப்பு கூட்டமைப்பின் பங்காளர்கள் உலகெங்கிலும் உள்ளூர் பங்காளர்கள் மற்றும் கருத்திட்ட பங்காளர்கள் ஆகியோர் கூட்டமைப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள் - தாகம் மற்றும் முறைமையியல் என்பவற்றை உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் - பொருத்தமானவையாகவும் வினைத்திறன், மிக்கவையாகவும், செயல்திறன் மிக்கவையாகவும், ஒத்திசையுடன் கூடியவையாகவும் இருந்து வருகின்றன எனக் கருதினார்கள். ஆற்றலை கட்டியெழுப்புவது தொடர்பான கூட்டமைப்பின் தனித்துவமான பல்துறைசார் அணுகுமுறை கருத்திட்டங்களின் தாக்கம் மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய தன்மை என்பவற்றை மேலும் அதிகரித்திருந்ததாக அவர்கள் நம்பினார்கள். இந்த அணுகுமுறை பன்முக சர்வதேச மற்றும் உள்ளூர் பங்காளர்களை ஒருங்கிணைக்கின்றது.

அதாவது பாதிக்கப்பட்ட சமூகங்களின் கைகளுக்கு கட்டுப்பாட்டை வழங்குவதன் மூலம் இது சாதித்துக் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் கூட்டமைப்பு கட்டமைப்பு ரீதியான வன்முறையை கவனத்தில் எடுக்கும் விடயத்தில் தீவிரமான விதத்தில் செயற்பட்டிருக்கவில்லை என்ற விடயத்தை இங்கு குறிப்பிட்டிருத்தல் வேண்டும். எனவே கூட்டமைப்பின் அனைவரையும் உள்ளடக்கிய கலந்தாலோசனைகள் பயிற்சிகள், செயலமர்வுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் என்பன ஒரு சில சந்தர்ப்பங்களில் பொருளாதார சமூக மற்றும் பால்நிலை அடிப்படையிலான தீங்குகள் தோன்ற கட்டமைப்பு ரீதியான வன்முறையில் ஒரு சில சந்தர்ப்பங்களில் பரந்த வீச்சிலான தேவைகளை தெளிவுபடுத்திய போதிலும் கருத்திட்டங்கள் இதுவரையில் அசாதாரணமான பௌதீக வன்முறையின் மீது மையம் கொண்டிருந்தன. அதன் விளைவாக கிழக்கு நாடுகளில் கட்டமைப்பு ரீதியான தண்டனை விலக்குரிமை மீதான தாக்கங்கள் கருத்திட்டங்களில் மறைமுகமான விளைவுகளாகவே இருந்து வருகின்றன. அதன் நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பின் இது ஒரு இடைவெளியாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை கூட்டமைப்பு அங்கீகரிப்பதுடன் அனைத்து வடிவங்களிலுமான தண்டனை விலக்குரிமையை கொண்டு வருவதற்கான குறிக்கோளை தனது செயற்பாடுகளுடன் சிறந்த விதத்தில் ஓய்வு எடுத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை அது எதிர்காலத்தில் கண்டறியவுள்ளது.

## நிலைமாறு காலநீதி அணுகுமுறைகள் தொடர்பான பாடங்கள்

நிலைமாறு கால நிகழ்ச்சித்திட்டங்கள் முழுமையானவையாகவும் பல்வேறு வழிமுறைகள், செயன்முறைகள் மற்றும் முறைமையியல்கள் என்பவற்றை உள்ளடக்கியதாகவும் இருந்து வருதல் வேண்டும். நிலைமாறு கால நீதி என்பது தண்டனை விலக்குரிமைக்கான பன்முக கோணங்களிலான ஒரு தீர்வாக இருந்து வருவதுடன் அது குற்றவியல் வழக்குகள் மற்றும் உண்மையைக்கூறும் முன்முயற்சிகள் என்பவற்றுக்கு அப்பால் வேறு பல விடயங்களையும் உள்ளடக்குகின்றது. தென்சூடான், சிரியா, இலங்கை மத்திய கிழக்கு மற்றும் வட அபிரிக்க பிராந்தியம் என்பவற்றைச் சேர்ந்த பங்கீடுபாட்டாளர்களுடனான கூட்டமைப்பின் பணி நிலைமாறு கால நீதியின் முழுமையான இயல்பினை வலியுறுத்தியது. பல்வேறு துறைகளில் நிபுணத்துவ அறிவைக் கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கும் இடையிலான கூட்டுச்செயற்பாடுகளையும் உள்டக்கிய விதத்திலான ஒரு பல்துறை சார் அணுகுமுறை முழுமையான நிலைத்து நிற்கக்கூடிய நிலைமாறு கால நிதிக்கு வகை செய்கின்றது. நிலைமாறு கால நீதியைப் பொறுத்தவரையில் ஒரேயளவு அனைவருக்கும் பொருத்தமானதாக இருந்து வரவில்லை என்ற விடயத்தை உள்ளூர் செயற்பாட்டாளர்கள் புரிந்து கொள்ளும் பொழுது தமது குறிக்கோள்ளை சாதித்துக் கொள்வதற்காக வேறுபட்ட வழிமுறைகள் செயன்முறைகள் மற்றும் அணுமுறைகள் என்பவற்றுக்கான தேவையையின் மதிப்பை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.



2017 ஆகஸ் மாதத்தில் கோட்டி ஓயா பிரதேசத்தில் தேவை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட காலப் பிரிவின் போது ஒரு வீதிக் காட்சி

## நிலைமாறு கால நீதிக் கருத்திட்டங்கள் ஒரு பல்துறை சார் அணுகுமுறையை பின்பற்றுதல் வேண்டும்

இயல்பிலேயே கூட்டமைப்பு ஒரு பல்துறை சார் அமைப்பாக இருந்து வருவதுடன் சட்டம் பால்நிலை , மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் பரப்புரைச் செயற்பாடுகள் மற்றும்பாதிக்கப்பட்டவர்களுக்கான உளசமூக ஆதரவு, தடையவியல்

பாகுப்பாய்வு மற்றும் சிவில் சமூகத்தின் ஆற்றலைக் கட்டியெழுப்புதல் போன்ற நிலைமாறு கால நீதியுடன் சம்பந்தப்பட்ட பரந்த வீச்சிலான துறைகளை நிபுணத்துவத்தைக் கொண்டிருக்கும் ஒன்பது அமைப்புக்களை உள்ளடக்குகின்றது. இந்த நிறுவனங்கள் உண்மை, நினைவேந்தல் இழப்பீடுகள் நல்லிணக்கம் போன்ற நிலைமாறு காலநீதியின் பல்வேறு முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும் அனுபவத்தைக் பெற்றுக்கொள்கின்றன. பல்துறை சார் பயிற்சிகள் மற்றும் செயற்பாடுகள் என்பன உள்ளூர் பங்கேற்பாளர்களுக்கு நிலைமாறு காலநீதி தொடர்பான முழுமையான ஒரு கண்டோட்தை வழங்குவதால் பல்வேறு துறைகளில் நிபுணத்துவ அறிவைக்கொண்டிருக்கும் பன்முக பங்காளர்களை நினைத்துக்கொள்ளும் விடயத்தில் விடயத்தில் கருத்திட்டங்கள் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

**நிலைமாறு கால நீதி கருத்திட்டங்கள் ஒரு பங்கேற்பு அணுகுமுறையை பின்பற்ற வேண்டியிருப்பதுடன் ஒவ்வொரு கட்டத்திலும் முடிவுகளை எடுப்பவர்கள் என்ற முறையில் உள்ளூர் செயற்பாட்டாளர்களை இணைத்துக் கொள்ளவேண்டும்.** தென்சூடான் ஆவணப்படுத்து நர்களுக்குகென நடத்தப்பட்ட பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகள் கலந்தாலோசனைகளின் போது அவர்கள் தெரியப்படுத்தியிருந்த தேவைகள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் உருவாக்கப்பட்டிருந்தன. மேலும், மத்திய கிழக்கு மற்றும் வட அபிரிக்கா பிராந்தியத்திற்கான பயிற்சியின் போது பங்கேற்பாளர்களே பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் நிகழ்ச்சி நிரல்களை உருவாக்கினார்கள். சிரியாவில் அனைவரையும் உள்ளடக்கிய நிலைமாறு கால நீதிக்கான அத்திவாரத்தை இடும் பொருட்டு கூட்டமைப்பு அனைத்து மடங்கிய தேவைகள் மதிப்பீடுகள் மற்றும் கலந்தாலோசனைகள் என்பவற்றை பயன்படுத்தியது. இலங்கையில் புதிய மாற்றங்களை புரிந்துகொள்ளும் பொருட்டும் செயன்முறையின் மீதான இலக்குகளின் முதலீட்டை பலப்படுத்தும் பொருட்டும் ஆரம்ப தேவை மதிப்பீட்டு பங்கேற்பாளர்களுடன் கூட்டமைப்பு மீண்டும் ஒரு சந்திப்பை நடத்தியது. பங்கேற்பு அணுகுமுறைகள் பாதிக்கப்பட்ட பல்வேறு சமூகங்களும் தமது தேவைகள் விரும்பங்கள் என்பவற்றை இனங்காண்பதற்கும் அவற்றை கவனத்தில் எடுப்பதற்கும் மிகவும் நெருக்கமான விதத்தில் ஈடுபடுத்திக்கொள்ளும் அவற்றின் ஆற்றல் காரணமாக பெறுமதி மிக்கவையாக இருந்து வருகின்றன. மேலும் அவை முதன்மை வளமாக உள்ளூர் நிபுணத்துவத்தை ஸ்தாபித்துக் கொள்வதுடன் நிலைமாறு கால நீதி தொடர்பான புத்தாக்க இயல்பிலான உள்ளூர் சமூகத்திற்கு உரித்தான மற்றும் பின்புலத்துடன் திட்டவட்டமாக பொருந்திச் செல்லக்கூடிய தலையீடுகளை ஊக்குவிக்கின்றன.

**நிலைமாறு காலநீதி முறைமையியல்கள் குறித்த பின்புலத்திற்கு பொருந்தக் கூடியவையாகவும் பன்முகப்படுத்தப்பட்டவையாகவும் இருந்துவருதல் வேண்டும்.** கூட்டமைப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள் பின்புலத்திற்கு பொருந்தக்கூடிய பாரம்பரிய பங்கேற்பு இயல்பிலான மற்றும் பாரம்பரியமற்ற முறைமைகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. பங்கேற்பு முறைமையியல்கள் அனைத்து நான்கு கருத்திட்டங்களுடனும் ஒரு பாகமாக இருந்து வந்தது. தென்சூடான், இலங்கை , மத்திய கிழக்கு மற்றும் வட அபிரிக்க ஆகிய பிராந்தியங்களின் கருத்திட்டங்கள் பாரம்பரிய செயலமர்வுகள் பயன்படுத்தப்பட்டன. இலங்கையில் உணர்வு பூர்வமான கலந்துரையாடல்களை தூண்டி விடுவதற்கென கூட்டமைப்பு ஆவணக்காப்பக கண்காட்சி ஒன்றையும் பயன்படுத்திக கொண்டது. தென்சூடானில் அது மோதலுடன் சம்பந்தப்பட்ட விதத்தில் உடல் வரைபடங்களை தயாரித்தல் மற்றும் ஏனைய காட்சிப்படுத்தல் என்பவற்றை பயன்படுத்தியது. அனைத்து அணுகுமுறைகளும் திட்டவட்டமான தேவைகள் மற்றும் நிலைமையின் பின்புலம் என்பவற்றுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் உருவாக்கப்பட்டிருந்தன. இந்த நுட்பம் சமூகங்களின் அனுபவங்களை அடையாளம் கண்டுகொள்வதற்கும் கட்டமைப்பு ரீதியான வன்முறை ரீதியான நீண்ட காலப் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்வதற்கும் உதவியது.

### நிலைமாறு கால நீதியின் உள்ளூர் குறிப்பு தொடர்பான மாற்றங்கள்

**நிலைமாறு கால நீதி கருத்திட்டங்கள் உள்ளூர் சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் முன்முயற்சிகளை உருவாக்கும் நோக்கத்தை கொண்டிருத்தல் வேண்டும்.** தென்சூடானில் உள்ளூர் சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் முயற்சி ஒன்றை ஸ்தாபித்துக் கொள்வதற்கும் சிரியாவின் சேவை வழங்குநர்கள் மற்றும் மனித உரிமை ஆவணப்படுத்துநர்களுக்கு மத்தியில் ஆட்களை சேவைகளுக்கு அனுப்பிவைக்கும் இடங்களில் வலயமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்கும் இலங்கையில் உண்மை

மற்றும் நல்லிணக்க பொறிமுறை ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்கும் மத்திய கிழக்கு மற்றும் வட அபிரிக்கா பிரதேசத்தில் வலயமைப்பை உருவாக்கிக் கொள்வதற்கும் கூட்டமைப்பு பங்களிப்புச் செய்திருந்தது. தமது சம்பந்தப்பட்ட பின்புலங்களின் அடிப்படையில் அத்தகைய முன்முயற்சிகளுக்கான தேவையை சமூகங்கள் வெளிப்படுத்திக் காட்டியிருந்தன. அத்தகை முன்முயற்சிகள் உள்ளூர் நிபுணத்துவ அறிவின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருப்பதால் அவை மாற்றங்கள் மற்றும் புதிதாக தோன்றிவரும் சவால்கள் என்பவற்றுக்கு எதிர்வினையாற்றுவதற்கும் அவற்றுக்கேற்ப அனுசரித்துச் செல்வதற்குமான ஆற்றலை கொண்டுள்ளன.

**நிலைமாறு கால நீதி கருத்திட்டங்கள் அனைத்து குழுக்களையும் உள்ளடக்குபவையாக இருந்து வருதல் வேண்டும்.** கருத்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்டத்தை பொறுத்தவரையில் இனத்துவ சமய மற்றும் பால்நிலை அடிப்படையில் அனைத்து தரப்புக்களையும் உள்ளடக்கிக் கொள்வது பொதுவான ஒரு பண்புக்கூறாக இருந்து வருகின்றது. இலங்கையில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட குழுவை மட்டுமன்றி பிரதான இன மற்றும் சமயக் குழுக்களை இலக்காகக் கொண்டு விரிவான தேவை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி மிகவும் நலிவுற்ற நிலையிலிருந்து வரும் குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கும் அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் நிலைமாறு கால நீதிக்கான தேவை குறித்து பங்கேற்பாளர்களுக்கு உணர்வூட்டியது. தென்சூடானில் பால்நிலை அடிப்படையில் இணைக்கப்பட்டுவந்திருக்கும் தீங்குகள் மற்றும் சமூகத்தின் தேவைகள் என்பவற்றை கருத்தில் கொண்டு ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் பால்நிலை சமத்துவம் மற்றும் பெண் ஆவணப்படுத்துநர்களை உள்வாங்குதல் ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கியிருந்தது. அது தவிர சிரியாவை சேர்ந்த ஆண் மற்றும் பெண் தடுப்புக்காவல் கைதிகளுடன் கூட்டமைப்பு புறம்பான இலக்குக்குழு கலந்துரையாடல்களை நடத்தியதுடன் பெண்கள் அமைப்புக்களுடனும் உரையாடியது. குழுக்களுக்கு இடையிலான பதற்ற நிலைமைகள் மோதலைத்தூண்டும் காரணிகளாக இருந்துவரும் நிலைமைகளிலும் குழுக்கள் மற்றும் பால்நிலை அடிப்படையில் இலக்கு வைத்து சம்பவங்கள் இடம் பெற்றுவரும் நிலைமைகளிலும் அனைவரையும் உள்ளடக்கிக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

**நிலைமாறு காலநீதி கருத்திட்டங்கள் உள்ளூர் நிபுணர்களை சம்பந்தப்படுத்தி அவர்களுடன் பங்காளர்களாக செயற்பட்டு அவர்களுடைய ஆதரவை பெற்றுக்கொள்வது அவசியமாகும். இலங்கை மற்றும் சிரிய கருத்திட்டங்களில் கூட்டமைப்பு உள்ளூர் பங்காளர்கள் மீது தங்கியிருந்தது.** மேலும், அது மனித உரிமைகள் ஆவணப்படுத்தலில் தென்சூடான் பங்காளர்கள் ஆட்களை கட்டியெழுப்பியதுடன் தமது சொந்த உள்ளூர் மட்டத்திலான கருத்திட்டங்களை அமுல் செய்வதில் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தைச் சேர்ந்த செயற்பாட்டாளர்களுக்கு வழிகாட்டுதலை வழங்கியது. ஒவ்வொரு கருத்திட்டத்திலும் கூட்டமைப்பு கூட்டாகச் செயற்பட்டுவரும் உள்ளூர் பங்காளர்களின் பின்புலம் சார்ந்த நிபுணத்துவ அறிவிலிருந்து பெருமளவுக்கு பயனடைந்தது. உள்ளூர் பங்காளர்களுடன் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட உறவுகளை போஷித்து வளர்ப்பது பாதிக்கப்பட்ட சமூகங்களை பெருமளவுக்கு அணுகுவதற்கான இயலுமையை வழங்குவதுடன், மேலும் களத்தில் காணப்படும் சவால்களுக்கு எதிர்வினையாற்றுவதற்கான வாய்ப்பினையும் வழங்குகின்றது. அதேவேளையில் உள்ளூர் பங்காளர்கள் தமது தொழில்நுட்ப அறிவை மற்றும் வளங்கள் என்பவற்றை வளர்த்துக் கொள்வதுடன் நிலைமாறு கால முயற்சிகள் எமது பங்கேற்பையும் அதிகரித்துக் கொள்கின்றார்கள்.

## பயிற்சி அணுகுமுறைகள் மற்றும் வெளியீடுகள் தொடர்பான பாடங்கள்

**நிலைமாறு கால நீதி தொடர்பான பயிற்சிகள் உள்ளூர் சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் முன்முயற்சிகளை ஸ்தாபித்துக் கொள்ளவதற்கான உப நிதியளிப்புக்களை வழங்குவதனை உள்ளடக்கிய விதத்தில் வெளியில் தெரியக்கூடிய வெளீடுகளை உள்ளடக்கிக்கொள்ளல் வேண்டும்.** கூட்டமைப்பு களத்தில் இடம்பெற்றுவரும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களை போலன்றி தெளிவான வெளியீடுகளுடன் கூடிய செயலை அடிப்படையாகக் கொண்ட கருத்திட்டங்கள் தொடர்பாக புகழ்பெற்றுள்ளது. அது மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தில் உள்ளூர் செயற்பாட்டாளர்கள் தமது பின்புலம் சார்ந்த நிபுணத்துவ அறிவு மற்றும் புதிதாக பெற்றுக்கொண்டிருக்கும் நிலைமாறுகால நிதி தொடர்பான அறிவு மற்றும் திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கருத்திட்டங்களை வடிவமைத்து அமுல்

செய்வதற்கென கூட்டமைப்பு உப நிதியளிப்புக்கை வழங்கியது. மற்றொரு உதாரணமாக அது ஒருங்கிணைந்த பொறிமுறையை உருவாக்குவதற்கு அனுசரணை வழங்குவதன் மூலம் இலங்கையில் செயலமர்வுகள் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் அதீத களைப்புணர்வுக்கு எதிர்வினையாற்றியது. பங்கேற்பாளர்கள் மூல நிலை மாறு கால நிதி கருத்திட்டத்தின் பயன்களை தக்கவைத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு இயலுமையையும் வலுவினையும் வெளிப்படையான வெளியீடுகள் பெற்றுக்கொடுக்கின்றன. குறிப்பாக உள்ளூர் செயற்பாட்டாளர்கள் நிதி வழங்குநர்களின் நிதியளிப்புக்களை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டுவரும் நிலைமைகளில் உப நிதியளிப்புக்கள் பெறுமதி மிக்கவையாக இருந்துவருகின்றன. உப நிதியளிப்பு தொடர்பான கருத்திட்டங்கள் நிதி வழங்குநர்களின் அக்கறைகளுக்கு தம்மை வரையறுத்துக் கொள்ளாமல் சமூகத்தின் தேவைகள் குறித்து கவனம் செலுத்தக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளனர்.



கஜானாவில் 2017 மே மாதம் இடம் பெற்ற செயலமர்வில் பங்கேற்ற நீதி, உண்மை மற்றும் நல்லிணக்க என்பவற்றுக்கான உலகளாவிய முன்னெடுப்பின் பங்கேற்பாளர்கள்

**நிலைமாறு கால நிதிப் பயிற்சிகள் எதனையும் விதித்துரைப்பவையாக இருந்து வரக்கூடாது.** கூட்டமைப்பு தனது வெளிவாரியான அபிப்பிராயங்களை திணிக்காமல் பல்வேறு நிலைமாறு காலப் பொறிமுறைகள் மற்றும் செயன்முறைகள் என்பன தொடர்பான அறிவுப்பகிர்வினை மேம்படுத்தியது. குறிப்பிட்ட ஒரு விடயத்தை விதிந்துரைக்கும் செயலமர்வுகள் மற்றும் பயிற்சிகள் என்பன –குறிப்பாக சர்வசேத நிபுணர்களால் நடத்தப்படும் செயலமர்வுகள் மற்றும் பயிற்சிகள் என்பன – எதிர்பாராத சந்தர்ப்பங்களில் உள்ளூர் புத்தாக்க இயல்பின் பிரதிபலனை ஏற்படுத்துவதாக இருந்துவருவது இதற்கான காரணமாகும். அதன் விளைவாக கூட்டமைப்பு சிரியாவின் சேவை வழங்குநர்களுக்கு மத்தியில் ஒருங்கிணைப்பு தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு தயக்கம் காட்டியது. இலங்கையில் பற்றப்பட்ட விதித்துரைக்கப்படாத அணுகுமுறை உள்ளூர் புத்தாக்கங்களுக்கான வெளியை உருவாக்கியது. விதித்துரைப்புக்கள் அற்ற ஓர் அணுகுமுறை நிபுணத்துவ அபிப்பிராயங்களின் வரையறைகளை அனுபவிக்காத நிலையில் கருத்திட்டங்களை உருவாக்குதற்கென உள்ளூர் செயற்பாட்டாளர்களுக்கு அறிவு மற்றும் திறன்கள் என்பவற்றை வழங்குகின்றது. இதனை

சாதித்துக்கொள்ளும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளூர் சமூகத்தினருக்கு கல்வியூட்டுவதற்கும் அவர்களுடைய ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கும் முயற்சிக்கின்றது.

**நிலைமாறு காலநீதி தொடர்பான பயிற்சிகள் ஒப்பீட்டு ரீதியான சம்பவக் கற்கைகளையும், கள நிலைமை தொடர்பான அவற்றின் பொருத்தப்பாட்டினையும் உள்ளடக்குதல் வேண்டும்.**இலங்கையில் நடத்தப்பட்ட ஆற்றல்களை கட்டியெழுப்பும் செயலமர்வுகளின் போது ஏனைய நாடுகளில் உதாரணங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்திற்கான பயிற்சி உள்ளூர் செயற்பாட்டாளர்கள் தமது சொந்த நாடு தொடர்பாக மற்றொரு நாட்டின் நிலைமாறு கால நிதி அனுபவத்தை பிரயோகிப்பது எவ்வாறு என்பதனை புரிந்து கொள்வதற்கு அவர்களுக்கு உதவும் ஒரு ஒப்பீட்டு அணுகுமுறை பின்பற்றப்பட்டது. உலகெங்கிலும் செயற்பட்டுவரும் சிவில் சமூக அமைப்புக்களிலிருந்து கற்றுக்கொள்வதற்கென அறிவு பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் ஒன்றில் தென்சூடான் ஆவணப்படுத்துநர்கள் பங்கேற்றார்கள். ஏனைய நாடுகளில் பாடங்களை பகிர்ந்து கொள்வதானது குறிப்பாக நிலைமாறு கால நீதி செயற்பாடுகள் இன்னும் துளிர் விட்டுக்கொண்டிருக்கும் அல்லது அவற்றின் ஆரம்பக் கட்டங்களிலிருந்துவரும் நாடுகளை சேர்ந்த உள்ளூர் செயற்பாட்டாளர்களுக்கு பயனளிக்க கூடியவையாகும். உலகளாவிய அறிவுப் பரிமாற்றம் கற்றுக்கொள்ளும் ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதுடன் சமூக மற்றும் தேசிய மட்டங்களுக்கு அப்பால் வலயமைப்புக்களை உருவாக்கிக் கொள்வதற்கான ஆற்றலையும் வழங்குகின்றது.

**நிலைமாறு காலநீதி தொடர்பான பயிற்சிகள் பல்வேறுபட்ட திறன்களிலும் உள்ளூர் செயற்பாட்டாளர்களின் ஆற்றலை கட்டியெழுப்புதல் வேண்டும்.** கூட்டமைப்பின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஊடாக தென் சூடான் ஆவணப்படுத்துநர்களும் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்தின் செயற்பாட்டாளர்களும் நேர்காணல்களை நடத்துதல் மற்றும் கடும் மன அதிர்ச்சியை சமாளித்தல் என்பன தொடர்பான திறன்களை பெற்றுக்கொண்டார்கள். கூட்டமைப்பு இலங்கையில் பாதிக்கப்பட்ட சமூகங்கள் சிவில் சமூகம் மற்றும் அரசாங்க செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கென நடைமுறை ரீதியான நிலைமாறு கால நீதி பயிற்சித்திட்டங்களை வழங்கியது. தென்சூடானிலும், மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க பிராந்தியத்திலும் கருத்திட்டங்களில் பங்கேற்பவர்கள் பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்களை தணித்துக்கொள்வது எப்படி என்பதை தெரிந்து கொண்டார்கள். ஆற்றலை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்கள் உதாரணமாக உள சமூக ஆதரவு மற்றும் கடும் மன அதிர்ச்சியை சமாளித்தல், பாதுகாப்புத் துறை தொடர்பான ஆபத்துக்களை மதிப்பிட்டு கணித்தல். மற்றும் தடையவியல் அறிவியல்கள் என்பவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும். பயிற்றுநர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களும் ஆற்றல்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களில் செயல் பரப்புக்களை விரிவாக்குவதற்கான நிலைத்து நிற்கக்கூடிய ஒரு வழிமுறையாக இருந்து வருகின்றது.

முழுமையான நிலைத்துநிற்கக்கூடிய நிலைமாறு கால நீதியை தாபித்துக் கொள்வதற்கான முன்னோக்கிய பயணம்.

நிலைமாறு கால நீதியை மதிப்பீடும் குறை ஒப்பீட்டு ரீதியில் இன்னும் ஆரம்ப கட்டத்தில் இருந்து வருவதுடன் அதற்கு துப்பாக்கமும் அதேபோல அனுபவ அடிப்படையிலான ஆராய்ச்சியின் வளர்ச்சியும் தேவையாக இருந்து வருகின்றது. வெளியீடுகளை அடிப்படையாகக் கொண்ட அதன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமையை பயன்படுத்துவதன் மூலம் கூட்டமைப்பு குறிப்பிட்ட சிலவழிமுறைகள் செயல்முறைகள் மற்றும் அணுகுமுறைகள் என்பன ஏன் எவ்வாறு சாத்தியமாகியுள்ளன என்பதனை புரிந்து கொள்வதற்கு முயற்சித்தது. செயற்பாடுகள் கருத்திட்டங்கள் என்பவற்றின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்துள்ள கூறுகள் எவை என்பதனை நிர்ணயித்துக்கொள்ளும் செயற்பாடு இந்த மதிப்பீட்டில் அடங்கியிருந்தது. நிலைமாறு கால நீதி முயற்சிகள் சமூக மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் நிகழ்ச்சித்திட்டங்களின் தாக்கங்களை எவ்வாறு விருத்தி செய்ய முடியும் என்பதனை உலகெங்கிலும் பொறுப்பும் நிலையைு எவ்வாறு அதிகரிக்க முடியும் என்பதனையும் எடுத்துக்காட்டியுள்ளன. படிப்பினைகளை புதிதாக எடுத்து வந்தமைக்கு மேலாக நிலை மாறு கால நீதி கருத்திட்டங்களின் மதிப்பீடுகளுக்கான தேவை மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டிருக்கும் சிரமங்கள் என்பவற்றையும் இந்தக் கையேடு எடுத்துக்காட்டுகின்றது.

நிலைமாறு கால நீதியை மதிப்பீடு செய்வது ஒரு நீண்ட கால செயன்முறையாக இருந்து வருவதனாலும் கூட்டமைப்பு பெருமளவுக்கு புதியதொரு முயற்சியாக இருந்து வருவதாலும் கூட்டமைப்பின் பல்துரை சார் அணுகுமுறையின் குறுங்கால தாக்கங்கள் மட்டுமே அதனால் நிர்ணயித்துக் கொள்ள முடிந்தது. அதாவது அது குறுங்கால குறிக்கோள்கள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றை எந்தளவுக்கு சாதித்துக்கொள்ள முடிந்தது என்ற விடயத்தை மட்டுமே மதிப்பீட்டுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. எவ்வாறிருப்பினும் அண்மையில் பூர்த்தியாக்கப்பட்ட கருத்துக்கணிப்பு தொடர்பான இந்த மதிப்பீடுகள் எதிர்காலத்தில் கையாளவேண்டியிருக்கும் சவால்களை அடையாளம் காண்டு கொள்வதற்கு உதவும் அதேவேளையில் கூட்டமைப்பின் மாற்றம் தொடர்பான கோட்பாட்டிற்கு ஆதரவளிக்கும் விதத்த்ல் சான்றுகளை வழங்கத் தொடங்கியிருந்தது. கூட்டமைப்பு இந்த மதிப்பீடுகளை அடுத்து –நிலைமாறு கால நீதித்துறையில் பொதுவாகவும் அழமாக வேரூன்றியிருக்கும் கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகளை முறியடிப்பதில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் இடையூறுகள் குறித்தும் கணிசமான அளவிலான அரசியல் விருப்புத் தேவைப்படும் தண்டனை விலக்குரிமை குறித்தும் பரவலான ஒரு புரந்துணர்வை பெற்றுக்கொண்டது. நிலைமாறு காலநீதி தொடர்பான கூட்டமைப்பின் முழுமையான அணுகுமுறை குற்றவியல் வழக்குகளை அல்லது வேறு ஏதேனும் பொறிமுறைகளை ஒழுங்கு வரிசையில் குற்றத்தில் வைக்கவில்லை. பிரிவினை நிலவும் பின்புலங்களிலும் கூட ஒட்டுமொத்த சமூதாயத்துடனும் செயற்படுவது அது வெற்றியீட்டியுள்ளது. எவ்வாறிருப்பினும் அரசாங்க செயற்பாட்டாளர்களுக்கு மத்தியில் அரசியல் விருப்பினை கட்டியெழுப்புவது சவால் மிக்க ஒரு கரியமாக இருந்துவந்துள்ளது. நீண்ட காலத்தில் நிலைமாறு காலநீதி செயற்பாட்டாளர்கள் அணுகுமுறைகள் உரித்து மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் வெளியீடுகள் என்பன முடிவுகளை எடுப்பவர்களை எவ்வாறு சென்றடைய முடியும் என்பது குறித்தும் அரசியல் விருப்பினை எவ்வாறு அதிகரிக்க முடியும் என்பது குறித்தும் சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும். மோதலுக்கான மூல காரணங்கள் மற்றும் அதனை தூண்டும் காரணிகள் என்பன நிலைமாறு கால நீதியின் நிலைத்திருக்கக்கூடிய தாக்கங்களைக் காட்டும் சாட்சியங்களை சேகரிக்கும் பொருட்டு நீண்ட கால மதிப்பீடுகள் தேவைப்படுகின்றன.

கருத்திட்டங்களின் அனைத்து திட்டங்களின் போதும் பெறுமதி மிக்க பாடங்களை கற்றுக்கொள்ள முடியும். அவை இடைக்கால தொடர் மற்றும் நீண்ட கால மதிப்பீடுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. கூட்டமைப்பு தொடர்ச்சியாக கற்றுக்கொள்ளும் செயற்பாட்டிற்கென தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருப்பதுடன் அதன் கருத்திட்டங்கள் நிலைத்து நிற்கக்கூடியவையாகவும் பொறுப்புக்கூறும் நிலை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றின் மீது பரவலான விதத்தில் தாக்கத்தை எடுத்துவரக் கூடியதாகவும் இருந்துவருதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு அது எதிர்காலத்திலும் தொடர்ச்சியாக மதிப்பிடுகளை மேற்கொள்ளவுள்ளது. மதிப்பீடுகள் நிலைத்து நிற்கக்கூடிய சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் நிலைமாறு கால நீதியின் குறிக்கோளை சாதித்துக்கொள்ளும் பொருட்டு எத்தகைய செயன்முறைகள் - பொறிமுறைகளின் வகைகள் மட்டுமல்ல – பிரயோகப்பட வேண்டும் என்பதனை கண்டுபிடிப்பதற்கான மிக முக்கியமான ஒரு வழிமுறையாக இருந்து வருகின்றது. நிலைமாறு கால நீதிச் செயன்முறையில் செயற்படும் செயற்பாட்டாளர்கள் பாடங்களை பகிர்ந்து கொள்ளவதற்கு ஊடாக ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவது நிலைமாறு கால நீதி கருத்திட்டங்களின் தாக்கத்தை விருத்தி செய்வதற்கான அறிவுப் பரிமாற்றத்தின் முதல் படிமுறையாக இருந்து வருகின்றது. இந்தச் சமூகம் கருத்திட்டங்களுக்கான உள்ளூர் உரித்து மற்றும் அதனையடுத்து நிலைத்து நிற்கக்கூடிய தலையீடுகள் என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உதவும் பொருட்டு சிறந்த நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு உயர் முக்கியத்துவம் வழங்குகின்றது. இந்த கையேட்டில் உள்ள பாடங்கள் - மற்றும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் மதிப்பீடுகளிலிருந்து கற்றுக்கொள்ளும் எதிர்காலப் பாடங்கள் - தமது திட்டவட்டமான பின்புலங்களுக்கு பிரயோகிக்கக்கூடிய புதிதாகத் தோன்றி வரும் மாதிரிகள் குறித்து மாதிரிகளை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கும் அவை தொடர்பாக விவாதிப்பதற்கும் அவற்றை தமது நிலைமைக்கேற்ப உள்வாங்கிக்கொள்வதற்குமான ஒரு வாய்ப்பினை சிவில் சமூகம் செயற்பாட்டாளர்கள் கொள்ளை வகுப்பவர்கள் நீதி வழங்குநர்கள் மற்றும் ஏனைய பங்கீடு பாட்டாளர்களுக்கு வழங்குகின்றது. மேலும் நிலைமாறு கால நீதி செயற்பாட்டாளர்கள் எங்கு எடுத்து விளக்கப்பட்டிருக்கும் உலகளாவிய செய்தியில்

கற்றுக்கொள்ளும் ஒரு சமூகத்தை வளத்தெடுக்கும் நோக்கத்துடனும் நீதி, உண்மை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கத்துடனும் தமது கருத்திட்டங்களை ஆழ்ந்த சிந்தனையுடன் மதிப்பீடு செய்வார்கள் என கூட்டமைப்பு நம்புகின்றது.

1.646.397.ICSC (4272)

**www.sitesofconscience.org**
Facebook.com/SitesofConscience @SitesConscience SitesofConscience